# நிலாச் சமுத்திரம்



தேவகாந்தன்

157/850

நெல்லியடி பலநோக்கு
கூட்டுறவே நாட்டுயர்வு
பொது நூலகம்

NILACH CHAMUDHRAM

*a novel by*

Devakanthan


நாவல் : நிலா சமுத்திரம்

வகை : நாவல்

ஆசிரியர் : தேவகாந்தன்

உரிமை : ஆசிரியருக்கு

முதல் பதிப்பு : டிசம்பர் 2000

பதிப்பாளர் : நா. பாலகிருஷ்ணன்

மேலட்டை ஓவியம் : சேகர்

பக்கம் : 160 டெம்மி 1x8

விலை : ரூபாய் 157/50

வெளியீடு : ராஜேஸ்வரி புத்தக நிலையம்
4, முத்துக்கிருஷ்ணன் தெரு
பாண்டி பஜார் அருகில்
தி. நகர் சென்னை - 600 017
தொ.பே : 820 20 73

ஒளி அச்சுக் கோர்வை : குரு கம்ப்யூட்டர்ஸ்
சென்னை – 600 024.
தொ.பே.எண் : 480 05 64

அச்சிட்டோர் : மணி ஆப்செட் 112 பெல்ஸ் ரோடு
சென்னை – 5

எந்தவொரு படைப்பாக்கமும் தனக்குள் இரண்டு வகையான வாசிப்புச் சாத்தியப்பாடுகளைக் கொண்டு நகர்கிறது. இந்த சாத்தியப்பாடுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரண்டு அணுகுமுறைகளாகக் கிளை பிரிகின்றன. இரண்டு வகையான வாசிப்புச் சாத்தியப்பாடுகளிலும் வாசிப்போனின் 'கருப்பொருள்' சார் விருப்பு வெறுப்புகளும் கணிசமான பங்காற்றும். ஒருவகையில் எந்தவொரு பிரதியும் எழுதுவோன், வாசிப்போன் ஆகிய இருதரப்பினரின் மனச்சாய்வுகளுக்கிடையேயான மோதலை உள்ளடக்கியது எனலாம்.

ஆனந்தலட்சுமியும் அவளைச் சார்ந்தவர்களும் பங்கேற்கும் இந்தப் புதினம் பெண்ணுரிமை, குடும்பம், திருமணம் தாண்டிய ஆண் – பெண் பாலுறவு முதலிய விஷயங்களை ஆனந்தலட்சுமி என்ற தனிநபர் வாழ்க்கையின் அளவில் ஆய்வலசலுக்குட்படுத்துகிறது. குறிப்பாக, குடும்பம், தாய்மை முதலியவற்றை முழுமுற்றாக வெறுத்தொதுக்குவதே பெண்ணுரிமை என்பதான பார்வை விவாதப்பொருளாகிறது.

கதையின் முக்கிய பாத்திரம் ஆனந்தலட்சுமி இந்த இரண்டு பிரிவுகளில் அதிக நேரம் முதல் பிரிவைச் சேர்ந்தவளாகத் தான் புரிபடுகிறாள். அதனாலேயே அவள் மேல் அனுதாபம் வரும் அளவுக்கு எரிச்சலும் வருகிறது. அந்த அளவுக்கு அகல்விரிவாக இந்தப் பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது எனலாம். ஆனால், ஆனந்தலட்சுமியின் சுயம் அல்லது ஆளுமைக்கு வலுவான அடித்தளம் அமைத்துத் தரப்படவில்லை. அப்படியற்ற பெண்ணுரிமைவாதிகளை அலசலுக்குட்படுத்துவதுதான் ஆசிரியரின் நோக்கமாக இருக்கும்பட்சத்தில் அதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

பெரிய பாதிப்பு தான் ஒருவரை பெண்ணுரிமைவாதியாக்கும் என்ற பார்வை, குடும்பம் பற்றிய ஒருதலைப்பட்ச பார்வை மட்டுமே கதையில் அமைந்திருப்பது, ஆக்கபூர்வமான

பெண்ணுரிமைவாதி பிரதிநிதித்துவப்படுத்தப்படாதது என இப்புதினத்தில் சில நிறைவின்மைகளைச் சொல்ல முடியுமென்றாலும் இன்றைக்குப் பொதுவாக குடும்பம், அமைப்பு முதலியவை பற்றி இருந்து வரும் அதீத எதிர்ப்புணர்வுக் கருத்துக்களுக்கு எதிர்வினையாகத் தான் மேற்படி ஒருதலைப்பட்ச அவதானிப்புகள் என்ற அறிதலும் சேருகிறது. இலங்கைத் தமிழ் சிற்சில இடங்களில் தடுக்கிவிட்டாலும் பலப்பல இடங்களில் இலக்கியத்தமிழை வளப்படுத்துகிறது. அடிக்கோடிட்டுக் கொள்ளத் தகும் வரிகளும், வாசகங்களும் புதினம் பூராவும் விரவிக் கிடக்கின்றன. அவற்றில் சில வியாக்கியானங்களாக அலுப்பூட்டவும் செய்கின்றன! நிலாக் கால கடல் பெருகும் என்கிற கடல் அனுபவத்தை தலைப்பு குறிக்கிறது என்று ஆசிரியரிடம் கேட்டறிந்து கொண்டேன்.

ஒரு ஆண் பெண்ணுரிமை பற்றி பேசலாமா, அந்தப் பதிவுகள் நியாயமானதாக இருக்குமா என்ற கேள்வியை இந்தப் புதினம் எதிர்கொள்ள வேண்டி வரும். எனினும், பெண்ணுரிமை, குடும்பம் என்ற அமைப்பு முதலியவற்றைப் பற்றிய ஒரு அகல்விரிவான பார்வையை, பரிசீலனையை முன்வைக்க முற்படுவதே இந்தப் புதினத்தை கவனத்திற்குரியதாக்குகிறது.

சென்னை *லதா ராமகிருஷ்ணன்*

22.11.2000

*என்னுரை*

எந்த என் நாவலையும்போல் மிகுந்த கரிசனங்களோடு கூடிய பெரிதான சிரமங்களின் பின்னாலேயே இந்த நாவலும் பூர்ணமானது. இதன் கரு அவ்வப்போது தொந்தரவு செய்கிறபடிக்காய் ஏறக்குறைய இரண்டு வட்டங்களாக (ஒரு வட்டம் என்பது ஏழு வருடங்கள் கொண்ட ஒரு கால அளவென்று கூறுகிறது ஒரு பழம் கணக்குப் பாடல்) என் மனத்திலே கிடந்துகொண்டிருந்தது. இதன் தொல்லை பொறுக்க முடியாமல் சிறுகதையாக்கியாவது தணிக்க பல சமயங்களில் முயன்றிருந்தேன். ஏனோ, அவையொன்றும் என் திருப்திக்குட்படும் கலாம்சம் பொருந்தியவையாய் இருக்கவில்லை. இப்போது அது தனக்கு விதிக்கப்பட்ட வடிவத்தை எடுத்துக்கொண்டு பிரதியாய் உங்கள் முன் வந்திருக்கிறது.

ஒரு மனிதனாய், நான் உடைக்கக்கூடிய சமூக அக்கிரமங் களையே உடைக்க முனைந்திருக்கிறேன் இதில். காக்கவேண்டிய பகுதிகளைச் சுட்டிக்காட்டியதும் அதன் இன்னொரு விளைவாய் நிகழ்ந்திருக்கிறது. தாய்மை தனக்கான குரலை என்றும் ஒலித்ததில்லை என்பது என் அனுபவம். பெண்ணிலைவாதம் அதன் எதிர்முகத்தில் இருக்க வேண்டியதில்லையென்பதை எப்படிச் சொன்னாலும் விவாதம்தான். அதன் எதிர் அர்த்தங்களை அது தகர்ப்பது தர்க்கத்தினூடாகவல்ல. வாழ்நிலையினூடாக. அது பிறப்பிக்கும் கருத்துநிலையினூடாக.

கி.ராஜநாராயணனின் 'கன்னிமை' சிறுகதையில் போலவே இங்கு பெண்கள் விஷயத்தில் பலதும் நடந்துகொண்டிருக்கின்றன. நாச்சியாரம்மா போல் திருமணத்தோடு, இல்லையேல் இன்னொரு கட்டத்தில், அவர்கள் அடங்கிவிடுகிறார்கள். இது சரி—தப்பு என்று நான் இங்கே வாதாட வரவில்லை. எனக்கான இடம் பட்டிமன்றமல்ல; படைப்புக் களம். அதனால் கதையை அதன் உள்ளோடிய

தர்க்கங்களோடு படைப் பாக்கியிருக்கிறேன். சமகாலத்தின் மிகத் தீவிரமான ஒரு கருதுகோள் மையமாக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் விவாதிக்க வேண்டும்.

ஒரு ஆண் குறிப்பிடத் தகுந்த சமூக பொருளாதார அந்தஸ்துடையவனானால் படைப்பாளிகளால் 'அவர்' என்றுதான் உயர்திணைப் பன்மையில் சுட்டவும் விளிக்கவும் பெறுகிறான். அவனைவிட அதிக வயதுடையவளானாலும் பெண் சுட்டவும் விளிக்கவும் பெறுவது ஒருமையிலேதான். அப்பா வந்தாராகவும், அம்மா வந்தாளாகவுமே நம் இலக்கியமொழி பேதங்காட்டி வந்திருக்கிறது நீண்டகாலமாய். இது என் நெடுநாளைய சோகம். பெண் எழுத்தாளர்கள்கூட அவ்வாறேதான் எழுதுகிறார்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான ஆறுதலும் இல்லை.

'எழுதாத சரித்திரங்க'ளென்று எனது ஒரு குறுநாவல்.1986ல் வெளிவந்தது. மரமேறும் தொழிலாளியான வயதாளி சிவலை அதில் அவர்... நீங்கள்... என்று குறிக்கப்பட்டும் சுட்டப்பட்டும் இருந்ததைக்கண்டு பல நண்பர்கள் சிலிர்ப்படைந்து சிலாகித்துப் பேசியிருந்தார்கள். 'ரிக்ஷாக்கார முனியின் வந்தார்' என தமிழில் எழுதினால் வழுப்போல் தெரிகிறது வாசக மனத்துக்கு. காலப்போக்கில் ழக்கப்பட்டுவிடுமென்று சமாதானம் அடைந்துகொண்டேன்.

ாலும் சிவலையைப் பிரசன்னப்படுத்தியதுபோல் வேறு ப ரங்களுக்கு அவ்வண்ணம் பிரசன்னம் செய்யவில்லை. அதற்கு நிறைய நியாயங்களுண்டு. வாழ்முறைத் தள பேதத்தில் போலவே, பால் பேதத்திலும் சுட்டுகளும் விளிப்புகளும். இது உயர்தட்டு மக்களது மொழியென்பது மட்டுமில்லை, ஆண்கள் மொழியும்தான் என்பதை என்னளவில் இவ்வண்ணம் நான் புரிந்துகொள்கிறேன்.

பெண்கள் சமநிலையும், மக்கள் அனைவரது விடுதலையும் என்பதே என் சுலோகம். இதையும் மீறிய 'மனிதர்களும் ஜீவராசிகளுமான பிரபஞ்ச'மென்கிற ஒரு குரலை இப்போதெல்லாம் என்னால் தீக்ஷண்யமாக உள்ளுணர்வில் கேட்க முடிகிறது. அது என் எழுத்தில் தவிர்க்கவியலாத விதமாய்ப் பதிவாகவே செய்யும்.

'நிலாச் சமுத்திர'த்தை நான் உணர்ந்த மாதிரியே படைப்பாக்கியிருக்கிறேன். இதில் 'அம்மா' மகத்துவம்

சுட்டப்பெற்றிருப்பதாக வழக்கம்போல் பதிப்புக்கு முன் முதல் வாசகர்களாயிருக்கும் என் நண்பர்கள் கூறினர். லதா ராமகிருஷ்ணனின் 'சில பகிர்வுகள்' இடம்பெற்ற விதம் இப்போது உங்களுக்குப் புரியலாம். தாய்வழிச் சமூகம், தாய்த்தெய்வ வழிபாடு என்பனவெல்லாம் உந்நதமான ஒரு காலகட்டத்தின் வெளிப்பாட்டம்சங்கள். அதை நாவல் மவுனமாய்ச் சுட்டுகிறது. ஆனாலும் என் சுலோகத்தோடு – பிரபஞ்ச கீதத்தோடு– நாவலின் தர்க்கம் முரண்படவில்லையென்பதுதான் பிரதியின் விசேஷம்.

திரு.நா.பாலகிருஷ்ணனை நான் அறிமுகமானது நண்பர் யுகபாரதி மூலமாகவே. படைப்பையும் படைப்பாளியையும் மதிக்கும் அவரது நன்மனத்தினாலேயே அவரோடான என் தொடர்பு வலுத்தது. அதை ருசுப்பிக்கிறது, ஒரு குறுகிய காலத்தில் ராஜேஸ்வரி புத்தக நிலைய வெளியீடாகப் பிரசுரம் காணும் என் இரண்டாவது நூலான 'நிலாச் சமுத்திரம்.'

நண்பர்கள் வாசகர்களின் வழக்கமான ஆதரவை எதிர்பார்க்கிறேன். இதன் எதிர்வினைகளையும்.

சென்னை. **தேவகாந்தன்.**

18.11.2000.

# பகுதி ஒன்று

1

ஓர் ஓய்வு நாளையும் அடுத்து ஒரு விடுமுறை நாளையும் இழுத்துகொண்டு வந்திருந்த சனிக்கிழமையாதலால் அன்றைய மாலையில் தினசரி இல்லாத சுறுசுறுப்பு பொங்கத் துவங்கிவிட்டிருந்தது. அந்தப் பரபரப்பு கவனமாகித்தான் ஆனந்தவல்லி சுவரிலுள்ள மணிக்கூடு நோக்கி பார்வையைத் திருப்பியது. ஐந்து மணிக்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. ஓரிருவர் தவிர அநேகமாக எல்லோருமே வீடு செல்லத் தயாராக நின்றிருந்தனர். இனி அவளும் புறப்படத் தயாராகலாம். ஐந்து – ஐந்தரை மணிக்கிடையில் அவளுக்கு பத்மாவதியை ஹிக்கின்பாதம்ஸில் சந்திக்க வேண்டியிருந்தது. அப்படியல்லாவிட்டாலும் மற்றவர்களோடு சேர்ந்து, முடிந்தால் மற்றவர்களைவிடவும் சிலநிமிஷங்கள் முன்னதாகவே, போய்விடத்தான் இப்போதெல்லாம் மனசு துடித்துக்கொண்டிருக்கிறது அவளுக்கு. அவசியமான பொழுதுகளில் முன்பு ஆறு மணிவரைகூட நின்று போயிருக்கிறாள். ஏழு ஏழரை மணிவரையும் நின்று முதலாளி ராதாகிருஷ்ணன் போகும்போதே கூடப்போன நாட்களும் இருந்திருக்கின்றன. இப்போது அப்படியில்லை. இனி அப்படி இருக்காது எனலாம்.

கிளம்பத் தயாராவதன் முன்பாக எதிரே தனியாக இருந்த 'ராஜ் லெதர் புரடக்ஸ்' அலுவலக அறைமீது பார்வையை வீசினாள். குளிர்சாதனம் பொருத்தப்பட்ட அந்த அறையில் வேலைத்தல பக்கமாயிருந்த கண்ணாடி ஜன்னலூடு ராதாகிருஷ்ணன் யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அப்போதைக்கு அவர் அந்தப் பக்கம் திரும்பப் போவதில்லை. உள்ளே எவ்வளவுதான் குமுறல்கள் அவலங்கள் சோகங்கள் பொங்கிக் கொண்டிருப்பினும் அலுவலக சம்பந்தமான விஷயங்களில் மிகுந்த அக்கறையுடையவர் அவர். அது அவரின் மூலதனம்.

ஆனந்தவல்லி புறப்படத் தயாரானபோது கைக்கடிகாரத்தில் ஐந்து மணி தாண்டியிருந்தது. அதை அவள்தான் பத்து நிமிஷங்கள் முன்னதாக ஓடிக்கொண்டிருக்க வைத்திருந்தாள். எனினும் காலத்தை முன்னே ஓடவைத்துவிட்டு பின்னே துரத்திக் கொண்டிருப்பதில் என்ன சமனத்தை அவள் கண்டாளென்று அவளுக்கே தெரியாமல்தான் இருந்தது. இன்னும்... நேரமும் காலமும் ஒன்றா என்றொரு சந்தேகமும் அவளிடத்தில் உண்டு.

சரியாக சுவர்க் கடிகாரத்தில் ஐந்து மணி ஆகிறபோது முதல் ஆளாக அவள் வளாக வாசலைக் கடந்து கொண்டிருந்தாள். ராதாகிருஷ்ணன் பேசி

முடித்திருக்கலாம். அவளையே பார்த்துக் கொண்டும் இருந்திருக்கலாம். அவள் திரும்பிப்பார்க்கவில்லை. சுயாதீனத்தின் நிச்சயத்துக்கான வழிகளில் அவள் வாழ்வைச் செலுத்திக் கொண்டிருப்பவள். பந்தங்கள் தடைகள் மரபுகள் என்று எதனுள்ளும்தான் அப்படியானவர்கள் தம்மை அடைத்துக்கொள்ள விரும்புவதில்லை.

தாயார் சாஹிப் தெரு வழியே விறுவிறுவென நடந்து அண்ணாசாலை வந்து,பள்ளிவாசல் எதிரில் சாலையைக் கடந்து ஹிக்கின்பாதம்ஸ் அடைந்தாள்.

வாசலுக்கு வெளியே ஆனந்தவல்லியின் முகம் பிரசன்னமாகியதும் கல்லாவில் பணத்தைச் செலுத்திவிட்டு புத்தகங்களோடு விரைந்து வெளியே வந்தாள் பத்மாவதி.

'வந்து வெகுநேரமாகிவிட்டதா பத்மா?' என்றாள் ஆனந்தவல்லி சிரித்தபடி.

இயல்பிலேயே அவளுக்கு சிரித்ததுபோலிருக்கும் முகம். மெல்லிய சிரிப்புக்கும் கன்னங்கள் குழி விழுந்து மிக்க வசீகரம் செய்யும்.

பத்மாவதியும் சிரித்தவாறே, 'அதிகமில்லை, ஒரு மணி நேரம்தான் ஆகிறது' என்றாள்.

'நான் ஐந்தரைக்குள் வருவதாகத்தான் சொல்லியிருந்தேன்.'

'அது சரிதான். என்றாலும் இன்னும் ஒரு மணி நேரமானாலும் இங்கே காத்திருக்க என்னால் முடியும். அதில் ஒருவகை இன்பமிருக்கிறது' என்று கூறிவிட்டு கார் நிறுத்தியிருந்த இடத்துக்கு நடந்தாள். புத்தகசாலைக்குள் ஒரு காத்திருப்பு அவளுக்கு நேர இழப்பானதாகவோ அலுப்பூட்டுவதானதாகவோ என்றைக்கும் இருந்ததில்லை.

பாண்டிபஜாரில் ஒதுக்குப்புறமான ஓரிடத்தில் காரை நிறுத்திவிட்டு இருவரும் துணிக்டை சென்றனர். நாலைந்து கடைகள் ஏறி இறங்கிய பின்னர்தான் பத்மாவதி எப்போதோ எடுத்திருந்த புடவைக்குப் பொருத்தமான சட்டைத் துணியும் அதற்கேற்ற நிறத்தில் தையல் நூலும் அவர்களால் வாங்க முடிந்தது. அவர்கள் ஏறி இறங்கிய கடைகளில் ஒன்றில் குறிப்பிட்ட சில ஆயத்த உடை வகைகளுக்கு மலிவு விற்பனை நடந்து கொண்டிருந்தது. பத்மாவதி தன் பிள்ளைகளுக்கு இரண்டு சட்டைகள் வாங்கிக்கொண்டாள். இந்த மாதிரி கடைத்தெருக்களுக்கு வரும் சமயங்களில் தன் பிள்ளைகளுக்கென்று ஆனந்தவல்லி துணியோ சட்டையோ வாங்கியதாய் பத்மாவதிக்கு ஞாபகமில்லை. பெரிய வசதிகள் அவளிடத்தில் இல்லையென்பது பத்மாவதிக்குத் தெரியும். சபலங்கள் பட்டுவிடாத திட்டமிட்ட ஒரு வாழ்க்கை முறையினால்தான் ஒருவரால் அந்தமாதிரி பெரும் சிரமங்களின்றி வாழ்ந்துவிட முடியும். அது அவளுக்கு வியப்பாக

இருந்தது. கால நகர்ச்சி வாழ்வின் கணங்களை அவசரம் அதிருப்தி அவலமென்று ஆக்கிக்கொண்டிருக்கிற வகையில் ஒரு சராசரி வாழ்வு அப்படித்தான் சாத்தியமாக முடியும். உடல் தேவைகளையும் மன விருப்பங்களையும் மறுத்துக்கொண்டு நடத்தப்படும் அது, ஒரு யுத்தம். அதில் அவள் வென்று கொண்டிருந்தாலும் காயங்களும் பட்டுக்கொண்டிருந்தாளென்பதை பத்மாவதி அறிந்திருந்தாள்.

ஆனந்தவல்லியின் பாவனையில் மாறுதல் தென்படவில்லை. பத்மாவதிக்கான துணியைப் பார்த்ததுபோன்றே அவள் மலிவு விலை உடைகளையும் நோக்கினாள். ஒவ்வொன்றும் பெறுமதியின் பாதி விலையில் விற்பனையாகிக் கொண்டிருந்தன. இருந்தும் அவளுக்கு ஆசை வரவில்லை. ஒருவேளை பணமில்லாதிருக்குமோ என்று நினைத்தாள். இல்லையெனில் கொடுக்கவும் தயாராகவிருந்தாள். ஆனால் உடையெடுக்கும் விருப்பத்தையோ தேவையையோ எள்ளவும் பிரதிபலிக்காதவளிடத்தில், கேட்க சங்கடமாக இருந்தது. என்ன ஆனந்தி, உன் பணக்காரத்தனத்தைக் காட்டுகிறாயா என்று அவள் கேட்கக்கூடியவள்.

ஆனந்தவல்லியின் குடும்ப நிலைமையை மேலோட்டமாக அவள் அறிவாள். அவளுக்குக் கல்யாணமாகியிருந்தது. வளர்ந்த குழந்தைகளே இருந்தார்கள். அப்போது கணவனைப் பிரிந்துவந்து தனியே வசித்துக் கொண்டிருக்கிறாள் என்பவை அவளுக்குத் தெரியும். ஆனால் அதற்குள்ளிருந்த பிரச்னை தெரிந்திருக்கவில்லை. எத்தனை குழந்தைகள், மூத்தது ஆணா பெண்ணா, அதற்கு எத்தனை வயதாகிறது என்பவைகூட தெரிந்திருக்கவில்லை. அவைபற்றி, தான் எப்போதாவது உசாவினதாக பத்மாவதிக்கு ஞாபகமில்லை. விஷய நொய்மையென்பது ஒருபட்சமாக இருந்தவேளை, ஒருவரையொருவர் ஆழத் தெரிந்துகொள்ளும் அக்கறையின்மையும் இரண்டாம்பட்சமாக இருந்திருந்ததை அப்போது உணர்ந்தாள் அவள். அந்த உண்மை அவளை இடித்தது. ஏன் அப்படி? ஆனந்தவல்லியை பத்மாவதிக்கு மூன்று நான்கு வருஷங்களாகப் பழக்கம். கோவை பெங்களூர் திருவனந்தபுரம் என்று பெண்விடுதலை இயக்க மாநாடுகளுக்கு பலமுறை சேர்ந்து போயிருக்கிறார்கள். இதுமாதிரி துணிக்கடை வீதிகளில், புத்தகநிலையங்களில் மணிக்கணக்காய்ச் செலவிட்டிருக்கிறார்கள். நாடு சமூகம் பெண்கள் நிலைபற்றியும், நவீன இலக்கியம் – குறிப்பாக கவிதைப் படைப்புகள் குறித்தும், நிறையவே பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசாதது ஒன்றுண்டு. அதுதான் அவரவர் குடும்ப நிலைமை. ஏன் அவ்வாறு அது மேலோட்டமான ஒரு தொடர்பாக அமைந்து போனதென்று யாருமே யோசித்ததாகத் தெரியவில்லை. அவ்வாறான ஒட்டுறவற்ற தன்மைதான் நாகரீகமென்றொரு மயக்கம் அவர்களிடத்தில் இருந்ததோ? ஒருவரின் ஸ்வய தன்மையோடு மட்டும் உறவுகொண்டு, அந்த ஸ்வயங்களுக்கும் மூலமான அம்சங்களை ஒதுக்கி இருந்துவிடுவது அவசியங்கள் தேவைகளினூடாய் விளைந்திருந்ததோ?

அறிவு ஜீவித்தனத்தின் அந்தப் போலியை அவர்களும் கைக் கொண்டிருந்தனரோ?

பதில் தெரியாதிருந்தது.

பத்மாவதி தேநீர் சாப்பிடலாமென்றாள்.

இருவரும் ஹோட்டல் ஒன்றுள் நுழைந்தனர்.

தேநீர் சாப்பிடுகையில் பேச்சின் திசை ஒன்றாக இருக்கவில்லை. பல கோணங்களில் அது பரந்தது. அடுத்த வாரம் நடைபெறவிருந்த அமுதாவின் குழந்தையினுடைய பிறந்தநாள் விழாபற்றி, வருகிற தையில் நடைபெறவிருந்த சரோவின் கல்யாணம்பற்றி, பங்குனியில் நடக்கவிருந்த விடுதலைக் குயில்கள் பெண்கள் இயக்க மாநாட்டின் கலைநிகழ்ச்சிகளும் அவற்றின் ஆயத்தங்களும் பற்றி என்று பலவும் அவர்கள் பேசினார்கள்.

திடீரென்று வந்த ஒரு நினைப்பில் பத்மாவதி கேட்டாள்: 'ராதாகிருஷ்ணனுக்கும் உனக்குமிடையில் ஏதாவது பிரச்சினையா? நிரம்பவும் மனமுடைந்தவர்போல் திரிகிறாரே!'

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் ஆனந்தவல்லி. இப்போது ஏன் அந்த விஷயத்தைப் பிரஸ்தாபிக்கிறாயென்றுகண்கள் கடுமைகாட்டின. பின்னர் சிறிது இறுக்கம் தளர்ந்து, 'இல்லையே அப்படியெதுவும்' என்றாள். தொடர்ந்து அதுபற்றிப் பேசப் பிரியப்படவில்லையென்பது ஒற்றைப்பதிலில் பத்மாவாதிக்குப் புரிந்தது. அது அவளுக்கு ஆச்சரியம். அவரவர் குடும்ப வாழ்க்கை தவிர்ந்த விஷயங்களெல்லாமே அவர்களின் பேசுபொருளாக இருந்திருக்கின்றன, அதுவரை காலத்தில். அவர்கள் ராதாகிருஷ்ணன் பற்றியும் பேசியிருக்கிறார்கள். தம் அந்தரங்க உணர்வுகள் பற்றி,ஒவ்வா மனவெழுச்சிகள்பற்றி, வரன்முறை மீறிய உடலுறவுகள் பற்றிக்கூட பேசவும் தயங்காப் புரிதலுணர்வு அவர்களுக்குள் இருந்திருக்கிறது. ஆனால் அன்றைக்கு ராதாகிருஷ்ணனுக்கும் அவளுக்குமிடையே மனவிரிசலேதும் இருக்கலாமோவென்ற ஒரு கேள்வி பற்றி பேசப்பிடிக்காமல் போய்விட்டது ஆனந்தவல்லிக்கு. ஏன்? அதை, தன் அந்தரங்கத்துள் அந்நியர் ஒருவரின் பிரவேசம்போன்று அவள் விரும்பாததின் சின்னமாகவே கொள்ள வேண்டியதில்லை. அவர்பற்றிப் பேச விருப்பப்படாததின் அம்சமாகவும் கருதலாம்தான்.

அந்த நினைப்பு மேலே அவளைத் தொடரவைத்தது. 'ராதாகிருஷ்ணன் இன்று காலை வங்கிக்கு வந்திருந்தார். இயல்பான தன் கலகலப்பு உற்சாகமெல்லாம் அழிந்துவிட்டிருந்தார். உடல்நலமில்லையோ என்று நினைத்து நானாகவே பேசினேன். ஏனோதானோவென்று பதில் சொன்னார்.ஆனந்தியை இன்றைக்கு கொஞ்சம் நேரத்தோடு வேலை முடித்துவர அனுமதியுங்களேன்; ஐந்து மணிக்கு ஹிக்கின்பாதம்ஸில் சந்திக்கவிருக்கிறோம் என்றேன். மனிதர் உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டு பேசாமலே போய்விட்டார்.'

ஆனந்தவல்லிக்கு அவர்மேல் ஒரு கசப்பு விளைந்திருந்தது அந்த நாட்களில். அந்த விஷயப்பிடிப்பின்மை அதனால்தான் முகம் காட்டிற்று. ஆனால் பேச்சென்று வந்தபிறகு அந்த உள்ளடங்குகை அவசியமில்லை. அது தவறான அனுமானங்களை வளர விட்டுவிடுவதாக ஆகிவிடும். தேநீரைக் குடித்துவிட்டு மேசையில் குனிந்தாள். 'இன்றைவரைக்கும் அவர் எனக்குச் சம்பளம் தருகிற முதலாளி மட்டும்தான். நிறுவனத்தின் ஏற்றுமதி விவகாரங்களை முன்புபோல் நானே இப்போதும் கவனித்துக்கொள்கிறேன். அவரோடு பேசவேண்டி நேர்ந்தால் பேசிக்கொள்கிறேன். இல்லாவிட்டால் ஓடிஓடிப்போய்ப் பேச என்ன அவசியமிருக்கிறது எனக்கு?'

மெதுவாகத்தான் சொன்னாள்.

'நான் அதைக் கேட்கவில்லை...'

ஆனந்தி சடுதியில் எழுந்தாள். 'வெளியே வா, சொல்கிறேன்' என்று பற்களுக்குள் இரைந்துவிட்டு வீதிக்கு நடந்தாள்.

பத்மாவதி திகைத்தாள். என்ன நடந்தது அம்மாதிரிச் செய்துகொள்ள? பைகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். நடைபாதையில் நின்றிருந்த தூங்குமூஞ்சி மரத்தோடு ஒதுங்கி நின்றிருந்தாள் ஆனந்தவல்லி. தன்னைச் சுதாரித்திருந்தாள். எழுந்து வந்தபோதிருந்த மனநிலையில் அப்போது அவள் இல்லையெனத் தெரிந்தது. ஆனாலும் அவள் பத்மாவதியை நோக்கித் திரும்பிய போது முகம் ஒருவகைச் சினம் படர்ந்தே இருந்தது. அவள் சொன்னாள்: 'இந்த முதலாளி - தொழிலாளி என்பதற்கு மேலேயுள்ள எங்கள் உறவு என் சுயவிருப்பம் சார்ந்தது பத்மா. என் சுயாதீனத்தின் ஒரு வெளிப்பாட்டு அம்சமாகவே அவருடனான என் தொடர்பே ஆரம்பத்தில் ஏற்பட்டது. அது என் சுயாதீனத்தையே இழக்கச் செய்ய காரணமாகுமானால், நான்... உறவை இழப்பதையே விரும்புவேன்.'

இது ஆனந்தவல்லியின் தெரியாத புறமில்லை அவளுக்கு. ஆனாலும் அதை உறுக்கமாகச் சொல்லியபொழுதில் கொஞ்சம் விரசமாகவே உணர்ந்தாள். அவளுக்கும் பெண்ணுரிமை பற்றிய கரிசனங்கள் உண்டு. அவை மிகுந்த ஜனநாயகத் தன்மை வாய்ந்தவை. அதை றஞ்சி சைவத் தன்மை என்று கிண்டலடிப்பாள். குடும்பமென்கிற அமைப்பின் கட்டு குலைந்துவிடாமல் அதன் உள்ளுறவைப் பேணியபடியே சமூகத்திடமிருந்து சில உரிமைகளைப் பெற்றுக் கொள்வது என்பது மட்டுமே அவளது அதியுயர்ந்த பட்சமான முற்போக்கின் எல்லையாக இருந்தது. அதற்கு மேலான பெண்ணிலைவாதம் அவள் பேசுவதில்லை. அவள் சார்ந்துள்ள அமைப்பும் அவ்வாறே.

ஆனந்தவல்லியின் தீவிரமான சிந்தனையும், சுயேச்சையான போக்குகளும், ஒரு வெடிப்பில்போல் பதிலளிக்க தயார்ப்பட்டுவிடும் நிலையும் பற்றியெல்லாம் பத்மாவதிக்குத் தெரியும். பெண் விடுதலை

இயக்கமென்று பேச வெளிக்கிட்ட பின்னால் இம்மாதிரிப் பலபேரை அவள் சந்தித்திருக்கிறாள். அவளுக்கு உறவுமுறையான ஓரிரு பெண்களே கல்லூரிக் காலத்தில் பியர் குடிக்கிற அளவுகூட தீவிரத்துடன் இருந்திருக்கிறார்கள். அவர்கள் சமூகமே அதை அடங்கிய ஒரு மொறுமொறுப்புடன் பார்த்துக் கொண்டிருக்க மட்டுமே செய்தது. அவர்களும் ஒரு முதிர்வில் அடங்கிப் போனார்கள். ஆனால் இவள்...? இந்த வயதில்...? நினைக்கிறபோது ஏதோபோல் இருக்கும். ஆனாலும் ஒரு மாயத்தில்போல் அடுத்த கணத்தில் அவளது நடவடிக்கைளெல்லாமே ஒரு கவுரவமாய் வந்து கவிந்துவிடும். அவர்களில் பலர் விரும்பி செய்யாதிருப்பதை அவள் செய்கிறாளென்றும், செய்வதையே ஒளிவு மறைவின்றிப் பேசுகிறாளென்றும் மனம் தற்சமாதானம் அடைந்துவிடும்.

அந்த வட்டத்துக்கு ஆனந்தி அறிமுகமானபோது அன்னலட்சுமியின் தோழி என்பதைத் தவிர யாருக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை. அவளது முற்போக்கு சமூகம் சார்ந்ததா, அரசியல் சார்ந்ததா, சுயபாதிப்பினாலான வெறும் ஆவேசமாவென்று வெகுகாலம் வரை அவர்கள் யோசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஆரம்ப நாட்களில் சிலர் அவளை வெறுக்கவும் புறக்கணிக்கவும்கூடச் செய்தார்கள். பின்னர் அவர்கள்தான் நெருங்கிய சிநேகிதிகளும் ஆனது. எனினும் கருத்துக்களைப் பகிர்ந்த அளவுக்கு தாம் பற்றி எவரும் கரிசனை கொள்ளவில்லை. எப்போதாவது ஒரு ஆர்வக் கிளர்வு அவரவர் மூலம் தேடுகிற கேள்விகளைப் பிறப்பித்திருக்கிறதுதான். ஒருவரிலிருந்து ஒருவர் சமயத்தில் நழுவிப்போவதே நடந்திருக்கிறது. ஆனந்தவல்லி அதை மிக்க சாதுர்யமாய்ச் செய்திருக்கிறாள். மேலே யாரும் வற்புறுத்த மாட்டார்கள். விடாப்பிடியான கேள்வி அவளைச் சினப்படுத்தும். அப்படிச் சொல்லிச் சொல்லி குஞ்சம்மாதான் அவள் மீது ஒரு அச்சத்தை வளரச் செய்திருந்தாள். அப்போது அவள் வயது அவர்களுக்கு ஞாபகம் வரும். ஒதுங்க அது துணையாயிருக்கும். அதற்கு மேல் ஒதுங்கிப் போக ஆனந்தவல்லி விடமாட்டாள். வயதை அழித்துக்கொண்டு காலாதீதியாய் வந்து நிற்பாள். அது அவளின் ஒரு வசீகரம்.

இந்த மாதிரித்தான் அவர்கள் 'இந்தோனேஷியா'போல் இருந்தார்கள்.

பத்மாவதி நினைவை உசுப்பிக் கொண்டு தன்னைப் பிரக்ஞையானாள். பிறகு மிகவும் அவதானத்தோடு சொன்னாள்: 'அவர் யாரென்றே எனக்குத் தெரியாது. உன் மூலமாகத்தான் அறிமுகமானது. அவரின் நலன்களல்ல, எனக்கு உன்னின் நலன்களே முக்கியம். ஆனாலும் அவரின் நிலைமை பரிதாபத்துக்குரியது. அப்படி நொருங்கிப் போயிருக்கிறார். க்ஷண நேரங்களுக்கான உறவாகவே பல அமைந்து போயினும் பிரிதல் துன்பம்; இழத்தலும் துன்பம். ஆழமான அன்பு வைத்திருந்திருப்பாரென்றே எண்ணத் தோன்றுகிறது. அவரது நொருங்குகை வெளிப்படையாயே சொல்வது அதைத்தான்.'

'டிப் லவ்...?' கேட்டுவிட்டு ஆனந்தவல்லி சிரித்தாள். சிரிப்புக்கிடையில் தொடர்ந்து கேட்டாள், 'லவ் பெயிலியர்...? எ ப்ரோக்கின் ஹார்ட்...? காமன் ரீனேஜ் ப்ராப்ளம்தானே! இதுக்குப் போய்...?' என்று.

பத்மாவதி எதுவும் பேசவில்லை. மௌனம் தொடர்ந்த சில கணங்களின் பின் வெடித்து மறுபடி சிரித்தாள் ஆனந்தவல்லி. அப்போதுதான் அவள் பேச்சிலிருந்த நையாண்டி பத்மாவதிக்குப் புரிந்தது. அவர் ஐம்பது வயது தாண்டியவர். பல முயற்சிகளையும் கடந்து அவர் வயது முகச் சுருக்கங்களில், பெருமளவு தட்டையான தலையில் தெரிந்து கொண்டிருந்தது. அந்த நகைச்சுவை அவளையும் மூச்சடக்கிச் சிரிக்க வைத்தது. அனைவரது பார்வைகளும் அவர்கள் மேல் மையமாகின. அவர்கள் விரைந்து அப்பால் நகர்ந்தனர் இன்னும் சிரிப்பின் அதிர்வுகள் குறையாமலே.

யாருடனோ மோதப் போவது போல் தெரிந்து சடாரென நின்றாள் ஆனந்தவல்லி. அந்த அவதித் தருணத்தின் தவறு தன்மீதே என்பது போல், 'சாரி... சாரி...' என்று பின்வாங்கினாள். நிமிர்ந்தவள் அப்படியே நிலைகுத்தினாள். அவளது சிரிப்பு அப்படியே அடங்கிக் கருகியது.

பத்மாவதி சிரிப்பதை நிறுத்தினாள். தோழியின் ஸ்தம்பிதம், நிலைகுலைவு யாவும் ஆச்சரியமாய் இருந்தன. அத்தனைக்கு அந்த மாதின் முகத்தில் என்ன இருந்தது? யார் அந்தப் பெண்?

சில நொடிகளின் நகர்வின் பின்... ஒரு சுதாரிப்போடு அப்பால் நடந்தாள். தலை நிமிர மறுத்தாற்போல குனிந்து கிடந்தது. முதியவள் நிலைமையும் ஏறக்குறைய அதேதான். ஆனால் இவளின் முகத் திருப்பலை எதிர்பார்த்து தான் முகம் திரும்பிக் கொண்டு போய்க்கொண்டிருந்தாள். அப்போதுதான் அந்த அதிசய ஒற்றுமை அவள் கண்களில் பிடிபட்டது. ஆனந்தவல்லி சில வருஷங்கள் கழிய எப்படி இருப்பாளோ, அப்படியிருந்தாள் அவள். அதே நிறம், அதேயளவு மொத்தம், அதே பரட்டை படிந்த கேசம், அதே கண் மூக்கு முகவமைப்பு... எல்லாமே ஒரே மாதிரி. மூத்த சகோதரியாக இருக்கலாமென்று உடனடியாகவே ஒரு எண்ணம் மனத்தில் விழுந்தது. அப்போதும் தான் அந்த உருவ ஒற்றுமை அவளை அதிசயிக்க வைத்துக் கொண்டிருந்தது. அத்தனைக்கு ஒரே அச்சின் முன்னதான பிரதியாக அவள் இருந்தாள்.

சில கணப் பொழுதைய அந்தச் சந்திப்பு பெரிதாக அவள் ஸ்திரத்தை உலுப்பிவிட்டிருந்தது தெரிந்தது. ஆளே மாறிப் போய் விட்டிருந்தாள். அந்த முகத்தில் அப்போது கவிந்திருந்த உணர்வு என்ன? வெறுப்பா, கோபமா, பச்சாத்தாபமா அல்லது இவை எல்லாவற்றினதும் கலவையா என்று தெரியச் சிரமமாயிருந்தது.

இறுகியவளாகத்தான் ஆனந்தியைத் தெரிந்திருந்தாள் பத்மாவதி. உலகின் சட்டகங்களுள் அடங்காமல் திமிறிக் கொண்டு வாழ்ந்து

கொண்டிருந்தாலும் அவளிடத்தில் பலஹீனங்களும், மென்மையான பகுதிகளும் இருந்ததை அந்தச் சின்ன நிகழ்வு பத்மாவதியைப் புரிவித்தது.

'யார் அது? அக்காவா?' பத்மாவதி கேட்டாள்.

ஆனந்தி இல்லையென்று தலையசைத்தாள். 'அம்மா...!'

அது மேலுமொரு அதிசயமானது பத்மாவதிக்கு. ஒரே உருவம் மட்டுமில்லை, காலத்தை விழுங்கி நிற்கும் அந்த யௌவனமும் பத்மாவதியைப் பேரதிசயம் செய்தது. அவளுக்கு மனத்துக்குள் கேள்விகள் விளையத் துவங்கின. ஆனாலும் கேட்பதற்கு அது உசிதமான சமயமல்ல. 'வா ஆனந்தி, வீட்டிலே கொண்டு போய் விட்டுவிடுகிறேன்' என்று சொல்லி கிளம்பத் தயாரானாள்.

'வேண்டாம் பத்மா. நீ போ. நான் பஸ்ஸில் போய்க்கொள்கிறேன்.'

அடையாறில் இருக்கிறவளை நுங்கம்பாக்கம் வரை இழுத்தடிக்க வேண்டாமே என்பதற்காக அவ்வாறு அவள் சொல்லியிருக்கக் கூடுமெனினும், அவள் அப்போது தனியேயிருக்க விரும்புவது தெரிந்து மேலே வற்புறுத்தாமல் விட்டு விட்டாள் பத்மா.

# 2

குளித்து வந்து இரவுடைக்குள் மாறிக்கொண்ட ஆனந்தவல்லிக்கு உடலிறுக்கம் தளர்ந்ததாயினும் மனவிறுக்கம் தளரவில்லை. சமையல் பகுதியில் பாத்திரங்களைக் கடகடத்துக் கொண்டிருந்த ஆயாவை அழைத்து கோப்பி ஒன்று போட்டுவரும்படி கூறிவிட்டு அறைக்குள் நுழைந்தாள்.

படுக்கையில் வந்து அமர்ந்து கொண்டு முதல் நாள் வாசித்து குறையாக வைத்திருந்த சஞ்சிகையை எடுத்துப் பிரித்தாள்.

வாசிப்பு அவளுக்குப் பொழுதுபோக்கில்லை. அவசியம். சின்ன வயதிலிருந்து பழகிய பழக்கம். ஒருவகையில் தாயாரிடமிருந்து தொற்றிய பழக்கமென்றும் அதைச் சொல்லலாம். சாதாரணமான ஜனரஞ்சக பத்திரிகைகளின் சிறுகதை தொடர்கதைகளின் வாசகியாகத்தான் தன் வாசிப்புப் பழக்கத்தை ஆரம்பித்தாள் ஆனந்தவல்லி. பொழுதைப் போக்கடிப்பதே அப்போது இருந்த ஒரே நோக்கம். பிறகு சிறிய சிறிய கதைப் புத்தகங்களூடாக மகாநாவல்களில் அவள் திளைக்கத் தொடங்கினாள். நாள் ஆக ஆக தரம் தேடும் வாசகியானாள். கடந்த மூன்று நான்கு வருஷங்களாகத்தான் கனதியான வாசிப்புக்குள் அவள் இறங்கியது. தன்னுடைய வருமானத்தில் தேவையான சஞ்சிகைகள் முக்கியமான நூல்கள் வாங்க அவள் சிரமப்பட்டாள். இருந்தும்... லாகிரிபோல அவளுக்கு அதில் மாறாத தேவை இருந்தது.

வாசிப்புக்கு அவளது மனம் அன்றைக்குப் பின்னடித்தது. முதல் நாள் வாசித்த பகுதி ஞாபகத்தில் வந்து தொடர்பேற்படுத்தச் சிரமப்பட்டது. வாசிக்கும் வரிகளின் கருத்துக்கள் கிரகிப்புக்குள் அடங்காமல் கண்ணாமூச்சி விளையாடின. கண் முழுக்க, நெஞ்சு முழுக்க அம்மாவின் வாடிய முகமும் கலங்கிய கண்களுமே வந்து அடைத்துக் கொண்டு நின்றிருந்தன.

அம்மா எவ்வளவு மாறிப்போய்விட்டாள்! என்ன வாட்டம்! என்ன கலக்கம்! நம்பிக்கை, பற்று, பிடிமானம் யாவும் இழந்தது போல் என்ன விரக்தி அந்தக் கண்களில்! நான்கு வருஷங்கள்தான் அவளைப் பார்த்து. அந்தக் குறுகிய காலத்தில் எப்படி க்ஷீணித்துப் போனாள்!

இனி என்றைக்குமே அந்த வீடு போவதில்லை, அவளோடு பேசுவதில்லை, அவளைப் பார்ப்பதுமில்லை என்ற தீர்மானங்கள் ஆனந்தவல்லியின் இதயத்தில் ஆழமாக விழுந்திருந்தன. அந்தத் தீர்மானங்கள் குலையாமலேதான் அதுவரை காலத்தையும் அவள் கடத்தியிருந்தாள். ஒரு திட்டத்தில்தான் அது சாத்தியமானது. ஆனாலும் அன்றைக்கு எதிரெதிராய்ச் சந்திக்கும்படி ஆகிவிட்டது. கணப் பொழுதுகள்தான். இருந்தும் கலங்க வைத்துவிட்டது. மனத்தின் அடித்தளமும் குலுங்கும்படியான பாதிப்பு அது.

அவள் எதிர்பார்க்கவில்லை, அம்மாவில் அந்தளவான ஒரு தேய்மானத்தை. வருஷங்களை விழுங்கிவிட்டு காலாதீதிபோல் நிமிர்ந்து நின்றவள் மகாலட்சுமி. அந்த வனப்பும் வைரமும் ஒரு நான்காண்டுக் காலவெளியில் வாரியடித்துச் செல்லப்பட்டிருந்தன.

ஆனந்தவல்லி தன் கலக்கத்தைத் தெளிவித்தாள். தன்னுடைய தாய் அந்த அக்கறைக்கு, இரக்கத்துக்கு உரியவள்தானா என்று யோசித்தாள். முடிந்தால் அந்த க்ஷீணத்தில் அவள் ஒரு வஞ்ச மகிழ்ச்சியைத்தான் அடைந்திருக்க வேண்டுமென்று பட்டது. இல்லாவிட்டாலும் இரக்கமாவது பட்டிருக்கக் கூடாதென்று தோன்றியது. அவள் திண்மையாகவே இருந்திருக்க வேண்டும். இளகக் கூடிய விதத்தில் அவர்களது பிரிவுத் தருணம் இருந்திருக்கவில்லை. அடர் இருள் படிந்த ஒரு மாரி இரவில் பெண் என்று கூடப் பார்க்காமல் வீட்டைவிட்டு வெளியேறச் சொன்னவள் அவள்.

என்ன மாதிரி அன்று வெடித்தாள்.

கதி கலங்கிப் போகும்படியான அந்த வெடிப்பை அப்போது நினைக்கையிலும் ஆனந்தவல்லியின் உள்ளத்துள் தீ சுழன்றெழுந்தது.

அவளுக்கு எல்லாம் ஞாபகம்.

ஆனந்தவல்லி அந்த நாளை நினைத்துப் பார்த்தாள்.

அன்றும் ஒரு சனிக்கிழமை.

மழை பெய்து ஓய்ந்திருந்த வானத்தில் மறுபடி கருமேகங்கள்.

வீட்டு வாசலில் வந்து நின்ற ஓட்டோவிலிருந்து அவசர அவசரமாக இறங்குகிறாள் ஆனந்தவல்லி.

வாசல் மரங்களிலிருந்து சின்னீர் தெறிக்க வாசல் இரும்புக் கதவை காலால் தள்ளித் திறக்கிறாள். கைப்பை, இரண்டொரு கோப்புகள், மேலே சில புத்தகங்கள் சகிதம் அவற்றிற்கு குடையாகத் தன்னை வளைத்து மூடிக்கொண்டு வீட்டுக்கு ஓடுகிறாள்.

நட்டநடு வாசலில் வழியை மறிப்பதுபோல் நின்று கொண்டிருக்கிறாள் மகாலட்சுமி.

விலகி நில்லேன் அம்மா. அப்படியே நின்றால்... என்கிறாள் ஆனந்தவல்லி.

மகாலட்சுமி அப்போதும் விலகவில்லை. எரிச்சலோடு நிமிர்ந்து பார்க்கிறாள் அவள். அம்மாவின் கண்கள் ஜிவுஜிவு என்று கனன்று கொண்டிருக்கின்றன. உதடுகள், வசவுகளைக் கக்குவதற்குப் போல் துடித்துக் கொண்டிருக்கின்றன.

எதிர்வீட்டுத் திண்ணையில் ரம்யாவின் தாத்தா, பக்கத்து வீட்டிலிருந்து அன்னலட்சுமியின் அம்மா அப்பா ஆகியோர் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள் விரிந்த விழிகளினூடாக. தாயாரின் முரண்டைத் தெரிந்து கொண்ட ஆனந்தி, வழிமறிக்கப்பட்டவளாய் அதிலே நின்று காட்சியாவதை விரும்பாமல் இடித்து விலக்கிக்கொண்டு உள்ளே நுழைகிறாள்.

இவ்வளவு நேரம் எங்கே கிடந்துவிட்டு வருகிறாய்?

பின்னால் சீறிப் பிறக்கிறது கேள்வி.

கிடந்துவிட்டு...

சொல்லில் நெருப்புத் துளிகள் தெறிக்கின்றன. அவளது நெஞ்சக் கொதிப்புத் தெரிகிறது.

கையில் இருந்தவற்றை மேசை மேல் பொத்தென்று போட்டுவிட்டு தாயாரை நோக்கித் திரும்புகிறாள்.

தாயாரோ, தானே வளர்த்த அக்னியில் மேனி பதறப் பதற எரிந்து கொண்டிருக்கிறாள். அந்த நிலையில் அவளைப் பார்க்க பயமாக இருக்கிறது ஆனந்தவல்லிக்கு. சுடச்சுட பதில் சொல்லிவிடுகிற ஆக்ரோஷத்தோடு திரும்பியவள் தணிகிறாள். இரண்டு பேருமே பதறினால் காரியம் சிதறி விடும். அதனால் நிதானமாகச் சொல்கிறாள்: சிநேகிதி வீட்டுக்குப் போய் வருகிறேன். இப்ப அதுக்கென்ன...?

நேரம் இப்ப ஒன்பதரை மணி ஆகிறது.

ஒன்பது பத்துத்தான் ஆகிறது.

இவ்வளவு நேரமும் சிநேகிதி வீட்டில்தான் நின்றுவிட்டு வருகிறாயா?

ஆமாம். மழை அடித்துப் பெய்ததே, அப்போதுகூட அங்கேதான் நின்றிருந்தேன். மழை விட்டதும் புறப்பட்டு வருகிறேன்.

எந்தச் சிநேகிதி வீட்டில்...? குஞ்சம்மா வீட்டிலா...?

அங்கேயெல்லாம் போகவில்லை.

பிறகு...? ஜெயஸ்ரீ வீட்டிலா?

இல்லை. எனக்கு எத்தனையோ சிநேகிதிகள். சொன்னாலும் உனக்குத் தெரியாது.

அந்தச் சிநேகிதிதான் ஆட்டோவில் கொண்டுவந்து இறக்கிவிட்டுப் போகிறாளோ?

கூட வந்து இறக்கிவிட்டுப் போகிற பாலாஜியை தாயார் பார்த்துவிட்டாளென்பது ஆனந்தவல்லிக்குப் புரிகிறது. ஆட்டோ பிடித்துக்கொண்டு போகிற வழியில் அவளை வீட்டிலே இறக்கிவிட்டுப் போவதாகக் கூறி வந்திருந்தார் அவர். அது அவளுக்குத் தெரியவா போகிறது? சொன்னால் ஆரோக்கியமாய்ப் புரிந்துகொள்ளவா போகிறாள்? இருந்தாலும் பதிலைச் சொல்லி வைத்தாள். அடங்கிப் போய் அவளை அடக்கிவிடலாம் என்ற எண்ணம் அப்போதும் இருந்தது அவளிடத்தில். வந்தது சிநேகிதி இல்லை, அந்தச் சிநேகிதி வீட்டில் சந்தித்த சிநேகிதர் தான். ஏன் கேட்கிறாய்?

மகாலட்சுமி பதில் சொல்லவில்லை. கண்களை உருட்டிக்கொண்டு பேசாமல் நின்றிருக்கிறாள்.

ஆனந்தவல்லிக்கு அவள் நிலைமை பரிதாபமாக இருக்கிறது. ஆனாலும் இப்படி எட்டு மணிக்கு மேலே வருகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எங்கே போய்விட்டு வருகிறாய், யாரோடு படுத்துவிட்டு வருகிறாய் என்று கேட்டுக் கொண்டிருந்தால்...? உண்மையில் அன்றைக்குத் தவிர என்றைக்குமே அவள் அந்த மாதிரிக் கேட்டதில்லைத்தான். ஆனால் அப்படித்தான் நினைத்துக்கொண்டும், தனக்குள் கனன்றுகொண்டும், மௌன விரதம் பூண்டாற்போன்று பார்வைக்கும் வெறுத்து ஒதுங்கி ஒதுங்கியும் சென்று கொண்டிருந்திருக்கிறாள்.

அந்த விஷயத்தைப் பெரிதுபடுத்தாமல் அப்படியே விட்டுவிடவே அப்போதும் அவள் எண்ணுகிறாள். நானொன்றும் சின்னப் பெண் இல்லை. நான் கரிசனம் படவேண்டிய வயதில் எனக்கே ஒரு பெண் இருக்கிறாள்...?

மகாலட்சுமி திரும்பி நின்று குலுங்கிச் சிரிக்கிறாள்.

அவள் பேசியவைகூட அல்ல, சிரித்ததே ஆனந்தவல்லியிடத்தில் கோபத்தைப் பொத்துக் கொண்டு கிளரவைக்கிறது. இடுக்கிய பற்களினூடாக

தாயாரின் பின்னே நின்று இரைகிறாள். ஏனம்மா இப்போது சிரிக்கிறாய்? வயது வந்த பொண்ணொன்று இருப்பது இப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்திருக்கிறதென்றா? நீ என்னை வளர்த்தது மாதிரி கூடவிருந்து அவர்களை நான் வளர்க்கவில்லையென்றா? கணவன் வேண்டாம், தாலி வேண்டாம், குடும்பம் வேண்டாமென்று வந்துவிட்டு பெண்ணைப்பற்றி இப்போது பேசிவிட்டேனேயென்றா? நீ சிரிக்க வேண்டாம். அந்த மாதிரி விட்டு வந்தவைகளிலெல்லாம் எனக்குப் பற்று எதுவும் தோன்றி விடவில்லை. நானே அந்தளவுக்கு வளர்ந்தவள் - வயதானவள் - என்பதை உனக்குத் தெரிவிப்பதற்காகவே சொன்னேன்.

தெரியும். நீ புருஷனோடு சேர்ந்து வாழமாட்டாய்; புருஷனுக்கு அடங்கி நடக்கமாட்டாய்; பெற்ற தாயை மதிக்க மாட்டாய்; எதையும் உடைத்துப் பேசுறதும், எடுத்தெறிந்து நடக்கிறதும்தான் உனக்குச் சுகம் என்பதும் எனக்குத் தெரியும். எனக்குத் தெரியாதது, எப்படி இந்தக் குணங்கள் உன் சுபாவமாயின என்பதுதான். தேவதைகள் மாதிரி மூன்று குழந்தைகள். தாயின் அரவணைப்பில்லாமல் அதுகளை இத்தனை நாளாய் அந்தரிக்க வைத்துவிட்டு தனியாக இங்கே வந்து கிடந்து இஷ்ட ஜீவனம் நடத்துகிறாய். அவரும்தான் எத்தனை தடவையென்று வந்து வந்து உன்னைச் சமாதானப்படுத்திக் கூட்டிக் கொண்டு போவார்? ஓடிவந்த அடுத்தடுத்த நாளே முதல் வேலையாய் கடிதமெழுதிப் போட்டாய். என்ன எழுதினாயோ? ஆனால் நிச்சயமாக ஏதாவது அக்கிரமமானதாய்த்தான் எழுதியிருப்பாய். இல்லாவிட்டால் இரண்டாம் மூன்றாம் நாளே கண்டிப்பாக வந்து கூட்டிப் போயிருக்கக் கூடிய மனிதர் அவர். அப்படியான மனிதரோடேயே உன்னால் ஒத்துப்போக முடியவில்லை. நீ எதையாவது உணர்வதும், திருந்தி நடப்பதும் இனி இந்தப் பிறவியில் நிகழப்போவதில்லை. பிடிவாதத்தையும் முரட்டுத்தனத்தையும் உயிர்க்குணமாய் வளர்த்துக் கொண்டிருக்கிறாய். அந்த வகையில் அடுத்த பிறவியிலும் உனக்கு மீட்சி கிடைக்காது. என்னவோ செய்து கொள். ஆனால் இந்த மாதிரி சீர்கெட்டதனமாய் மனிதர்கள் வாழக்கூடாது...?

அம்மா!... ஆனந்தவல்லி அலறினாள்.

ஏன், இந்த மாதிரி இரவு நேரத்தில் வேலையிலிருந்து வீடு திரும்புவதற்கு சீரான வாழ்க்கையென்று பெயரோ? புருஷனை விட்டுப் பிரிந்திருக்கிற ஒரு பெண் கண்ட கண்ட ஆண்களோடு... கண்ட கண்ட நேரங்களிலே ஆட்டோவில் வந்து வீட்டு வாசலில் இறங்குவதற்கு வேறு என்ன பெயர் சொல்கிறது, சொல்லு.

அவர்களின் பேச்சை அடக்கிக்கொண்டு அடுத்த பாட்டம் மழை பிடித்தது.

ஆனந்தவல்லி கட்டுப்பாடு தளரத் துவங்கினாள். இதற்கு நீ என்ன பெயரென்றாலும் வைத்துக் கொள்ளலாம். தேவடியாள்த்தனம் என்று

வெளிப்படையாகச் சொல்வதனாலும் சொல்லு. எனக்கொன்றுமில்லை. நீ சொல்கிறாய் என்பதற்காக என்னுடைய பழக்கங்களை நான் மாற்றிக் கொண்டுவிட முடியாது. பெற்ற தாய் பெற்றதாயென்று ஒரு மாய வலைக்குள்ளே ஒரு பெருங் காலத்துக்கு என்னைக் கட்டிப் போட்டிருந்தாய். அதிலிருந்து விடுபட்ட பிறகு கட்டிய கணவன் என்று சொல்லிச் சொல்லி ஒரு கூட்டுக்குள்ளே அடங்கிக் கிடக்க வற்புறுத்துகிறாய். உன்னுடைய வாழ்க்கையை நீ உன் விருப்பத்தின்படிதான் வாழ்ந்தாய். அதுபோல என்னுடைய வாழ்க்கையை என் விருப்பத்தின்படி வாழ என்னை நீ விட்டுவிடவேண்டும்.

அவள் திரும்பிய விதத்திலேயே ஒரு தகர்வின் நிச்சயத்தை உறுதி சொல்லக்கூடியதாக இருந்தது. இது... என்னுடைய வீடு. என் புருஷன் எனக்கென்று வாங்கி எழுதி வைச்சது.

மேலேயிருந்து இடியேறு இறங்குகிறதா? ஆனந்தி திகைத்துப் போகிறாள். அப்படியென்றால்... அப்படியென்றால்... என்ன அர்த்தம் இதற்கு...? என்று இரைகிறாள்.

அர்த்தமெல்லாம் வெளிப்படையாகத்தான் இருக்கு. ஊர் உலகத்தில் இருக்கிற மற்றப் பெண்களைப் போல ஒழுங்காக இருந்து வாழுறதானால் இங்கே நீ இருக்கலாம். இல்லையென்றால்... நீ வேறிடம் பார்த்துக் கொள்வது நல்லது. ஏன் இப்படி நடக்கிறாய், அப்படி நடக்கிறாயென்று கேட்க நிச்சயமாக அங்கேயெல்லாம் நான் வரமாட்டேன். நீ என்னை நம்பலாம்.

மகாலட்சுமி அங்கே அதற்குமேல் நிற்கவில்லை. கூடத்துள் பாயை விரிக்கிறாள்; ஆசுவாசப்படவேண்டிப் போல வெளியே சிறிதுநேரம் நின்று மழையைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்; பின் விறுவிறுவென வந்து படுத்துக் கொள்கிறாள்.

ஆனந்தவல்லி நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை. மேசையில் கையூன்றியபடி இன்னும் அப்படியே. வெகுநேரத்தின் பின் அவள் பிரக்ஞை மீண்டபொழுது... வாசல் கதவு திறந்திருக்கிறது; மழை நின்றிருக்கிறது; இலைகள் இசைத்த துளிகளின் ஓசை நிசப்த வீர்யத்தை அதிகரித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது; மகாலட்சுமி சரிந்து படுத்திருக்கிறாள். பெரும்பாலும் தூங்கிவிட்டிருக்கக் கூடும்.

அவள்தான் எப்போதும் விளக்குகளை அணைத்து, கதவைச் சாத்தி தாழ்போட்டு விட்டு வந்து படுப்பாள். அன்றைக்கு கதவைத் திறந்திருக்க, விளக்குகளை எரிந்தபடியிருக்க விட்டிருக்கிறாள். ஏன்? ஆனந்தவல்லி அப்போதே வீட்டைவிட்டுப் போயிடலாம் என்பதற்காகவா?

ஆனந்தவல்லியின் கண்கள் கனத்தன. கண்ணீர் வடித்தபடி வெகுநேரமிருந்தாள்.

மறுநாள் காலையில் மகாலட்சுமி கண்விழிக்கிற வேளை இரண்டு சூட்கேஸ்களுடன் வெளிக்கிட்டு நின்றிருக்கிறாள் ஆனந்தவல்லி. விளக்கு அணைந்திருக்கிறது. வாசல் கதவு திறந்தபடியே இருக்கிறது.

அந்தளவு ஆகுமென்று நினைத்திருக்கவில்லைப் போல திடுக் காட்டம் ஏற்படுகிறது மகாலட்சுமியிடத்தில்.

ஆனந்தவல்லி நெருங்கிச் செல்கிறாள். உன் புருஷன் வாங்கி, உன் பெயரில் எழுதிவைத்த இந்த வீட்டில் இனி நீயே இருந்து வாழ்ந்துகொள். நான் பங்குபோட வரமாட்டேன். அப்போதே நினைத்தேன், இங்கே வர வேண்டாமேயென்று. உண்மையைச் சொல்லப் போனால்... வேறு போக்கிடம் கிடைக்கவில்லை. எங்கள் உறவு இறுதிப் புரியில் தொங்கிக்கொண்டிருந்தது நேற்றிரவு வரை. இன்று அறுந்துவிட்டது. நீ வேறு, நான் வேறு ஆகிவிட்டது.

கண்ணீர் வருகிறது அவளுக்கு.

எதிரே மகாலட்சுமி சிலையாக.

ஆனந்தவல்லி தொடர்கிறாள்: இதுவரை காலத்தில் நீ பெரிதாக ஒன்றும் எனக்காகக் கஷ்டப்பட்டு விடவில்லை. சமைப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் தெரியாத நீ ஒவ்வொரு நகையாக விற்று விற்று வயிற்றுப்பாட்டைச் சமாளித்தாய். அதெல்லாம் அப்பா வாங்கித் தந்த நகைகள்தான். பிறகு என் கல்யாணத்தையும் சொத்துகளை விற்று கஷ்டப்படாமல்தான் ஒப்பேற்றி வைத்தாய். பெற்றதும் பால் கொடுத்ததும் உன் தொழிற்பாடும் கடமையுமாகும். அவற்றுக்காக கணக்கிறுக்கிற அவசியம் எந்தப் பிள்ளைக்கும் இல்லை. ஆனால் என்னை படிக்க வைத்திருக்கிறாய். கொன்வென்ற் படிப்பை நீ தந்துவிடவில்லைத்தான். என்றாலும் அக்கம் பக்கத்திலும் உன் உறவுக்காரரிலும் இருந்து வந்த மோசமான வழிகாட்டலை மீறியே இதை நீ செய்தாயென்பது எனக்குத் தெரியும். அதற்காகவாவது உன்னை ஓரளவேனும் ஆதரிக்கிற கடமை எனக்கிருக்கிறது. உனக்கும் வேறு பிள்ளைகள் இல்லாததால் இந்தக் கடமையை நான்தான் நிறைவேற்றவும் வேண்டும். இதை முன்பு நெய்வேலியில் இருக்கும் போதும் செய்தேன்; இனியும் செய்வேன்.

இப்போது முகத்தைத் துடைக்கிறாள்.

உணர்வின் உச்சம் படிப்படியாக பாதிக்குமேல் குறைந்திருக்கிறது.

ஆனாலும் மனம் முழுதும் மரத்ததுபோல் ஒரு வெறுமையின் கவிவு முகத்தில்.

அவள் தொடர்கிறாள்: நானொன்றும் கை நிறையச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கவில்லை. என் கஷ்ரங்களை அதிகரித்துக் கொண்டுதான் உனக்கு உதவிசெய்யவும் முடியும். ஆனாலும் செய்வேன். மாதம் நூற்றைம்பதோ இருநூறோ... முடிந்த ஒரு தொகையை அனுப்புவேன். சொந்த வீடு இருப்பதால் வாடகைச் சிரமம் உனக்கில்லை. நீ அந்தத்

தொகையை வைத்துக் கொண்டே வாழ்ந்துவிட முடியும். நான் எங்கேயிருந்தாலும் வேலை செய்து கொண்டு இருக்கிற வரையில் முதல் பத்து தேதிக்குள் அந்தத் தொகை உன் வீடு தேடி வரும். அதை யாரோ அனுப்புவதாக, சொர்க்கத்திலிருந்து உன் புருஷனே அனுப்புவதாகக்கூட, நீ பாவித்துக் கொள்ளலாம். ஏனெனில் எனக்கு நீபோலவே உனக்கு நானும் இருப்பதுதான் நல்லது. எனக்கு நீ... நேற்றே செத்துப்போனாய்.

அவள் கைப்பையை தோளில் கொளுவுகிறாள். இரண்டு கைகளிலும் இரண்டு சூட்கேஸுகளைத் தூக்குகிறாள். அவளளவில் கருவறைப் பந்தம் முற்றாக முறிந்துவிட்டது. திரும்பிப் பாராமல் நடக்கிறாள்.

அது மார்கழி மாதம். விடிவிடியென்று விடியும் காலை. வீதி நெடுக வெளீரென்ற, சில இடங்களில் வர்ணம் வர்ணமான கோலங்கள்.

நுங்கம்பாக்கம் ரயில்வே ஸ்ரேஷனுக்குச் சமீபமாக சின்ன வீடு ஒன்று மாடியிலே கிடைக்கிறது. மதியத்தில் அட்வான்ஸ் கொடுத்து மாலையில் குடியேறலை நிகழ்த்துகிறாள்.

எல்லாம் நடந்து நான்கு வருஷங்கள். நான்கு விநாடிகள் கூட தாயைப் பார்க்கிற சந்தர்ப்பம் இதுவரையில் அவளுக்குக் கிடைக்கவில்லை. எப்போதாவது நினைப்பு வரும். வற்புறுத்தலாமா கூடாதா என்று தயங்கித் தயங்கி ஆயா வற்புறுத்துகிற சமயங்களில், தன் அபிப்பிராயங்களில் பிடிவாதமாக இருந்து இவள் சொல்கிறவற்றைச் செய்ய பின்னடிக்கிற சந்தர்ப்பங்களில் தாயாரை நினைத்துக் கொள்கிறாள். விருப்பமில்லாமலேனும் அது நிகழ்கிறது.

தாயார் மிகவும் தளர்ந்து போனதாகத் தெரிந்தது ஆனந்தவல்லிக்கு. இயல்பிலேயே அவளுக்கு மெல்லிய உடம்பு. பலஹீனம் அசைவில் பார்வையிலென்று ஒவ்வொரு அம்சத்தினும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். ஆனாலும் எப்போதும் அவள் அந்த மாதிரி வதங்கியிருந்ததில்லை. அது ஓர் ஏக்கத்தின் புள்ளியிலிருந்து ஜனன மாயிற்றென்று அவளுக்குப் பட்டது. அவளது கலங்கிக் குளம் போலிருந்த கண்களும், பிரிய முடியாததுபோல் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு போன தவிப்பும் அவளுக்கு அதைத்தான் தெரிவித்தன.

ஆனாலும் ஆனந்தவல்லியின் மனத்திலிருந்த வைராக்கியத்தை எதனாலும்தான் உடைக்க முடியாது. அப்படியானதொரு வெறுப்பு... அப்படிப்பட்டதொரு கோபம்... அப்படிக் கொத்ததொரு வன்மம்...!

அந்த உணர்வு அவளுக்குப் பழக்கம். நீண்ட காலப் பழக்கம். அதுமாதிரி வேளைகளில் நினைவுகளைத் திரஸ்கரிப்பதே அவற்றிலிருந்து விடுபடுவதற்கான உபாயமாக அவளுக்கு இருந்திருக்கிறது.

எப்போதுமே உடைக்க முடியாதென்று கருதுமளவான இறுக்கத்தின் அடுத்த படியில் அதன் உடைவும் இருக்கும். அதனால் அவசர அவசரமாய் அந்த நினைவைத் துறப்பதின் மூலம் தன் இறுக்கத்தைத் தக்கவைத்தாள் ஆனந்தவல்லி.

## 3

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. அதிகாலை வேளை. திடுக்கிட்டுக் கண் விழித்தாள் ஆனந்தி. அந்தத் திடுக்காட்டத்தின் காரணமானது கனவு என்று தெரிந்த பின்பும் நெஞ்சு துக்கத்தில் முட்டிப் போயிருந்தது. அவளால் மறுபடி தூங்க முடியவில்லை. யாருக்காவது சொல்ல வேண்டும் இல்லையேல் கண்ணீர் கொட்டி அழுது தானே துக்கத்தைக் குறைக்க வேண்டும் மாதிரியான வலி அது.

சொல்லி ஆறுதல் பெறுவதென்பது சாத்தியமில்லை. அவளைப் பூரணமாகத் தெரிந்தவர் யார்? நான்கு வருடங்களாகக் கூடஇருக்கிறாள் ஆயா. அவளுக்கே தெரியாதே!

தனக்கே தன்னை ஒழித்துக்கொண்டு வாழ்கிறவள் யாரிடம் போயும் மனக்குறையைச் சொல்லி தீர்த்துக் கொள்ள முடியாதுதான்.

அன்னலட்சுமியிடம் செல்லலாம். அவள்தான் இவளை ஓரளவேனும் புரிந்தவள். ஓடியாடி விளையாடிய சின்ன வயதுப் பருவத்திலிருந்து இடையிட்டு இடையிட்டும் தடைகளினூடும் வளர்ந்த அந்நியோன்யம் அவர்களுக்குள்தான் இருந்தது. ஆனாலும் வீடு சென்று அவளை ஆனந்தவல்லியால் சந்தித்துவிட முடியாது. நாலு வருஷங்களுக்கு முன்னால் ஒரு சனிக்கிழமை மழை நாள் இரவில் மகாலட்சுமிக்கும் ஆனந்தவல்லிக்குமிடையே ஏற்பட்ட பூசல் அக்கம் பக்கத்து வீடுகளுக்கு காட்சியானதோடு மட்டும் அடங்கிவிடவில்லை. மாம்பலத்தில் ஒரு மூலையில் நடந்த விவகாரம் மறுமூலையிலுள்ள அன்னலட்சுமியின் மாமன் வீடு வரையிலும் கூட நகர்ந்து சென்றுவிட்டது. அவளது கணவர் ராகவன் அவளுக்கும் ஆனந்தவல்லிக்குமிடையிலான தொடர்புபற்றி ஏதும் கூறாத போதிலும், ஓர் அதிருப்தியைக் காட்டி ஓர் எல்லையைப் போட்டு வைத்திருந்தார். மாமன் மாமியர் கண்டிப்பாக அந்த நட்பை விட்டுவிடச் சொல்லியிருந்தனர். அன்னலட்சுமியேதான் இவைகளைச் சொன்னதும். அது தணிக்கையே தவிர தடையல்ல என்றும் அவள் சொல்லியிருந்தாள். ஆனந்தவல்லிக்குத்தான் அன்னலட்சுமிக்கு மனச்சங்கடம் ஏற்படுத்த இஷ்டமில்லாதிருந்தது.

அப்படியில்லாவிட்டாலும் நுங்கம்பாக்கத்திலிருந்து இரண்டு ஸ்டேஷன்களுக்கு அப்பாலுள்ள மாம்பலத்துக்கு ரயிலெடுத்துப் போய்

அல்லது ஓட்டோ பிடித்துப் போய் யாராவது யாரிடத்திலேனும் ஆறுதல் பெறுவார்களா, என்ன?

ஆனந்தவல்லிக்கிருந்த மீதி வழி அழுது தீர்ப்பதுதான்.

மோதுவதுபோல எதிர்ப்பட்டு, திகைத்து, வருந்தி... திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் போனது தானேயாக கனவில் வந்திருந்தது. மோதாமல் விலகிப் போய்க்கொண்டிருந்தது அவளுடைய மூத்த மகள் அற்புதாவாக இருந்தது.

அது கனவுதான். அவளுக்கே தெரிந்தது. ஆனாலும் ஏன் அடங்க மறுத்தது மனது? அவளால் இன்னும் அழிக்க முடியாதிருக்கிற கோணத்தின் ஒரு துளியா அது?

அவளுக்கு அவ்வாறெல்லாம் நினைப்பது பிரியமானதில்லை. ஆனாலும்தான் நினைப்பு தானாகவே வந்தது.

அந்த நான்காண்டு இடைவெளியில் அற்புதா எவ்வளவோ வளர்ந்திருப்பாள்; வளராமல் கூட இருக்கலாம். ஆனால் கனவிலே மதமதர்ப்பின் உச்சம் பெற்று வந்திருந்தாள். மனத்தில் ஏதோ அசைவு. அடிமடியில் ஏதோ உளைவு. தாய்மையின் மொய்ம்பு அது. அதை ஆனந்தவல்லி பகிரங்கமாகவெனில் மறுக்கவே செய்வாள். ஆனால் அப்போது அவள் எழுந்து கட்டிலில் அமர்ந்து குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அதை கதவிடைக் கூடாக கண்டுகொண்ட ஆயா கதவைச் சற்று அகலத் திறந்து வாசலில் வந்து நின்று கொண்டு, 'ஆனந்தி, என்னம்மா இது? ஏன் அழுகிறே? என்ன நடந்தது?' என்று பரிவோடு கேட்டாள்.

தன்னை கொஞ்சம் சுதாரித்துக்கொண்டு, 'ஒன்றுமில்லை ஆயா. நீ போ' என்றாள் ஆனந்தவல்லி.

ஆயா போகவில்லை. தயங்கித் தயங்கி உள்ளேதான் வந்தாள். தலையைப் பரிவோடு தடவியபடி, 'இந்த மாதிரி கண்ணீர் கொட்டுகிறது. கேட்டால் ஒன்றுமில்லையென்கிறாய். உடம்புக்கு ஏதேனுமா? சொல்லேன். டாக்டரிடம் போகலாமா?' என்று கேட்டாள்.

சிறிதுநேரம் மௌனம் இழையவிட்டு, 'உடம்புக்கு ஒன்றுமில்லை ஆயா. ராத்திரி... அதுவும் விடியிற நேரத்தில்... கனவு ஒன்று வந்தது. என் மூத்த பெண்ணுதான் வந்திருந்தா. அதை எண்ணத்தான் அழுகையாக வந்தது' என்றாள் ஆனந்தி.

ஆயா சமாதானமடைந்தாள். 'பின்னே இருக்காதா? புத்தி எதை யெதையோ வீம்பாய்ச் சொல்லிக் கொண்டும் செய்து கொண்டும் இருந்தாலும், மனசும் அந்த மாதிரியே கேட்டுக் கொண்டு நடந்திடுமா? பெத்த மனசில்லையா? தாய் ஜென்மங்கள் அப்பிடி ஒரு படைப்பு' என்றபடி வெளியே வந்தாள்.

ஆயாவின் பரிவில் ஏனோ அவளது மெய்யெல்லாம் சிலிர்த்தது. எப்போதும் அப்படித்தான் ஆகிவிடுகிறது. பரிவு, பாசம், அன்பு, அக்கறைகளை சம்பந்தமில்லாதவர்களிடத்திலிருந்து அடைகிறபோது அவளுக்கு மெய் விதிர்த்து, மனம் சிலிர்த்து கண்ணீர் துளிர்த்துவிடுகிறது.

ஆயாவும் ஆனந்தியும் முன்பின் தொடுப்பனவு அற்றவர்கள். தெரிந்தவர்கள் மூலமாய் அறிமுகமான ஆயாவை வீட்டு வேலைக்கு வைத்துக் கொண்டாள் ஆனந்தி. மூன்றரை வருஷங்களுக்கு மேலே ஆகிறது; ஆனாலும் ஆயா - ஆனந்தியென்ற தள இடைவெளிகள் வெகுவாகக் குறைந்து போகவில்லை. இன்றைக்கும் அந்த அறைக்குள்ளே பெருக்குவதற்கு வந்தாலும் திணறலெடுக்கிறது ஆயாவுக்கு. ஐந்து ரூபா பத்து ரூபா தேவையென்று கேட்கிறபோதும் அப்படித்தான். ஆனந்தியின் விவரமான முகபாவம், இயங்குகிற விரைவு, தொனியிலுள்ள ஒருவகை அதிகாரம் யாவும் அவளது கடுமையான சுபாவத்தின் வெளிப்பாடுகளாகவே அக்கம் பக்கத்தில் சரி, ஆயாவால் சரி கொள்ளப்பட்டிருந்தன. அவள் வாய்விட்டுச் சிரித்து சில வேளைகளே ஆயா பார்த்திருக்கிறாள்.

உளநொதுமை ஏற்படும் அபூர்வமான தருணங்களில் தன் குடும்பத்தின் பருவரையான நிலைமையை ஆனந்தி ஆயாவிடம் கூறியிருக்கிறாள். அதுபோல ஆயாவின் குடும்பம் பற்றியும் கேட்டுத் தெரிந்திருக்கிறாள். அது, அவளது குடும்ப நிலைபற்றித் தெரிவதற்காகத்தான் தன் குடும்ப நிலையை அவள் சொன்னதாகவே தோன்றியிருந்தது ஆயாவுக்கு. எவ்வளவு தெரிந்து கொண்டபோதும் அவர்களுக்கிடையே உள்ள எல்லை நிறுதிட்டமானது.

ஆனந்தியின் போக்கும் நடத்தையும் ஆரம்பத்தில் ஆயாவுக்குப் பிடிக்காது. அதற்காக ஆயா அவளிலிருந்து வெகுதூரம் ஒதுங்கிப் போய்விடவில்லை. சிரமங்கள் பட்ட காலத்திலும் அவளைச் சினந்ததில்லை யென்பது முக்கியமான ஒன்று. மேலும் வேலைக்காக தன்னை வைத்திருக்காமல், தனக்காகவே அந்த வேலையை ஒரு தேவையாக அவள் ஆக்கிக் கொண்டிருக்கிறாள் என்பதும் விரைவில் தெரிந்துவிடுகிறது. அதற்கு மேல் அவள் மீதான பிடிப்பின்மை ஆயாவிடமிருந்து பறந்துபோய் விட்டது. அப்போது அவள் அடைந்திருந்தது, அவ்வுறவின் அதியுயர்ந்தபட்ச எல்லை.

அதனால் இம்மாதிரியான துயரமோ இக்கட்டோ நிறைந்த பொழுதுகளில் ஆயாவின் மனத்தில் அவள் மீதான பரிவு தாய்மைபோல் தன்னிச்சையாய்ப் பீரிடும். ஆனந்தியும் அதில் குழைந்து போவாள்.

மெல்ல உணர்வுக் கொதிப்பு ஆறிக் கொண்ட ஆனந்தி துவாயை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் ஆயா கோப்பி கொண்டு வந்தாள். குடித்து விட்டு நிஜத்தை மாற்றிப்போட்டிருந்த அந்த விந்தைக் கனவில் சிந்தையை அலைய விட்டாள்.

# 4

நினைக்க அவளுக்கே அது ஆச்சரியமாக இருந்தது.

அவள் அம்மாதிரியெல்லாம் நினைந்து குழம்புகிறவளில்லை. பாசத்தைப் பெரிதுபடுத்தாமல் வெறும் நட்பு வலயங்களை மட்டும் வைத்துக் கொண்டு வாழ்வதற்கு அவள் பயின்றிருந்தாள். அந்தப் பயில்வு அன்றளவும் தொடர்ந்துகொண்டுமிருந்தது. தன் பயில்வால் தான் பெரிய நட்டங்களை அடைந்ததாய் அவளுக்கு எண்ணம் இல்லை. மேலும் அது சரியானதென்றும் அவள் நம்பினாள். அந்த வகையில், தன் பிள்ளைகளும் அவ்வாறே வாழவேண்டுமெனவும் அதற்கான பயில்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவள் எண்ணுவதுதான் நியாயம். ஆனால் அவளுக்கோ, தன் பிள்ளைகளில் ஒன்று காட்டிய உதாசீனம், கலங்கிப்போகவே வைத்துவிட்டது. அதுவும் கனவில் என்ன விந்தை!

கணவரைத்தான் வேண்டாம், குழந்தைகளையாவது நினைப்பது உண்டா? அவர்களைப் பார்க்க அவர்களோடு பேச மனம் விழைவதில்லையா?.... என்று அவ்வப்போது அன்னலட்சுமி, குஞ்சம்மா போன்ற சிநேகிதிகள் முன்னர் கேட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் விறைத்துப் போகிற விதமாக ஏன் அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டு வைத்தவள் ஆனந்தி. அப்போதோ தன்னுள் எழுந்த கேள்விகளுக்கே பதில் காண முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

என்ன மாதிரியான அற்புத வாழ்வு அவளது!

அதை அடித்து நொருக்குவது அவ்வளவு சின்ன விஷயமில்லை.

அதற்கு வன்மம் வேண்டும்.

அவளுக்கு புருஷன் உண்டு. நெய்வேலி அனல் மின் நிலையத்தில் மின்துறைப் போர்மனாக வேலை. நல்ல சம்பளம் வாங்குகிறார். ஆளும் நல்லவர்தான். மனைவியை அனுசரித்துப் போகிற நலம் தெரிந்தவர்கூட. இருந்தும் உறவுகள் மீதான தன் விநோத அணுகுமுறைகள் மூலமாய் அனைத்து பந்தங்களையும் அவள் அடித்து நொருக்கினாள்.

அந்த உறவில் விழுந்த வெடிப்பின் ஆரம்பங்களைக்கூட அவளால் சுலபத்தில் நினைவுக்குக் கொண்டுவர முடியும். அவள் அதை விரும்புவதில்லையெனினும் கடந்த காலத்துள் அமிழ்வது அப்போது தவிர்க்க முடியாததாயிற்று.

அதற்கு முன்னதாக ஆயாவை அழைத்து கோப்பி கேட்டாள்.

ஞாயிற்றுக் கிழமை காலைகளில் அவள் சாப்பிடமாட்டாள். பதினொன்று பன்னிரண்டு மணிவரை முகம் கழுவாமல் பல்கூட துலக்காமல் படுக்கையில் கிடந்து புரளுவாள்; பத்திரிகை வாசிப்பாள்; சஞ்சிகைகளைப்

புரட்டுவாள்; கோப்பி கோப்பியாகக் குடிப்பாள். ஆயாவும் கொடுப்பதற்குத் தயாராகவே இருப்பாள். கோப்பி வருவதற்குள் எழுந்து... சோம்பல் முறித்தாள்; மின் விசிறியை நிறுத்திவிட்டு ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தாள். கொசுவத்தி மணம் நிறைந்த வெப்பக்காற்றைத் தள்ளிக் கொண்டு புதிய காற்று ஜிவ்வென்று உள்ளே புகுந்தது. உடலும் உள்ளமும் இதம் பெற்றன. ஜன்னலோரமாக நாற்காலியை நகர்த்திப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

ஆயா கோப்பி கொண்டு வர குடித்தபடியே பார்வையை வெளியே எறிந்தாள்.

சற்றுத் தூரத்தில் பிரதான வீதி ஆரவாரமின்றிக் கிடந்தது. மாடிவரை வந்து அடைத்து அடங்கும் மின்சார ரயில் இரைச்சல் அவ்வளவு நேரத்தில் இரண்டு மூன்று தடவைகள் மட்டுமே எழுந்ததாய் ஞாபகம். இன்னும் சோம்பலோடிருந்து நினைவுகளைப் புரட்ட சூழ்நிலை வசதியாக இருந்தது.

கல்யாணமாகி ஓராண்டு முடிவதற்குள்ளேயே முதல் குழந்தை பிறந்துவிட்டது அவர்களுக்கு. எதுவிதமான மனஸ்தாபமோ சச்சரவோ இல்லாதிருந்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட முதற் பிரச்னை குழந்தைக்குப் பெயர் வைப்பதிலிருந்துதான் துவங்கிற்று.

அவள் அற்புதா என்றாள்.

அவரோ, என்ன பெயர் இது? அற்புதா... அதிசயா... மந்த்ரா... தந்த்ரா... பிள்ளைகளுக்கு வைக்கிற பெயர்களா இவை? பெயர் வைத்தால் பெற்றவர்களும் சுற்றத்தாரும் ஆசையோடு கூப்பிடக்கூடியதாக இருக்க வேண்டும். சரி... உன் விருப்பத்துக்காக நீ சொன்ன பெயரினை பெயரின் முன் பகுதியாகக் கொள்ளலாம். பிற்பகுதியில் வேறு பெயர் சேர்த்துத்தான் வைக்க வேண்டும். தாய்வழிப் பாட்டியின் பெயரை ஒட்டியதாக வைப்பதுகூட நல்லதுதான். அதனால்... அற்புதலட்சுமியென்று வைத்து விடலாமே!... என்றார்.

அவள், அற்புதா அற்புதாதான்; அதற்குக் கூடவாய் / குறைச்சலாய் எதுவும் வேண்டாம் என்று அடம்பிடித்தாள்.

எதையாவது வைத்துத் தொலை என்று விட்டுவிட்டார் அவர்.

அவர் போலன்றி, அதில் மனக் கசப்படைந்தாள் அவள்.

இரண்டாவது பிள்ளைக்கு அவர் ரமணன் என்றார். அவள் அர்கீஷ் என்றாள். மூன்றாவது பிள்ளைக்கு அவர் எதுவும் சொல்லவில்லை. அவளே தீர்மானித்தாள்; வைத்தாள். பெயர்... ஆதர்ஷ்யா!

அவ்வளவில் அவர்களுக்குள்ளான பிரச்னை பெயர் வைத்தது பற்றியதாக மட்டும் இருக்கவில்லை. ஒருவேளை அது பிரச்னையானதே வேறு வெளிக்காட்டப்பட முடியாத குமைவுகளின் அடியாய் விளைந்ததோ?

வெற்றி அவள் பக்கம் போன்ற ஒரு தோற்றம் அங்கே நெளிந்தது. அவரிடத்தில் எதுவும் புலனாகவில்லை. அவர் வழக்கம்போல காலையில் எழுந்தார்; குளித்தார்; சாமி கும்பிட்டார்; பிள்ளைகளோடு பேசினார்; சிரித்தார்; வேலைக்குப் போனார்; இரவில் வீடு திரும்பினார்; சாப்பிட்டார்; தூங்கினார்; அவரின் நித்திய கருமமாற்றலில் எந்தவொரு கண்ணியும் எந்தவொரு நாளிலும் குறைவுபட்டதில்லை. விடுமுறைகளும் வேலை நாட்களிலிருந்து பெரிதாக அவரிடத்தில் மாறுபடவில்லை. அவள் அவசிய மாவதை மறுதலிப்பதன்மூலம் அவர் ஜெயங்கொட்டப் பார்த்தாரோ?

ஆனால் அவளோ சிதைந்து கொண்டிருந்தாள்; குணநலன்கள் அழிந்துகொண்டிருந்தாள்; ஒருவகையான மூர்க்கம் பெற்றுக் கொண்டிருந்தாள். தனிமை வெகு உக்கிரமாய் அவளை பாதிக்கத் தொடங்கியிருந்தது. முதலில் அவரிலிருந்து விலகியவள் பின்னர் பிள்ளைகளிலிருந்தும் விலகினாள். அவர்மீது மிகுந்த நல்லெண்ணம் கொண்டிருந்ததால் அக்கம் பக்கத்து வீடுகளும் அவளால் மெல்ல மெல்ல ஒதுக்கப்படலாயின. நண்பர் ஒருவர்கூட இல்லாத வெளியாயிற்று அவள் வானம். நெய்வேலி தன் பழக்கத்துக்கு விரிந்த ஊராக இருக்கவில்லையென அவள் புறுபுறுக்கத் தொடங்கினாள். எழுந்த மன அவதி, தனிமையினால் எழுந்ததில்லை; தனிமையில் விளைந்த சிந்தனைகளினாலேயே உருவாயிற்று. அந்தத் திருமணம் தனக்குப் பொருத்தமில்லாதது என்றொரு எண்ணம் அவளிடத்தில் மெல்ல மெல்ல வலுப்பெறத் துவங்கியது. அது, தன் தாயார் அது விஷயத்தில் தவறு செய்துவிட்டதான மனநிலையை அவளிடத்தில் உருவாக்கிவிட்டது. தொலைக்காட்சியின் மகா தொடர்களும், வாசிப்புக்களும், கவிதைக் கிறுக்கல்களும் அந்த மனநிலையில் சிறிதளவு மாற்றத்தைக்கூட ஏற்படுத்துவதாயில்லை. அதனால் எந்த ஒரு முரணிலும் அவளுக்கு கோபம் வெடித்துப் பிறந்தது. ஆதர்ஷ்யா பிறந்து சுமார் ஒரு எட்டு வருட காலத்தில் அதேயளவுக்குக் குறையாத தடவைகள் அவள் பெட்டியை எடுத்துக் கொண்டு அம்மாவிடம் மாம்பலத்துக்கு ஓடியிருக்கிறாள். அவர் அடுத்தடுத்த நாளில் போய் கூட்டிவருவார்.

எந்த ஒரு விஷயத்திலும் முரணிடம் கண்டு குழப்பம் விளைவிக்க அவளது மனம் எங்கேயென்று காத்துகிடந்தது போலிருந்தது. அது ஒருவகையான மனநோயோ என்றுகூட சிவசங்கரன் சந்தேகப்பட்டார். ஆலோசனை கேட்ட இடத்தில், 'டென்ஷனாயிருக்கும். பயப்பட ஒன்றுமில்லை' என்றார் நண்பரான வைத்தியர். அந்த கலக மனம் தெரிந்திருந்ததால்தான் அவள் கோபித்துக்கொண்டு தாய்வீடு ஓடும் ஒவ்வொரு சமயத்திலும், அவரே தேடிப்போய் சமாதானப்படுத்தி அழைத்து வருவது.

ஆனால்... அந்தத் தடவை... அவர் போய்க் கூப்பிடவேயில்லை.

அத்தனைக்கு பலமான ஒரு பிரச்னையா அன்று நிகழ்ந்தது?

அப்போது அற்புதாவுக்கு வயது பதின்மூன்று; அர்கீஷுக்கு பதினொன்று; ஆதர்ஷ்யாவுக்கு எட்டு. மாலையிலே பிள்ளைகள் மூன்றும் ரியூஷனுக்குப் போயிருந்தன. பஸ்ஸிலே போய் பஸ்ஸிலே வந்துவிட முடியும். அர்கீஷும் ஆதர்ஷ்யாவும் முதலில் வந்துவிடுவார்கள். அரை மணி கழித்து இருளத் தொடங்குகிற நேரத்தில் அற்புதா வருவாள். அன்றைக்கு அர்கீஷும் ஆதர்ஷ்யாவும் வரும் போது தூறல் போட்டுக் கொண்டிருந்த மழை பலமாகப் பெய்யத் துவங்கிவிட்டது. ஒன்பது மணியளவில் சிவசங்கரன் வீடு வந்தார். அன்று அவர்கூட மழை காரணமாக சிறிது தாமதம். சாப்பிட ஆயத்தமாகிற நேரத்தில்தான் அற்புதா இன்னும் ரியூஷனிலிருந்து வீடு வரவில்லை என்கிற விஷயமே அங்கே தெரியவந்தது.

சிவசங்கரன் திகைத்துப் போனார். அர்கீஷிடம் விபரம் கேட்டுக் கொண்டு அந்த அடர் மரச் சாலையின் இருள் கிழித்து ஸ்கூட்டரில் பறந்தார்.

ரியூஷன் எடுக்கிற வீட்டில் அற்புதா நின்றிருந்தாள். வெளியே சென்றிருந்த தந்தை வந்ததும் ரீவிஎஸ் 50ல் தானே அற்புதாவை அனுப்பவிருந்ததாகக் கூறினாள் பூமணி ஆசிரியை.

வளர்ச்சியடையாவிட்டாலென்ன, வயதுக்கு வந்துவிட்டாலே இதுபோன்ற தாமதங்களும், தனியே சென்று வருதல்களும் பெற்றவர்கள் நெஞ்சைத் துடிக்க வைத்துவிடுகின்றன.

ஆசுவாசமடைந்த சிவசங்கரன் ஆசிரியைக்கு நன்றி சொல்லி விடைபெற்றுக்கொண்டு அற்புதாவைக் கூட்டி வந்தார் வீட்டுக்கு.

சாப்பிட்டு பிள்ளைகளெல்லாம் படுத்த பின்னர் கணவன் - மனைவி இருவருக்குமிடையே சச்சரவு கிளம்பிற்று.

ஒரு மனைவியாக விளங்கத் தெரியாவிட்டாலும், ஒரு தாயாக இருந்து பிள்ளைகளையாவது அக்கறையோடு பார்த்துக் கொள்ளலாமல்லவா? என்று சலித்தார் அவர்.

இதுக்கு மேல் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?

எதுக்கு மேல்? என்று கேட்க நினைத்தாலும் அடக்கிக் கொண்டார். அவளோடு மல்லுக்கட்டுவது அவரது நோக்கமாக இருக்கவில்லை. ஆனாலும் அவளது அலட்சியப் போக்கினை அதற்கு மேலும் தாங்கிக் கொள்ள முடியாதென்பதை உணரவைக்க நினைத்தார். எதுவும் வேண்டாம். ஆனால் செய்கிறவற்றை அக்கறையோடு செய்கிற மாதிரித் தெரியவில்லையே!

எதை வைத்துச் சொல்கிறீர்கள்?

அற்புதா வீட்டுக்கு வந்தாளா வரவில்லையா என்பது கூடத் தெரியாமல் வீட்டிலே இரண்டு மணிநேரம் இருந்திருக்கிறாயே, உன் அக்கறையின்மைக்கு இது போதாதா?

அவள் வீட்டுக்கு வந்துவிட்டாளென்று எண்ணிக் கொண்டு பேசாமல் இருந்துவிட்டேன். வந்தது வராதது எனக்கு எப்படித் தெரியும்? மற்றப் பிள்ளைகள்தான் சொல்ல வேண்டும். அதுகள் வாயைத் திறக்கவில்லை. வாசலில் நின்று அவர்கள் போகிற வருகிற நேரமெல்லாம் நான் கணக்கெடுத்துக் கொண்டு நிற்கமுடியுமா?

பெற்ற தாயான உன்னால் இந்த மாதிரி எப்படிப் பேச முடிகிறது ஆனந்தி? அவர் திகைப்போடு கேட்டார்.

எப்படிப் பேசுகிறேன்?

செயலைப்போல உன்னுடைய ஒவ்வொரு பேச்சிலும் கூட உதாசீனம்தானே தொனிக்கிறது! அற்புதா வயதுக்கு வந்த பெண் பிள்ளை. வயதும் வளர்ச்சியும் குறைவாக இருந்தாலென்ன, அவளை வெளியே போய்வர விடுவதில் மிகுந்த கவனிப்புத் தேவை. எனக்கிருக்கிற அக்கறையைவிட அவள் விஷயத்தில் உனக்குக் கூடுதலான அக்கறை இருந்திருக்க வேண்டும். நீ அவளுடைய தாய்... அவளைப் பெற்றவள்.

அவள் லேசாகச் சிரித்தாள். பிறகு சொன்னாள்: இதில் நீங்களும் நானும் எங்கே வித்தியாசப்படுகிறோம்? சுமந்தேன், பெற்றேன், பால் கொடுத்தேன்; இவ்வளவோடு எனது கடமை முடியவில்லையா?

தாயான கடமை என்றைக்குமே முடிவடைவதில்லை!

அவள் திடுக்குற்றாள்.

அடிமனத்தே ஒரு குளிர் பரவுகிறது.

அந்த வார்த்தைகளை வெகுகாலத்துக்கு முன்னரே கேட்டது போன்ற ஒரு ஞாபகம்.

அது தொடர்பான காட்சியொன்றும் மனத்துள் விரிகிறது.

அம்மா... தெரிகிறாள். வாழை மாதுளை துளசிமாடம் செம்பருத்தி... தெரிகின்றன. செவியில் 'பால் நினைந்தூட்டும் தாய்...' என்று பிரவாகிக்கிறது ஒரு நாத வெள்ளம். சிரித்தபடி சீனிவாச தாத்தா வருகிறார். அது அவர் குரலென்று புரிகிறாள் ஆனந்தி.

மௌனமாய் அவளின் நினைவு மீட்புகள் நிறைகின்றன.

ஆனால் மகா அர்த்தங்களின் கொள்கலனாகக் கூடிய அந்த வாக்கியம், அவளிடத்தில் அர்த்தம் பெறாமல் அழிகிற சோகம் அடுத்து நிகழ்கிறது. அவள் அதை அழிக்கப் பிறந்தவள். ஆக்ரோஷமாய்க் கிளர்ந்தாள். ஏன் அப்படி? பெற்றெடுத்து ஒரு குறிப்பிட்ட வயதுவரை வளர்த்துவிட்டால் அதன்பிறகு தகப்பனளவு கடமைதானே தாய்க்கும் நியாயம்? அதிகபட்ச பொறுப்பு ஒரு தாயில் ஏன் சுமத்தப்படவேண்டும்?

இது சுமத்தப்படுவதில்லை, ஏற்றுக் கொள்ளப்படுகிற பொறுப்பு.

சில நொடிகளின் மௌனத்தின் பின் ஒரு எள்ளல் முகத்தில் துள்ள, ஆம், இது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடமைதான்... சுமத்தப்பட்ட கடமையில்லைத் தான். ஆதியில்... ஒருநாள்... ஒரு தாய்... தன் பலஹீனங்களை எண்ணிப் பயந்து ஒரு விதி செய்கிறாள். அதுதான்... தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்ற மந்திரமாகிறது என்கிறாள்.

அவளது கண்கள் விரிந்திருக்கின்றன; சிவந்திருக்கின்றன.

அவர் அவள் சொற்களைத் தொடர்புறுத்த முடியாமல், நீ என்ன சொல்கிறாய்? என்கிறார்.

அதற்காகத்தான் ஒரு நெடுங்காலம் அவள் காத்திருந்தாளோ? எப்படியானதொரு வெற்றிப் பேரொளி முகத்தில்! அந்த அகங்காரத்தின் பறைசாற்றுதலாய் அவள் சிரிக்கிறாள். பின் விளக்குகிறாள்: ஆரம்ப சமூகங்கள் வளர்ச்சி பெற்று வந்த காலத்தில் தாய்வழிச் சமூகம்தான் இருந்ததாம். வால்கா நதி தீரத்து அந்தச் சமூகத்தில், இயற்கை வாழ்வோடு கூடிய உன்னதங்கள் திகழ்ந்ததாகச் சொல்வார்கள். காலாந்தரத்தில் அது மாறி மாறி அமைந்துதான் இன்றைய ஆணாதிக்க சமுதாயம் உருவாகியிருக்கிறது. கங்கை நதிப்புறத்தில் தொடங்கிய இம் மாற்றம் காவிரிக் கரையோரத்தில் பூரணம் கண்டது. அப்போது பிறந்ததுதான் தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை என்பது. அது பொருளாதார பலமெல்லாம் உறிஞ்சி எடுக்கப்பட்ட, அதிகாரங்கள் மாற்றீடு செய்யப்பட்ட பெண்ணினத்தின் ஆசுவாசத்துக்கானதாய் இருந்தது. அவளது வயோதிபத்தில் பாதுகாப்பையும் உதவியையும் தன் குழந்தைகளிடம் கட்டாயப் படுத்திக் கேட்கும் மறை வாசகமாக அது ஆயிற்று. இந்த விதியின் அடித்தளம் அதிகாரமாக அன்றி அன்பாக இருந்ததால் ஆண் சமூகம் அதை அடக்கிவிடும் எந்த முயற்சியையும் மேற்கொள்ளாதிருந்தது. தன் வயோதிபம், நோய்ப்படும் காலங்களிலான பாதுகாப்புக்காய் பெண் சிறந்த கோயிலான கதை இது. குழந்தைகளின் கடமைகளை ஏற்று அதற்குத் தக அவளும் புனிதங்கள் நிறைந்தவளானாள். அவள் சுமைகளை வரித்துக் கொண்டாள்; தானாக சுமைகளை ஏற்றுக் கொண்டாள். அதுதான் வரலாற்றில் பெண்களுக்கு நிகழ்ந்த பெரிய சோகம்.

அவள் நிறுத்தினாள்.

தகப்பன் சாமியின் கம்பீரம் தெரிந்தது.

அவரோ, ஸ்தம்பிதமும் கடந்திருந்தார். ஒரு தோல்வி இவ்வளவு ஆழமாகவும் ஏற்பட முடியுமா? அது வாதத்தினது கூட அல்ல; அர்த்தத்தினது. அவர் தன் சமூகத்தின் பிரதிநிதியாய் நின்று அதைப் பிரதிவாதம் செய்திருக்க வேண்டும். ஆனால் அவள் சொன்னவைகளை முழுக்கவும் புரிந்துகொள்கிற அளவுக்கும் அவர் வளர்ச்சி

பெற்றிருக்கவில்லை. தொழிற்சங்க இணைவு காரணமாய் சமூக வளர்ச்சியின் சில முகங்கள் அவருக்குத் தெரிந்திருந்தன. ஆனால் அவள் சொன்ன விவரங்கள் அவருக்குப் புதிது.

சொல்ல அவளுக்கு இன்னும் இருந்தது. அவரை ஒருமுறை இளக்காரமாய்ப் பார்த்துவிட்டு மறுபடி ஜன்னல் வழியே வெளியை நோக்கிக் கொண்டு சொன்னாள் : இந்தச் சுமைகளை நான் ஒவ்வொன்றாய் இறக்கிக் கொண்டிருக்கிறேன். அனைத்துத் தளைகளையும் அறுத்து விட்டு சுதந்திரமாய் இருக்கவேண்டுமென்று எனக்கு விருப்பமாய் இருக்கிறது. மற்றவர்களும் அப்படியே வாழ வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். அப்படியிருக்கையில் என் பிள்ளைகளாகவே இருந்தாலும் அவர்களை அதிகாரப் படுத்துவதையும், அவர்கள் சுமைகளை ஏற்றி அவதிப்பட அவர்களைத் தயார் செய்வதையும் என்னால் செய்துவிட முடியுமா? உங்களுக்கு இது பிடிக்கவில்லையென்றால் உங்களுக்கு விரும்பிய விதமாக நீங்களே வளர்த்தெடுத்துக் கொள்ளுங்கள்... அவள் குரல் ஓய்ந்தது.

அவள் குரலில் படிந்திருந்த அநாயசம் அலட்சியமெல்லாம் குரல் ஓய்ந்த பின்னரும்கூட அவரெதிரில் நின்று கொண்டிருந்தன தூலமாய்.

அவளை அவர் எங்கேயும் அறிந்ததில்லை.

தெரிந்த உருவில் வேற்று மனிதி.

ஒன்று அவருக்கு நிச்சயம். அன்று அற்புதா ரியூஷன் முடிந்து வீட்டுக்கு வந்துவிட்டதாய் நினைத்து பேசாமல் இருந்ததாக அவள் சொன்னது உண்மையாகவே இருந்தாலும், அதுமாதிரியான விஷயம் அவளளவில் அக்கறைப்படத் தேவையில்லாதது. அவளபிப்பிராயம் மாறக் கூடியதில்லை. அவள் சொன்னதே சரி. விரும்பினால் அவரேதான் குழந்தைகளை வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு சொன்ன கணத்தில் அவ்வாறெல்லாம் அவரால் கவனித்துவிட முடியாது, அவள் பொறுப்பிலும் போக்கிலும் விட்டுவிட்டு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான் என்ற தொனி சொற்களில் இழைந்ததாய் அவருக்குப் பட்டது. தன் கரிசனங்கள் எவராலும் குறைத்து மதிப்பிடப்படுதல் அவருக்கு ஒப்பேயில்லை. அவரால் அது முடியும்.

நீண்ட நேரம் மௌனம் இழையோடிய பின்... அவள் அவரை நோக்கித் திரும்புகிறாள். அவர் சிரித்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறார். அவள் திகைத்தாள்.

அவர் சொன்னார்: தாயென்பவள் குழந்தை வளர்ப்பில் மிக முக்கிய பங்கு வகிப்பவள். அதனால்தான் சமுதாயத்தில் உன்னதமான ஸ்தானம் கிடைக்கிறது அவளுக்கு. தாயின் பாத்திரம் குழந்தையின் உடல் மன வளர்ச்சிகளில் பெரும் பங்கு வகிக்கிறதானாலும், ஒரு தந்தையாலும் அந்த ஸ்தானத்தைப் பூர்த்திசெய்ய முடியும். நான் வேலை செய்கிறேன். நீ

வீட்டிலிருக்கிறாய். அதனால் குழந்தைகளை நீ பராமரிப்பதுதான் நியாயம். இது ஒரு வசதி கருதி நிர்ணயிக்கப் பட்டதுதான். ஆனால் நீயோ... என்னால் பார்க்க முடியாது; நீயே பார்த்துக்கொள் என்கிறாய். நீ ஒரு விஷயத்தைக் கவனத்திலெடுக்க வில்லையெனத் தெரிகிறது. நான் வெளியே போய் உழைத்து வருவது கூட குழந்தை வளர்ப்பின் ஓர் அங்கம்தான்.

அவள் வாய் திறக்கவில்லை.

சரி, நானே குழந்தைகளைப் பார்த்துவிடுகிறேன் என்றார் அவர் தொடர்ந்து. பின் ஊடறுத்த நிசப்தத்தைத் தொடர்ந்து அவர் கேட்டார் : பிறகு நீ இங்கே எதற்கு?

அவள், அவர்போல் தன்னாலும் வேலை செய்ய முடியும் என்பதுபோல் ஏதோ சொல்ல வாயெடுக்கிறாள். அப்போதுதான் அந்த இறுதி வார்த்தைகளின் அர்த்த பரிமாணம் அவள் புலனில் விரிகிறது.

பிறகு நீ இங்கே எதற்கு?

அவளை அங்கே இருக்க வேண்டாம் என்கிறாரா?

அப்படித்தான்.

எவ்வளவு மெதுவாக மென்மையாக அந்த வார்த்தைகளை... வாழைப் பழத்தில் ஊசி சொருகுவதுபோல்... சொன்னார்!

ஆனாலும் அவரது தீர்மானகரமான வார்த்தைகள்தான் அவையென்பது அவளுக்குத் தெரியும்.

அவர் போய்ப் படுத்துவிடுகிறார்.

அவள் சென்று விளக்கை அணைத்துவிட்டு அந்த இருளிலும் தனிமையிலும் இருந்து நீண்ட நேரமாய் யோசித்துக் கொண்டிருக்கிறாள்.

தவளை கத்துகிறது... எங்கோ சில் வண்டொன்று கீச்சிடுகிறது..

கிழக்கே சூரியக் கீறு தெரிகிற நேரத்தில் ஒற்றைச் சூட்கேஸோடு படியிறங்குகிறாள்.

இப்படித்தான் அவளது ஒரு பகுதி வாழ்க்கை அன்று அஸ்தமனம் கண்டது.

அது ஒரு பகுதி மட்டுமில்லை, பெரும் பகுதியாகவும் இருந்தது.

அதை அவள் உணரவில்லை. அதை உணருகிற ஒரு கணம் அவளுக்கு வாய்க்குமா? காலம் காட்டுக் கத்தலாய்க் கத்தும் அந்தக் கேள்விகளை அவள் நின்று செவிமடுப்பாளா?

ஆனந்தி எழுந்தாள்.

இனி அவள் குளித்துத் தயாராகிக்கொள்ள வேண்டும். பன்னிரண்டு மணியளவில் மாதா அங்கே வருவதாக இருந்தது.

# 5

அன்று ஒரு மணி ஆகியும் மாதா வரவில்லை. தன்னுடைய வீட்டிலாயினும் மற்றவர்களுக்காகக் காத்திருத்தலென்பது அவளால் என்றைக்கும் முடிந்திருந்ததில்லை.

மாதா அப்படியொன்றும் வருகிறேனென்று சொல்லிவிட்டு வராமல் விடுகிற ரகமில்லை. எதுவாயிருந்தாலும் ஒரு எதிர்பார்ப்பு நசுங்கிப் போவது ஆனந்தியை என்னவோ போலாக்கிவிடுகிறது. ஏன் வரவில்லையென்று தெரிந்தால் அவள் வராதது அத்தனை அழுத்தலாக இருக்காதுதான். பிறகு யோசிக்க, அவள் வராததும் நல்லதாகவே தெரிந்தது. அவள் வந்திருந்தால் ஆனந்தியின் அன்றைய மனநிலையில் ஒரு உரையாடல் இன்னும் குழம்பிப் போகவே செய்திருக்க முடியும். அவளுடைய ரகம் அது.

மாதா என்பது ஏதாவது பெயரின் குறுக்கமா? பட்டப்பெயரா? என்று ஆனந்திக்குத் தெரியாது. கிழங்கள் முதல் சிறிசுகள் வரை மாதாவென்றே அழைத்தன. அவ்வாறு மொட்டையாக அழைப்பதில் எதுவித கிலேசமும் அவர்கள் அடைவதில்லை. மாதா என்பதிலேயே மரியாதை சேர்ந்திருப்பதான எண்ணமாயிருக்கலாம். இவளுக்கும் மாதாவுக்குமிடையிலான பழக்கம் தற்செயலாக ஏற்பட்டதுதான். ஒரே பகுதியில் குடியிருப்பவர்கள் ஆதலால் அடிக்கடி சந்திக்கக்கூடிய வாய்ப்பு அவர்களை நெருங்க வைத்திருந்தது.

கிறித்துவ மதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு இருந்தது மாதாவுக்கு. வீட்டுக்கு வந்தால் எடுத்ததுக்கெல்லாம் வேதோபதேசம்தான். கிறிஸ்து ஊழியத்தில் அப்படியோர் ஈடுபாடும் நம்பிக்கையும். உபதேசத்துக்கான பேச்சு மென்மை, கருத்தின் வன்மை அவளிடம் அதிகம். ஆனந்திக்கோ கிறித்துவத்தில் மட்டுமில்லை, மதங்களிலேயே நம்பிக்கை கிடையாது. ஆனாலும் மாதா ஜெபம் செய்யலாமெனக் கேட்கிறபோது அவள் மறுப்பதில்லை.

ஒரு மணிக்கு மேல் அவள் வரமாட்டாளென்று தீர்மானித்துக் கொண்டு ஆனந்தி மதியச் சாப்பாட்டை முடித்தாள். அன்றைக்கு தொலைக்காட்சியில் மாநிலப் பட நிகழ்ச்சியில் ஒரிய மொழிப் படமொன்று போட்டிருந்தார்கள். திரும்பவும் போய்ப் படுத்து கட்டிலில் புரள்வதைத் தவிர செய்வதற்கு ஏதுமிருக்கவில்லை. அதைவிட ஒரியமொழி சினிமாவையே பார்க்கலாமென கூடத்துக்குள்ளேயே அமர்ந்திருந்தாள்.

ஒன்றரை மணிக்கு சினமா தொடங்கியது. ஆரம்பத்தில் ஏனோதானோ வென்றிருந்த மனம் சிறிதுநேரத்தில் சினிமாவோடு ஒன்றிவிடுகிறது. அந்தளவில் அவள் ஆனந்தியல்ல, அந்தச் சினிமாவில் வரும் சவி என்கிற பெண் கதாபாத்திரம்.

சினிமாவுக்கு ஆங்கிலத்தில் கதை விளக்கக் குறிப்பு போட்டிருந்தார்கள். எனினும் கதையோடு அவளால் ஒன்றிப் போக முடிந்ததுக்கு அது காரணமில்லை. சோகங்களின் மொழி எங்கேயும் ஒன்றாகவே இருக்கிறது.

சமூகம் குடும்பம் போன்றவற்றின் இறுக்கம் பெற்ற சட்ட திட்டங்களாலும், தனிமனித வக்ரங்களாலும் சகல திசைகளிலுமிருந்தும் தாங்க முடியாத துன்பத்தை அனுபவிக்கிறாள் பள்ளி ஆசிரியையான சவி. கடைசியில் தன் ஆளுமைகளே சிதைந்து அவதிப்படுகிறாள். ஒரு பெண்ணாய்ப் பிறந்த தவறு தவிர வேறேதும் செய்துவிடவில்லை அவள். தொலை தூரத்திலுள்ள ஒரு சிநேகிதியையன்றி ஆறுதலுக்குக்கூட யாருமின்றிப் போகிறவளின் துயரம் ஆனந்தியின் நெஞ்சை உடைத்துவிடுகிறது.

ஒருநாள்... மதியம் தாண்டிய ஒருநேரத்தில் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கிறாள் சவி. குடை பிடித்த நிழல் பின்னே நீண்டு விழுந்திருக்கிறது. அவளின் மாறிப் போய்விடாத வாழ்க்கைக் கதியினைச் சுட்டும் அழுத்தத்துடன் சோகமான இசை பின்னணியில் ஒலிக்கிறது. தூசி படிந்த வெப்பக் காற்று விசிறியடிக்கிறது. கால்களில் பரற்கற்கள் இடறுப்படுகின்றன. பார்வையில்... நெடிய வெறிதான வெளி.

அது அவளின் வாழ்வின் பிரத்தியட்சத்தை சூட்சுமமாய்ச் சொல்கிறது. வீடு போனால் இனிமேல் அவளுக்கு மீட்சியில்லையென்பது தெளிவாயே தெரிகிறது.

பள்ளியிலிருந்து வந்த நெடும்பாதை அந்த இடத்தில் அவளது வீடு நோக்கி ஒன்றும், வெளியூருக்கு ஒன்றுமாய்க் கிளை பிரிகிறது. அவளின் வாழ்வை மாற்றக் கூடிய புள்ளி அது. கொடுமையான கணவன், வஞ்சக மனமுடைய வீட்டு மனிதர்கள்... எல்லாவற்றையும் நிரந்தரமாய்த் துறந்துவிட்டுச் செல்வதற்கான மாற்று வழி அங்கே இருக்கிறது.

ஓடிவிடலாம்!, ஆனந்தி அவளுக்காகச் சிந்திக்கிறாள். இன்னும் இங்கே கிடந்து வதைபடுவதைக் காட்டிலும் ஓடிவிடுவது உத்தமம். செல்கிற இடத்தில் வாழமுடியாது போனால் செத்துப் போகலாம். அது சுகம். அப்போ... குழந்தை? குழந்தையை அதன் தந்தையோடு விட்டுப் போகவேண்டியதுதான். குழந்தையின் சுமை எப்போதும் தாயின்மீதே விழுந்துவிடுகிற வழக்கம் உடைபட வேண்டும். தொப்புள் பந்தமென்று சொல்லிச் சொல்லி இதுவரை காலமும் சுமைசுமையாய் ஏற்றிக்கொண்டது போதும். பெண்ணினத்தின் விடுதலை இந்தப் புரிவிலிருந்துதான் தொடங்க வேண்டும்!

உக்கிரமாய்ச் சிந்தித்தாள் ஆனந்தி.

எந்த நிலைமையில் வந்தாலும் கைகொடுப்பேன் என சவியின் சிநேகிதி கொடுத்த உறுதிமொழியை எண்ண அந்த முடிவு வெறும் முரட்டுத்தனமானதாகத் தோன்றவில்லை.

ஆனால் அவள் எண்ணியபடி சவி நடந்துகொள்ளவில்லை. வழக்கமான பாதையில் திரும்பி வீட்டுக்கே வந்து சேர்கிறாள். அங்கே...

அவளைக் கண்டு பூவாய்ச் சிரித்த குழந்தையை வாரியணைத்து தன் துக்கம் ஏக்கம் வேதனை எதிர்கால இருள் எல்லாம் மறந்து சந்தோஷ அலைகளில் மிதக்கிறாள்.

ஆனந்தி கோபத்தோடு எழுந்தாள்; தொலைக்காட்சியை பட்டென நிறுத்திவிட்டு அறைக்கு நடந்தாள். கட்டிலில் விழுந்தாள். மனம் பொசு... பொசு...வென எரிந்து கொண்டிருந்தது.

பெண்கள் நிலைமையிலிருந்து சிந்தித்து இந்திய சினிமாப் படங்கள் எடுக்கப்படுவதில்லை என்கிற குறைபற்றி தோழிகள் நிறையவே அவளோடு பேசியிருக்கிறார்கள். அவளுக்குமே அந்த அபிப்பிராயம்தான் உண்டு. தாய்மையின் உந்நதத்தைக் காட்டவேண்டி விடுதலையின் கதவுகளை மூடிவிட்டு வருகிற பெண்கள் பற்றியே இந்திய சினிமா பேசும். அது அதன் தத்துவார்த்த நிலைமையின் வெளிப்பாடு மட்டுமல்ல, வியாபார உத்தி காரணமான மலினப்படலின் அடையாளமும்தான்.

தோழியின் உதவி மூலமாக தன் விடுதலையை, ஆளுமைகளின் மீட்டெடுப்பை கதாநாயகி தவற விட்டமையை ஆனந்தியால் தாங்க முடியவில்லை. அவளுக்குப் போன்றதொரு சிநேகிதியை வைத்துக் கொண்டு என்ன செய்துவிட முடியாது?

திடீரென்று அன்னலட்சுமி அவளுக்கு ஞாபகமானாள். அன்னா அன்னாவென்று அந்தரமான வேளைகளிலெல்லாம் அவள் ஆறுதலுக்காய் ஓடிப்போயிருந்த பீடம். அவர்களுடைய சந்திப்புக்கள் இப்போது குறைந்திருந்தன. தொடர்புகள் சுருங்கியிருந்தன. ஆனாலும் உள்ளே அந்த உறவு அப்படியேதான் இருந்தது. நெய்வேலியிலிருந்து ஆனந்தி மாறுபாடு கொண்டு மாம்பலம் வந்திருந்த நாள் மாலை அவளது வரவு தெரிந்துகொண்டு அன்னலட்சுமி பார்க்க ஓடிவந்துவிட்டாள். ஆனந்தி அந்த நாளை நினைத்துப் பார்த்தாள். நாளிலிருந்து வருஷங்களாய்... பின் பருவங்களாய் அது விரிவுபெற்றது.

அன்னாவுக்கும் ஆனந்திக்கும் பக்கத்துப் பக்கத்து வீடு. சின்ன வயதிலிருந்து ஒன்றாக விளையாடி, ஒரே வகுப்பில் படித்து... அவர்கள் நட்பு ஆரம்பத்திலிருந்தே மிகவும் இறுக்கமாக விழத் துவங்கிவிட்டது. ஆனந்தியின் வாழ்க்கையில் மிகச் சிறப்பான காலப்பகுதியும் அதுதான்.

தந்தை ஜீவரத்தினத்துக்குத் தொழில் வீட்டுத் தரகு, மனைத் தரகு பண்ணுவது. அவ்வப்போது வாகனத் தரகும் செய்வதுண்டு. எத்தனையோ தொழில் செய்து கடைசியில் அவர் வசதியாக ஒட்டிக்கொண்ட தொழில் அதுதான். ஆனந்திக்கு எட்டு வயதுவரையும் அவர் உயிரோடிருந்தார். ஒரு திசை தெரியாத இருட்டில் போலத்தான் மகளையும் மனைவியையும் அந்தரிக்க விட்டுவிட்டு ஒரு விபத்தில் அவர் மரணமானது. அவரிடம் அளவு மீறிய குடிப்பழக்கம் இருந்தது. விபத்தின் காரணம் அதுவாகவும் இருக்கலாம்.

தரகுத் தொழிலில் அவரை விஞ்ச அந்தப் பகுதியில் இன்னொருவர் இல்லை. நிறைந்த வருமானம். நிறைய குடும்பத்துக்காகவும் செலவு செய்தார். தாலிக் கொடி, இரட்டை வடம் சங்கிலி, அட்டிகை, ஒட்டியாணம், காப்பு, மோதிரம் எல்லாம் மனைவிக்குச் செய்து போட்டார். மகளுக்கும் சங்கிலியென்றும் காப்பென்றும் செய்து கொடுத்தார். வீட்டுக்கு கிட்ட கடைத் தெருப் பக்கமாய் உள்ள மாடிக் கட்டிடத்தை அவர் வாங்கியது அப்போதுதான்.

காலையிலிருந்து மாலைவரை அவர் சாது. அந்த சாதுத் தோற்றத்திலும் குணத்திலும்தான் தெரு அவரை அறியும். நெற்றி நிறைய விபூதி, குங்குமம், வாய் நிறைய வெற்றிலை சகிதம் அவர் சிரித்தால்... அடடா... தலை வளர்க்காத பாகவதர் மாதிரியே இருக்கும். மகாலட்சுமி ல்யித்துப் போயிருந்தாள் அந்த அழகில். அது, அவருக்கான நித்ய பணிவிடைகளைச் செய்வதிலிருந்து, மாலையில் வாசல் பார்த்து நிற்கும் ஆவலிலும், காலைகளில் பொலிந்திருக்கும் முகவிலாஸத்திலும் தெரியும்.

அப்படியான மிக இனிய வாழ்க்கையின் கதி ஒரு மாரி இரவில் சட்டென மாறிப் போயிற்று. ஜீவரத்தினத்தின் மரணம் ஒரு கட்ட வாழ்க்கையின் முடிவினதும், இன்னொரு கட்ட வாழ்க்கையது தொடக்கத்தினதும் புள்ளி ஆனது. அந்த வாழ்க்கையில் கொடிகட்டியிருந்தது போதாமைதான். வறுமையே சில அர்த்தங்களில் போதாமையைவிட நல்லதாகப்படும். வசதியாக வாழ்ந்த குடும்பத்துக்கு வரும் போதாமை மகா கொடியது. ஆனந்தியின் ஆங்கிலப் பள்ளிப் படிப்பு, மாநகரப் பாட சாலையில் தமிழ்க் கல்வியானது. காலுறை காலணி கழுத்துப் பட்டி போய், முழுப் பாவாடை சட்டை செருப்பு வந்தது. ஆனந்தி க்ஷீணப்படவும் திரிபடையவும் தொடங்கியது அந்தக் கணுவிலிருந்து தான் என துணிந்து சொல்ல முடியும். அங்கேயும் அப்போதும் அவளுக்கு ஆறுதலுக்காய் அன்னலட்சுமி இருந்தாள்.

அன்னலட்சுமி கல்லூரியில் சேர்வதற்கு முன் ஆனந்திக்கு கல்யாணம் முடிந்தது. அவளுக்கு கல்யாணமாகிறபோது இவளுக்கு வளர்ந்த மூன்று குழந்தைகள். குடும்ப நிலைமைகள் இருவரையும் எதிரெதிர்த் திசை முகங்கள் நோக்கி இழுத்தன. ஆனாலும் அவர்கள் தங்கள் அந்நியோன்யத்தைக் குறையவிடாமல் காத்தார்கள். அதனால்தான் ஐந்தாண்டுகளுக்கு முன் ஒரு மாலை நேரத்தில், ஆனந்தி வந்திருப்பதாகத் தெரிந்ததும் கைக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு காண ஓடிவந்தாள் அன்னலட்சுமி.

வா, அன்னா! நானே விடிந்ததும் வரவிருந்தேன். அது சரி, குழந்தை எங்கே?

பக்கத்தில்தான். அம்மாவிடம் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்.

உள் கூடத்திலிருந்து இருவரும் பின்புறமுள்ள கிணற்றடிக்கு நடந்தனர்.

இந்த முறையும் தனியாகத்தான் வந்தாயா? பிள்ளைகளை ஏன் கூட்டி வராமல் விட்டாய்? பார்த்து எவ்வளவு காலமாகிறது? அற்புதா ரொம்பவும் வளர்ந்திருப்பாளே! சமைந்து ஒரு வருஷம் ஆகிறதல்லவா? என்றாள் அன்னலட்சுமி.

ஆனந்தி மௌனமாயிருந்தாள். அவள் எதையும் அன்னலட்சுமியிடம் மறைக்கப்போவதில்லை. அவளது ஆலோசனைகளும் உதவியும் நிச்சயம் ஆனந்திக்கு வேண்டியிருந்தன. அதற்கு, தனக்கு அனுசரணையான அபிப்பிராயம் பிறக்கும்படியாக நடந்தவை காட்சிப்படுத்தப்படல் வேண்டும். அன்னலட்சுமிக்கு பதிலேதும் சொல்லாமல் அவள் மவுனித்தது அதனால்தான்.

ஆனந்தியின் முகத் தோற்றத்திலிருந்தும் மவுனத்திலிருந்தும் நிலைமையை மேலோட்டமாய்ப் புரிந்தாள் அன்னலட்சுமி. என்ன, இந்த முறையும் சண்டை பிடித்துக் கொண்டுதான் வந்திருக்கிறாயா?

ஆனந்தி பதில் சொல்லாமல், இப்படி உட்காருவோமா? என்றபடி அங்கேயிருந்த சீமெந்து மேடையில் போய் அமர்ந்தாள். அன்னலட்சுமி பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

மௌன நொடிகள் கழிந்துகொண்டிருந்தன. ஆனந்தியே அதை உடைக்க வேண்டுமென விட்டுவிட்டாற்போல் அன்னலட்சுமி மேலே வாய்திறக்கவில்லை.

மெதுவாக ஆனந்தியே தொடங்கினாள்: கல்யாணமான புதிதில்... நான் நிரம்பவும் பாக்கியம் செய்தவளென்று நீ கூட சொல்லியிருந்தாய். நானும் அந்த நம்பிக்கையோடுதான் அந்த வீட்டில் வாழப் போனேன். ஆனால் போன கொஞ்ச நாட்களிலேயே அது அப்படியில்லையென்றது எனக்குத் தெரிந்துவிட்டது அன்னா. ஒரு வலையிலிருந்து விடுபட்டு இன்னொரு வலையில் விழுந்ததுபோல் ஆகிவிட்டது என் நிலை. எனக்குள் ஏதோவொன்றிருந்து என்னைக் குழம்பும்படி, கலகஞ்செய்யும்படி தூண்டிக் கொண்டிருந்தது. ஆனால் எதையும் ஒரு அவசரத்தில் செய்ததாக ஆகிவிடக் கூடாதேயென்று தாமதித்தேன். எனக்கு குடும்பத்தை உடைக்கிற எண்ணம் அப்போது இல்லை. அதனால்தான் மனம் கொதித்துப் போகிற தருணங்களில் வீட்டைவிட்டு ஓடிவந்தாலும், அந்த மனிதர் வந்து கூப்பிடுகிறபோது மறுப்புச் சொல்லாமல் திரும்பிப் போய்கொண்டிருந்தேன். மிகவும் துரதிர்ஷ்டம் பிடித்தவர்களுக்குத் தான் அந்த மாதிரி ஒரு வாழ்க்கை அமைய முடியும். அத்தனை மன இம்சை இருந்தது எனக்கு அந்த வாழ்க்கையில்.

அன்னலட்சுமிக்கு அது புதுமையாக இருந்தது. கணவர் வந்து அழைக்க ஆனந்தி மறுப்பேதும் சொல்லாமல் கூடிக் கொண்டு செல்வதைக் கொண்டு, அது கொஞ்சம் கெடுபிடியான ஊடல்தனமென்றுதான் அதுவரை காலமும் கொண்டிருந்தாள். ஆனால் இப்போதுதான் தெரிகிறது, அவள் வேறு வகையான பிரச்னையில் ஓடிவந்தாளென்று. அதுபற்றிய சரியான எடை

போடலுக்கு அவளுக்கு மேலும் விபரங்கள் தேவை. அவைகூட அவளைத் தெளிவிக்கப் போதுமானவையாய் இருக்குமா என்பது ஐயமே. அவளைப் பொறுத்தவரை பன்னிரண்டு பதின்மூன்று வருஷ காலத்திய தாம்பத்திய வாழ்க்கைக்குப் பிறகும் அப்படியொரு அபிப்பிராயம்தான் துரதிர்ஷ்டம் என்று தோன்றியது.

அவரைப் பார்த்தால் அப்படியான மோசமான மனிதராகத் தெரியவில்லையே என்று சந்தேகத்தை மெல்ல வெளிப்படுத்தினாள் அன்னலட்சுமி. அதில் அவளது அதிருப்தியீனமும் தெரிந்தது.

ஆனந்தி சோகமாய் நகைத்தாள். அது மெய்தான். ஊர் உலகம் கொள்கிற அர்த்தத்தில் அவர் மிகவும் நல்லவர்தான். குடும்பப் பொறுப்புணர்ந்து நடப்பவர்கூட. ஆனால் முரண்பாட்டுக்குக் காரணம் அவரது எந்தச் செயலுமல்ல. சிந்தனைதான். எப்போதும் என்பற்றிய ஒரு குறையோடேயே அவர் இருந்திருக்கிறார். எப்போதும் தெரிவிக்கப்படும் அதிருப்தி எவரது கூர்மையையும் அழித்துவிடும்.

என்ன அதிருப்தி அது? என்ன குறை சொல்கிறார் உன் மீது?

நான் குறைந்தபட்சம் ஒரு நல்ல தாயாகக்கூட வாழவில்லையாம் இத்தனை காலத்தில்...

அன்னலட்சுமி திடுக்கிட்டாள்.

என்ன அர்த்தம் இதுக்கு? அவள் ஒரு நல்ல மனைவியாகவும் வாழவில்லை என்பதுதானே! அங்கே வாழப்போன காலத்திலிருந்தே அவளுக்குள் ஒரு அதிருப்தி இருந்திருக்கிறது. அவளே சொன்னதுபோல் அவளுக்குள் ஒரு குரலிருந்து அவளைக் குழம்பும்படியும் கலகஞ் செய்யும்படியும் தூண்டிக் கொண்டிருந்திருக்கிறது. யாரின் குரல் அது? வேறு யாரினதுமோ, அவளது மனக் குரலேதானோ?

நீரலைச் சித்திரமாய் அவளின் வாழ்வு கலைந்துகொண்டு வந்திருப்பதை அன்னலட்சுமி அப்போது புரிந்தாள்.

அவள் நிமிர்ந்து ஆனந்தியைப் பார்த்தாள். கண்களை உன்னித்தாள். வெறுமையொன்று உள்ளிருந்து தலைகாட்டியது. பெண்மையின் ஈரலிப்பற்ற அந்த வனாந்தர வெறுமை அவளது கணவரை ஏன் குறைபட வைத்திராது? பெண்மை இல்லாவிட்டால் தாய்மையும் பூரணம் இல்லையல்லவா?

ஆனந்தி அவளது உள் மனத்தே ஓடிய எண்ணங்களைப் புரிந்துகொள்டவள் போல் நகைத்தாள். பின், அதுதான் காலகாலமாக ஒரு இந்தியப் பெண்ணின் மகத்துவமாய் இருந்து வந்திருக்கிறது என்பதை நான் அறிவேன். ஒவ்வொருத்தியினதும் கனவு அது. எனக்கு... அதற்கான இழப்பு அதிகமானதாகத் தெரிகிறது. மனித இருப்புக்கான அர்த்தங்களையே ஒழித்துவிட்டு, சுதந்திரத்தின் விலாசத்தை அழித்துவிட்டு ஒரு வாழ்க்கை

அவசியமா அன்னா? இதுதான் எனக்குள் எழுந்து கொண்டிருக்கிற கேள்வி. பிறந்த வீட்டிலேயே சுதந்திரத்தின் பறிப்பு கால்வாசிக்குமேல் நிகழ்ந்துவிடுகிறது. கல்யாணமாகி புருஷன் வீடு போனவுடன் மீதியும் பறிபோய்விடுகிறது. பெண் தன் சுயத்தை இழந்து நாளடைவில் வேறொன்றாக ஆகிவிடுகிறாள். எல்லோருக்கும் இது நுகத் தடிதான். இருந்தும் தாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். என்னால் முடியாமலிருக்கிறது. என்னை அரைத்து மற்றவர்களுக்கு வாசமேன்? நான் பேசாமலிருப்பது அல்லது ஒதுங்கியிருப்பது ஏன் மற்றவர்களுக்கு ஒவ்வாமலிருக்கிறது? இதற்காகவா போய் வீட்டை விட்டு வெளியேறு என்பது? என்றாள்.

பயித்தியக்காரி என்று சொல்லி வேதனை கலந்து சிரித்தாள் அன்னலட்சுமி. குடும்பமென்றால் வேறு என்னவென்று நீ நினைக்கிறாய்? இரண்டு சுயங்கள் தமையிழந்து ஒன்றாகி, வேறு வேறு சுயங்களைப் பிரசவிப்பதுதானே? இன்னும்... தமக்கான மாற்றுப் பிரதிகளை உருவாக்கியும் வளர்த்தெடுத்தும் இந்த உலகத்தில் உலவவிடுவதற்கான பயிலரங்கம்தான் குடும்பம்.

நீ சரியாகச் சொல்லாவிட்டாலும் நேர்மையாகச் சொல்லியிருக்கிறாய் அன்னா. நமது கல்வி முறை, ஒழுக்கவியல் யாவும் இப்படித் தவிர வேறு மாதிரிச் சொல்லவும் நினைக்கவும் நம்பவும் நம்மைப் பழக்கப் படுத்தியிருக்கவில்லை. ஆனால் உண்மை வேறாகத்தான் இருக்கிறது. ஆதிகாலத்திலும் மனிதர்கள் வாழ்ந்தார்கள்; குழந்தை குட்டிகளைப் பெற்றார்கள். சுயங்களை இழக்காமலே குடும்பமாக சமூகமாக வாழ்ந்தார்கள். ஆனால் என்றைக்கு சொத்துடைமை தோன்றியதோ, அப்போதே தன்னில் சரிபாதி பெண்ணினத்தை ஆண் அடிமையாக்கத் தொடங்கிவிட்டான். அந்த அடிமைத் தனத்தைக் கட்டிக் காக்க அமைக்கப்பட்டதுதான் குடும்பமென்கிற ஸ்தாபனம். அதுவே அதிகாரத்தின் மையம். எனவே அது அமுத்தத்தான் செய்யும். அப்படியில்லையென்பது பொய்.

என்ன ஆனந்தி இது? குடும்பம்... சொத்துடைமை... அதிகார மையம்... என்ன இதெல்லாம்? யார் சொன்னது உனக்கு இவைபற்றி? அன்னலட்சுமி திகைப்போடு கேட்டாள்.

யார் சொல்லவேண்டும்? விலங்குகள் ஆபரணங்களல்ல என்று இனங்காணத் தெரிந்துவிட்டால் இதுமாதிரியான விஷயங்கள் வெகு சீக்கிரத்தில் புரியத் தொடங்கிவிடும். நான் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற நண்பர்கள், நான் வாசிக்கிற புத்தகங்கள் மூலம் என்னை நான் மேலும் தெளிவுபடுத்திக் கொண்டேன். அவ்வளவுதான்.

பாண்டிச்சேரித் தோழியென்று சொன்னாயே...?

மேகலா.

ம்... மேகலா சொன்னாளா?

மேகலாவும் சொன்னாள். ஆனால் அவர்களுக்கு அமைப்பு இருக்கிறது. கட்சிப் பின்புலம் இருக்கிறது. ஆலோசனை, திட்டம், நிதானமான செயற்பாடு அவர்களது. நானோ... தனிமனிஷி. நேரடியாகப் பாதிக்கப்பட்டேன்; நேரடியாகப் போராடுகிறேன். என் எதிர்ப்புக்குத்தான் இவ்வளவும் நிகழ்ந்தது. போராடவே தொடங்கினால்...? ஆனாலும் நான் அஞ்சிப் பின்வாங்கப் போவதில்லை. எனக்குத் தெரிந்த வழியில் தன்னந்தனியனாய் நான் போராடியே தீருவேன்...

எந்த வழி அது?

அதிகாரம் சுழித்தெழும் குடும்பம் என்கிற நிறுவனத்தை அழிப்பதன் மூலம் பெண்கள் விடுதலை பெறுகிறதான வழி.

முடியுமா?

அவள் விகசித்தாள்.

அவளின் ஜெயம் தொடர்கிறது. எதிரிகளைப் போல நண்பர்களையும் அவள் ஜெயிக்கிறாள்.

ஆனந்தி நிதானமாகச் சொன்னாள்: முடியும்!

பக்க மதிலோரமாய் வந்து நின்று அன்னலட்சுமியின் தாயார் அழைத்துக் கேட்டது. திரும்பி, என்னம்மா? என்றாள் அன்னலட்சுமி.

குழந்தை அழுகிறது. அடங்குகிறதில்லை. நீயே வந்து தூக்கு.

கொஞ்சம் இருந்துகொள் ஆனந்தி, குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்துவிடுகிறேன் என்று விட்டு அவள் எழுந்து சென்றாள்.

வானம் அன்றைக்கு சிறிது வெளிச்சமடித்துக்கிடந்தது. எனினும் நிலா வட்டமோ பிறையோ நட்சத்திரப் புள்ளிகளோ வெளிப்பட்டு முகம் காட்டவில்லை.

அன்னலட்சுமியாகவே ஆனந்தியைச் சந்திக்க வந்திருந்தாலும், மாம்பலம் வந்ததும் அவளைப் போய்ச் சந்திக்க வேண்டுமென்று நெய்வேலியிலிருந்து வரும்போதே நினைத்திருந்தாள். தன் மனத்திலிருந்த பிரச்னைகளைச் சொல்ல, திரும்பவும் குடும்பமென்கிற அந்தக் கூட்டுக்குள் சென்று அடைபடாமலிருக்க உபாயமும் உதவியும் கேட்க அவளுக்கு அன்னலட்சுமியைவிட்டால் வேறு பேர் இல்லை. ஆனால் அவ்வளவு நேரம் பேசியிருந்தும் நினைத்திருந்த விஷயத்தை தொடக்கூட முடியாது போய்விட்டது. அன்னலட்சுமி வந்ததும் தன் எண்ணத்தை ஆலாபனையேதுமின்றி நேரடியாகவே சொல்லி விடுவதென்று தீர்மானித்துக் கொண்டாள்.

சிறிதுநேரத்தில் அன்னலட்சுமி குழந்தையோடு வந்தாள். இனி வெகுநேரம் அவர்கள் அங்கேயிருந்து பேசிவிட முடியாது. குழந்தை இன்னும் சிணுங்கிக் கொண்டே இருந்தது.

அன்னலட்சுமிக்கும் போகிற அவசரம் ஏற்பட்டிருந்தது. இனி இவன் அடங்கமாட்டான். பசித்தால் கூட தாக்காட்டி விடலாம். கொசு ஏதாவது கடித்துவிட்டதுபோலும். அதுதான் இந்த அடங்காமை... சரி, நீ சொல்லு ஆனந்தி, இப்போது என்ன முடிவோடு இங்கே வந்திருக்கிறாய்?

ஆனந்தி தாமதிக்கவில்லை: நான் திரும்பிப் போகப் போவதில்லை.

அவர் வருவார்; கூப்பிடுவார்; நீயும் போவாய்.

நானும் போகமாட்டேன். அவரும் வரமாட்டார்.

அவள் குரலிலிருந்த வைரம் அன்னலட்சுமியை யோசிக்க வைத்தது. அவளுக்குச் சிரமம் கொடுக்காமல் ஆனந்தியே சொன்னாள்: மதியம் நான் எழுதிய கடிதம் அவரை வரவேவிடாது.

அடிப்பாவீ!

நான் தீர்மானித்துவிட்டேன் அன்னா. என்னை மாற்ற முயற்சிக்காதே. அது வீண் முயற்சியாகத்தான் இருக்கும். இந்த நிலைமையில் இருந்து கொண்டு என்னால் எதுவும் செய்துவிட முடியாது. நீதான் யோசனை சொல்ல வேண்டும். எனக்கு உன்னைவிட்டால் வேறு நெருங்கிய தோழிகள் இல்லை.

நானா...? நான் என்ன சொல்ல ஏலும் ஆனந்தி? உன்னுடைய முடிவின் அதிர்ச்சியிலிருந்தே இன்னும் நான் மீளவில்லை.

சரி, நீ ஆலோசனை எதுவும் சொல்லவேண்டாம். என் யோசனையைச் செயற்படுத்த உதவியாவது செய்!

எனக்கென்னவோ பயமாக இருக்கிறது ஆனந்தி. நீ கேட்கிற உதவியை நான் செய்யப்போக, அது காரணமாய் உன் வாழ்க்கை அதிகமாகப் பாதிக்கப்பட்டுவிடுமோ என்று நான் பயப்படுவது நியாயம்தானே? அந்தப் பாதிப்புக்கு நானும் ஒரு காரணஸ்தியாகி பழி சூழ்ந்து விடுமோ என்றும் நான் யோசிக்க வேண்டுமில்லையா?

இப்படியே நான் அழிந்துவிடுவதிலிருந்து மீண்டு கொள்வதற்கான சாதாரண உதவிதான் இது...

அன்னலட்சுமி யோசித்தாள் சிறிதுநேரம். பின் தயக்கத்தோடு, என்ன உதவி? கேள், முடிந்தால் செய்கிறேன் என்றாள்.

அன்னலட்சுமியிடம் வேலை பெற உதவி கேட்ட அந்த நாளின் முன்னிராக் குளிர்மை அப்போதும் நரம்புகளுள், எலும்பு மச்சையுள் ஜில்லிட்டது போன்ற உணர்வுடன் நினைவுலகு மீண்டாள் ஆனந்தி.

தன் தோழியின் உதவியுடன், அந்தத் துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து திரிந்த சவி தன் வாழ்க்கையை மாற்றியமைத்திருக்க முடியும்... ஆனந்தி கோபத்தோடு எண்ணிக் கொண்டாள்.

# 6

வருத்துவதற்கென்றே கனவுகள் தோன்றுவதுண்டோ?

அன்றொரு சனி ராத்திரியில் தோன்றி அவளைக் கலங்கிப் போகவைத்த 'அற்புதாக் கனவு' அன்றைக்கு ஆனந்தியிடத்தில் மறுபடியும் வெளிப்பாடாகியிருந்தது. முதற் தடவை, அந்தக் கனவின் பாதிப்பிலிருந்து அவள் , வெகுநேரத்துக்குள்ளாக என்றாலும் தானேயாக மீண்டாள். இந்தத் தடவை நிலைகுலைந்து போனாள். அவளது சகல தீர்மானங்களையும், மனத்தில் இறுகிக் கிடந்த நம்பிக்கைகள் யாவற்றையும் தகர்க்கிற நோக்கத்தோடும் அதற்கான உத்வேகத்தோடும் அது தோன்றியதுபோல் தென்பட்டது.

தூக்கம் இரவு இடறுப்பட்டுவிடாதபடி கனவு மிருதுவாகத்தான் வந்திருந்தது. துயிலெழுந்து வெகுநேரம்வரை கனவு அவளது நினைவுக்கு வரவில்லை. ஆனாலும் விழித்த நேரத்திலிருந்து மனம் ஒரு சோக மூட்டத்தில்போல் கலகலப்பின்றி இருந்துகொண்டிருந்தது. பின்னர்தான் கனவு நினைவுக்கு வந்தது. அதிகாலையில் வந்திருந்ததுபோல், மெல்லிய ஒரு கீறல் பிரக்ஞையில். அவளை அப்போதுதான் ஒருவகைப் பயம் பீடிக்க ஆரம்பித்தது. திரும்பத் திரும்ப வருவதும் அதன் உக்கிரத்தின் விளைச்சல் தானே?

போன தடவையும் அதேமாதிரியான கனவுதான். ஆனால் காட்சியின் விரிவு குறைந்து வந்திருந்தது ஞாபகமானது. அதில் அற்புதா தனியாக வந்திருந்தாள். இதில்...? அவள் கலங்கத் துவங்கினாள்.

வரப்போகும் பெரும் அவலத்தின் அடையாளம் காட்டுகிறதா அது? அவள் கனவை மீளுருச் செய்துபார்த்தாள்.

கனவின் களம் எங்கும் புகை விரியும் வெளியாயிருந்தது. ஆனந்தி ஒரு இயலாமையில் மெல்ல நடந்து கொண்டிருக்கிறாள். அந்த இடம் எதுவென்று அவளால் அனுமானிக்க முடியவில்லை. வீதியென்பது தெரிகிறது. அதில் போய்வந்து கொண்டிருப்போர் வெகுபேர்களில்லை. அப்போதுதான் திடீரென்று குலுங்கிக் குலுங்கி வெடிச் சிரிப்புச் சிரித்தபடி மோதிவிடுவதுபோல் இரண்டு பேர் வருகிறார்கள். திடுக்கிட்டு அவசரமாய் விலகுகிறாள் இவள். இன்னும் குலுங்கிச் சிரித்தபடியே இவள் எதிர்பட்டதான பிரக்ஞையேயின்றி மேலே மேலே நடந்து போய்க்கொண்டிருக்கிறார்கள் அவர்கள். அதில் ஒருவர் திரும்பிப் பார்க்கிறார் தன் நடையின் வேகம் குறையாமலே. அவளை அப்போதுதான் அடையாளம் தெரிகிறது. திகைத்துப் போகிறாள். பார்வையினைப் போல் கால்களும் நிலைகுத்தி விடுகின்றன. அற்புதா! பார்வை விளிம்பில் புள்ளியாய் மறைந்துகொண்டிருக்கிறாள். இவள் அழைக்கிறாள்; கூப்பிடுகிறாள்; கத்துகிறாள்; புகைப் படிவுப்

பின்புலத்தை மூடி இருள் கவிகிறது; புள்ளி முற்று முழுதாய் மறைந்து விடுகிறது.

என்ன அர்த்தம் இதற்கு?

எதனதும் சூசகமா இக்கனவுக் காட்சி?

இன்னுமொரு ஐயமெழுந்து விறைக்கச் செய்தது. கூடச் சென்று கொண்டிருந்தது யார்? பள்ளிச் சிநேகிதி யாரேனுமா? ஆதர்ஷ்யாவோ? தெரியாத பெண் யாருமோ? இன்னும்... பெண்ணேதானா? அல்லது...? கேள்விகள் மறுபடி மறுபடி சுழித்தெழுந்தன. ஆண்தான். ஆனால் யார்?

அழைக்க நினைத்து இயலாது போனது போலவோ, ஓடிப் போய்த் தடுக்க முயன்று முடியாதுபோனது போலவோ ஏற்பட்ட ஓர் அந்தரமான மன உடல் அவத்தைக் கணத்தை தன்னில் அக் கனவு அனுபவமாக்கியிருந்ததை, நினைத்துப் பார்த்த அப்போது அவள் புரிந்தாள். எப்படியான கணங்கள் அவை! என்ன ஒரு திணறல், கழியும் ஒவ்வொரு நொடியிலும்! சட்டம் சட்டமாய் மனத்துள் நீட்சிபெற்று விரிந்து செல்கிறது அந்தக் காட்சி. கனவுக்கு நிறமில்லையென்று அவள் சொல்லிக் கேட்டிருக்கிறாள். யார் சொன்னது? பச்சையாய் மரங்களும், நீலமாய் வானும், கறுப்பாய் இருளும், சிவப்பாய் ரத்தமும் புரிதலாகிவிடும் என அவளே அறிந்திருக்கிறாள். அற்புதா நீலக் கவுண் அணிந்திருக்கிறாள். அது, அவள் வீட்டிலிருக்கும்போதே அற்புதாவுக்கு சிறிசாய் ஆகிக்கொண்டிருந்த கவுண். அதை இனி அணிய வேண்டாமென அவர் புறுபுறுப்பதில்தான் அவள் ஒருநாள் அற்புதாவுக்குச் சொல்லி இனி அதை அணியவேண்டாமெனத் தடைபோட்டது. அவள் வளர்த்திக்கு நெஞ்சை விம்மித் தெரியவைத்தது சட்டை. சொல்லும் போது ஒரு ஏக்கத்தை, ஒருவகைப் பொறாமையை அவளே அடைந்திருந்தாள். இந்த மனிதர் பார்வையில் வீட்டின் எந்த அம்சமும் தவறமுடியாதோ? பல நாள்களிலும் தாயாய் அதை அவள் விரும்பாமலே இருந்தாள். ஆனால் வெளியே அதைக் காட்ட ஊடறுக்க முடியாத ஒரு சுவர் இருந்தது. அவளல்லாத ஒரு தாயின் கரிசனம் அது. ஒருவேளை அவளுக்கும் அது இருந்து, இல்லையென்று தனக்கே நிரூபிப்பதின் புறவயமான செயற்பாடாக இருந்ததோ? அந்த நீலச் சட்டையைத்தான் அப்போது அவள் அணிந்திருக்கிறாள். பள்ளித் தோழனோ? ட்றவுசர் அணிந்திருந்தான் போலிருந்தது. அதுவும் டெனிம் வெள்ளை போல அல்லது இளமஞ்சள் போல இருந்தது. அளவுக்கு இரண்டு மடங்கு பெரிதாக அவன் அணிந்திருந்த பனியன். அதில் பின்னே கூட சில ஆங்கில வார்த்தைகள். பொர்கெற் மீ பேபி என்றிருந்தது. அவன் பிளே பாய்! நெஞ்சு துணுக்குற அந்த உயரத்தில் வியந்தும் பயந்தும் ஸ்தம்பித்து நின்று தவிக்கிறாள் ஆனந்தி. அவளின் பயம் என்ன? நில்லு! என கூவுகிறாள். அவளுக்கே தெரிந்தது சத்தம் வெளியே வரவில்லையென்பது. கேட்டிருந்தாலும் திரும்பிப் பார்க்கிறதோ வந்திருக்கிறதோ அசாத்தியம். அவன் திட்டத்தோடுதான் அவளை அங்கே கூட்டிக்கொண்டு போனபடி இருக்கிறான்.

அது கனவாக அன்றி சம்பவமாகவே இருந்தால்கூட அவள் ஏன் வருந்தவேண்டும்? கயிற்றை அறுத்துவிட்ட பட்டம், தன்னைவிட்டு பூமி விலகுவதாக ஏன் புலம்ப வேண்டும்?

இந்த தர்க்கங்களையெல்லாம் தாண்டி பட்டம் வருந்தியதுதான் அங்கே நிகழ்ந்தது.

ஆனந்தியால் நினைப்பின் உபத்திரவத்தைப் பொறுக்க முடியவில்லை. அன்று காலை அலுவலகம் சென்றதும் அன்னலட்சுமிக்குப் போன் எடுத்தாள். அலுவலகத்தில் யாரைக் கேட்காமலும் போன் எடுக்கிற உரிமை இன்னும் ஆனந்திக்கு இருந்தது.

அன்னலட்சுமிக்கு பாரிமுனை தபாலாபீஸில் வேலை. கடந்த ஏழு எட்டு ஆண்டுகளாக அங்கேதான் வேலைபார்த்து வருகிறாள். இடையே ஒரு வருஷம் அண்ணாசாலை அலுவலகத்துக்கு மாற்றலாகியிருந்து. பின் மறுபடியும் பாரிமுனைக்கே போய்விட்டாள். பாரிமுனைக்கு ரயிலில் போய்வரக்கூடிய வசதி இருந்தது. இன்னும் இரண்டொரு வருஷங்களில் தியாகராய நகருக்கு முடிந்தால் மேற்கு மாம்பலத்துக்கே ஒரு பதவியுயர்வோடு மாற்றல் வாங்கிவிடுவது அவர்களது எண்ணம்.

டெலிபோன் மறுதிசையில் அன்னலட்சுமியின் குரல் ஒலித்தது. 'ஹலோ! யார் பேசுறது?'

'அது... நான்தான் அன்னா...'

'என்ன ஆனந்தி? எப்படி இருக்கிறாய்? என்ன... குரல் ஒரு மாதிரி இருக்கிறது...?'

'இல்லையே!'

'ம்!'

'அன்னா உன்னோடு நான் பேசவேண்டும்.'

'பேசு.'

'அவ்வளவு விரைவாகப் பேசி முடித்துவிட முடியாது.'

'அப்ப... மதியம்போல இங்கே வா. சாப்பாடு கொண்டு வந்திருக்கிறாயா? கொண்டு வா. இங்கேயிருந்து சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்.'

'உனக்கொன்றும் வசதியீனமில்லையே... புது வருஷ நேரம்...'

'எந்த வசதியீனமும் இல்லை. சாப்பாட்டு நேரத்தில்தானே பேசப் போகிறோம்...'

'சரி.'

'ஆனந்தி!'

'என்ன?'

'அவசரம்... ஆபத்து என்கிறமாதிரி ஒன்றுமில்லையே!'

'சிச்சீ...!'

'அப்ப சரி, நேரில் வா, பேசுவோம்.'

ரிஸீவரை வைத்துவிட்டுத் திரும்பிய ஆனந்திக்கு அவதி சற்று குறைந்ததுபோல் இருந்தது.

ஆனந்தியின் முகபாவத்தில் தெரிந்த ஒருவகைக் கலவரத்தை அவதானித்த ராதாகிருஷ்ணன், கூப்பிட்டு பேச நினைத்தார். காரணத்தை விசாரித்து அவளை ஆறுதல்படுத்தவோ அல்லது உதவி ஏதாவது தேவைப்படின் செய்யவோ மனது துடித்தது. பின், அந்த க்ஷணப்பித்தக்காரியின் விஷயத்தில் இனி நானாக மூக்கை நுழைத்துக் கொண்டு அவதிப்படுவதில்லை. அவள் விலக நினைத்துவிட்டாள்; நான் துரத்திக்கொண்டு ஓடவேண்டாம் என்று திடப்பட்டுக் கொண்டு பேசாமல் இருந்துவிட்டார்.

அவளே வந்து பேசினாள்: 'சாப்பாட்டு வேளையில் வெளியே போக வேண்டியிருக்கிறது. பத்து, இருபது நிமிஷம் தாமதமானாலும் ஆகும்.'

'சரி.'

பன்னிரண்டரை ஆனதும் கைப்பையை எடுத்துக்கொண்டு அண்ணா சாலைக்கு வந்தவள் எல்.ஐ.சி. எதிர்ப்புறத்தில் பாரிமுனைக்கு பஸ் எடுத்தாள்.

இரண்டு மூன்று நாட்களாக நினைத்த நினைத்தபோதெல்லாம் தூறல் போட்டுக் கொண்டிருந்த மழை அன்றைக்கு விடுப்பு எடுத்திருந்தது. உயர் நீதிமன்ற நிறுத்தத்தில் இறங்கிய ஆனந்திக்கு தபால் நிலையம் வரையான நடை சதுசதுப்பு காயத் தொடங்கியிருந்த வீதியில் சுலபமாகவே இருந்தது.

அவள் தபால் நிலையம் சென்றபோது இன்னும் கவுண்டரில் இருந்து கொண்டிருந்தாள் அன்னலட்சுமி. வரிசை முடிந்ததும் கவுண்டரை மூடிவிட்டு எழுந்து வந்தாள்.

இருவரும் பின்பகுதியிலிருந்த கன்ரீனுக்குச் சென்றனர்.

சாப்பிட ஆரம்பித்ததும், 'ம்... சொல்லு' என்றாள் அன்னலட்சுமி.

'அற்புதாவைப்பற்றி ராத்திரி கனவு கண்டேன். ராத்திரியில் கூட அல்ல... அதிகாலையில்...'

'ம்...!'

'அதிலிருந்து என்ன ஏது என்று மனசு துடித்துக் கொண்டிருக்கிறது.'

'அப்படி என்ன கனா?'

ஆனந்தி சிறிதுநேரம் குனிந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். பின் நிமிர்ந்துகொண்டு சொன்னாள்: 'கொஞ்ச நாட்களுக்கு முந்தி பத்மாவோட துணியெடுக்க பாண்டிபஜார் போயிருந்தேன்.'

'சரி.'

'எதிர்பாராதவிதமாக அம்மாவைப் பார்க்கும்படி ஆகிவிட்டது.'

'அம்மாவையா? அம்மா... உன்னைப் பார்த்தாளா?'

'ம்!'

'சரி, அதுக்கென்ன?...' வேண்டுமென்றேதான் அப்படிக் கேட்டாள்.

'மனசுக்கு மிகவும் சங்கடமாகப் போய் விட்டது. சங்கடம் கூட இல்லை அது... கலக்கம், பயம் இப்படி ஒன்று...' ஆனந்தி நிறுத்தினாள்.

மேற்கொண்டும் தூண்டி விடவேண்டி இருக்கவில்லை அன்னலட்சுமிக்கு. ஏறக்குறைய ஐந்தாண்டுகளுக்கு முன்னர் அவள் திரஸ்கரித்த பெருமானங்களின் மீளடைவுக்கான தருணம் வருகிறதா? தரிசன நம்பிக்கையோடு காத்திருந்தாள் அன்னலட்சுமி.

ஆனந்தி தொடர்ந்தாள்: 'அம்மாவைப் பிரிந்து வந்த இத்தனை காலத்தில் நேரடியாய் வேண்டாம், தூரத்தில் வைத்துக்கூடப் பார்த்ததில்லை. அன்றைக்கு நேர்நேராய்ப் பார்க்கும்படி ஆகிவிட்டது. அன்றுவரை என் மனத்தில் இருந்ததெல்லாம் அந்தக் கடைசிநாளில் பார்த்த ஆக்ரோஷமான உருவம்தான். அன்றைக்கு அவளைப் பார்த்ததும் திகைத்துப் போனேன். அப்படி மெலிந்திருந்தாள்; வாடிப் போயிருந்தாள். எல்லாவற்றையும் இழந்ததுபோன்ற ஒரு கையறுநிலைத் தோற்றம் அது. கண்ணிலே ஒரு ஏக்கம். அதில்... ஒரு யாசிப்பு. இத்தனை இருந்தும் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் வந்துவிட்டேனே என்று தொடர்ந்து வந்த இரவுகளிலெல்லாம் நான் வேதனைப்பட்டேன். அவ்வளவு நிர்தாக்ஷண்யமான புறக்கணிப்பைக் காட்டியிராமல், எப்படி இருக்கிறாய் என்று ஒரு வார்த்தையாவது நான் பேசியிருக்கலா மென்றுதான் இப்பகூட எனக்குத் தோன்றுகிறது. இந்த நிலையில் அடுத்த சில தினங்களில் அற்புதா பற்றிய கனவு ஒன்று வந்தது எனக்கு.'

தவற முடியாது; மனமென்று ஒன்று இருக்கிற எவருமே பிடிவாதத்தினதும் முன்கோபத்தினதும் காரணமாய்க் கொண்டிருக்கும் தீர்மானங்களினது இறுக்கம் தளர்வதிலிருந்து தவறவே முடியாது. அதன் துவக்க நிலையில் வரக்கூடிய மனப் பினைவுதான் ஆனந்தியிடத்தில் அப்போது தோன்றத் தொடங்கியிருக்கிறதென்பது அன்னலட்சுமிக்கு தெளிவாகத் தெரிந்தது. அவளது உள்ளத்தில் மெல்லிய மகிழ்ச்சி படர ஆரம்பித்தது.

தாய்வீடு போகிற சமயங்களில் தவறாமல் மகாலட்சுமியையும் பார்த்து பேசி வருகிறாள் அன்னலட்சுமி. ஆனந்தியின் பேச்செழுகிற போதெல்லாம் மகாலட்சுமி கண்ணீராய்க் கொட்டுவாள். அது அன்னலட்சுமியின் நெஞ்சைக் கரைக்கும். ஆனந்தியின் பிரிவினால் உருவாகிய பாச வெற்றிடத்தைப்பற்றி

ஒரு தணியாத தாகத்தோடு பேசுகிறாளே தவிர, அவள் பிரிந்ததை ஒரு குறையாக என்றும் அவள் வெளிப்படுத்தியதில்லை என்பதை அப்போது குறிப்பாக நினைவு கொண்டாள் அன்னலட்சுமி. தன்போல் கூட ஆனந்தி அவளை உணரவில்லையே என்பது அன்னலட்சுமியின் பெரிய ஆதங்கம். அதை முன்பே பல தடவைகளிலும் ஆனந்தியிடத்தே தெரிவிக்க அவள் முயன்றிருக்கிறாள். அவ்வப்போது தொடங்கப்பட்ட அம்முயற்சி தோல்விகளிலேயே முடிந்திருக்கிறது. அவள் காயம்படவில்லை. காத்திருந்தாள். அன்றைக்கு ஆனந்தியாகவே இளகி நின்று தாய் பற்றிய பிரஸ்தாபத்தைச் செய்தது அன்னலட்சுமியை மகிழ்ச்சியோடும் எதிர்பார்ப்போடும் நிகழ்வுகளை முகங்கொள்ள வைத்தது.

'அப்போது தோன்றிய கனவு என்னை அதிர வைத்ததாயினும், அதிலிருந்து நானாகவே மீண்டேன். ஆனால் ராத்திரி கண்ட கனவு... என் கலக்கம் இப்போதுகூட தீரவில்லை அன்னா. இன்னும் எத்தனை காலத்துக்கு அதன் பாதிப்பு இருக்குமோ? அத்தனைக்கு அது முந்திய கனவிலிருந்து... வித்தியாசமானது; பாதிப்பின் தீவிரமுடையது.'

'என்ன கனவு அது? இன்னும் நீ கனவைச் சொல்லவில்லையே!'

அன்னலட்சுமிக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை ஆனந்தி. மௌனம் ஊடாடிய சிறிது நேரத்தின் பின் அவளையே கேட்டாள்: 'கனவில் உனக்கு நம்பிக்கையிருக்கிறதா அன்னா?'

'எல்லாக் கனவுகளிலயும் இருக்கிறதில்லை' என்று அவதானமாகத் தொடங்கினாள் அன்னலட்சுமி. 'நடக்க போகிறவற்றை முன்னறிவிப்புச் செய்வதுபோல் சில கனவுகள் வரும். அவற்றைச் சராசரிக் கனவுகளிலயிருந்து என்னால் இனங்காண முடியும். எப்படியென்று விளக்கம் சொல்ல முடியாது. ஆனால் எனக்கு அது சுலபமாயே முடிந்திருக்கிறது. உனக்கு... செல்லம் மாமியை ஞாபகமிருக்கிறதா?'

'இருக்கிறது. அவர்தான் இறந்து வெகுகாலமாயிற்றே!'

'பதினைந்து வருஷமாவது இருக்கும். ஒருநாள் கனவிலே வந்து எங்கோ போய்வருவதாகச் சொல்லி என்னிடம் விடைபெற்றுக்கொண்டு போனாள். வழக்கத்தில் அந்த மாதிரி நடப்பதில்லை. என்ன ஏது என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு வாரத்துக்குப் பிறகு மதுரையிலுள்ள தாயார் வீடு புறப்பட்டவள் போகிற வழியிலேயே பஸ் விபத்தில் இறந்து போனாள். இதுபோல... வரப்போகிற நன்மைகளையும் காட்டியிருக்கின்றன.'

'நான் பகலில் கனவு காண்பவள். எனக்கு அதனால் தான் போலும் இரவில் கனவுகளே வருவதில்லை. ஒன்றிரண்டு கனவுகள் வந்தபோதும் அவற்றை நான் பொருட்படுத்தியதில்லை.'

'இந்தக் கனவு எதன் சூசகமாயாவது இருக்கலாமென்று எண்ணுகிறாயா ஆனந்தி?'

'கனவை நம்பவும் முடியாமலிருக்கிறது; வருத்தப்படத் தேவையில்லை என்று எண்ணி பேசாமலிருக்கவும் முடியா மலிருக்கிறது. என்ன மனம் அன்னா? அற்புதா என்னை உதாசீனப் படுத்தியதென்றும், அற்புதாவுக்கு ஏதாவது துன்பம் நேரக்கூடுமென்றும் இதில் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. எவற்றை நினைத்தாலும் எனக்கு வருத்தமாகவே இருக்கிறது. என்ன செய்ய? எப்படி ஆறுதலடைய?' என்ற வார்த்தைகள் ஆனந்தியிடமிருந்து சோர்ந்து ஒலித்தன.

அன்னலட்சுமிக்கு அவளது நொய்மையான இடம் தெரிந்தது. ஆனாலும் அதைச் சுட்டிக்காட்டி, தன் கருத்தை வற்புறுத்த அன்னலட்சுமி அப்போது விரும்பவில்லை. அவள் வாதத்துக்கான தரவுகளை பொது நிலைமைகளிலிருந்தல்ல, ஆனந்தியின் முறைப்பாடு அல்லது ஒப்புமூலத்திலிருந்தே எடுக்க வேண்டியிருந்தது. 'ஆனந்தி... நீ வரவர பலஹீனமானவளாக ஆகிவருகிறாய் என்று எண்ணுகிறேன்...' என்றாள்.

'இல்லை... அப்படி இருக்காது... காரணமே இல்லையே...'

'சரி போகட்டும். நீ இன்னும் என்ன கனவென்பதைச் சொல்லவில்லையே!'

ஆனந்தி சொன்னாள்.

அன்னலட்சுமிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. சிறிதுநேர யோசனையின் பின், 'இதெல்லாம் அவரவரும் தம்தம் உள்ளுணர்வின் வழியாய் உணரவேண்டியது. இதற்கு இதுதானென்று மற்றவரால் பொருள் சொல்லிவிட முடியாது. என்னைக் கேட்டால்... இதற்கு ஏதாவது உள்ளார்த்தம் இருக்குமென்று நீ வருந்த வேண்டியதில்லை என்று தான் சொல்வேன். பொதுவாக கனவுகள் என்பவை அடக்கி வைத்த ஆசைகளின் தன்னிச்சையான வெளிப்பாடுகள் என்று சொல்வார்கள். அப்படிப் பார்த்தால்... உன்னுள் அடங்கிக் கிடந்த தாய்மையுணர்வின் வெளிப்பாடு என்றுதான் இதைச் சொல்லத் தோன்றுகிறது எனக்கு.'

'இல்லை.'

'என்ன இல்லை?'

'அடங்கிக் கிடந்த என் மன அவசங்களின் மீறல்களாய் நிச்சயமாக அக்கனவுகள் இருக்க முடியாது அன்னா. ஒரு பாசத்தின் ஏக்கத்தில் நான் என்றைக்குமே இருந்ததில்லை. மூன்று பிள்ளைகளைப் பெற்றேன். இதில் எந்தவொரு பிள்ளைக்கும் நான் பெரிதாக இரங்கியதாய்ச் சொல்லவே முடியாது. இப்படி எனக்கு அந்நியமானதும் அனுபவித்திராததுமான உணர்வுகளுக்காக நான் மன அவதிப் படுகிறேன் என்ற வாதம் எவ்வளவு சரியானது?'

கன்ரீனில் சந்தடி சிறிது அதிகரித்திருந்தது. இரண்டொருவர் அன்னலட்சுமியோடு பேசி சுகவிசாரிப்புச் செய்தனர். அன்னலட்சுமி

எழுந்துபோய்க் கைகழுவி வந்தாள். ஆனந்தியும் கைகழுவி வர, 'இருந்து கொள் ஆனந்தி. கவுண்டர் திறக்கிற நேரம். ஒரு பதினைந்து இருபது நிமிஷங்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்துவிட்டு வந்துவிடுகிறேன்' என்று விட்டு அன்னலட்சுமி அலுவலகம் சென்றாள்.

தனியே விடப்பட்ட ஆனந்தி யோசிக்கத் துவங்கினாள். தாய்மையின் இரங்கலும் அக்கறையும் தனக்கு இல்லையென்பதை அழுத்திச் சொல்லாமல் விட்டிருக்கலாமென்று அப்போது பட்டது ஆனந்திக்கு. அது அவளே புரியாத உணர்வாகவும் நிச்சயமில்லாத விஷயமாகவும் இருந்தது. தான் ஒரு புறநடையாக நிற்கிறது ஓர் அசௌகரியமாய் அப்போது தோன்றியது அவளிடத்தில். அவள் எவ்வாறு அப்படி ஆனாள்? அவளின் தாய்மையுணர்வு குறைபட, பிள்ளைமை உணர்வுபட்ட காயமேதேனும் காரணமோ? அவள் மேற்கொண்டு யோசிக்க விரும்பவில்லை. பார்வையை வந்து போவோரில் பதித்து யோசனைத் திசையை மாற்ற முயன்றாள். ஆனாலும் அந்தளவில் ஒரு விஷயம் அவளுக்கு உறுதியாய்த் தெரிந்தது: பெண்ணின் மகோன்னதம் தாய்மையென்று கருதுகிற ஒருத்தியிடம் அவள் தன் சிநேகிதியாகவே இருந்தபோதிலும் அத்துணைத் தீவிரமாய் தனது கருத்துக்களைப் பகிர்ந்திருக்கக்கூடாது. ஒருவகை வக்ரமாக அது எவராலும் எண்ணப்பட்டு விடுவதற்கு நிறைய வாய்ப்பிருந்தது. அவள் கனவு பற்றி அன்னலட்சுமியோடு பேசாமல் விட்டிருக்கலாமென்று இப்போது பட்டது.

அற்புதாவோடு கூடப் போய்க்கொண்டிருந்தது... யாரென்று தெரியவில்லை... சிநேகிதிபோலத் தோன்றவில்லையென்ற தன் அவத்தையின் இன்னொரு புறத்தை அதுவரை சொல்லாதது நல்லதெனத் தெரிந்தது. இனி சொல்ல இருந்த எண்ணம் அத்துடன் அவளிடமிருந்து விடுபட்டது.

அன்னலட்சுமி வந்தாள். ஆனந்திக்கு முன்னால் பிளாஸ்ரிக் புட்டுவத்தை அவசரமாக நகர்த்திப் போட்டாள். 'சீக்கிரம் போக வேண்டும். நேரம்... அப்படி...' என்றாள்.

'எனக்குப் புரிகிறது.'

'ஆனந்தி... ஒவ்வொரு விஷயத்தையும் விவாதப் படுத்திக்கொண்டு வாழ்ந்துவிடமுடியாது. தன்னுடைய நிலைப்பாடு சரியென்கிற தளத்திலிருந்தே விவாதம் ஆரம்பமாகின்றது. வாழ்க்கைப் போக்கில் சமரசமும் விட்டுக் கொடுப்புகளும்கூட அவசியமானவை. இந்தப் புரிதல்தான் வாழ்க்கையை, வாழ உதவி பண்ணும். வாழ்க்கைக்கான சட்டங்கள் அதை இன்னும் நல்லபடியாக வாழ்வதற்கான உபகரணங்களே தவிர வேறல்ல. ஒவ்வொருவரின் ஒவ்வொரு கணப்பொழுதும் மற்றவர்களினதிலிருந்து வித்தியாசமானது. கடந்து செல்லும் கணப்பொழுதுகள் சாசுவதமாகும் விந்தை சம்பவங்களின் தீவிரத்திலல்ல, எண்ணங்களின் பரிசுத்தத்திலேயே நிகழ்ந்திருக்கிறது. வாழ்வின்

சட்டகங்களின் மீதான கேள்விகள் கிளம்புவதற்கு அரிதாகவேனும் காரணங்கள் இருக்கத்தான் செய்யும். அவை பிரயோக விவேகத்தின் குறைபாடாகவும் இருக்கலாம். இதை நியதியாகவோ விதியாகவோ ஏற்றுக் கொள்வதின் மூலமே சமரசமும் விட்டுக் கொடுத்தலும் சம்பவிக்குமென்று எனக்குப் படுகிறது. நான் வாழ விரும்புகிறேன். அதுபோல நீயும் விரும்பப் பழகவேணும். ஒத்திணக்கம் என்பது இங்கேயிருந்துதான் விரிகிறது.

'இப்போது நான் சொல்லப்போவதை நீ மறுப்பாய். எப்போது... எதை நீ ஒப்புக்கொண்டிருக்கிறாய், இப்போது இதை நீ மறுப்பாயென்று குறைபட? அவசரமாய்ச் சந்திக்க வந்து, கனவு கண்டு மனம் கலங்குகிறது என்று நீ சொன்னபோது நான் உள்ளுக்குள்ளாயேனும் மகிழ்ந்தேன். அது தப்பென்று இப்போது தெரிகிறது. நாள்தோறும் நனவில் நடப்பவற்றை கனவாகக் கண்டு கலங்கும் இந்த ஜீவனுக்கு எந்தவகையில் பலமிருப்பதாகச் சொல்ல முடியும்? அதுபோல... கனவிலே கண்டவற்றுக்குக் கலக்கமடைந்த நீ, ஒருவகையில் உண்மையான பெண். அதனால் விவாதத்துக்காக விவரணங்களை வளர்த்தாமல் உயிரின் இயல்புதான் இதுவென்று ஒப்புக்கொண்டு அந்தத் தளத்திலிருந்து ஒரு ஆரோக்கியமான விசாரணையை நீ மேற்கொள்வதுதான் நல்லது. இந்தப் புள்ளியிலிருந்தாவது உன் வாழ்க்கையின் போக்கு, சிந்தனையின் திசை மாறத் துவங்கவேணும்.'

இன்னும் மேசையிலிருந்த தண்ணீர்ப் புட்டியை எடுத்து இரண்டு மிடறு நீர் குடித்து ஆயாசம் தணிந்தாள் அன்னலட்சுமி.

ஆனந்தி தோற்றதுபோல் கிளர்ந்தெழுந்தாள்.

உள்ளே ஒரு ஏக்கம்... ஒரு பதற்றம்...

வார்த்தைகளில் அது பிரதிபலித்தது. 'இல்லை... இல்லை... என் கொள்கைகளில் நான் தீர்மானமாகவே இருக்கிறேன். நான் நியதியாக எதையும் - எதையும்தான் - ஏற்றுக்கொண்டுவிட முடியாது. மாறும் உலகத்தில் மாறா நிலைக்கான இழுவிசையாகி விடும் இது. முரண்கள் எழுவது அப்போதுதான் அன்னா. மேலும் அது என் இழப்புக்களை அர்த்தமில்லாததாக்கிவிடும்...' என்றாள்.

'வீணாக முரண்டு பிடியாதே ஆனந்தி. உனக்கு ஏற்பட்டிருக்கிற சறுக்கல் இது. உன் கருத்துக்கு நீ தோற்றுத்தான் போனாய். வெற்றியில் மனம் குதூகலம் பெறும். அதுபோல் தோல்வியில் துவண்டு சாம்பும். தனிமனிதர்களின் சபலங்கள் வீம்புகள் இங்கே முக்கியமில்லை. தேவையானது... சத்தியம்! சத்தியம் மட்டுமே! இதை உணர்ந்தால் இந்த இடத்திலிருந்து கூட உனக்குத் திரும்பிச் செல்வது சாத்தியப்படும்.'

ஆனந்திக்கு மேலே பேச வரவில்லை.

ஒரு அழுத்தம், தோல்வியானதுபோல்.

பின் ஒருவாறு சூழ்நிலையை உணர்ந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டு சொன்னாள்: 'உண்மைக்குத் தோற்கவேண்டும் என்பதுதான் என் விருப்பமும். இதில் துவளுதல் சாம்புதல் வீம்படைதல்கள் எங்கே வருகின்றன? உண்மைக்குத் தோற்றல் என்பதன் அர்த்தம் நிஜமாகவே பொய்யை வெல்வது என்பதும்தானே!'

ஆனந்தி சிரிக்க அன்னலட்சுமியும் சிரித்தாள்.

இருவரும் நடந்துகொண்டே பேசினார்கள்.

'நமக்கேகூட நாம் நம்மை முழுமையாகக் காட்டிக் கொள்வதில்லைப் போல் தெரிகிறது. எப்போதும்தான். எல்லோரும் தான். தம்மைப்பற்றிய உண்மைகள் அவரவருக்குத்தான் சிறப்பாகத் தெரியும். உன்னை நீதான் கண்டறிய வேண்டும். நீ எதிர்பார்த்து வந்த ஆறுதலை என்னால் இன்றைக்கு உனக்குத் தரமுடியாமல் போய்விட்டது என்று எனக்குத் தெரியும். ஆனால் என்ன செய்ய முடியும்? நட்பு இடித்துரைப்பதற்காகத்தானே இருக்கிறது! இதை நீ புரிந்திருப்பாயென்று நினைக்கிறேன் ஆனந்தி. வேண்டுமென்றால் இன்னும் நாம் இதுபற்றி ஆற அமர இருந்து ஒரு நாளைக்குப் பேசலாம். வருகிற சனிக்கிழமை மாலை கடற்கரையில் சந்தித்தாலென்ன? நாம் மனம்விட்டுப் பேசியும் நாளாகிறது. உனக்கு வசதிதானே?' என்றாள் அன்னலட்சுமி.

'வசதிதான். என்ன நேரம்போல!'

'வழக்கம்போல ஆறுமணிதான். வழக்கமான இடத்தில்தான்.'

'சரி.'

'தாமதமானாலும் காத்திரு. கண்டிப்பாக வருவேன்.'

'கண்ணகி சிலையடியில் காத்திருப்பது எனக்கு எப்பவும் சலிப்பைத் தருவதில்லை.'

அன்னலட்சுமியின் புருவம் நெரிந்தது. பின்னர் தெளிந்தாள்: அவள் யோசித்துச் சொல்லியிருக்கமாட்டாள்!

# 7

திருவல்லிக்கேணி பஸ் நிலையத்தில் இறங்கிய ஆனந்தி கண்ணகி சிலையை அடைந்தபோது நேரம் ஐந்தரை மணி. சிலைக்குப் பின்னே நடந்து மணலில் போய் அமர்ந்தாள்.

மூன்று நான்கு நாட்கள் எறித்த வெய்யிலில் ஈரக் கடற்கரை மண் காய்ந்து உதிர்நிலையில் கிடந்தது. அதுவரை மனிதக் காலடி படாத இடம் அவள் பாரத்தில் கீழே நொருங்கியது. மணலாகி அசைவில் வழிந்தது.

அன்னலட்சுமி வருவதற்கு நேரம் இருந்தது. ஐந்து / பத்து நிமிஷங்கள் முன்னே பின்னேயானாலும் கண்டிப்பாக வந்து விடுவதாக அன்று மதியம் கூட போனில் சொல்லியிருந்தாள்.

பொழுதைப் போக்குவதொன்றும் சிரமமில்லை. மூச்சை ஆழமாக இழுத்து - விட்டு சுவாசப் பயிற்சி செய்யலாம்; பையிலுள்ள சஞ்சிகையை, எழுதி வைத்துள்ள கவிதைகளை எடுத்துப் பார்த்துக் கொள்ளலாம்; வெளியில் பார்வையைப் படரவிட்டு விட்டு யோசித்துக் கொண்டிருக்கலாம்; செய்வதற்கு எவ்வளவோ இருக்கின்றன.

ஆனந்தி எதிர்க்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். அலைகள் திரள் திரளாய் உயர்ந்தும் வீழ்ந்தும் கொண்டிருந்தன. மாரிகாலக் கடலும் ஒருவகை அழகுதான். ராட்சத அழகு. வானத்தில் நீலப்புலம் மறைந்து போயிருந்தது. ஒரு மங்கிய சாம்பல் நிறப் படர்வு அடங்கிலும். தை மாத வைகறையின் பனிப்புகார்ப் படர்வும் இப்படித்தான் இருக்கும்.

ஆனந்தியின் மனசு அந்த நினைப்பில் ஒருமுறை சிலிர்த்தோய்ந்தது.

சின்ன வயதுக் காலத்தில் நடந்த பெரும்பாலான சம்பவங்களும் அவளுக்கு மறந்துபோய்விட்டன. சிலசில காட்சிகள் மட்டும் உதிரிகளாய், அநாமதேயங்களாய் வந்துபோகும். அவற்றுள் முக்கியமானது அந்தப் புகார்ப் படலக் காட்சி. அவள் தன்னின் பெறுமானமுள்ள ஒரு பொருளை, நம்பிக்கையை, பாதுகாப்பை அந்தத் திரைக்குள்ளேதான் இழந்திருக்கிறாள் போல ஒரு சோகம் எப்போதும் அந்தப் புகார் படலத் தரிசனத்துடன் அவளுள் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. வேறேதும் அதுபற்றி ஞாபகமாய் அவள் அறிந்ததில்லை. அவ்வப்போது அதன் பின்னணியில் நிறையச் சம்பவங்களும் அர்த்தங்களும் இருக்கலாமென்று மனத்தே ஒரு திண்ணம் பிறக்கும்.கனவில் அற்புதா கூட அது போன்ற ஒரு புகாருக்குள்தான் சென்று மறைந்தாள். எங்கே, எப்படி அவற்றைத் தொடர்புறுத்துவதென்று அவளுக்குத் தெரியாதிருந்தது.

நினைவுச் சுழல் நின்று மனம் வேறொரு கோணம் திரும்பியது.

கண்ணகி சிலையடியில் ஒரு காத்திருப்பு என்றுமே தனக்குச் சலிப்பாக இருந்ததில்லையென்றபோது அன்னலட்சுமியின் பார்வை சட்டென தன் முகத்தில் ஆச்சரியத்தில்போல் படிந்தமை ஞாபகம் வந்தது.

அதன் அர்த்தம் அவளுக்குத் தெரியும்.

ராதாகிருஷ்ணனுடனான தொடர்பு எப்படியோ சிறிது காலத்துக்குள் அக்கம்பக்கத்திலே சலசலப்பை ஏற்படுத்திவிடுகிறது. அவளோடு நன்கு பழக்கமானவர்கள், அவளை மிகவும் விரும்பியவர்கள் தொழிலார்த்தமான நெருக்கமே அது என்று பிரதிவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் தாயாருடன் சச்சரவு கொண்டு வீட்டை விட்டு அவள் வெளியேறியது

அவர்கள் பிரதிவாதத்துக்கு பெரிய அனுகூலமாய்ப் போய்விட்டது. அவ்வாறு அடங்கியவர்களில் அன்னலட்சுமியின் தாயாரும் ஒருத்தி. அதற்கு மேலே அன்னலட்சுமியின் அத்தையும் மாமனும் கண்டிப்புடன் அவளுடனான தொடர்பை அறுக்க சொல்லிவிட்டார்கள். ராகவன் தன் அதிருப்தியை மட்டும் தெரிவித்தான். அதனால் தீர்க்கமாய் அந்த உறவை அவள் துண்டிக்க வேண்டியிருக்கவில்லை. தன் வீட்டில் நிகழக்கூடிய சந்திப்புக்களை மட்டும் தவிர்த்தாள். அவள் வீட்டில் போய்ச் சந்திப்பதையும் நிறுத்தினாள். மற்றும்படி ஆபீஸில், கடற்கரையில், சிலவேளை பஸ் நிலையத்தில் ரயில்வே ஸ்டேஷனில் அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள்.

அது அன்னலட்சுமிக்கு அந்தத் தொடர்புக்குக் காட்டிய தார்மீக ஆதரவில்லை. அவள் ஆனந்தியைத்தான் ஏற்றுக் கொண்டாள்.

ஆனந்திக்கு இப்போதும் ஞாபகம். தனி வீட்டுக்கு ஆனந்தி வந்தபிறகு ஏற்பட்ட முதல் சந்தர்ப்பத்திலேயே அன்னலட்சுமி கேட்டாள், என்ன இது ஆனந்தி, வீட்டிலே எல்லாரும் உன்னைப்பற்றி ஏதேதோ பேசுகிறார்கள்... என்று.

அவள் மறைக்கவில்லை; சாக்குப் போக்குச் சொல்லவில்லை; உண்மையை ஒப்புக்கொண்டு விபரம் சொல்லிவிட்டாள். எனக்கு அந்த வேலை நிச்சயமாகத் தேவையாயிருந்தது அன்னா.

அடுத்த சந்திப்பொன்று நிகழுமென அவள் எண்ணியிருக்க வில்லை. ஆனாலும் அப்படியொரு சந்திப்பு நிகழ்ந்தது.

அந்த ஒரேயொரு சந்தர்ப்பத்தில் தவிர ராதாகிருஷ்ணன் பற்றி என்றைக்குமே அவள் விசாரித்ததில்லை. பொதுவிலேயே எவர் அந்தரங்கம் குறித்தும் அவள் பேசுவதில்லை. இப்போது அவளுக்குள்ள ராம்ஜியுடனான தொடர்பு வதந்தியாகவேனும் அவளது காதில் விழுந்திருக்கும். ஆனால் கேட்டதில்லை. தன்னிடத்தில் ஒரு வெறுப்பு அவளுக்கு மெல்லிதாக இருக்கிறதை அவள் யூகிக்கிறாள். அதுதான் அவ்வப்போது அவளது கண்களுக்கூடாக குத்தலாய் எட்டிப் பார்த்துக் கொள்கிறது. ஒருவரின் ஆசாபாசங்களுக்கான உறவுத் தேடல்கள் அவரவரின் தனிப்பட்ட விஷயமென்று அன்னலட்சுமி ஒதுக்கி விடமாட்டாள். ஆயினும் தம் நட்பின் எல்லை அதனாலெல்லாம் சுருங்கிவிடாதென்று ஆனந்தி நம்பினாள்.

பார்வை யதேச்சையாகத் திரும்ப தூரத்தில் அன்னலட்சுமி வருவது தெரிந்தது. கூட யாரோ. கிட்ட வரவரத்தான் தெரிந்தது, அது ஆசிரியை பொன்னம்மாளென்று. எத்தனை வருஷங்களாகிவிட்டன அவளைக் கண்டு! நினைத்துக் கூட வெகுகாலம். இருந்தும் வெகு சுலபமாகவே வருஷங்கள் படைபடையாய் அமுத்திக் கிடந்த நினைவுக் கிடங்கிலிருந்து அவள் ஞாபகமாகியிருந்தாள். ஆனந்திக்கே சுளுவாக வந்த அந்த நினைப்பை எண்ண ஆச்சரியமாக இருந்தது

பொன்னம்மாள் ரீச்சர்... நான்கு ஐந்து வருஷங்களாய் அவர்களுக்குப் பாடமெடுத்த ஆசிரியை. ஒரு வருஷம் அவர்களுக்கு வகுப்பாசிரியையாகவும் இருந்திருக்கிறாள். பெயருக்கு ஏற்றாற் போல் தங்கமானவள். எந்த வைராக்கியத்திலோ விசனத்திலோ கல்யாணம் செய்யாமலே காலத்தைக் கழித்தவள். நெருப்பு வளையமிட்டு வாழ்ந்தவள். பொல்லாப்பாகக்கூட ஒருவர் ஒரு அவப்பெயரை அவள்மீது சுமத்திவிட முடியாது. ஆனாலும் அவளுடைய உலகம் வேறு. ஒதுங்கி ஒதுங்கிச் சென்று மனித பரவசம் குறைந்த ஒரு உலகத்தைத் தன் தனித்த வாழ்க்கைக்காக அவள் தேர்ந்தெடுத்திருந்தாள். இருண்ட இச்சமுதாயத்துக்கு அறிவு வெளிச்சம் பிடிக்கும் தீவிர கொள்கையேதும் அவளிடத்தில் இருந்ததில்லை. உபாத்திமை ஒரு தொழில். எல்லாத் தொழில் போலவும் அது ஒன்று. ஆனாலும் அதை அவள் விசுவாசத்தோடு செய்தாள். அதைவிட அவளுக்கு இரக்கப்படத் தெரிந்திருந்தது. மேலும், ஆரவாரம் மிக்க இந்த உலகத்தில் மிக அமைதியாக நாட்களைக் கடத்தியது அவளின் இன்னொரு தனித்துவம்.

பொன்னம்மாள் சிரித்தபடியேதான் வந்துகொண்டிருந்தாள். கட்டிய பல்லாக இருக்கும்! பளீரென்றிருந்தது.

இருவரும் நெருங்கிவர ஆனந்தி எழுந்தாள். 'வணக்கம்' என்றாள்.

அன்னலட்சுமி கேட்டாள்: 'யாரென்று தெரிகிறதா ஆனந்தி?'

'தெரியாமல்...?' என்றாள் ஆனந்தி. 'அந்தளவு சுலபமாய் டீச்சரை மறந்துவிட முடியுமா? தெளிவாகப் பார்க்கக்கூடிய தூரத்தில் வந்து கொண்டிருக்கும்போதே யாரென்று தெரிந்துகொண்டேன்.'

'அப்படியா...?' என்று ஆச்சரியம் காட்டினாள் ஆசிரியை.

'பெரிதாக நீங்களும் மாறிப்போய்விடவில்லை டீச்சர். தலை நரைத்திருக்கிறது; கொஞ்சம் கூன் விழுந்திருக்கிறது; கொஞ்சம் முகச் சுருக்கம் போட்டிருக்கிறது. சிரிப்பு... பார்வையெல்லாம் அன்று பார்த்த மாதிரியேதான் இருக்கிறது. குரல் கூட...' என்றாள் ஆனந்தி.

மூவரும் அரை வட்டமாய் அமர்ந்தனர்.

சிறிதுநேரம் பள்ளிக் காலத்தின் ஞாபகப் புரட்டலாகக் கழிந்தது.

'அன்னலட்சுமி வாழ்க்கையில் முன்னேறி எப்படியும் ஒரு நல்ல நிலைமைக்கு வந்துவிடுவாளென்று அப்பவே நான் எதிர்பார்த்ததுதான். அப்போதும் நீங்கள் இரண்டு பேரும் நெருக்கமான தோழிகள். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு... இப்போதும் அப்படியே இருப்பதைப் பார்க்க எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. வெகு சில பள்ளிச் சிநேகிதங்கள்தான் கடைசி வரைக்குமான சிநேகிதங்களாய் இப்படி வந்தமையும். நீங்கள் இரண்டு பேருமே இந்த வகையில் அதிர்ஷ்டசாலிகள்...' என்றாள் பொன்னம்மாள் மனம் திறந்து.

'ஏன் டீச்சர், நான் நல்லாய் வரமாட்டேனென்று அப்பவே உங்களுக்குத் தெரிந்திருந்ததா?' என்று கேட்டுச் சிரித்தாள் ஆனந்தி.

டீச்சர் நிமிர்ந்து பார்த்தாள். பின் அதிராமலே சொன்னாள்: 'அன்னலட்சுமி முன்னுக்கு வந்துவிடுவாளென்று நான் நினைத்திருந்ததற்குக் காரணம் இவளுடைய விடாமுயற்சியும், தீர்மானமெடுக்கும் திறனும் தான். அப்பவே அவை துல்லியமாய்த் தெரிந்திருந்தன. ஆனால் நீ... நீ நல்ல நிலைமைக்கு வர முழுத் தகுதியோடும் இருந்தவள். உன் தகுதி உன் அளவில்லாத திறமையேயாகும். உன்னுடைய எல்லைகளை நான் வெகு விசாலமாகவே எண்ணியிருந்தேன். வெறுமனே படிப்பு... பட்டம்... உத்தியோகமென்றும் குடும்பமென்றும் ஒரு குறுகிய வட்டத்துள் உன்னை நான் நினைத்திருக்க வில்லை. பெரிதாக நினைத்திருந்தேன். கல்லூரிப் பேராசிரியராக... ஐ.ஏ.எஸ்ஸாக... இப்படி ஏதாவதொன்றாக. ஏனென்றால்... பெரிதினும் பெரிதுகேள் என்பதற்கேற்றாற்போல நீ குறைந்தவைகளில் திருப்தி யடைகிறவளாய் இருக்கவில்லை. அது எனக்கு ஆனந்தமாய் இருந்தது; கர்வமாய்க்கூட இருந்தது. ஆனாலும் நீ தவறிவிட்டாய். அது ஏனென்று தான் எனக்குத் தெரியவில்லை.'

அவள் வேடிக்கையாகத்தான் கேட்டாள். அதற்கு இவ்வாறு நீளமான பதில். அதுவும் அவள் வாழ்க்கையின் சரிவைச் சுட்டுகிறவிதமாக. அன்னலட்சுமியும் தானும் மட்டுமே தனித்திருக்க வேண்டிய இடத்தில் ஆசிரியை பொன்னம்மாளின் வருகையை சற்று இடைஞ்சலானதாக ஆரம்பத்திலேயே உணர்ந்திருந்தாள் அவள். அதை அந்தப் பதிலின் மூலம் துலக்கமாகத் தெரிந்தாள். 'ம்ஹூம்...!' என்று ஒருமுறை பெரிதாகச் சலித்தாள். பின், 'நான் மறக்க நினைக்கிறதுகளையே நீங்கள் பேசுகிறீர்கள் டீச்சர். எனக்கு குறி இருந்தது. அதை அடைவதற்கான திறமைகளையும் அடங்காத தாகத்தோடேயே வளர்த்தேன். பெரிதினும் பெரிதுதான் கேட்டேன். ஆனால்... சிறிதினும் சிறிதுதானே கிடைத்தது. அது என்னைத் திசைமாற வைத்துவிட்டது. வைக்கட்டும். வைத்துக்கொண்டே போகட்டும். என் தோல்விகளேயானாலும் அவற்றுக்காக நான் அழப்போவதில்லை. நான் ஏன் அழவேண்டும்?' என்றாள். அவள் பேச்சில் ஒரு எரிச்சல் வெடித்துப் பரம்பியது.

பொன்னம்மாள் அதைக் கவனித்திருக்கலாம். சொல்ல வந்ததைச் சொல்வது அவசியம்போல் அதை அலட்சியம் செய்துகொண்டு, 'விதியை விட பலபேரை மதியே திசைமாற வைத்திருக்கிறது. உன் பக்கத்திலும் அதுதான் நடந்திருப்பதாகத் தெரிகிறது' என்றாள்.

இதயத்துள் துணீரென்றது. பொன்னம்மாளுக்கு ஏதோ தெரிந்திருக்கிறதா? எப்படி? யார் மூலமாய்? அன்னா சொல்லி யிருப்பாளா? அவள் கொதிப்பேற அவ்வளவும் போதுமானதாயிருந்தது. ஆனால் யாரையென்று காயமுடியும், சந்தேகத்தை மட்டும் வைத்துக் கொண்டு?

எதிலும் பட்டும் படாமலுமான ஒரு பதிலைத்தான் சொல்ல அவளால் முடிந்தது. 'ஒரு வகையில் நீங்கள் சொன்னது மெய்தான் டீச்சர். என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் மதிக்குப் பெரும்பங்கு இருந்திருக்கிறது. அதனாலேயே நொய்மையை நீங்கள் அதில் பார்க்கமுடியாது. நான் மரம் போல உணர்வில்லாதவளாயிருக்கலாம்; அதனாலேயே அரம்போல கூர்மையானவள். இப்படித்தான் முடிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுவிட்ட வாழ்க்கை என்னது. இனி அதில் விட்டுக் கொடுப்புகளுக்கோ, சமரசங்களுக்கோ இடமில்லை. நான் நானாகவே வாழவும், நானாகவே சாகவும் வேண்டும். என் முடிவு, என் ஆகக்கூடிய விருப்பமெல்லாமே இதுதான்.'

அவள் சிரித்தாள்.

இதழ்களின் கடைசியில் ஒரு கசப்பு இருந்தது.

'என்ன ஆனந்தி இது? டீச்சரிடம் என்ன பேசுகிறாய்? இப்போது அவர் என்ன சொல்லிவிட்டார்?' என்று கண்டிக்க முனைந்தாள் அன்னலட்சுமி.

'நான் ஒன்றும் அகௌரவப்படுத்தவில்லையே அவரை. என் வாழ்வைப்பற்றிச் சொன்னேன். வாழ்வுபற்றிய தாத்பர்யத்தைச் சொன்னேன். அவ்வளவுதான். கொஞ்சம் கோபப்பட்டது போலத் தெரிந்திருக்கும். மற்றவர்கள், இல்லாவிட்டால் எதிர்பாராதபடியான ஒரு சந்தர்ப்பம் என்னை அந்தமாதிரித் தூண்டிவிட்டு வருகிறது. என் வாழ்க்கையைப் பேச வேண்டாமென்கிறேன். இந்த உலகத்தில் எனக்குக் கோபமிருக்கிறது; என் கோபத்தைக் கிளறாதீர்கள் என்கிறேன். இன்னும்... நான் என் வாழ்வில் தோல்வியடைந்ததாக எண்ணாமலிருக்க முனைகிற தருணங்களில், அவற்றையே வெற்றியாக மாற்றவிருக்கிற வேளைகளில் அவை தோல்வி தவிர வேறில்லையென்று என்னோடு வாது புரிய வராதீர்கள் என்கிறேன். அவ்வளவுதான்...' என்றாள் ஆனந்தி.

அன்னலட்சுமி விறைத்துப் போனாள். இப்போது என்ன நடந்துவிட்டதென்று இவள் இப்படிக் கொதித்து விழுகிறாள் என்று திகைப்பும் பட்டாள். இவள்தானே நிமிண்டும் கேள்வியாய்க் கேட்டு நிலைமையை இறுக்கமடையச் செய்ததே! டீச்சரை இங்கு அழைத்துவராமல் விட்டிருக்கலாம் நான். அவரது மனத்தை நோகடிக்க இவளுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

பொன்னம்மாள் லேசாகச் சிரித்தாள். ஆனந்தி சொன்னதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. நிலைமையைச் சாந்தப்படுத்த வேண்டி மென்மையான வார்த்தைகளில் உரைத்தாள்: 'எங்களது இன்றைய இந்தச் சந்திப்பு எதிர்பாராத விதமானது. உன்னை என்றாவது சந்திப்பேனென்று நான் நினைத்திருக்கவில்லை. அதுபோலத்தான் அன்னலட்சுமியையும். ஒரு ஆர்வத்தில்தான், எதிர்பாராதவிதமாக தபால் நிலையத்தில் சந்தித்த அன்னலட்சுமியோடு சேர்ந்து உன்னைப் பார்க்க நான் வந்தது. உன் வாழ்க்கை உனக்கானதுதான். உன் வழியில் வாழ்ந்துகொள். யாரும்

குறுக்கிடப் போவதில்லை. ஆனால் இதை குற்றவுணர்வில்லாமல் வாழவேண்டும் என்பதுதான் என் கொள்கை. ஒன்றைத் தெரிந்துகொள்: நீ எதையெதை உன் அந்தரங்கமென்றும், தனிமனித நடக்கைகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவையென்றும் சொல்லிக் கொண்டிருக்கிறாயோ அல்லது நினைத்துக் கொண்டிருக்கிறாயோ அவை ஏற்கனவே அப்படியில்லை என்பதை முதலில் நீ தெரிந்துகொள்ள வேணும். ஊர் வாயை மூட முடியுமா? உன் கதை எனக்குத் தெரியும்.'

ஆனந்தியின் கண் ஜிவு ஜிவு என்று சிவந்து கொண்டிருந்தது. அது தெரிந்தும்கூட தன் இயல்பான பொறுதியின் சின்ன அளவு எடையும் குறையாதிருந்து பொன்னம்மாள் சொன்னாள்: 'உன்னைப் பார்ப்பதற்காக ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் அன்னலட்சுமியோடு காத்திருந்திருக்கிறேன் ஆனந்தி. காலத்தை இவ்வளவு ஆர்வமாகப் போக்கடித்த வேறு சந்தர்ப்பம் எனக்கு ஞாபகமில்லை. உன்னைப் பார்க்கிறதில் இருந்த சந்தோஷம்... பரபரப்பு... அவற்றையெல்லாம் அழிக்கிற எண்ணம் எனக்கில்லை. ஒருவேளை இன்றைய பொழுது ஏற்றபொழுதில்லையோ என்னவோ. இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்தால் பார்க்கலாம். அப்போது மனம் விட்டுப் பேசுவோம்.'

கடல் எதிரே இரைந்து கொண்டிருந்தது.

அவள் புறப்பட ஆயத்தமாகிவிட்டது தெரிந்தது. ஆனந்தியின் மனம் துண்ணென்றது. அந்தளவில் பேச்சை முறித்துக் கொண்டு அவளை அனுப்புவது மிகவும் அநாகரீகமாய்த் தெரிந்தது. அவள் மனநிலை தணியத் துவங்கிற்று. உன் வாழ்க்கையை உன் வழியில் வாழ்ந்துகொள், ஆனால் அதைக் குற்றயுணர்வில்லாமல் வாழவேண்டுமென்று அவள் சொன்னதன் அர்த்தம் அப்போதுதான் விளக்கமாகிற்று. அந்த அவதி, ஆத்திரம் யாவும் அவளின் குற்றவுணர்வைத்தான் காட்டும். அதனால் மேலும் அவளோடு பேசவிரும்பியவளாய், 'புறப்பட்டு விட்டீர்களா டீச்சர்?' என்றாள் மெல்ல.

'ஆமாம். இன்றைக்கே நான் ஊர் திரும்புகிறேன். இரவு பத்து மணிக்கு ஒரு பஸ் இருக்கிறது.'

'நிறைய நேரமிருக்கிறதே. கொஞ்சம் இருங்களேன் போகலாம்' என்றாள்.

பொன்னம்மாள் அன்னலட்சுமி இருவரும் அவள் முகம் நோக்கி நிமிர்ந்தனர்.

நரையோட ஆரம்பித்த தலை. கட்டிலிருந்து கழன்ற சில கூந்தல் இழைகள் மெதுவான காற்றில் முகத்தில் அலைந்தன. அடிக்கடி ஒதுக்கிவிட்டுக் கொண்டாள். அவள் சற்று தடுமாற்றம் அடைந்திருப்பது தெரிந்தது இருவருக்கும்.

பொன்னம்மாள் மெல்லிய இழையாய்ச் சிரித்தாள். சற்றே கிட்ட நெருங்கி தன் வதங்கிய கையினால் அவளது தலையைத் தடவிவிட்டாள்.

அவளது மனத்தைப் புரிந்துகொண்ட குழைவு அதில் இருந்தது. வளைந்த தேகம், நரை, திரை, முக்காடு, முறுவல், ஜீவன் துளிர்க்கும் அருட்பார்வையும் கொண்ட ஒரு மாது அவளிடத்தில் தோற்றம் பெறுவதுபோல் இருந்தது அன்னலட்சுமிக்கு. அவளின் சீற்றம் இவளைச் சலனமே செய்யவில்லையா? கருணை, ஸ்தூலமடைதல் அபூர்வமான ஓரொரு பொழுதுகளில் சாத்தியமாகிறதுதான்.

பொன்னம்மாள் சொன்னாள்: 'இரண்டு வாழ்க்கையை ஒருவர் வெகுகாலத்துக்கு வாழ்ந்துவிட முடியாது. காலாந்தரத்தில் ஒன்றில் வெறுப்படைந்து ஒதுக்கிவிட்டு மற்றதனோடு சேர்ந்து அழிதலே பெரும்பாலும் நிகழ்ந்திருக்கிறது. நீயும்... ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, ஒரு வாழ்க்கையை நினைத்து ஏங்குகிறாய். இந்த இரட்டை வாழ்க்கை உனக்கு என்றும் நலம் பயக்காது.'

இருள் செறிவடையத் துவங்கியிருக்கிறது.

சூழ ஜனங்களின் கலகலப்பு வெகுத்திருந்தது.

இருந்தும் பெரும்பாலானவர்கள் கலைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

மழைத் தூறல்கள் ஒன்றிரண்டு உதிர்ந்து கொண்டிருந்தன.

'ஒரு வாழ்க்கையின் பாதிப்பே இன்னொரு வாழ்க்கையை ஒரு தேவையாக ஆக்கியிருக்கிறது பலபேரிடத்தில். இது, அந்த இன்னொரு வாழ்க்கை நியாயத்தோடு கூடியது என்பதன் அர்த்தமில்லை. உன் இடர்ப்பாடே இந்த மாதிரியான நியாய கற்பிதத்தின் காரணமாய்த் தோன்றியதாகவே தெரிகிறது. ஒன்று மட்டும் உறுதி: உன் திரஸ்காரங்கள் நீ அடைந்துள்ளவையைவிட பெறுமதியானவை. உன் மனம் மென்மையானது என்பதை நானறிவேன். அதனால்தான் சின்ன விஷயத்துக்கும் நீ கலங்கிவிடுகிறாய். உன் பிள்ளைகள் பக்கத்தில் அந்த மென்மை இன்னும் அதிகமாகவே இருக்கிறது. திரும்ப முடியாத எல்லைக்குப் போவதன் முன் திருந்திவிடு ஆனந்தி. தாய் எப்போதும் தாய்தான். நாமே தாயானாலும் தாய் தாய்தான். அந்தத் தாய் ஏசினால், ஏன் அடித்தாலும் கூட, கோபித்து விடுகிறதா? கெட்ட தாயை எங்கேனும் நீ பார்த்திருக்கிறாயா? தாய் மட்டுமா, பெண் பிறவியே பெருமையானது தானடி மகளே. மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்ற பாடலை நீ படித்ததில்லை...?'

அந்தக் கருத்து ஆனந்திக்கு ஒப்பில்லை. பெண்களின் பேறுகாலத் துன்பமும், மாதவிடாய் அவஸ்தைகளும் மாதவத்தின் அம்சங்களாக என்றைக்குமே அவளுக்குத் தோன்றியதில்லை. மனித குல மறு உற்பத்திப் பணியில் பெண்ணின் பங்கை அவள் மதிப்பாள். அதுகூட ஒருவகையில் இயற்கையின் பெண் மீதான திணிப்பே என்றொரு அபிப்பிராயமும்

அவளிடமிருந்தது. அந்த அபிப்பிராயம் பற்றி யோசித்துக் கொண்டிருந்த கணத்தில் கூட அந்த 'மாதவ' அம்சத்தை அவள் மெல்லியதாக உணர்ந்து கொண்டிருந்தாள். கோட்டெக்ஸ் பாவித்திருந்தும் துடையிடுக்கில் ஊரலாய் ஒரு அசிங்க உணர்வு.

பையுள் துளாவி கையகல குறிப்புப் கொப்பியை எடுத்தாள்.

*ஈரப் பிசுப்போடு ஒரு நிமிஷம்*
*உட்கார்ந்து இருப்பீர்களா?...*
*அடிவயிற்றில்*
*பிரபஞ்ச பூதத்தின்*
*மூலாதார அவஸ்தையோடு...*
*பிறப்பின் வாசம்*
*உடலெங்கும் பரவி நிற்க...*

என்கிற அ. வெண்ணிலாவின் வரிகள், புரட்ட வந்தன. பார்த்துவிட்டு மூடி வைத்தாள். தொலைபேசி எண் ஒன்றை ஞாபகப்படுத்த பார்த்தது போலிருந்தது அது. *எறும்புக்கும் நாய்க்கும் எப்படியோ இந்த அவஸ்தை?* என்று அக்கவிதைக்காரி கேட்டு முடித்திருந்தாள். உணர்ந்தது படைப்பாகியதில் வாசக அனுபவமும் இணைய மகத்தான கணமாகிறது அது.

ஆனாலும் ஆனந்தி வாய் திறந்து தன் மறுப்பைச் சொல்லவில்லை. அன்னலட்சுமிக்கு பெருத்த ஆறுதலாக இருந்தது.

பொன்னம்மாள் முடிக்கத் தயாரானாள். 'இல்லற தர்மம் பற்றி என்னைவிட உங்களுக்கு நல்லாவே தெரியும். என் பார்வையும் இரண்டு தலைமுறைகளுக்கு முந்திய பார்வைதான். ஆனாலும் அறத்தின் குரல் அடிப்படை மாறாதது. யுகயுகத்துக்கும் அதன் குரல் ஒன்றாகவே ஒலிக்கும். யுகதர்மம் என்பது வேறு. அது யுகங்கள் தோறும் விரிவடையும், சுருங்கும், திரிபடையும் தன்மையுடையது. அறம்... இயல்பில் மாறுவதே இல்லை. இப்போதுதான் விருத்தாப்பிய கால வாழ்க்கைத் தனிமையை, இன்னலை என்னால் உணரமுடிகிறது. இத்தனைக்கும் நான் என் நெருங்கிய உறவினர்களோடேயே வசிக்கிறேன். பிள்ளைகள், உறவினர்களென்று விரியும் குடும்ப பந்தத்தின் அர்த்தம் காலப்போக்கில் உனக்கும் புரியும். அப்போது நீ திரும்ப முடியாத ஒரு எல்லையை அடைந்திருப்பாய். பூட்டு இல்லாமல் இருப்பதுதான் வேண்டப்படுகிற வாழ்வு. கூடு இன்றி இருப்பது வாழ்க்கையே அல்ல. ஆனந்தி, நீ என்னுடைய வெகுவான நம்பிக்கைக்குரிய ஒரு மாணவியாக இருந்தவள். உன் வாழ்வு இந்த மாதிரி திசை தவறிப்போவது எனக்கு எவ்வளவு வேதனையாயிருக்கும் என்பதை ஒருமுறை நினைத்துப்பார். உன் இதயத்தில் எங்கோ ஒரு இடத்தில் என்றோ ஒரு நாள் அடிபட்டிருக்கிறது. அது எங்கே எப்போது என்பதை உன்னால்

கண்டுபிடிக்க முடியுமானால்... உன் மீட்சி அந்தக் கணத்தில் நிகழும். மறந்துவிடாதே: நீ வலிபட்ட இடத்தை முதலில் கண்டடை.'

பொன்னம்மாள் எழுந்தாள்.

தொடர்ந்து அன்னலட்சுமியும் ஆனந்தியும் எழுந்தனர்.

மூவரும் பஸ்ஸெடுக்க மெதுவாய் நடந்தனர்.

இரண்டு பக்கமும் தன் பழைய மாணவிகள் மெல்லிய தாங்குகையோடு வர நடந்து பஸ்ஸெடுத்தாள் அந்த ஆசிரியை.

பொன்னம்மாள் சென்றதும் ஆனந்தி கேட்டாள்: 'நீதான் டீச்சருக்கு எல்லாம் சொன்னாயா?'

'டீச்சருக்கு பாதி விஷயம் தெரிந்திருந்தது. மீதியை... கேட்டார், சொன்னேன்.

'எப்படித் தெரிந்திருந்தது?'
'எப்படியோ.'

சிறிது நேரத்தில் அன்னலட்சுமி சொன்னாள்: 'நீ இப்போது எவ்வளவோ தெளிவாயிருக்கிறாய் ஆனந்தி. பொன்னம்மாள் டீச்சரைச் சந்தித்தது நல்லதாகவே படுகிறது.'

அதற்கு ஆனந்தவல்லியிடமிருந்து எதுவித பதிலும் பிறக்கவில்லை.

# 8

ஆனந்தி வீட்டுக்கு வந்தபோது ஆயா இல்லை. பக்கத்து வீடு எங்காவது போய்ப் பேசிக்கொண்டிருக்கலாம். எங்கோ இருக்கிற பொன்னம்மாள் ரீச்சர் வரையிலும் தன் கதை எட்டியுள்ளது தெரிந்த பிறகு, ஆயா போகிற வீடுகளில் தன்னைப் பற்றிப் பேசுவது சாத்தியமென்றே இனி ஆனந்திக்கு எண்ண வரும். அந்தரங்கங்களை அறிய அனுமதிக்கும்போதே அவற்றைக் காபந்து செய்கிற பொறுப்பும் சுமத்தப்படுகிறதென்பதை அவர்கள் ஏன் உணர்வதில்லையென்று கோபமாய் நினைத்தாள்.

தன்னிடமிருந்த மாற்றுச் சாவியால் கதவைத் திறந்து உள்ளே வந்தாள். குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு ஹோலுள்குள் வந்தமர்ந்தாள். கோப்பி குடிக்கலாம் போல இருந்தது. பின்னர், வேண்டாம்... சாப்பிடலாம் என்ற எண்ணம் எழுந்தது. எதற்கும் ஆயா வந்தால்தான் வசதியாக இருக்கும். தொலைக்காட்சியை சத்தமாகப் போட்டு வைத்தால் அதன் சத்தம் கேட்டு ஆயா வருவாளோ என்று யோசனை எழுந்தது. அதைச் செயலாக்குமுன்னம் விளக்குகளெல்லாம் அணைந்து இருள் எங்கும் நிறைந்தது.

ஜன்னலூடு வெளியே பார்த்தாள். இருள் தவிர பிரபஞ்சத்தில் வேறேதும் தென்படவில்லை. சென்னை மாநகர் முழுவதிலுமே மின்தடை ஏற்பட்டிருந்ததுபோலும்.

எழுந்து மெழுகுவர்த்தியை எடுத்துக் கொளுத்தலாம். அசதியாக இருந்தது. வெளிச்சம் வைத்து யார் முகம் பார்த்துப் பேச? அல்லது என்ன வேலை செய்ய?

நேரமாக ஆக இருட்டு பழக்கமானது.

வானத்திலிருந்து வெளிச்சப் பிரதிபலிப்பு ஜன்னலூடு அடித்தது.

அந்தளவு வெளிச்சம் போதும். சுவர் மேசை நாற்காலிகள் தொலைக்காட்சிப்பெட்டி முதலியன தெரிந்தன. போதாதா? வேறு எதற்கு வெளிச்சம்? இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் மக்கள் இம்மாதிரித்தானாம் கடந்த பத்து வருஷங்களாக வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். அந்த 'சிலோன் பொண்ணு', ராணி மேரி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாளே அவள், சொல்லியிருந்தாள். என்ன கெட்டுவிட்டதாம் அங்கே? சண்டை தொடர்ந்து நடக்கவில்லையா? பிள்ளைகள் படிக்கவில்லைய? பரீட்சை எடுக்கவில்லையா?

இருட்டில் பிரம்புக் கூடை நாற்காலியில் உட்கார்ந்திருந்தபடியே அன்றைய மாலை நிகழ்வுகளை அசைபோட ஆரம்பித்தாள். மறுகணம் பொன்னம்மாளின் குரல் அசரீரிக் கணக்கில் கேட்டது: கெட்ட தாயை நீ எங்கேனும் பார்த்திருக்கிறாயா?

கெட்ட தாய் இல்லையா?

எனது தாய் நாலு வருஷங்களுக்கு முன்னம் ஒருநாள் என்னோடு எப்படி நடந்துகொண்டாள்? விரோதியைக்கூட அந்தளவு நிஷ்டூரமாய் யாரேனும் நடத்தியிருப்பார்களா? அப்படிக்கு நடத்தினாளே. அது கெட்டதனம் இல்லையா?

ஆனந்திக்குக் கண் கலங்கிற்று.

சத்தம் அமுக்கிய கேவலொன்று கிளம்பிற்று.

நினைவுத் துகள்களை அடித்து விலக்க முக்கிய நிகழ்வேடு விரிந்தது.

இனி திரும்புவதில்லையென்று வீட்டை விட்டு வெளிக்கிட்டு மாம்பலம் வந்த பின்னால் கோயம்புத்தூரிலிருந்த தோழி சிவமணிக்கு இரண்டு கடிதங்கள் எழுதினாள். திருப்பூரிலிருந்த இன்னுமொரு சிநேகிதிக்கு விபரமாய் கடிதமெழுதியதோடு இரண்டு தடவைகள் போனிலும் பேசினாள். மாதக் கணக்காகியும் தக்க பலனேதும் கிடைக்கவில்லை. அவள் பயந்து போனாள். தனியாளாகிப் போன அவலம், எதிர்காலம் பற்றி அவநம்பிக்கையிருள் சூழலானாள். மொத்தத்தில் சகலதும் இழந்து தன் கனவுகளது சரிவின் பிரத்யட்சம் கண்டு கலங்கி நின்று தவித்தாள்.

பொருளாதார நெருக்கடி வலுப்பதன் முன்னரே வறுமையின் கடுத்த இருள் தூரத்தில் அவள் கண்ணுக்குத் தெரியலாயிற்று. அவள் பதைத்தாள். அதற்கு இருள் மட்டுமே காரணமில்லை. அவளெடுத்த நிலைப்பாட்டில் தோழிகளுக்கே உடன்பாடில்லையோ என்ற கேள்வியின் அசுர உலுப்புதலும் காரணமாயிருந்தது.

அன்னா... அன்னா... ஏதாவது ஏற்பாடு செய்துகொடேன் என்று அன்னலட்சுமியிடம் தான் அடிக்கடி ஓடினாள். அவளாலும் என்ன செய்துவிட முடியும்? தோழியின் கஷ்ட நிலைமையைக் கணவரிடம் மறுபடியும் மறுபடியுமாய்ச் சொல்லிவிட்டு காத்திருக்கத்தான் முடிந்தது.

ஆனந்திக்கு வீட்டிலே பொழுது நகர்வதே சிரமமாக இருந்தது. புத்தகத்தை எடுத்தால் தாயாரின் தீக்ஷண்யமான பார்வை எங்கிருந்தாவது பாய்ந்து வந்து கவனம் குலைக்கும். அவளுடைய தோற்றம், நிழல், சிறு அசைவு கூட அவளைப் பெரு வசதியீனம் செய்தது. குற்றமிழைத்த வருடனேயே தொடர்ந்தும் வாழும்படிக்கு குற்றமிழைக்கப்பட்டவர் மேல் விதிக்கப்பட்ட ஒருவகைத் தண்டனை போலாயிற்று அது. தன் வறுமை வளமின்மைகளுக்கெல்லாம் அவள்தான் மூலகாரணம் என்பதுபோல் ஒரு எண்ணம் வளர்ந்து அவளுள் விருட்சமாயிற்று. பார்த்துப் பார்த்து வெறுப்பை வளர்ப்பதே மீதமாயிற்று. ஆனந்திக்கு காலம் எட்டு மூலைச் சில்லுகளில் நகர்வதாகத் தோன்றிக் கொண்டிருந்தது. வீட்டில் அம்மாவே அவளுக்கு வெறுப்பேற்படுத்துதவதற்குப் போல நடந்து கொண்டாள். குளிக்க, துணி தோய்க்க சோப் முடிந்து போனால் வாங்கமாட்டாள்; நேரத்துக்கு சமைக்க மாட்டாள்; சமைத்தாலும் சாப்பிடாமல் யாருக்காகவோ காத்திருப்பது போல் பேசாமலிருப்பாள். ஆனந்தியை கணவனிடம் திரும்ப ஓடவைக்கிற உத்தியாக அவள் அதைக் கைக்கொண்டாளோ? இருக்கலாம். ஆனால் சிறையின் ஒருவகை வதைத்தனத்தைத்தான் ஆனந்தி அதில் கண்டது. சிறையென்பது வெளியேற முடியாத இடம் மட்டுமில்லை; நினைத்ததை நினைத்தபோது செய்ய முடியாமை, விரும்பியதை விரும்பிய நேரத்தில் அடைய முடியாமை சேர்ந்த இடமும் தான்.

முன்பும் அதே மாதிரியான அவலங்களை அவள் அடைந்திருக்கிறாள். அப்போது அந்தச் சிறை நெய்வேலியில் இருந்தது. அங்கிருந்து தப்பியோடி வர அப்போதாவது அம்மா வீடு இருந்தது. இனி...?

ஆனந்திக்குக் கலியாணமான போது இருபது வயதுகூட இல்லை. மாப்பிள்ளையை ஒரேயொருமுறை பார்க்கவும், வீட்டிலுள்ளவர்களின் பேச்சுக்களில் அவர் நெய்வேலி நிலக்கரி கூட்டுத்தாபனத்தில் மின்துறை போர்மனாக இருந்தாரென்று தெரியவும் மட்டும் செய்திருந்தாள். திருமணம் பற்றி அவளுக்கு ஒரு கனவு இருந்தது. இரவுகளின் மர்ம வியர்ப்பு இருந்தது. ஒரு காதலுக்காக வளர்த்துக் கொண்ட ஏக்கம் இருந்தது. அவரைப் பார்த்ததிலும், கேள்விப்பட்டதிலும் அவளது எந்த உணர்வும்

திருப்திப்படவில்லை. இருந்தும் அந்தக் கல்யாணத்துக்கு தன்னை அவள் ஒப்புக் கொடுத்தாள். அந்தக் கல்யாணம் அந்த வீட்டின் நெருக்குதல்களில் இருந்தும் பிடிப்பின்மைகளிலிருந்தும் விடுபட்டுக் கொண்ட ஒரு தப்புகைதான் அவளளவில். அவ்வாறு சென்ற இடமும் பிடிப்பின்மை நிறைந்ததாய்ப் போனது. அதையெல்லாம் அடித்து உடைத்துக் கொண்டு மீள ஓடிவந்த இடமும் சிறையாயே போனது. அது ஏற்கனவே சிறையின் பரிமாணங்களைப் பெற்றிருந்த இடம்தான். இனி தப்பி எங்கே ஓட? எப்படி ஓட? எதிரே இருள் குமைந்து குமைந்து சுழித்தெழுந்து கொண்டிருக்கிறதே, எங்கே தப்ப? அவள் குலைந்து போனது அதை எண்ணியதாலும்தான்.

அம்மா கேட்கிறாள், எங்கே போயிருந்தாய்? யாரைச் சந்தித்தாய்? நெய்வேலி திரும்புகிற எண்ணமே இல்லையா உனக்கு? வீட்டிலே என்ன தகராறு? நான் கூட்டி வந்து விட்டுவிடவா? பிள்ளைகளின் ஏக்கம்கூட உனக்கு வருவதில்லையா? என்று.

ஆனந்தி எதுவும் சொல்வதில்லை. எண்ணிக் கொள்வாள்: உன்கொரு உலகம் இருக்கிறது. எனக்கிருக்காதா? உன் உலகத்தில் நீ ஒழிந்து கொள்கிறாய். என்னுலகம் எனக்குத் தஞ்சம் தரும். வாழ்வின் பெரும் பொழுதும் உனக்குக் கதாபாத்திரங்களுடனேயே கழிந்தது. என் பொழுதுகளை நான் நவீன கருத்துத் தளத்தில் செலவிட்டுக் கொள்வேன். அங்கே தனியுறவுகளை அழித்துவிட்டு உலகத்தையே உறவாக்கி வாழ்வேன்.

எப்படித்தான் போட்டியாக எண்ணினாலும் அவள் மீது அசூயை அடைந்தாலும் மகாலட்சுமியின் தன்மைகள் எல்லாவற்றையும் மீறி ஆச்சரியமே அவளைச் செய்திருக்கின்றன. தானே தனக்கான ஆசாரங்களைப் படைத்துக் கொண்டு வாழ்கிறாள் இவள். அட்டவணை இல்லாமல் எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கு. இவள் எதிலும் குழம்புவதில்லை. குழப்பம் தோன்றினால் அதற்குக் காரணமான மூலத்தையே அவள் திரஸ்காரம் செய்துவிடுகிறாள். என்ன இது? இதுதான் வாழ்க்கையோ? வெறும் நாட்கடத்தலோ? ஒருவேளை தவமோ? தவமெனில் எதற்கானது?

இந்த இடத்தில் அவள் தன்னிலிருந்து பெருமளவு விலகியதாகக் கொள்ள முடியுமா? யோசித்தாள் ஆனந்தி. அன்று பொன்னம்மாள் ஆசிரியை புறப்படுவதற்கு முன்னம் சொல்லிய வாசகமும் அப்போது அவளுக்கு ஞாபகமாயிற்று: நீ வலிபட்ட இடத்தை முதலில் கண்டடை.

ஆழமாய் அவள் பெரும்பாலும் யோசிப்பதில்லை. யோசித்த காலத்திலும் அம்மா அவளுக்குப் புதிராகவே இருந்துவிட்டாள். அந்தப் புதிர்தான் ஒருவேளை தாய் - மகள் உறவில் அந்த விரிசலை விழுத்தியதா? அந்த மய்யத்தைத் தெரிந்துகொண்டால் தான் வலிபட்ட இடத்தை கண்டடைதல் இலகுவெனத் தெரிகிறது அவளுக்கு.

சில ஆழ்மனத்தே கிடந்த சம்பவங்கள்... காட்சிகள்... சொற்கள்... ஞாபக நிலைக்கு உயருகின்றன.

ஒருநாள்... கிணற்றடிக் குளியலறையில் தோய்ந்து முடிந்த மகாலட்சுமி வெளியே வந்து, துவைத்து வைத்த சேலை சட்டை பாவாடைகளை கொடியிலே காய விரித்துக் கொண்டிருக்கிறாள். பாவாடையை மாருக்கு மேலே கட்டிக் கொண்டு ஈரம் துவட்டிய துண்டினால் தோளை மூடியிருக்கிறாள். கூந்தல் விரிந்து நீர் சொட்டச் சொட்ட தொங்குகிறது. ஆனந்தி கிணற்றுக் கட்டோடு சாய்ந்து நின்று பல் தேய்த்தபடி அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள். பார்வையில் சரீரத்தைப் பார்க்கிற உணர்வு இல்லை. சிலையை... கலையை... பார்க்கிறதாய்...! அந்த உணர்வு வித்தியாசமானது.

மகாலட்சுமிக்கு ஐம்பதுக்கு சற்று மேலே வயதிருக்கும். நிரம்ப சின்ன வயதிலே திருமணம் செய்துகொண்டாள். வயது அதற்கு மேலே இருக்காதுதான். தலையிலே அங்கிங்கொன்றாய்ச் சில நரைகள். ஆனந்திக்கே அதிகம் உண்டு. தாமரைச் செம்மையாயும் செழுமையாயும் பாதங்கள். அதில் பச்சை நரம்புகளின் புரள்வு. ஆரோக்கியத்தின் அடையாளம் சொல்லி நகச்சீர். அவளுக்கு இன்னும் உடம்பு தொய்யவில்லை. தொய்வின்மையின் நிறுதிட்டமான சாட்சியாய் மார்க் கோளங்களின் விம்மல். முகத்தில் சாசுவதம் பெற்றுவிட்ட சில துயர மென் விரிப்புகளையல்லாமல், வயதின் வரைவுகளைக் காணமுடியாதிருந்தது. அவளுக்கு பல் வரிசை குலைந்துவிட்டது. வலது பக்க கடைவாயில் இரண்டு பற்கள் முரசு தேய்ந்து வெளியிறங்கியிருந்தன. ஞானப் பற்களில் இரண்டை வலி காரணமாய் அவளே பிடுங்குவித்துக் கொண்டாள். ஆனாலும் மீதிப் பற்களில் ஒரு மிளர்வு இன்னும் இருந்துகொண்டிருந்தது. சிறிதாய், செப்பமாய்ச் செய்துவைத்த இதழ்கள் அவளுக்கு. சிரித்தால் மந்தகாசம் வெடிக்க உத்தரவாதம் கொடுக்கலாம். ஆனால் அவள்தான் சிரிப்பதில்லை.

சுவாமிக்கு வைத்த நைவேத்தியம்போல அந்த உடம்பை மகாலட்சுமி காத்திருக்கிறாளா? ஆம்! *ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கென்று உன்னித்து எழுந்த என் தடநகில்கள்...* என்ற பறைசாற்று அவளிடத்தில் இருக்கிறது. இன்றளவுமான அவளது சோகம், இன்னுமின்னும் வெளிவிவகாரங்களில் பட்டுக் கொள்ளாமல் அவள் முடங்கிப்போவது யாவும் அவ்வாறுதான் அவளை நம்பவைக்கின்றன.

காற்றுத் துகில் நெகிழ்த்தியது.

திரும்பிய ஆனந்தியின் கண்களில் செம்மையடித்தது; முகத்தில் வெம்மையடித்தது.

சாம்பலுக்குள் தன் சுயம் காத்துக் கிடந்த தணல் துண்டு போன்ற மகாலட்சுமியின் லட்சண தரிசனத்தின் பின் ஆனந்தியிடத்தில் ஒரு வெறுப்பு. அவள் கோபித்திருக்கிறாள்; எரிச்சலடைந்திருக்கிறாள்; வெறுப்படைந்த தில்லை. அன்று அவளிடத்தில் வெறுப்பு படர்ந்தது. வெறுப்பா? ஏன்? அவளுள் உருவான சுரோணிதம். விந்து கலக்க அவளுள் உருவான கரு.

தொப்புள் கொடியூடாய் அவளில் உறிஞ்சிய சாறு. பன்னீர்க் குடமுடைய அவள் தசை கிழித்து எடுத்த பிறவி. வெளிவந்து உண்டு உயிர் வளர்த்த முலைகள். வெறுப்பா அவளுக்கு?

மேலே வேப்பமரத்தின் பசுங்காய்கள் சிலவற்றை அணில் விழுத்திச் செல்கிறது. சுதாரித்து அம்மா சென்ற பக்கம் திரும்பி பார்க்கிறாள். அம்மா அங்கே இல்லை. அவள் நடந்து சென்ற தடங்களின் ஈரமும் இல்லை. சிவப்பு நிற அந்தப் பழைய தளத்தில் ஈரத்துடன் நடந்து சென்ற காலடிகள் வெகுநேரம் காயாமல் கிடக்கும். அவள் பாதம் நீளமானது. அதில் நீளநீளமான விரல்கள். ஏனைய விரல்களைவிட பெருவிரல் சற்று நீளம். தலை பெருத்து பாம்புப் படம் போல் காட்சி தரும். ரத்தினம் உமிழத் தயாராவிருக்கிற நாகப் பாம்படீ இது என்று அவளே தன் விரலின் அமைப்பைச் சிலாகித்துச் சிரித்தபடி ஒருமுறை சொன்னது ஆனந்திக்கு அப்போது நினைவு வருகிறது. தொட்டால் கடிப்பேன் என்பதுபோல் அச்சுறுத்துகிற பாம்புதான் அவள். மெல்லிய அதிர்வை எறிகிறது அந்த நினைப்பு. சுவட்டீரம் போல் அம்மாவின் நினைவு மறைய வில்லை. ஒரு வெறுப்பு... அச்சம்... எரிச்சல்... ஆகிய உணர்வுகளுடனேயே குளியலறை வாளியை எடுத்து வந்து தண்ணீர் நிறைக்கத் துவங்குகிறாள் ஆனந்தி.

அவள் குளித்து முடிந்த வேளையில் அவளை உடனே அன்னலட்சுமி வரச்சொன்னதாக பையன் ஒருவன் வந்து கூறுகிறான். ஆனந்தி அவசரமாகப் புறப்பட்டுச் செல்கிறாள்.

வீட்டு வராந்தாவில் அன்னலட்சுமியின் கணவர் ராகவனும் வேறு ஒருத்தரும் உட்கார்ந்திருக்கிறார்கள். கதவோடு... பாதி வெளியிலும் பாதி உள்ளிலுமாய் அன்னலட்சுமி. உள்ளே... மாமி தெரிகிறாள்; சிரிக்கிறாள் அவள் வருவது கண்டு. மாமாவைக் காணவில்லை. பின்புறம் கிணற்றடியில் வாளிச் சத்தம் கேட்கிறது. ஆனந்தி அன்னலட்சுமியோடு போய் நின்று கொள்கிறாள்.

கூட இருந்தவர் ராகவனின் நண்பர்போலத் தோன்றியது உரையாடிய விதத்தில். வயதில் நடுத்தரம். ஐம்பது இருக்கும். தலையில் கேசம் அரிதுபட்டிருக்கிறது. நடுவே வழுக்கை. ஆனாலும் உடம்பில் ஒரு ஆரோக்கியம் இருந்தது.

ராகவன் ஆனந்தியை அவருக்கு அறிமுகப்படுத்துகிறான். அதுபோல் அவரை அவளுக்கு: பேர் ராதாகிருஷ்ணன். என் நண்பர்.

ஏற்கனவே, அவளது வேலை குறித்து அவரோடு அவன் பேசியிருந்ததை தொடர்ந்த பேச்சில் தெரிகிறாள் ஆனந்தி. ராகவன் அவளது தற்போதைய குடும்ப நிலை குறித்தும் அவரிடம் சொல்லியிருப்பானோ? சொல்லியிருந்தால்தான் என்ன தப்பு?

அவர் அவளது படிப்புப்பற்றிக் கேட்கிறார்.

அன்னலட்சுமியே அதற்குப் பதிலளிக்கிறாள்: ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கிலப் பள்ளி. பத்தாவது வகுப்புவரை தியாகராய நகர் மேல்நிலைப் பள்ளி. தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல திறமையுண்டு.

அவருக்கு அது போதுமாயிருக்க மறுநாளே அலுவலகம் வரச் சொல்லி அறிமுக அட்டை கொடுக்கிறார்.

மறுநாட் காலை ராஜ் லெதர் புரடக்ஸ் அலுவலகத்தை ஆனந்தி அடைகிறபோது உட்கார வைத்து வேலை விபரம், இருக்க வேண்டிய பொறுப்புணர்வு, சம்பளம் பற்றியெல்லாம் விஸ்தாரமாகப் பேசுகிறார் ராதாகிருஷ்ணன். தேநீர் வரவழைத்துக் கொடுக்கிறார். நகைச்சுவையாகப் பேசுகிறார். அவரது பார்வை பேச்சுக்களிலிருந்து நாகரிகமாக வெளியிடப்பட்ட சபலத்தை அவள் தெரிகிறாள். அது அவளுக்குப் பிடிக்கவில்லை; ஆனால் சம்பளம் பிடித்திருக்கிறது. அவர் நல்லவராக இருப்பாரென்பதில் சந்தேகம் இருக்கவில்லை. மேலும் அவள் அன்னலட்சுமியின் கணவர் மூலமாக வந்திருப்பவள். இவைகளை மீறி வன்முறையில் எதுவும் நடந்துவிடாது என்கிற திண்ணத்தில் அந்த வேலையை ஒப்புக்கொண்டுவிடுகிறாள்.

அந்தத் தருணத்தில் அவளிடமிருந்த எச்சரிக்கைத்தனம் என்ன? மான அச்சமா, பலாத்கார அச்சமா? இன்று...?

இருளுக்குள் உறைந்துபோயிருந்த ஆனந்தி யோசித்தாள்.

அவளுக்குத் தெரியவில்லை.

ஆனால் அதையேதான் அம்மா காலம்பூராவும் கொண்டிருந்தாள். அவள் பூடகமானவளாக, ஒதுங்கும் இயல்புள்ளவளாகப் போனாள். பின்னால் ஆனந்தி தன் எச்சரிக்கைத்தனத்தை அழித்தாள். அது வேறு விஷயம். ஆனால் அம்மா... வெறுப்பாகிப் போனதுபோல் இருந்தது. அம்மாவின் மீதான வெறுப்புக்கு அதுவேதான் காரணமா என்றும் அவளுக்கு ஐயமிருந்தது.

இருட்டில் யாரோ வருவதுபோல் தெரிய ஆனந்தியின் சிந்தை கலைந்தது.

'ஏன் ஆனந்தி, நேரத்தோடு வந்துவிட்டாயா? மெழுகுதிரி கூட கொளுத்தவில்லையே.'

ஆயாதான்.

பதிலை எதிர்பாராமலே உள்ளே சென்று மெழுகுவர்த்தி ஏற்றிவந்தாள்.

'சாப்பாடு போடவா?'

'வேண்டாம். முதலில் காபி போடு.'

ஆயா சமையலறை சென்றாள்.

ஆசிரியையின் நினைவு வந்தது. அவள் தெரிந்திருந்த ரகசியங்கள் பற்றிய எண்ணம் குடைந்து கொண்டிருந்தது இன்னும்.

'ஆயா!'

'என்ன?'

'பொன்னம்மாள் டீச்சரை இன்று வெகுகாலத்துக்குப் பிறகு கண்டு பேசினேன்.'

'யாரது?'

'என் சின்ன வயது ஆசிரியை.'

'என்னவாம்!'

'ஒன்றுமில்லை. சும்மா தான்... ஞாபகம் வந்தது சொன்னேன்.'

'ஓ...!'

அந்த இருட்டிலும் அவள் முகம் கண்டுகொண்டாள் ஆனந்தி. நிச்சயமாக ஆயாவின் நாவு பொன்னம்மாள் ஆசிரியையிடம் சரி, அக்கம்பக்கத்தில் சரி அவள் பற்றிப் பேசியிராது. சிலருக்கு பொறுப்புடைமை இயல்பிலேயே இருக்கிறது.

## 9

விடிந்து வெகுநேரம் ஆகியிருந்தது. ஆனந்தி இன்னும் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவில்லை. அவள் சிலவேளைகளில் வேடிக்கையாகச் சொல்வதுபோல் அவளது இதயத்துக்குள்ளே ஞாயிற்றுக் கிழமைகளில் அடிக்காமலிருக்கிற ஒரு அலார மணிக்கூடு இருக்கிறதுதான்.

திறந்திருந்த கதவிடையூடாக மாடி முற்றத்துக் கொடியிலே ஆயா தோய்த்துப் போட்ட சேலைகள் நீளமாய்த் தொங்கியபடி காய்வுக்கேற்ற அளவில் காற்றிலே அசைந்து கொண்டிருந்தன. அப்படியானால் இதுவரையில் ஆயா சமையல் தொடங்கியிருப்பாள்.

'ஆயா!' கூப்பிட வந்தாள்.

'காபி வேணும்.'

'கொஞ்சம் பொறு. வைத்துக் கொடுக்கிறேன்.'

'வேண்டாம். டீக்கடையில் வாங்கிவா.'

கோப்பியை ஹோலுக்குள் அமர்ந்து குடித்துக் கொண்டிருக்கையில், 'ஆனந்தியக்கா... போன்' என்று பாதிப் படிக்கட்டில் நின்று மருந்துக் கடைப் பையன் கத்தியது கேட்டது. தம்ளரை வைத்துவிட்டு அவசரமாக இறங்கிச்

சென்றாள். அவசரத் தொடர்புக்காக என்று மிகச் சிலரிடம் மட்டும் அந்தத் தொலைபேசி எண்ணை ஆனந்தி கொடுத்திருந்தாள். பத்மாவதியா... ஜெயஸ்ரீயா... அன்னலட்சுமியா... குஞ்சம்மாவா... ஒருவேளை கருத்தரங்கு ஏற்பாட்டு விஷயமாய் கூடிப் பேச ரமணியோ... நெல்பாவோ... அவள் மனம் முன்னதாகவே அறிய ஆருடத்திலிறங்கியது.

'ஹலோ...!'

'ஆனந்தியா? அது நான்... ராமகிருஷ்ணன்.'

'ராம்ஜீ...! எங்கேயிருந்து பேசுகிறாய்?'

'மெட்ராஸிலிருந்துதான்.'

'நீ திருந்தவே மாட்டாய்.'

'ஆனந்தி...?'

'மெட்ராஸ் என்கிற பெயர் மாறி ரொம்ப நாளாச்சப்பா.'

ஓ... அதைச் சொல்கிறாயா? மாறிவிடுவேன்... சீக்கிரமாகவே. சரி, மாலையில் சந்திக்கிறோமா?'

'இல்லை ராம்ஜி. நான் வெளியே போகவேண்டியிருக்கிறது.'

அவன் குரல் வரத் தாமதமானது. அதன் காரணத்தை அவளால் புரிய முடியும். அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள். நட்பு தவிர அவர்களுக்குள் வேறு உறவு இல்லை. ஆண் - பெண் இடையிலான நட்பு காலாந்தரத்தில் உடல்ரீதியிலான தொடர்புகளுக்கே இட்டுச் செல்லுமென்பதை பல பேரிடத்தில் அவள் பார்த்திருக்கிறாள். பலர் சொல்லிக் கேட்டுமிருக்கிறாள். உறுதியாக இருந்து ராம்ஜியுடனான நட்பை அவள் தொடர்ந்தது, காமத் தினவுகள் இன்றிக் கூட ஒரு ஆண்-பெண் உறவு ஆரோக்கியமானதாக இருக்க முடியுமென்பதை தன்னை எச்சரித்தவர்களுக்காவது நிரூபிப்பதற்காகவே. ராம்ஜியிடம் சரீரார்த்தமான நெருங்குதல் இருக்கவில்லையென்பது நிஜம்தான். ஆனாலும் அவனது நட்பில் ஒரு வன்முறை இருந்ததாகத் தெரிந்தது அவளுக்கு. அவளது நட்பு தன்னோடு மட்டுமே இருக்க வேண்டும் என்பது மாதிரியான ஒரு அதிகாரத்தை அவன் பிரயோகித்துக் கொண்டிருந்தான். அது தெரிந்த அந்த ஆரம்ப நாட்களில் அவளுக்கே எரிச்சலாக வந்தது. தோளிலே கைபோட, கை கோர்த்து நடக்க, பிருஷ்டத்தில் தட்டவென்று அவன் செய்ததுகள்கூட அவளை அந்தளவு எரிச்சலடைய வைக்கவில்லை. அவனது கல்லூரித் தனத்தின் இன்னும் விடுபடாத அம்சங்களென்று அவற்றை அவள் கொண்டிருந்தாள். அவனும் காயப்படுத்தப்படக் கூடியவன் அல்ல. அந்தளவு தீக்ஷண்யமான அறிவு, அந்தளவு ஈடுபாடான வாசிப்பு, லாப நஷ்டம் பார்க்காது விமர்சிக்கும் நேர்மை இவற்றுக்கு ஆதரவு காட்டுவதும் அக்கறை செலுத்துவதும் ஒரு சமுதாயத் தேவையென்றே அவள் கருதினாள்.

ராம்ஜியின் குணம் போலத்தான் விரும்புவதைத் தனக்கே உடைமையாக்கும் மனோபாவம் ராதாகிருஷ்ணனிடமும் இருந்தது.

அதற்காகவேதான் அவரிலிருந்து அவள் விலகினாள். அவரது துக்கம் பெருகிற்று வரவர. அதற்குக் காரணம் ராம்ஜியுடனான அவளது உறவை அவர் அறிந்ததுதான் என்று அவளுக்குத் தெரியும். ராம்ஜியும் ஒரு'வகை'யான பேர்வழி. அவருடைய தொடர்பில் அவனும் அசூயையடைய நிறையச் சாத்தியமுண்டு. அவளுக்குச் சிரிப்பு வந்தது அதனால்தான்.

'என்ன ராம்ஜி, ஏன் பேசாமலிருக்கிறாய்?' என்றாள்.

'உன்னோடு பேசுறதுக்காகத்தான் ஹைதராபாத்திலிருந்து அவ்வளவு அவசரமாக மெட்... சென்னைக்கு ஓடி வந்தேன். திரும்ப இரண்டு மூன்று நாட்களில் நான் டெல்லி போகவேண்டியிருக்கிற்து ஆனந்தி.'

'நீ திருந்திவிடுவாய்தான்... சீக்கிரமாகவே' என்று சிரித்த ஆனந்தி, 'விடுதலைக் குயில்கள் இயக்க கருத்தரங்கு சம்பந்தமாய் ரமணி வீட்டிலே இன்று கூடிப் பேசுவதாக போன வாரமே போட்ட திட்டம் இது. ரமணி கண்டிப்பாக வரச் சொல்லியிருக்கிறாள். நாம் நாளைக்கு அல்லது நாளையின்றைக்குக்கூட பேசலாம். ஆபீஸுக்கு போன் பண்ணாதே. நானே உன்னைக் கூப்பிடுகிறேன்' என்றாள்.

ஆனந்தி வீட்டுக்கு வந்தாள்.

குளித்து, சாப்பிட்டாள்.

வாசிக்க அலுப்பாயிருந்தது. தொலைக்காட்சியில் சினிமாப் பாடல்கள் போய்க் கொண்டிருந்தன. ஆயா ரசித்துப் பார்த்தபடி படுத்திருந்தாள் சுவரோரத்தில். அவளுக்கு மனது ஒட்டவில்லை. ராம்ஜியின் நினைவு வந்தது. பின்னால் ராதாகிருஷ்ணனின் நினைவு.

ராம்ஜி ஒரு இலக்கிய கருத்தரங்கிலேதான் அறிமுகமானான். ஒரு வருஷத்துக்குச் சற்று மேலாக இருக்கும். ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே அறிமுகம் என்கிற தளத்திலிருந்து பழக்கம், நட்பு என்கிற விரிநிலைகளை அது அடைந்துவிட்டது. அவனுக்கு அவளைவிட வயது குறைவு. ஐந்து வருஷங்களாவது குறைவாயிருப்பான். நீ என்று ஏகவசனத்தில் அழைத்தான். தத்தாரியாயிருந்து படித்த ஒரு வாலிபனின் அத்தனை மனோபாவங்களும் செயற்பாடுகளும் அவனில் இருந்தன. அவனிடத்தில் அவளுக்கே ஒரு ஈடுபாடு சரீரார்த்தம் அற்றதாய் நாளடைவில் வந்துவிட்டது.

ராதாகிருஷ்ணனின் தொடர்பு அப்படியானதல்ல. நிலைமையும் எதிர்மாறானது.

ராதாகிருஷ்ணன் கல்யாணமானவர். வளர்ந்த பிள்ளைகள் அவளுக்குப் போலவே இருந்தார்கள். வயசும் சிறிது அதிகம். சமூகத்தில் பெரிய கௌரவம் இருந்தது. தன் சமூக குடும்ப நிலைமைகள் காரணமாய் தம் அந்தரங்கம் வெளிவந்துவிடக் கூடாத அவதானத்தை அவர் கைவிட்டு விடமாட்டார். அம்மாதிரியான ஒருவரோடு குளிருக்கு நெருப்பைப் போல ஒண்டிக் கொள்வதில் பெரிதான தயக்கம் அவளுக்கும் இருக்கவில்லை.

தசைகள் அவளது உயிரைத் தின்று கொண்டிருந்தன என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒரு உணர்ச்சித் திமிறல் தொடர்ந்திருந்து அவளைத் தளும்பச் செய்துவிட்டது. மட்டுமில்லை. எல்லாவற்றையும் உடைத்து நொருக்கிக் கொண்டு ஒரு விரிவானம் தேடிக்கொண்டிருந்த அவளுக்கு அந்த இறுதித் தடையின் மீறலும் அவசியமாகிவிட்டது. அவள் அவரின் சபலத்துக்கு ஆட்படுதல் அங்கிருந்துதான் ஆரம்பமாகிற்று.

ஆனந்தி வேலைக்குச் சேர்ந்து ஒரு வருஷத்துக்குள்ளாகவே ராதாகிருஷ்ணனின் ராஜ் லெதர் புரடக்ஸ் பிரமாண்டமான வளர்ச்சியைப் பெற்றுவிட்டது. அதிர்ஷ்டத்தை அருகில் வைத்திருப்பதாக நினைத்தவர் மடியில் கட்டிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டார். அம்பாஸிட்டர் ஒன்று வாங்கினார். வேலை முடிய தாமதமாகும் மாலைகளில் வீடுவரை ஏற்றிச் சென்றுவிட முயன்றார். பின் தினசரியும் செய்தார். அப்போது அவள் விழித்தாள்.

அவள் எல்லை போட்டதும் அவர் பொருமினார். ஆனாலும் வேறு வழியின்றி அவர்தான் இணங்கிப் போகும்படி நேர்ந்தது. அவளது உணர்வுகளை அவர் கவுரவித்தார் என்பது அதன் அர்த்தமில்லை. அவளது வைரத்தை அவரால் பிளக்க முடியாது போனதே அதன் காரணம்.

மெல்ல மெல்ல ஆனந்தியின் நடத்தையில் மகாலட்சுமிக்கு ஐயம் வந்துவிடுகிறது. கேட்க முடியாமல் தவித்தாள். தடுக்க முடியாமல் கலங்கினாள். உள்ளுள் விளைந்திருந்த வெறுப்பில் அவளை, அவளது தவிப்பை, கலக்கத்தை உதாசீனம் பண்ணுகிற மாதிரி நடந்து கொண்டாள் ஆனந்தி. ஒருநாள் ஆனந்தி நேரங்கழித்து வீடு திரும்பியபோது கையில் கிடைத்த எதையோ கீழே வீசியெறிந்து அட்டகாசம் செய்துவிடுகிறாள் மகாலட்சுமி.

ஆனந்தி வாயே திறக்கவில்லை.

அவளுக்கு அந்த நாள், அந்த நிகழ்வு மனத்தில் இன்னும் தெளிவு. அவள் அன்று கர்விக்கொண்ட வார்த்தைகளும் ஏறக்குறைய அதே மாதிரியில் அப்போது ஞாபகமாயின: அம்மா... நீ பதினாறு முழச் சேலைக் கலாசாரக்காரி. நான் பாதியாய்க் குறைந்த கலாச்சாரமுடையவள். நீ கர்நாடகம். நான் புதிய தலைமுறையின் வாரிசு. நாளைய தலைமுறையோடும் என்னால் ஒத்துப் போக முடியும். அவர்களை ஊக்குவிக்கவும் செய்து கொண்டிருக்கிறேன் நான். கழுத்துவரை தன்னை மூடிக் காத்து புருஷன் கண்களுக்கு மட்டும் விருந்தாவதுதான் உத்தமப் பெண் குணமோ? பெண்ணை மென்மையானவளாக, நளினமுள்ளவளாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிற எந்தச் சமூகத்தையும் நான் எதிர்க்கிறேன்; எந்தத் தலைமுறையையும் வெறுக்கிறேன். எனக்கு... அழகு ஒரு ஆணைப் போன்றதாக; அடக்கம் ஆணைப் போன்றதாக; வலிமையும் ஆணைப் போன்றதாகவே. பெண் ஒரு காலத்திலே மிக்க வல்லமை பொருந்தியவளாக,

தன் இனம் முழுவதுக்கும் வேட்டையாடி உண்டியளிப்பவளாகக்கூட, இருந்திருக்கிறாள் என்கிறார்கள். அப்படிப் பட்டவளுக்கு 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு' என்று போதம் சொன்னவள் எவளாயினும் நல்லது செய்யவில்லையென்று நாற்பதாயிரம் கோயிலிலும் சத்தியம் பண்ணுவேன். உண்டி... வலிமையல்லவா? உண்டி... ஆதிக்கத்தின் மூலவடிவம் அல்லவா? உந்தி பெருத்துப் பெருத்து... தாடகைபோல, பகாசுரி போல, காந்தாரி போல... எரித்து விடுபவளாய், எல்லாவற்றையும் வாரித் திரட்டி விழுங்கி ஏப்பம் விடுபவளாய் பெண் ஆகட்டுமேன். நீ அதை மறுக்கிற தலைமுறையைச் சேர்ந்தவள். நீ அதை மறுக்கிறாய். அதனால்... உன் எண்ணங்கள் வார்த்தைகளை மீறியும் நான் அப்படித்தான் வாழ்வேன். உன்னை என்னால் அடிக்க முடியாது; உதைக்க முடியாது; திட்டவும் முடியாது. ஆனால் வதைக்க முடியும். அப்படியொரு வன்மம் மனத்தில் ஊறிக்கொண்டிருக்கிறது. சின்ன வயதிலிருந்து அந்த வன்மம் என்னுள் இருக்கிறது. ஏன் இருக்கிறது என்ற விசாரணை எனக்கு அவசியமா? வன்மம் இருக்கிறதனால் உன்னைத் துடிக்க வைக்கிறேன். அது என்னளவில் நியாயம். உன்னில் உயிரிருக்க ஊனம் உறுஞ்சுவேன்... ஒரு ரத்தக் காட்டேரியாக. அதுவும் என்னளவில் நியாயமேயாகும்.

ரத்தக் காட்டேரி...!

அன்று உள்ளுக்குள்ளாய் ஆனந்தி வெடித்துச் சிரித்தாள்.

எதிரே... அம்மா தன் தீயில் எரிந்து கொண்டிருந்தாள்.

இன்று சிரிக்க முயன்றாள்.

முடியவில்லை.

அவள் நினைவு மீண்டபோது மணி மூன்றாகியிருந்தது.

# 10

ரமணியின் வீடு ஆதம்பாக்கத்தில் இருந்தது. புனித தோமையர் மலை ரயில் நிலையத்தில் இருந்து பதினைந்து இருபது நிமிஷ நடைத் தூரம். ரமணியின் சொந்த வீடு அது. கம்பி ஜன்னல்கள் பதித்த முன் வராந்தா, கூடத்தைவிட விசாலமானது. அதோடு சேர்ந்து சின்ன அறை. மேலே விஸ்தாரமான மொட்டை மாடி. அதுமாதிரியான சந்திப்புக்கள் ரமணி வீட்டிலே நடை பெறுவதற்கு அந்த இடவசதி ஒரு காரணம். ரமணியின் காது கேளாத பாட்டி தவிர அவர்கள் பேச்சுக்கு இடைஞ்சல் செய்ய வேறு யாருமில்லை வீட்டில்.

ரமணிக்கு குழந்தையொன்றிருந்தது. பெண் குழந்தை. நாலு வயதிருக்கலாம். குழந்தையின் தந்தை பற்றி எப்போதும் எவரும்.

பிரஸ்தாபித்ததில்லை. கல்யாணமாகிப் பெற்ற குழந்தையாக இருக்காதென்று ஒரு எண்ணம். காதலில் ஏமாறிப் பெற்ற குழந்தையா அல்லது குழந்தைக்காகவே யாரோடாவது கலந்து கருவாக்கிக் கொண்டதா என்ற விபரங்கள் எதுவும் ஆனந்திக்குத் தெரியாது. அந்தளவுக்கு நீண்ட பழக்கமில்லை. ராம்ஜி மூலமாக ஏற்பட்டதே அவர்களின் முதல் சந்திப்பு. கருத்துக்கள் தவிர வேறு விவகாரங்கள் பற்றி அவர்கள் அதிகமாகப் பேசுவதில்லை. இவள் பற்றி அவள் போலவே, அவள் பற்றி இவளும் சொந்த வாழ்க்கையில் பெரிதான அக்கறை கொள்ளவில்லை. அது இருவருக்குமே நலமாகத் தென்பட்டது.

ரமணி வீட்டை அவள் அடைந்தபோது பேச்சுவார்த்தை கலகலப்பாக நடந்துகொண்டிருந்தது. ரமணியோடு சேர்த்து பதினொரு பேர் இருந்தார்கள். அத்தனை பேருமே ஆனந்தியை விட வயதில் குறைந்தவர்கள். ஜெயஸ்ரீ, குஞ்சம்மா போன்றவர்கள் கல்யாணமாகாதவர்கள் கூட. அந்தக் கூட்டத்தில் பெரும்பாலானவர்களுக்கு அவள் புதியவளென்றும் சொல்லலாம். ஆனால் பார்வையிலோ பழக்கத்திலோ இந்த வித்தியாசங்கள் எதுவும் தலைகாட்டாது.

புன்னகைகளில் தலையசைப்புகளில் அவள் வரவேற்கப்பட்டு அமர இடமொதுக்கிக் கொடுக்கப்பட்ட பின்னர் கலந்தாலோசனை தொடங்கிற்று. வழக்கம் போல் ரமணியே அதை நடத்தினாள். வயது, வாழ்க்கையனுபவம் போன்றவைகளால் சம்பிரதாயபூர்வமாகக் கிடைக்கும் தலைமைத்துவம் அல்ல அது. தத்துவார்த்தமான அலசல், சித்தாந்தத் தெளிவு, காரியார்த்தமாய்த் திட்டங்களை வகுக்கும் திறன், இணங்கும் - இணங்கவைக்கும் சுபாவம், கண்டிப்பு, உறுதியில் தளராமை, அவசியமேற்படின் தியாகத்துக்குத் தயங்காமை போன்ற தகைமைகள் அவளுக்கிருந்தனதான்.

கோவையிலே அந்த ஆண்டு மார்ச் மாதத்தில் கருத்தரங்கை நடத்துவது நல்லதென்று அனைவரும் அபிப்பிராயப் படுவதாகச் சொன்னாள் ரமணி. ஆனந்திக்கு அது பாதிக்கப்படுகிற விஷயம். அது எது சம்பந்தப் பட்டதுமில்லை; பணம் சம்பந்தப்பட்டது. பணம் சம்பந்தப்பட்டால் அவள் பாதிக்கப்படுவாள். ஆனாலும் அவள் அபிப்பிராயம் அங்கே அவசியமில்லை. மௌனமாயிருந்தாள்.

அவள் வருகிறபோது பத்மினியை மாநாட்டுக் கருத்தரங்குக்கு அழைப்பது பற்றிய விஷயம் பிரஸ்தாபத்திலிருந்தது போலும். தொடர்ந்து கதைத்தார்கள்.

'பத்மினி...? யார்?'

ஆனந்தியின் கேள்விக்கு பக்கத்திலிருந்த ஜெயஸ்ரீ பதில் கூறிச் சிரித்தாள். 'சிதம்பரம் போலீஸ் ஸ்டேஷன்... பத்மினி.'

'ஓ...!'

பத்மினியைத் துரத்திக் கொண்டு பல்வேறு அரசியல் பின்புலம் சார்ந்த இயக்கங்களும் இருக்கிற இன்றைய நிலையில் தாமும் அதையே செய்ய வேண்டாமே என்றாள் ஜெயஸ்ரீ.

வேறு சிலரும் தம்தம் அபிப்பிராயங்களைக் கூறினர்.

ரமணி 'லூனா' மிஸ்ஸைப் பார்த்து, 'நீங்கள் என்னக்கா சொல்கிறீர்கள்?' என்று கேட்டாள்.

அவள் சொன்னாள் : 'பத்மினி இப்போது முக்கியமான ஒரு ஆளாய் ஆகியிருப்பதற்குக் காரணம், அவர் போலீஸ் நிலையத்தில் காவலர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார் என்பதினாலில்லை. அது அவ்வப்போது ஆங்காங்கே நடந்து கொண்டுதான் இருக்கிறது. வடவிந்தியாவில் ஒரு பெண்கள் அமைப்பு எடுத்த கணிப்பீட்டின்படி அப்படியான நிகழ்வுகளில் ஐந்தில் ஒரு பங்குகூட வெளியே தெரிவதில்லையெனத் தெரியவருகிறது. இது சமூக அமைவும் சட்ட நிலைமைகளும் எவ்வளவு தூரம் பெண்களுக்கு எதிராக, எட்டாத தூரத்தில் இருக்கின்றன என்பதைக் காட்டும். இப்படியான சூழ்நிலைமையில் எதுவித பாதிப்புக்கும் பயந்து பின்வாங்கிவிடாமல் தன் அழிவைப் பகிரங்கப்படுத்தி போலீஸுக் கெதிரான குற்றச்சாட்டில் உறுதியாக நின்றது பத்மினியின் மனவுறுதியைக் காட்டுகிறதுதான். அதை நாம் பாராட்டலாம்.'

'சில பெண் விடுதலை அமைப்புகள் வெளிநாடு போய் வந்த பெண்களை அழைத்து பாராட்டு விழா வைக்குமே... அது மாதிரி.'

அப்போதும் கூறிச் சிரித்தது ஜெயஸ்ரீ தான்.

காதில் விழும் எல்லைக்குள்ளிருந்த வேறு சிலரும் சிரித்தனர்.

லூனா மிஸ்ஸின் காதிலும் அது விழுந்திருக்க வேண்டும். சிரித்துவிட்டு தொடர்ந்தாள்: 'நாம் மாநாடுகளையும் கருத்த ரங்குகளையும் சென்னையில் மட்டுமின்றி வேறு வேறு இடங்களிலும் நடத்த தீர்மானித்ததே அதிகம் படிப்பறிவற்ற பெண்களை விழிப்புணர்வு கொள்ள வைக்கவேண்டுமென்ற நோக்கத்தினால்தான். இதனுடைய அர்த்தம் படித்த பெண்களெல்லாம் பெண்ணுரிமைபற்றிய விழிப்புணர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதில்லை. சிலபேர் படிக்காத பெண்களை விடவும் மோசமான நிலைமையில் கூட இருக்கிறார்கள்தான். நாம் வெவ்வேறிடங்களை நம் பிரச்சார தளமாக்குவது எவ்வகையில் பார்த்தாலும் நல்லதே. அதன்படி இந்த முறை நாம் கோவை செல்லப் போகிறோம். எங்களுக்கு பெண்கள் நிலைமை பற்றிய வேறு கரிசனங்கள் இருந்தாலும், பாலுறவு சம்பந்தமான பிரச்சினைகளையே எம் பிரதான அக்கறையாய்க் கொண்டிருக்கிறோம். பெண்மீது நிகழ்த்தப்பெறும் வன்புணர்ச்சியை எவ்வளவு தூரம் பகிரங்கமாகப் பேசலாம் என்பதற்கு நமக்கு மேலும் கிடைத்திருக்கிற ஒரு உதாரணம்தான் பத்மினி வழக்கு. ஒரு

வன்புணர்ச்சியில் பாதிக்கப்பட்ட பெண் மறைத்து வைப்பதற்கான எந்த விஷயமும் இல்லையென்பதை வெளிக்காட்டுவதே இப்போதைய நம் குறிக்கோளாக இருக்கிற வகையில் அதற்குப் பொருத்தமான ஆள் பத்மினியுமாகலாம். பொதுவாக ஆண்குறி, பெண் குறியென்று சொல்வதற்கே பெண்கள் கூச்சப்பட்டுப் பின்வாங்குவதை சாதாரணமாகவே நாம் பார்க்கிறோம். படிக்காத பெண்கள் சில வேளைகளில் வீட்டிலே ரோட்டிலே மிகவும் பச்சை பச்சையாகப் பேசுவார்கள். அவர்களும் விசாரணையென்று வந்தால் வாயடைத்து நின்றுவிடுவார்கள். சில சொற்கள் பெண்களுக்கு விலக்கப்பட்டன போன்ற ஒரு மாயத்திரை இங்கே விழுந்திருக்கிறது. இதை மீற முடியாததாலே பல சம்பவங்கள் வெளித் தெரியாது போயின. இந்தப் பழைமை வாய்ந்த மாயத்திரையை முதலில் நாம் தகர்க்க வேண்டும். பெண்குறி, ஆண்குறியென்று சொல்வதற்கு மட்டுமில்லை, முலை கொட்டை குறிவிரைப்பு உச்சஸ்தானம் விந்து வெளியேற்றம் போன்ற சொற்களைக்கூட உடற்கூறு பற்றிய கலைச்சொற்களைப் போல எதுவித பிரக்ஞையுமின்றி பயன்படுத்த நாம் தொடங்க வேண்டும். அம்பை போன்றவர்கள் தம் படைப்புக்களில் இதுமாதிரியான சொற்களை அவசியமான போதெல்லாம் பாவிக்கத் தயங்குவதில்லை. வன்புணர்ச்சியில் பாதிக்கப்பட்ட ஒரு பெண் அதை விசாரணையில் எப்படி வெளிப்படுத்துவது என்பது பற்றிய கருத்தாடல்போல் பத்மினி பங்குபெறும் நிகழ்ச்சியை அமைக்க முடிந்தால் பத்மினியை கருத்தரங்குக்கு அழைப்பதில் தவறில்லை. அவர் இதற்குச் சம்மதிப்பாரா என்பதை நாம் முதலில் உறுதிப்படுத்திக்கொண்டு மேல் நடவடிக்கைகளை எடுக்கலாம்.'

லூனா மிஸ்ஸின் கருத்து ஆனந்திக்கும் உடன்பாடாயிருந்தது. அதை அவள் வெளிப்படையாகத் தெரிவித்தாள்.

வேறு சில விஷயங்களும் ஆலோசிக்கப்பட்டன.

ஆறு மணியளவில் கூட்டம் முடிந்தது. அவர்கள் எல்லோரும் மிக்க குதூகலமான மனநிலையில் இருந்தனர். புறப்படத் தயாரான பின்பும் முற்றத்தில், வாசலில், மொட்டை மாடியிலென்று நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனந்தி மொட்டை மாடியில் நின்றிருந்தாள். ரமணியோடு இன்னும் ஜெயஸ்ரீ உள்ளே பேசிக்கொண்டிருந்தாள். அவளோடு சேர்ந்து போகிற எண்ணம்.

வாசலில் யாரோடோ பேசிக் கொண்டிருந்த குஞ்சம்மா புறப்படத் தயாராவது கண்டு ஆனந்தி அழைத்தாள்: 'குஞ்சு!'

மேலே ஆனந்தியைக் கணடு, 'என்னக்கா?' என்றாள்.

'புறப்பட்டாச்சா? நில்லேன், ஜெயஸ்ரீ வந்ததும் சேர்ந்தே போகலாம்.'

குஞ்சம்மா தயங்குவது போலிருந்தது. 'வா வா, உன்னோடு பேசியும் ரொம்ப நாளாச்சு. ஏன், ஏதாவது வேலை இருக்கிறதா?'

குஞ்சம்மா மேலே வந்தாள்.

பின்னால் ரமணியின் குழந்தையை தூக்கிக்கொண்டு ஆர்த்தி. எல்லோரும், பாட்டி உட்பட, முத்து... முத்து... என்றே அதை அழைத்தார்கள். ஆனால் ரமணிமட்டும்தான் வாய் நிறைய முத்துலெட்சுமி என்று அழைப்பாள். அந்தப் பெயர் ஆனந்திக்குப் பிடித்திருந்தது. பெண்களின் கல்வி மற்றும் முன்னேற்றம் குறித்த இயக்கங்களில் உழைத்த முன்னோடித் தலைவிகளில் ஒருவராக முத்துலெட்சுமியின் மீது அவளுக்கு நிறைந்த கௌரவமுண்டு.

முத்துவை நினைக்க குஞ்சம்மாவின் பெயர் ஞாபகமாயிற்று. என்ன பெயர் அது! எத்தனை தலைமுறை கண்டது! ஆனால் குஞ்சம்மா தன் பெயர் சொல்ல எங்கேயும் சங்கோஜப்படுவதில்லை. பாட்டியின் ஞாபகத்துக்காக வைத்தது, அதிலென்ன என்பாள்.

அற்புதா... ஆதர்ஷ்யா... எங்கே பொருந்துகிறது இந்த அளவைகளில். ஆனந்தி அவசரமாய் நினைப்பை மாற்றினாள்.

குஞ்சம்மா மேலே வரவும் ஆனந்தி கேட்டாள்: 'என்ன குஞ்சு, என்ன அவசரம் அப்படி?'

'அவசரம் ஒன்றுமில்லை...'

'பின்னே?'

'.......'

'சொல்லேன் குஞ்சு.'

குஞ்சு சொன்னாள்: 'இன்று மாலை வரையிலும் நானே உங்களோடு பேசுகிற எண்ணத்தோடுதான் இருந்தேன்.'

'சரி. பிறகு ஏன் மாற்றினாய்?'

'வீணான மனஸ்தாபங்கள் விளைய ஏன் இடம் கொடுக்க வேண்டுமென்றுதான்...'

'மனஸ்தாபங்களா...? எனக்கும் உனக்குமா? என்னடி குஞ்சு நீ சொல்கிறாய்?'

'நான் பேசினால் மனஸ்தாபம்தான் வரும்.'

ஆனந்தி அதிசயித்ததுபோல் அவள் கண்களை ஊடுருவினாள். 'சரி, பேசித்தான் பாரேன்; மனஸ்தாபம் வருகிறதா பார்ப்போம்.'

கூப்பிட்டபோது குஞ்சு மேலே வரத் தயங்கியதையும் அப்போது நினைத்தாள் ஆனந்தி. விஷயமில்லாது இருக்காது என்று தெரிந்தது.

சொல்லத் தொடங்குவதன் முன் குஞ்சம்மா மெல்லச் சிரித்தாள். மேலே விரிந்திருந்த வெளி, மழை இப்போதைக்கு வராதென்று நிச்சயமாய்ச்

சொல்லிக் கொண்டிருந்த வானத் தெளிவு, பறக்கும் பறவைகள், அவற்றை மூடி மறைக்க முனைந்த பனிப்புகார் என்று யாவற்றிலும் பார்வையை வீசினாள். லேசான குளிர் காற்றை நிதானமாய் உறிஞ்சி விட்டாள். தண்ணீர்த் தொட்டியோடு வசதியாகச் சாய்ந்தாள். ஆனந்தியை நோக்கி நிமிர்ந்தாள். சிரிப்பு இன்னும் முகத்தில் பூசியிருந்தது. வரக்கூடிய மனவிறுக்கமான சூழ்நிலையை இளக்குவதற்காய் முன்னேற்பாடாக அதை அவள் பூசியிருந்ததாய்த் தோன்றியது.

'போன புதன்கிழமை அம்மாவை நெசப்பாக்கத்தில் பார்த்தேன்.'

ஆனந்தியின் முகத்தில் வெளிப்பு குறைந்தது. 'எங்கே?' என்றாள்.

'அக்கா வீட்டில்.

'ம்!'

குஞ்சம்மா பேச்சின் தொடர்ச்சிக்குத் தடை விழுந்தது. மேலே சொல்லிக்கொண்டு செல்லக்கூடிய விதமாக ஆனந்தியின் அதற்கான பிரதிபலிப்பு இருக்கவில்லை. ம் என்பது ஒரு முற்றுப்புள்ளி. அது தகவல் முடிந்ததின் அடையாளம். சிரமமாயிருந்தாலும் குஞ்சம்மா தொடர்ந்தாள். தொடங்குவதைத்தான் தூண்ட வேண்டியிருந்தது. இனி தொடர்வது குஞ்சம்மாவுக்கு அவசியம். ஆனந்தியால் அங்கிருந்து இனி ஓடிவிட முடியாது. 'அன்றைக்கு நெசப்பாக்கம் அக்கா வீடு போனபோது அம்மாவைச் சந்திப்பேனென்று நான் எதிர்பார்த்திருக்கவேயில்லை. எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? அம்மாதான் எப்போதுமே அந்தப் பக்கம் வந்ததில்லையே!'

அம்மா ஏன் அங்கே சென்றாள், என்ன சொல்லியிருப்பாள் என்பதெல்லாம் அனுமானத்திலேயே தெரிந்துவிட்டது ஆனந்திக்கு. மௌனமாய் நின்றிருந்தாள்.

'அம்மாவோடு பேசத் துவங்கின பிறகுதான் அவர் என்னைச் சந்திப்பதற்காகவே வந்திருந்தாரென்பது எனக்குத் தெரிந்தது. ரொம்ப நேரமாகப் பேசிக்கொண்டிருந்தோம்.'

ஒரு காலத்தே குஞ்சம்மாவின் குடும்பத்துக்கும் ஆனந்தியின் குடும்பத்துக்கும் மிகவும் நெருக்கமான தொடர்பிருந்தது. குடுக்கல் வாங்கல் செய்வதிலிருந்து, இட்டல் இடைஞ்சல்களைப் பகிர்வதுவரை இருந்தது அது.

குஞ்சம்மா குடும்பம் மிகவும் பின்தங்கியது. ஆரம்ப நாட்களில் சின்னப் பிள்ளையாயிருந்த குஞ்சுவின் அக்காவைக் கைப்பிடியில் கூட்டிக்கொண்டு அவளது தாயார் மாரி வீட்டுக்கு வந்து ஏதாவது தொட்டாட்டு வேலைகள் செய்து கொடுப்பாள். அது அவர்கள் வசதியாக வாழ்ந்த காலம். ஜீவரத்தினம் உயிரோடிருந்தார் அப்போது. பின்னால் வசதி கெட்ட நேரத்திலும் மாரி வருவாள். செய்து கொடுக்கத்தான் எதுவுமிராது. சும்மா

இருந்து பேசிவிட்டுப் போவாள். அது, அது இதுவென்று ஏதாவது தேவைகளுக்கானதல்ல. சம்பிரதாயங்கள் தேவைகளைத் தாண்டிய ஒரு தொடர்பு அவர்களுக்குள் வளர்ந்திருந்தது. அப்போது மாரியின் கணவனும் ஏதோ தகராறில் ஏற்பட்ட வெட்டுக் குத்து வழக்கில் தண்டனை பெற்று வேலூர்ச் சிறையிலிருந்தான். அப்போதுதான் குஞ்சம்மா பிறந்தது. ஆனந்தியை குஞ்சு அக்காவென்றுதான் அழைக்க ஆரம்பித்தது. அவளை மகாலட்சுமிதான் பள்ளியில் சேர்ப்பித்தாள். அதன்பின் மாரி அதிககாலம் உயிரோடிருக்கவில்லை. தொடர்ந்து குஞ்சுவைப் படிக்க வைத்தது முதலில் சித்தப்பாவும், பின்னர் அக்காவும். அந்தளவில் அவர்கள் நிலத்தை விற்றுவிட்டு வேறூர் போய்விட்டதாகத் தெரியவந்தது. அதிலிருந்து அவர்கள் நினைவு மெல்ல மெல்ல மறந்து போனது.

ஒருநாள் திடுதிப்பென அவர்கள் முன்னால் வந்து நின்று, நான்தான் உங்க குஞ்சு என்று தன்னை அறிமுகப்படுத்தினாள் ஒரு இளம் பெண்.

எந்த...? மாரியின் மகள்...?

ஆமாம்.

ஆனந்தி, மகாலட்சுமி இருவருமே திகைத்துப் போயினர். என்ன மாதிரி வளர்ந்திருக்கிறாள்! வாழ்வின் மீதிருந்த நம்பிக்கை, தடைகளின் மீதிருந்த துச்சம், நடப்புலகைப் பார்த்த பார்வையின் புதுமை யாவும் அவர்களை வெகுவாக அதிசயிக்கவும் ஆதர்ஷிக்கவும் செய்திருந்தன.

சுதாரித்துக் கொண்டு மகாலட்சுமிதான் கேட்டாள்: என்ன செய்கிறாய் குஞ்சு?

ரயில்வேயில் வேலை செய்வதாய்ச் சொன்னாள்.

எங்கே?

எழும்பூரில்.

அக்கா என்ன செய்கிறாள்?

அக்காவுக்கு கல்யாணமாகிவிட்டது. இப்போது நெசப்பாக்கத்திலே ஆவினுக்குப் பக்கத்தில் இருக்கிறாள்.

நீ யார் கூட இருக்கிறாய்?

சித்தப்பாகூட. சைதாப்பேட்டையிலே.

நெய்வேலியிலிருந்து ஆனந்தி வந்திருப்பதறிந்து பார்த்துப் போக வந்ததாகவும், இன்னொரு சமயம் ஆறுதலாக வந்து பேசுவதாகவும் கூறிச் சென்றாள்.

முன்புபோல நெருக்கம் இல்லாவிட்டாலும் தொடர்பு இருந்து கொண்டிருந்தது.

மகாலட்சுமிக்கு குஞ்சுவை வெகுவாகப் பிடிக்கும். ஆனந்திக்கும் தான். அவளுக்கும் இவர்களில் வலுத்த ஒட்டுதல். இதனால் சுயாதீனங்களை எடுப்பதுதான் நியாயம். ஆனால் குஞ்சம்மாவோ அவளது சந்திப்பையே தவிர்த்துச் செல்ல நினைத்திருக்கிறாள். அவள் பேசியவைதான் அதன் காரணமாய் இருக்கக் கூடுமென்று ஆனந்திக்கு நிச்சயமாகத் தெரிந்தது. ஆனாலும் அதில் தன் ஆவலை அதிகமாகக் காட்டிவிடக் கூடாது. அதனால் இயல்பில் போல், 'என்ன சொன்னாள்?' என்றாள்.

'இரண்டொரு மாதங்களுக்கு முன்னால் பாண்டிபஜாரில் நேருக்கு நேராய்ச் சந்தித்தீர்களாம். தெரிந்தவர்போல கூட நீங்கள் காட்டிக் கொள்ளவில்லையாம். பார்க்கக்கூடச் செய்யவில்லையே என்று சொல்லி ரொம்பவும் வருத்தப்பட்டார்கள். நான் யாருமே இல்லையா... யாருமே இல்லையா என்று கேட்டு... கண்ணெல்லாம் கலங்கி... எனக்கு அவர்களைப் பார்க்கவே மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது அக்கா' என்றாள் குஞ்சம்மா.

'அழுதாளா? செய்திருப்பாளே! எப்போது நினைக்கிறாளோ அப்போதெல்லாம் கண்ணீர்விட அவளால் முடியும் குஞ்சு.'

குஞ்சம்மாவினால் தாங்க முடியவில்லை அந்த வார்த்தைகளை. மகாலட்சுமியின் உணர்வுச் சொரிவை கண்கூடாய்க் கண்டவள் அவள். சொல்ல வார்த்தைகள் கிடைக்காமல் அவள் கலங்கித் துடித்த காட்சி அப்போதும் அவள் கண்ணில் மறையாதிருந்தது. ஆனால் ஆனந்தி சொல்கிறாள் அவள் 'நீலி'க் கண்ணீர் வடித்ததாக. 'அப்படிச் சொல்லாதீர்கள் அக்கா. அம்மா மிகவும் நொந்து போயிருந்தார்கள். அதுமட்டுமில்லை. எனக்கு முன்னால் கண்ணீர்விட்டுக் காட்ட வேண்டிய அவசியமும் அம்மாவுக்கில்லை.'

'சரி சந்தித்தேன்; பேசாமல் வந்துவிட்டேன்; அதற்கு என்ன என்கிறாள்?' ஆனந்தியின் குரலில் கடுமை ஏறத் துவங்கிற்று.

'காரணம் தெரிய வேண்டுமாம்.'

'எதற்கு, பேசாமல் வந்துவிட்டதற்கா?'

'இல்லை, உங்களின் கோபத்துக்கு.'

ஆனந்தி வன்மத்தோடு சிரித்தாள். 'என் மனத்தில் இப்போது இருக்கிறது கோபமில்லை குஞ்சு; வெறுப்பு. கோபித்துக் கோபித்து... செலுத்த முடியாமல் அடக்கி அடக்கி... இறுகி விளைந்த வெறுப்பு.'

தன்னைச் சுதாரிக்கிற முயற்சியில் சிறிதுநேரம் பேசாதிருந்தவள் சொன்னாள்: 'தான் யாருமே இல்லையா என்று கேட்டு அழுதாளா? அவள் எனக்கு யாருமே இல்லைத்தான். அது, தன் புருஷன் வாங்கி தன் பெயரில் எழுதிவைத்த வீடு என்று அன்று சொன்னபோது... தன்னந்தனியனாய் இரண்டு சூட்கேஸ்கள், இரண்டு பைகளைத் தூக்கிக் கொண்டு திடீரென வீட்டைவிட்டு வெளிக்கிட்ட வேளையில் மௌனமாகப் பார்த்துக் கொண்டு

நின்றாளே, அப்போது... அப்போது நான் யாரோவாய்ப் போயிருந்தேன் தானே அவளுக்கு? இப்போது அவள் எனக்கு யாரோவாகப் போகும்போது ஏன் அழுகை... கண்ணீர்... ஒப்பாரி...?'

'அப்படித் திட்டுவதற்கு தனக்கு உரிமையில்லையா என்று அம்மா கேட்கிறார்கள்.'

'அவள் வேறுமாதிரித் திட்டியிருக்கலாம். அடித்துக்கூட இருக்கலாம். நான் பொறுத்திருப்பேன். ஆனால் புருஷன் வீடு ஆகாதென்று எல்லா உறவுகளையும் அறுத்துக்கொண்டு ஓடிவந்திருந்த என்னை அவள் அப்படித் திட்டியிருக்கக் கூடாது.'

'அப்படி தான் செய்திருக்கக்கூடாது என்றுதானே அம்மா சொல்கிறார்கள்! நீங்கள்தான் கொஞ்சம் பொறுத்துப் போனாலென்ன அக்கா?'

'பொறுத்துப் போகிறதா? நான் பொறுத்துப் பொறுத்துக் களைத்துப் போனேன் குஞ்சு.'

ஆனந்தி உடம்பை அப்படியே தொய்தாள்.

பாட்டி தேநீர் கொண்டு வந்தாள். இருவரும் எடுத்துக் கொண்டனர்.

குஞ்சம்மா மனத்தை இன்னும் அதிசயம் விட்டபாடில்லை. ஆனந்தியின் மனம் நோகும்படி ஒரு வார்த்தை இதுவரை காலத்தில் பேசியதில்லை; அன்றைக்கு எப்படியோ தடுக்க முடியாத ஒரு தருணத்தில் அந்த வார்த்தை நழுவி வாயிலிருந்து விழுந்துவிட்டது; திருந்துவாளென்று நினைக்க பிரிந்துபோக நான் தயார், இப்போது மட்டுமில்லை எப்போதும் தயாராகவே இருந்தேன் என்று காட்டும் கணக்கில் உடனே பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்புவாளென நான் கண்டேனா; ஒரு கனிவான அழைப்பையோ ஒரு பார்வையையோ தானும் என்றும் அவளிடத்தில் நான் சந்தித்திருக்க மாட்டேனே; அம்மா என்பது அவளளவில் தன் பெயராகத்தானே இருக்கிறது என்று அழுது அரற்றுகிறாள் மகாலட்சுமி. இவளோ பொறுத்துப் பொறுத்துக் களைத்துப் போனதாய்ச் சொல்கிறாள். அறிந்தவரையில் இருவருமே பொய் சொல்லவில்லையென்று புரிந்தது குஞ்சுவுக்கு. அப்படியானால்... இந்த எதிரெதிர் உணர்வு வட்டங்களுள் விழுந்து இவர்கள் வருந்தும் நிலை ஏன் ஏற்பட்டது?

ஆனந்திக்கே அப்படி ஒரு சமுசயம் மனத்தே தோன்றியிருந்ததோ அப்போது?

மூன்றாவதொருவர் தன் தாய்க்காகப் பரிந்து பேசுவதில் இவள் மனக்கிலேசமடைய நிறைய நியாயமிருக்கிறது. கட்டற்ற ஒரு வாழ்க்கையில் இச்சைப்பட்டிருப்பதின் காரணமே சகல தன் உறவுகளின் புறக்கணிப்புமென அவள் எண்ணிவிடக் கூடாதென்ற அவதானமும் ஆனந்தியிடத்தில் தலைகாட்டிற்று. அதனால் தான் இளகுவதாய்க் காட்ட வேண்டிய ஒரு

அவசியம் எழுந்திருப்பதைப் புரிந்தாள். 'அவளைப் போலவேதான் தனிமையிலிருக்கிறேன் நானும். அவளுக்குப் போலவேதான் அநாதரவு எனக்கும் பயமாயிருக்கிறது. ஆனாலும் இந்த வெறுப்பு மிக்க ஆழமாக விழுந்திருக்கிறது. நான் நினைத்திருந்ததை விடவும் ஆழம். ஒரு நெடுங்காலமாய் விளைந்து விளைந்து தவிர இந்தளவாய் அது வந்திருக்க முடியாது. என் மனத்திலிருக்கிற இந்த வெறுப்புக் குறையாமல் நான் தாய்-பிள்ளை உறவைப் பாராட்டுவது கடினமானது. கடமையை நான் மறுதலிக்கவில்லை. இன்னும் இயன்ற பண உதவி செய்து கொண்டுதான் இருக்கிறேன். சொல்லியிருப்பாளே இதையும்? ஆனாலும் பாசம்... நானாக வளர்த்துவிட முடியாததாய் இருக்கிறது. தானாகவும் அது வளருகின்றதில்லை. தானாக வளராதது ஏதாவதின் குறைபாடோ? இந்த வெறுப்பு என்னுள் எப்போது விழுந்தது? எனக்குத் தெரியவில்லை. தெரியும்வரை வேறு மாதிரி நான் நடந்து விட முடியாது.'

சொல்லிவிட்டு தாங்க முடியாத பாரத்தில் போல் சடுதியில் கீழே அமர்ந்தாள் ஆனந்தி.

அவள் யாருமே இல்லையெனில் பணத்தை மட்டும் ஏன் அனுப்புகிறீர்கள் அக்கா? என்று கேட்க வாய் துருதுருத்தது குஞ்சுவுக்கு. அடக்கிக் கொண்டாள். அதைக் கேட்டு இதுவரை ஏற்படாத மனஸ்தாபத்தை இப்போது ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

அவளும் மெல்ல எதிரே அமர்ந்தாள்.

அழுதுவிடலாம் போல இருந்தது ஆனந்திக்கு. ஏனோ அழுகை வரவில்லை. கண்ணீரின் பாதையை எதுவோ அடைத்துக் கொண்டிருந்தது. ஆனாலும் ஒரு உடைவின் விளம்பில்தான் அப்போது ஆனந்தி இருந்து கொண்டிருந்தாள்.

'நான் பேச நேர்கிற எவருமே எனக்குப் புத்தி சொல்கிற நிலைமை வந்துவிட்டது; பார்த்தாயா குஞ்சு?'

'என்னையும் அந்த எவருமேயோடும் சேர்க்காதீர்கள் அக்கா. நான் நெடுங்காலம் உங்களை அறிந்தவள். சில நிகழ்கால சம்பவங்கள்தான் புதிதே தவிர நீங்களே எனக்குப் புதிதில்லை.'

'இல்லை குஞ்சு. நீ தெரிந்த ஆனந்தியாக இப்போது நான் இல்லையடி. நான் வேறு ஒருத்தி. எல்லாம் இழந்தவள். தனியானவள். எனக்கு வெற்றி மட்டும்தான் உயிர்ப்பிடிப்பு. தோல்வியெனில்... நான் அழிந்தே போய்விடுவேன் குஞ்சு.'

ஆர்த்தியும் குழந்தையும் இறங்கிச் சென்றிருந்தனர்.

கனத்த இருள் பிரபஞ்சப் பரப்பெங்கும்.

நேரம் நகர்ந்துகொண்டிருந்தது.

சற்று கழிய, 'குஞ்சு...!' என்றாள் ஆனந்தி மெதுவாக.

'என்னக்கா?'

'நான் என்ன செய்வேனடி? என்னை உன்னால் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?'

குஞ்சம்மா பேச்சிழந்த நிலையில். ஆனந்தியின் கையறு நிலை அவளுக்குப் புரிந்தது. மெதுவாகக் கையை நீட்டி அவளின் கரத்தைத் தொட்டாள். மறுகணம் அடக்கியும் முடியாமல் கண்ணீர் வெடித்துச் சிதறியது.

அவள் மயங்கினாற்போல் வதங்கிச் சரிந்தாள்.

'என்னக்கா!... என்னக்கா?' தாங்க முயன்றாள் குஞ்சம்மா.

'நெஞ்சுக்குள் முட்டாயிருக்கிறது. இந்தக் குளிர்...'

'ஆமாக்கா. குளிருக்க நின்னாத்தான் உங்களுக்கு ஆகாதே! வாங்க, மெல்ல மெல்லமா கீழ போகலாம்.'

அவள் பிறருக்கு மட்டுமில்லை, தனக்கேகூடத் தோற்க விரும்பாதவள். குஞ்சம்மாவுக்கு அப்போது அது ஞாபகம் வந்தது. அவள் திரும்ப முடியாத, அசைய முடியாத சமனத்தின் மையமா அது?

## 11

தொலைக்காட்சியில் செய்தி பார்த்துக் கொண்டிருநதாள் ஆனந்தி. அந்த நேரத்தில் சாப்பிட்டுக் கொண்டோ சாப்பிட்டு முடித்துவிட்டோ செய்தி பார்ப்பது பழக்கமாகிப் போயிருந்தது. அதனாலேயே அத்தனை ஆழமாய் அதன்மீது கவனம் குவிவதில்லை.

அன்று அலுவலகத்தில் வேலை அதிகம். பாண்டியன் வராததால் ஒரு கை முறிந்தது போலவே வேலைகளைச் செய்யவேண்டி இருந்தது ஆனந்திக்கு. வெளிநாட்டுக்கு அனுப்பப்படவேண்டிய பொதிகளை அன்று மாலையில்தான் கார்க்கோ ஏஜன்ற் வந்து விமான நிலையத்துக்கு எடுத்துச் சென்றிருந்தான். ஏழு மணிக்கு மேலே பணி முடிந்து வீடு வர எட்டுமணியாகிவிட்டது. அந்த மாதிரி உடல் களைக்கிற நாட்களில் வாசிக்க எழுதப் போன்ற வேலைகளைச் செய்யமுடியாத வசதியீனம் இருப்பினும், அது வேறொரு வகையில் அவளுக்கு நிறைவையளித்துக் கொண்டிருந்தது. அவளால் அன்றைய இரவுகளில் நன்றாகத் தூங்க முடியும். கனவுகளும் இடையூறு செய்யாமலிருந்தன. அந்த நாட்களில் அவள் சத்தமாகக் குறட்டை விடுவதில்லையென்று முன்பு ஆயா கூறியிருக்கிறாள்.

எது எப்படியிருந்தாலும்... கடந்த சில வாரங்களாக அந்த அற்புதாக் கனவு அவளிடத்தில் தோன்றவில்லை. அவள் பெரும்பாலும் அதன்

பாதிப்புக்களைப் பூரணமாய் இழந்தே போயிருந்தாள். நினைப்பில் வருவதும் குறைவாயிருந்தது. ஆனால் அவள் மனிதர்கள் நினைவில் வந்தார்கள்.

சாப்பிட்டு முடித்து அன்றைய வேலைகளெல்லாம் முடிந்தன என்ற ஒரு நெடுமூச்சோடு தலை பட்டுப் பட்டு சுவரில் லேசான எண்ணெய்க் கறை படிந்துபோன அந்த வழக்கமான இடத்தில் வந்தமர்ந்தாள் ஆயா.

ஆயாவில் கிளர்ந்தது ஆயாசம் மட்டுமில்லை; களைப்பும். வாழ்வைச் சுமந்து சுமந்து அவள் களைத்துப் போனாள்தான். அவள் போன்றவர்களுக்கு வாழ்வைச் சுமக்கும்படிதான் லௌகீக நிலைமைகள் செய்துவிடுகின்றன. வெகு சிலரைத்தான் வாழ்வு சுமக்கிறது. அப்படியான உத்தரிப்பு அவளது அறுபத்தைந்து வருஷ காலத்திலுமே இருந்திருக்கிறது. அவள் அப்போது அடைந்திருந்தது ஒருவகை உயிர்க் களைப்பும். மரணத்தின் வரவேற்புக்கு இனி அவள் தயாராகலாமென்பதின் மெல்லிய சமிக்ஞையா அது? போன வாரம் ஒரு காலை ஆனந்தி வேலைக்குப் போன பிறகு ஆயா காய்கறிக் கடைக்குப் போய்வந்தாள். மாடி ஏறி வருகையில் கண்களை இருட்டிக் கொண்டு வந்துவிட்டது. சில நிமிஷங்கள் அந்த இடத்திலேயே உட்கார்ந்து ஆசுவாசப்பட்டுக் கொண்டுதான் மேலே ஏறி வந்தாள். கையூன்றாமல் எழும்ப, உட்கார முடிகிறதில்லை. இவையெல்லாம் காலம் கழிந்து போய் விட்டிருப்பதின் அடையாளங்கள்தானே? அதற்கு மேல் வாழ்வது சலிப்பானது. அவள் தன் யாத்திரைக்குத் தயாராவதுதான் விவேகம். ஆயா அதைப் புரிந்திருந்தாள்.

தொலைக்காட்சியில் செய்தி முடிய படமும் பாடலும் நிகழ்ச்சி தொடங்கியது. ஆயா அதைக்கூடக் கவனிக்கிறதாயில்லை. ஆனந்த வல்லியையே அவ்வப்போது திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தன் யாத்திரைக்குத் தயாராதலென்பது அவளிலிருந்தும், அந்த வீட்டிலிருந்துமே கூட, விடுபடுதலாகும். சுலபத்தில் நடந்துவிடக்கூடிய காரியமல்ல அது.

நான்கு ஆண்டுகளாய் ஆனந்தியை அவளுக்குத் தெரியும். அவளது புறத்தைத் தெரிந்த அளவுக்கு அகத்தைத் தெரியாதுதான். ஆனாலும் தெரியாது என்று சொல்கிற அளவுக்குத் தெரியாமலில்லை. அவளது கண்டிப்பான நடத்தைகள், சாதாரணமாகச் சிரித்துவிடாத முகம் யாவும் ஒருவகை அச்சத்தையே ஆரம்பத்தில் அவளிடத்தில் ஏற்படுத்தியிருந்தன. அந்த வீட்டில் வேலை வேண்டாமே என்றுகூட நினைத்தாள். ஆனால் போகப் போக அந்தச் சுபாவம் பழக்கமாகிப் போனது. மட்டுமில்லை. அவளுக்கு அந்த வீட்டில்தான் அவள் தேடிய தனிமை கிடைத்தது. வேலையில்லாத நாட்களில்கூட ஆனந்தி பாதிநாள் அளவுக்கு வெளியே தரித்தாள். அவ்வப்போது கூட்டங்கள் மாநாடுகளென்று வெளியூர் சென்று இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்தாற்போல தங்கியும் கொண்டாள். ஆயா தனிமையை விரும்பினாள். தன் மனத்துக்குள்ளேயே ஆழ்ந்து ஆழ்ந்து போய்

மனத்தரை தொட்டு வரவேண்டியிருந்தது. அது சேறும் சகதியுமாகவே இருந்தது. ஆனாலும் அதை அவள் செய்தாள். உள்ளே - அடியில் - சேறு சுரியெல்லாம் கலங்கியடிக்கும். ஸ்படிகத்தனம் மறைந்து நீர் மக்கி நிறமாய்ப் பெருகும். அதை மேற்பகுதியில் தெரிய அவள் விடுவதில்லை. ஆனந்தி அவளை அறியாள். அவளது மன ஆழம் அவளைத் தவிர யாருக்கும் தெரியாது. சேறா, சகதியா, குருமணலா, சரளைக் கற்களா, பாறையா எதுவாக இருந்தாலென்ன, அவள் வெளியே நிதானமாக ஒழுகியவகையில் அடிமனம் பற்றி யார், ஏன் அக்கறைப்படவேண்டும்? அதனால் அந்த வீடு அவளுக்கு வெகு பொருத்தமான இடமாகிப் போனது.

ஆனந்திக்கு ஆயாவின் பார்வை உறுத்தல்போல் கவனத்தில் உறைத்தது. என்ன ஆயாவென்று கேட்க நினைத்தாள். பின் கொஞ்சம் விட்டுப் பார்க்கலாமேயென எண்ணிப் பேசாமலிருந்தாள். கடந்த சில நாட்களாகவே ஒருவித பரபரப்பை ஆயாவில் அவள் அவதானித்தே வந்திருந்தாள்.

சிறிதுநேரத்தில் அந்த நினைப்பு அவளிடத்திலே மறைந்து போனது. ஏதேதோ யோசித்துக் கொண்டிருந்தாள். எழுதலாம் போல இருந்தது. அன்றொரு நாள் அவள் ராம்ஜியிடம் காட்டிய கவிதையில் சில திருத்தங்களைச் சொல்லியிருந்தான் அவன். மறுநாளே மாற்றிக் கொடுக்கும்படியும், நண்பனின் சிறு பத்திரிகைக்குக் கொடுத்துவிடலாமென்றும் கேட்டிருந்தான். ஆனால் இயல்பில் திருத்தங்களையோ மாற்றங்களையோ ஏற்றுக்கொள்கிற ஆனந்திக்கு அந்தக் கவிதையில் அவன் சொன்ன மாற்றங்களை ஏற்கமுடியாதிருந்தது. அதனால் மனத்தில் கிடந்த வேறொரு ஒலிவடிவ கவிதைக்கு வரிவடிவம் கொடுக்க எண்ணினாள். அதற்கு அன்றைய இரவு சரியாக இருக்காது. அப்போதே கண்கள் கிறங்கத் துவங்கியிருந்தன. உடம்பெங்கும் ஒரு வெம்மை கனன்று கொண்டிருப்பதுபோல் இருந்தது. அதனால் இருக்கும்வரை இருந்துவிட்டு தூக்கம் வர போய்த் தூங்க வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டாள்.

சிறிதுநேரத்தில் கோப்பி ஒன்று குடித்தால் நல்லதுபோல் தோன்றியது. 'ஆயா, இப்போது ஒரு கப் காப்பி சுடச்சுடக் குடித்தால் எப்படியிருக்கும்?'

'வைக்கவா?'

'ம்!'

எப்போதும் அப்படி ஆனந்தி கேட்டுவிடுவதில்லை. அது ஒரு நேரக் கடத்தலுக்கான சூசகம். ஆயா புரிந்துகொண்டு எழுந்தாள்.

எதனிலும் சரி சிறிய மிகையும் ஆனந்திக்குப் பிடிக்காது. சிறிது சோறு அதிகமாகி கொட்ட நேர்ந்திருக்கிறதா, கறியோ சாம்பாரோ எஞ்சிவிட்டதா, காய்கறி காய்ந்து அல்லது அழுகி வீணாகிவிட்டதா?... எதுவும் பிடிக்காது. அவளால் அதைத் தாங்க முடியாது. வரவும் செலவும் நூறும் நூறும்போல இருந்தது. ஆனாலும் தேநீர் கோப்பிக்கு மட்டும் சிறிது தாராளம் காட்டுவாள்.

ஆயா கோப்பி கொண்டுவர ரசித்துக் குடித்தாள். கொஞ்சம் சொக்கினதுபோல் கண்களை மூடி, 'ஆஹா... காபி நல்லா இருக்கு ஆயா' என்று பாராட்டவும் செய்தாள்.

ஆனந்தி இனி வாசிக்கவோ எழுத்துவேலைக்கோ செல்லமாட்டாள் என்பது தெரிந்து, 'கடுதாசி ஒண்ணு எழுதணும் ஆனந்தி' என்றாள் ஆயா.

'ம். யாருக்கு? உன் பெண்ணுக்கா?'

'இல்லை. மகனுக்கு.'

'மகனுக்கா...? அவன் தான் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால் வீட்டை விட்டு ஓடிவிட்டதாயும், எங்கே இருக்கிறான் எப்படி இருக்கிறான் என்பதொன்றும் தெரியாது எனச் சொன்னாயே...!'

'ஆமா. இப்ப திருவண்ணாமலையிலே இருக்கிறானாம்.'

'எப்படித் தெரியும்?'

'ராசத்துக்குக் கடிதம் போட்டிருக்கிறான்.'

'ராசம் உனக்கு எழுதினாளா?'

'ஆமா.'

'நீ எனக்குச் சொல்லவே இல்லையே! முன்பு என்றால் எல்லாம் சொல்லுவியே!'

'என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தது...'

'ம்.'

'கல்யாணம் கட்டியிருக்கிறானாம். குழந்தை - ஆண் குழந்தை - ஒன்று இருக்கிறதாம். ரொம்ப திருந்தியிட்டேன் இப்ப... நல்லாயிருக்கேன்... அம்மாவைப் பார்க்க ஆசையாயிருக்கிறது என்று எழுதியிருக்கிறானாம். ஆனாலும் இப்பகூட... அவன் செய்தவைகளை நினைத்தால் என் உடம்பு பதறுகிறதுதான்!'

'பிறகு எப்படி கடுதாசி எழுதவேண்டுமென்ற ஆசை வந்தது?'

'என் உடம்பு இன்னும் ரொம்ப நாளைக்குத் தாங்காது என்று படுகிறது.'

'ஆயா என்ன சொல்கிறாய் நீ?'

'வயது போய்விட்டது ஆனந்தி. அப்பப்ப தலையைச் சுத்துகிறது. நடக்க முடிகிறதில்லை. மூச்சு வாங்குகிறது. இனி இயல்பில் கோப தாபங்கள் எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டியதுதானே? கொள்ளிக்கு அவன் ஒருத்தன்தானே இருக்கிறான்!'

அவள் உலக நடப்பை மேலே மேலே சொல்லிக் கொண்டிருந்தாள்.

தானடையும் உணர்ச்சியை, எண்ணும் எண்ணத்தை வெளியிடும் கருவி மட்டுமே அவளது வார்த்தைகள். அதில் ஒரு துளி மிகை இருக்காது. குறையவும் வராது. உணர்விலும் போலியை ஏற்காது. அது அடங்கியிருக்கும் எவ்வளவு காலத்துக்கும். ஆனாலும் அப்படியே முடம் பட்டு விடாது. தேவையின் ஒரு தருணம் வந்தபோது எவ்வளவு உக்கிரத்தோடு தன்னை வெளிப்படுத்திற்று. இது என்ன உண்மையில்? என்ன பெயர் இந்த விசேஷ உணர்வுக்கு? சுய தேவையென்பது எள்ளளவிலும் இந்த உறவில் பதியவில்லையே! இதுதான் தாய்மையா? ஆயாவுக்கு ஏற்பட்டது போன்ற கடைசி நேரம் பற்றிய பிரக்ஞை ஒரு காலத்தில் அவளது மகனுக்கு ஏற்படும்போது அவனுக்கும்தன் பிள்ளையுடனான அணுக்கம் இந்த வகையில்தான் இருக்குமா? எவருமே இந்தமாதிரித்தான் உணர்ந்தும் நடந்தும் கொள்வரா? உயிரியல்பா இது?

ஆண்... தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றான்.

பெண்... தாயில் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்றாள்.

விருத்தாப்பிய காலத்தில் பயங்கள் எழும்.

சிலபேர் மரண பயமே கொள்வராம்.

மனவலிமையானவர்கள் சாவுபற்றி நினைப்பதில்லை.

நான் சாவினை நினைக்கவேண்டியதில்லை.

மரணம் ஒரு புள்ளி.

வாழ்க்கையை வாழ்ந்து விடுவோருக்கு மரணம் அஞ்சவருவதில்லை; அவர்களுக்கில்லை அதிர வருவதோர் நோய்!

ஏதோ செவியில் விழுந்ததுபோல் இருந்தது.

'ஆயா ஏதாவது கேட்டாயா?'

'கடுதாசி எழுதலாமான்னு கேட்டேன்.'

'நாளையின்றைக்கு ஞாயிற்றுக் கிழமைதானே! பகலிலே எழுதுவமே!'

'சரி. அதோட... கொஞ்சம் பணமும் வேணும்...'

'எவ்வளவு?'

'பாதி.'

'எவ்வளவு இருக்கு?'

'நானூறு.'

'அவ்வளவு பணம் இப்ப இல்லை. கடிதத்தை இப்ப அனுப்பு. பணத்தை மாதத் தொடக்கத்தில் அனுப்பலாம். இன்னும் ஒருவாரம்தானே இருக்கிறது.'

'சரி.'

'ஏன் ஆயா, மீதிப் பணம் பொண்ணுக்கோ?'

'பாவம்தானே!'

'ஆமாமா. சரி... உனக்கு எதுவும் வேண்டாமா?'

'எனக்கெதுக்கு? கடைசிக் காலத்தில் பிள்ளைகள் யார்கூடவாச்சும் போய் ஒதுங்கவேண்டியதுதானே!'

'அது சரி. பிள்ளைகள் பின்னே எதுக்கு?' என்றாள் ஆனந்தி ஒரு இழுவையோடு.

'பின்னே...? இந்த முதுமை... இந்த இறுதிக் காலம்... இந்தத் தனிமை கருதித்தானே மனைவி - கணவன் - பிள்ளைகளென்று குடும்ப அமைப்புத் தோன்றியது!'

ஆனந்தி மேலே எதுவும் கேட்கவில்லை.

அந்திம காலத்தின் அக்கறைகளா குடும்ப அமைப்பின் தோற்ற நியாயம்?

அதிகாரத்தைக் குவித்துவைக்கும் மையமாக அது இருக்கிறதென்று...

ஆனந்தி எழுந்து அறைக்கு நடந்தாள்.

# 12

அன்று திங்கட்கிழமை. வழக்கமான நேரத்துக்கு முந்தியே ஆனந்திக்கு விழிப்பு ஏற்பட்டிருந்தது. நேரத்துக்கு முந்திய விழிப்பென்பதை அவளும் உணர்ந்தாள். ஜன்னலூடு பார்க்க வானம் கருநரைபற்றிக் கிடந்தது. கண்களை விழித்திருக்க வெம்மைக் கோளமாய் எரிந்தது. மூடியபடியே கிடந்தாள். விசித்திரமான ஒரு பலஹீனத்தை அடைந்து விட்ட உணர்கை அப்போது அவளிடத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. அதன் உற்பவம் தெரிந்தது. வியாப்தி தெரிந்தது. ஒரு இரவில் அந்தளவு வளர்ச்சியா என்பதுதான் ஆச்சரியமாக இருந்தது.

தூங்க முயல்வதே நல்லது. ஆனால் தூக்கம் வர மறுத்துக் கிடந்தது. வெகுநேரத்தின் பின் கண்களைத் திறந்தாள். தலையை நிமிர்த்த முடியாதிருந்தது. மண்டை விண்விண்ணென்று கொண்டிருந்தது. கண்களினூடு அனல் பறந்தது. எழுந்து மெல்ல வெளியே வந்தாள்.

வாசல் கதவு திறந்திருந்தது. ஈரக் கோடாயிருந்து அப்போது தான் பளீரென்று வெண்மையடைந்து கொண்டிருந்த வாசல் கோலம் ஆயாவின் பிரசன்னத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்தது. அழைக்கும் சிரமத்தை ஏற்படுத்தாமலே கீழேயிருந்து வந்தாள் ஆயா.

'ஆயா...!'

'என்ன? ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்? உடம்புக்கு ஏதேனுமா?'

'ஜுரம் போல இருக்கிறது.'

ஆயா கிட்டே வந்து நாற்காலியில் சளிந்து உட்கார்ந்திருந்தவளின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.

அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

ஆனந்தி வெந்நீரும் மாத்திரையும் கேட்க கொண்டு வந்து கொடுத்தாள். 'இரண்டு நாள் லீவு எடுத்துக் கொள். ஓய்வெடுத்தால்தான் நல்லது. பத்து மணிபோல போய் டாக்டரிடம் காட்டி வரலாம். ஊரில எங்கே பார்த்தாலும் ஜுரமாம். கீழ்வீட்டு அம்மாவுக்கு, எதிர்த்த வீட்டு சுலோசனாவுக்கு, அவள் பையனுக்கு என்று எல்லோருக்கும் ஜுரம். நேற்று வீட்டுக்கார அம்மா டாக்டரிடம் போனாங்களாம். ஏதோ வைரஸ் ஜுரம் என்று சொல்லி மருந்து கொடுத்தாராம். இந்த ஜுரம் வந்தால் இரண்டு நாளைக்கு உடம்பையே அடித்துப் போட்ட மாதிரி வலியாய் இருக்குமாம்.'

ஆனந்திக்கும் அதே ஜுரமாயிருக்கலாம்.

அவள் ஏதும் பேசவில்லை. மாத்திரைகளை விழுங்கி விட்டு கோப்பி கேட்டாள்.

மனம் உருண்டு புரண்டு அமைதியின்மையை விளைத்துக் கொண்டிருந்தது. வெள்ளிக் கிழமை இரவு ஆயா பேசியதிலிருந்து அந்தக் குமைவு துவங்கியதாக அவளுக்குத் தெரிந்தது. ஒருவேளை அது சற்று அமைதியடைந்தால் உடம்பின் அனல் அடங்கக்கூடுமோ? அவள் எண்ணினாள். ஆனால் அது எப்படிச் சாத்தியப்படும்? மறத்தல் பலனளிக்காது. அது ஒரு தாற்காலிகமான மாற்று மட்டுமே. நிரந்தரமான தீர்வு, அவள் வலிபட்ட இடத்தின் கண்டடைவில்தான் கிடைக்கும். அத் தேடுதலை தீவிரத்தோடு அவள் செய்தாக வேண்டும். அதற்கு சின்னச் சின்ன பிரச்னைகளை கட்மைகளை அவள் முதலில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

பொருளாதார அழுத்தமும் ஒரு காரணமாக இருக்கிறது. இப்போதெல்லாம் நிறைய தேவைகள் அவளுக்கு. பத்திரிகை சஞ்சிகைகள் புத்தகங்கள் வெளியே போய் வருகிற செலவுகளென்று என்றும் இருந்த செலவுகள்தான் அவை. ஆனாலும் விலைகளெல்லாம் ஒரு எகிறலாய் உயர்ந்திருந்தன. ஒரு பொருளாதார நெருக்குதல் எங்கும் விரிந்திருந்தது. அதை அவள் சமாளிப்பதென்பது பெரும் சிரமம். பத்மாவதி வங்கியிலே வேலை செய்தாள்; குஞ்சம்மா ரயில்வேயில்; அன்னலட்சுமி தபால் துறையில்; இன்னும் லூனா மிஸ் கல்லூரி ஆசிரியையாக இருந்தாள்; ரமணி வருமானவரித் துறையில். அவர்கள் வட்டத்தில் அவளும் ஜெயஸ்ரீயும் தான் வருமானத் தட்டுப்பாடுள்ளவர்கள். ஜெயஸ்ரீக்கு துணிக் கடையில் வேலை.

எல்லாச் சிரமங்களையும் அவள் சமாளித்துக் கொண்டுதான் வருகிறாள்.

அதற்குள் இந்த உடல்நலமின்மை...

அதற்கு ஆயாவின் பேச்சு ஒரு காரணமாகி விட்டது.

ஆயா கேட்டிருந்த கடிதத்தை அவள் முதல்நாள்தான் எழுதிக் கொடுத்திருந்தாள். ஆயா சொல்லச் சொல்ல ஆனந்தி எழுதினாள். ஆயாவுக்கு எழுத முடியும். ஆனால் என்றும் எழுதியதில்லை. கை நடுங்குகிறது என்பாள்; கண் மங்கலாக இருக்கிறது என்பாள். முந்திய நாள் குடும்பம் குறித்துச் சொன்ன கருத்துக்களோடு நேற்றைய உணர்வுபூர்வமான கடிதமொழியும் சேர்ந்துதான் ஆனந்தியை அந்த மாதிரி உலுப்பி விட்டிருந்தது. சரீரத் தாக்குதல்போல் அந்த மொழி அவளைப் பாதித்திருந்தது.

ஆயாவின் மனத்தில் அதுவரை காலமாய் அடைந்து கிடந்த ஆதங்கத்தை அன்றுதான் ஆனந்தி தெரிந்தாள். அவள் மகன் மீது காட்டிய கோபமெல்லாம் உள்ளார்ந்து கிடந்த அன்பின் வெறியில் வெளியாயின என்று எண்ண அவளுக்கு அதிசயமாக இருந்தது.

கடிதம், ஆயாவின் தளம் பலமாக இருப்பதைக் காட்டியது. இவளதை விடவும் பலமானது. பலத்தைச் சார்வதன் மூலமாக தன் பலஹீனத்தை அவள் தகர்த்திருந்தாள்.

இவள்...?

நெஞ்சுள் வலி எழுந்தது.

கண்கள் கலங்கி வந்தன.

ஆயாவின் பார்வையில் பட்டுவிடாதபடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

பார்வை சுவரின் செந்நிற மணிக்கூட்டில் பதிந்தது. போன ஆண்டு ராம்ஜி சிங்கப்பூர் போய்வந்த போது அவளுக்கு அன்பளிப்பாய்க் கொடுத்தது அது. செம்மணிக்கூடு மறைந்து அந்த இடத்தில் ஒரு பழைய மணிக்கூடு வெள்ளையாய்த் தோன்றியது. அதில் பின்னர் ர்தாகிருஷ்ணனின் முகம் பிரசன்னித்தது. பின் மாம்பல வீட்டுச் சுவர்போல தடித்து உயர்ந்த ஒரு சுவர் தோற்றமெடுத்தது. பெரிய பெண்டுல மணிக்கூடொன்று அதிலே தொங்கிக் கொண்டிருந்து டக்... டிக்... என்று சப்தித்தது. நள்ளிரவிலிருந்து அதிகாலை வரை சூழ நான்கு வீடுகளுக்கும் கேட்கிற மாதிரி மணி அடிக்கும். மழை காலத்தில் நான்கு வீடுகள் தள்ளிக்கூட அதன் சத்தம் படர்வதாய் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறாள். அதில் அப்பாவின் முகம் காட்சியாயிற்று. அது மறைய அம்மா வந்தாள். இப்போது அவர் சொத்தின் பாத்தியதைக்காரியாக.

அவளது அக்கறை ஆதங்கம் எல்லாவற்றையும் ஆனந்தியால் இப்போது புரிய முடிகிறதுபோல் தோன்றுகிறது. ஆம், ஆயாபோலவே

அவளும் தன் பலஹீனத்தைத் தகர்த்து பலமடைய விழைகிறவள். ஒரு வேளை யாருக்காவது, இந்த முதுமை... இந்த அந்திம காலம்... இந்தத் தனிமை கருதித்தானே கணவன் - மனைவி - குழந்தைகளென்கிற குடும்ப அமைப்பு உருவாயிற்று? என்று அவளும் பிரசித்தம் செய்திருக்கலாம்.

அவள் மட்டும் தான் பிடிவாதமாக...

மேலே அவள் சிந்திக்க விரும்பவில்லை. தன் கருத்துத் தளம் கேள்வியாகிறபோது மிக இலகுவாக அவள் செய்துவிடுவது அதைத்தான்.

அவள் கண்களை மூடி தலையைப் பின்னே சரிந்தாள்.

அந்தளவில் மேனி வியர்த்து கண்களின் அனல் தெறிப்பு அடங்கி வந்தது.

அன்று மட்டுமாவது விடுப்பில் நிற்க எண்ணிக் கொண்டாள்.

மறுநாள் ஆனந்தி வேலைக்குப் புறப்பட்ட போது தபால் நிலையம் வரை வருவதாகக் கூறிக்கொண்டு ஆயாவும் கூடச் சென்றாள். அவளது மூச்சு வாங்குகையிலும் தடுமாற்றத்திலும் இரக்கமாகிப் போய்விட்டது ஆனந்திக்கு. தாய்மேல் போன்ற பரிவு ஏற்பட்டது. அவளின் மனமாற்றத்தை, கருத்திலிருந்தான நழுவுகையாக எண்ணி வெறுப்படைய ஆரம்பித்திருந்தவள் உயிரின் இயல்பாக எண்ணி தன் மனம் கனிந்தாள். ஆதரவோடு அரவணைத்துச் சென்று தபால் நிலைய வாசலில் விட்டுச் சென்றாள்.

காலையின் கலகலப்பும் குதூகலமும் எங்கும் நிறைந்திருந்தன. மாரியம்மன் கோவிலில் தீபாராதனை தெரிந்தது. கோயில் வாசலின் இருபுறமும் அமர்ந்திருந்த பூக்காரிகளிடத்தில் இருந்த ரோஜாவும் தாமரையும் மல்லியும் செவ்வந்தியும் மோகவலை வீசின. பெரும்பாலும் அவளது கவனத்தில் தவறிவிடும் அம்மாதிரிக் காட்சிகளில் அன்று உன்னிப்பாய்ப் பார்வை பதிந்தது. ஆனாலும் பூக்களின் தரிசனத்தில் அவளால் கிளர்ச்சி கொள்ளவும் குதூகல மடையவும் முடியவில்லை.

தாய்மை பற்றியும் பிள்ளைமை பற்றியும் அவளுக்கு இதுவரையிருந்த கருத்துக்களில் பலத்த அடி விழுந்திருந்தது. தன் தளத்திலிருந்து அவள் அசைந்து போயிருந்தாள்.

ஆயாவுக்கு அப்படி ஒரு பலம் வேண்டுமாயின் அடைந்து கொள்ளட்டும்.

இயற்கை நியதிப் பிரகாரம் இது நடப்பதெனின் அம்மா தவித்துக் கொள்ளட்டும்.

அவளும் அப்படித்தான் ஆகவேண்டுமா?

கருத்து அல்ல, தானே நொய்மையடைந்துள்ளது போல் தோன்றியது. அவள் இறுக வேண்டும்.

அலுவலக நேரத்துக்கு பதினைந்து நிமிஷங்கள் முன்னதாக அன்று வந்துவிட்டிருந்தாள். எனினும் ராதாகிருஷ்ணன் அதற்கு முன்பே வந்து அலுவலகத்தில் அமர்ந்திருந்தார். எதேச்சையாகத்தான் திரும்பிப் பார்த்தார். ஆனந்தி வந்துகொண்டிருந்தாள். அவர் மறுபடி திரும்புமுன் அவள் சிரித்தாள். அவர் தலையசைத்து புன்னகைத்தார்.

ஏன் அவ்வாறு அகலச் சிரித்தோமென்று அவளுக்கு நிச்சயமில்லை.

அவர் காலை முழுதும் அதே பொலிவில் இருந்தார்.

மதியம் சாப்பாட்டுக்கு மேலே யாரோ வந்து 'சார்' அழைப்பதாகச் சொன்னார்கள். ஆனந்தி சென்றாள். உட்காரச் சொல்ல, உட்கார்ந்தாள்.

அவரது பூரிப்பு அவளுக்கு ஆச்சரியமில்லை. அவரது துக்கத்தின் காரணம் அவள் அறிவாள். அந்த உறவில் அவரது நிலைப்பாடு / எண்ணம் அவளுக்கு ஒப்பில்லை. அது துக்கப்படக்கூடாத பிரிவை முன்வைத்த உறவு என்பதே அவளது நியாயம். அவர் நல்லவர். அவரது உறவும் இனியது. ஒருவர் தேவையை - இட்டல் இடைஞ்சல்களிலிருந்து சுகதுக்கங்கள் வரை - கவனித்துக் கொள்கிற உறவாகவும் அது இருந்தது. நட்புக்கு மேலே அதற்கு வேறு அர்த்தங்களைத்தான் அவள் அங்கீகரிக்கவில்லை.

முதல் நாள் லீவின் காரணம் கேட்டார்.

உடல் நலமில்லை யென்றாள்.

சம்பிரதமாய் உரையாடல் தொடர்ந்தது.

இரண்டரை மணிவரை அவர்கள் பேசிய பேச்சில் சில வியாபார விஷயங்களும் இருந்தன.

மறுநாள் மெசின் பகுதிக்குச் சென்று பரிவோடு அவளது உடல்நிலை பற்றி விசாரித்தார். ஆனந்தியும் கலகலப்பாகவே பதில் கூறினாள்.

அந்த வாரம் சனிக்கிழமை மாலையில் அலுவலகம் மூடியதும் ராதாகிருஷ்ணன் கூட காரிலேயே சென்றாள் ஆனந்தி. இப்போது அவளிதயத்தில் கேள்வியில்லை, குழப்பமில்லை, தன்மீதான கோபமில்லை. மறுபடி அவள் எதனையும் உடைக்கத் தயாராகி விட்டாள்.

வாழ்க்கை பெரும்பாலும் அப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது பெரும்பாலானவர்களுக்கு. ஒரு எல்லை வரை மட்டுமே சிந்திக்க முடிந்ததின் விளைவு இது. எல்லை கடக்கப் பயந்து அவர்கள் திரும்பி விடுவதுதான் இங்குள்ள சிந்தனைக்கு நேர்ந்திருக்கிற மிகப்பெரிய சோகம். ஒவ்வொரு தடைக் கட்டங்களையும் தாண்டி முன்னேறுதல் எல்லாருக்கும் முடிந்து விடுவதில்லை.

எல்லைக்குச் சென்று தோற்றவள் அவள்.

அனுபவத்திலிருந்து தெளிவடைகிற நேரத்தில் மேலும் சிறிது சிந்திக்க வலிமையும் பொறுமையும் இல்லாமல் அதை உதறிவிட்டு ஓடியிருக்கிறாள்.

தாய்மை - பிள்ளைமை என்கிற இணை உணர்வுகளை ஒரே ஸ்தூலத்தில் அடக்கி ஆய்வு செய்ய அவளால் நிச்சயம் முடிந்திருக்கும்.

அந்த இரண்டு உறவுகளினாலும் சமநேரத்தில் பாதிப்பு அடைந்திருக்கிறவள் அவள். அனுபவப் பிராப்திக்கு அதிர்ஷ்டமில்லாது போனது. அவளுக்குச் சுலபமாகத் தெரிந்தது கூட்டை உடைப்பதுதான். அதற்கு... துல்லியம் தேவையில்லை. எழுந்த மானத்தில் விளாசினால் போதும், உடைத்துவிடலாம்.

அந்நிய நாடுகளின் படையெடுப்புக் காலங்களில், இன மத மொழிவாரியான கலவரங்கள் வெடிக்கிற சமயங்களில் துவேஷத்தின் உச்சபட்ச அடையாளமாக புனிதங்களை மாசுபடுத்துதல் என்பது காலங்காலமாக நடைபெற்று வருகிறது. அதன் ஒரு அம்சமாகவே பெண்கள் கற்பழிக்கப் படுவது. அதன் இன்னொரு அம்சம் மத சின்னங்களை அழித்தல். எதிரிகளின் கவுரவத்தை மாசுபடுத்துவதான, புனிதங்களைக் கீழ்மைப்படுத்துவதான, ஆளுமையை நிர்மூலமாக்குவதான உளவியல் அதில் இருக்கிறது. ஏறக்குறைய ஆனந்தியின் புணர்ச்சி விழைவும் தாய்மையை மாசு படுத்துவதான, கற்பை மலினப்படுத்துவதான எண்ணத்தில் பிறந்ததுதான். அவளது தாய்மை எதிர்ப்பின் மூலம் இன்னும் கண்டடையப்படாதது. ஆனால் தாய்பற்றி நினைக்கிற ஒவ்வொரு வேளையிலும் அவள் அப்படித்தான் ஒழுகிக் கொள்கிறாள்.

ஆயா தன் பலவீனங்களைப் போக்க பலங்களை நிறுவியவள். இவள்... நிறுவப்பட்ட பலங்களை நொருக்குவதின் மூலம் தன் பலத்தை நிரூபிக்க முனைபவள்.

அவள் அப்போது தெளிவடையாதிருப்பதில் பெரிய அதிசயம் இருக்கவில்லை.

## 13

முதல் நாளிரவு எழுதிய நாட்குறிப்பு இன்னும் மேசையில் இருந்து கொண்டிருந்தது. மறுநாள் சிவராத்திரியை முன்னிட்டு முதல்நாள் ஞாயிற்றுக்கிழமையோடு சேர்த்து அன்றும் அரசு விடுமுறை அறிவித்திருந்தது. சிநேகிதிகளைச் சந்திப்பதற்கு நல்ல நாள். அவளுக்கு வேலையிருந்தது. அன்று அலுவலகத்துக்கு லீவு போட்டுவிடலாமென்று எண்ணிக் கொண்டு எழும்புகிற அவசரமின்றி படுக்கையில் கிடந்திருந்தாள் ஆனந்தி. நாட்குறிப்பை எடுத்து அதன் பின் பகுதியைப் புரட்டி அந்த மாத வரவு - செலவை ஒருமுறை பார்க்க வேண்டும் போலிருந்தது. வேண்டாமென பிறகு விட்டுவிட்டாள்.

இரவு கணக்கு எழுதியபோது அவளுக்கு தலைவெடித்துப் போனது. போன மாத செலவீனம் உச்சியில் இடித்துக் கொண்டிருந்தது. ஆயாவுக்குப்

பணம் கொடுத்ததிலும், அமுதாவின் பிறந்தநாளுக்குப் பரிசுப் பொருள் வாங்கியதிலும் வேறு எதிர்பாராத வகைச் செலவுகளாலும் ஐந்நூறு ரூபாவுக்கு மேலே இன்னும் தேவையாக இருந்தது. அந்த மாதம், அடுத்த மாதமெல்லாம் இறுக்கத்தில் வந்து முடியப்போவதை நினைக்க அவள் திகைத்துப் போனாள். அதனால் தான் எட்டு மணி ஆகியிருந்த வேளையிலும் அவசர அவசரமாக கீழே இறங்கிப் போய் நம்பியார் மனைவியிடம் வட்டிக்கு இரண்டாயிரம் ரூபா கேட்டிருந்தாள். மாதம் ஆயிரப்படி இரண்டு மாதங்களில் தீர்த்துவிடுவதாக ஒப்புதல். ஆயிரத்துக்கு மாதம் நூறு ரூபா வட்டியையும் ஒப்புக்கொண்டாள். காலை ஒன்பது மணியளவில் முடிவு தெரியுமென்றும், பணம் வந்தால் உடனடியாக தானே எடுத்து வருவதாகவும் நம்பியார் மனைவி சொல்லியனுப்பியிருந்தாள்.

அவள் வரும்வரை அப்படியேதான் கிடக்கப் போகிறாள் ஆனந்தி. ஆயா கோப்பி கொண்டுவர வாங்கிக் குடித்தபடி ஜன்னலூடு பார்வையைப் பரக்கவிட்டாள்.

மேலே என்ன பறவை அது... வல்லூறா பருந்தா... மிதந்து கொண்டிருந்தது ஒரு நிலையாக. எதைக் குறி வைத்ததோ?

வாழ்க்கையும் அப்படித்தானா? குறிவைத்து... ஒரு தவத்தில் போல் இயங்கிக்கொண்டு...! அவள் வாழ்க்கை அப்படியாகவா இருக்கிறது? ஒன்று தெளிவாய்த் தெரிந்தது: அவள் வாழ்க்கை ஆரம்பித்ததே அப்படித்தான். அதனால்தான் பெரிதினும் பெரிது கேட்க அவளால் முடிந்திருந்தது.

பார்வையைத் திருப்பி ஒரு தலையசைப்பில் அந்த நினைவை உதறிக்கொண்டு பிரச்னைக்குத் திரும்பினாள்.

நேரம் எட்டரை ஆகிக் கொண்டிருந்தது. எப்படிப் பார்த்தாலும் இன்னும் ஒரு மணி நேரத்தில் பணம் பற்றிய முடிவு தெரிந்துவிடும்.

பெரும்பாலும் அப்படியான இறுக்கங்களோடுதான் ஆனந்தி வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறாள். ஆனாலும் அந்த மாதமும் அடுத்த மாதமும் அவள் அவதிப்படுவதற்கு நிறையக் காரணங்கள் இருந்தன.

அடுத்தடுத்த மாதம் அவர்களது விடுதலைக் குயில்கள் அமைப்பு ஆண்டு விழாவை கவியரங்கு கருத்தரங்ககளுடன் இரண்டு நாட்களுக்கு கோவையிலே நடாத்தவிருந்தது. அவள் போகாமல் விடமுடியாது. மேலும் வரும் பதினைந்தாம் தேதியிலிருந்து ஆரம்பிக்கவிருந்த கம்ப்யூட்டர் வகுப்புக்குப் போவது எப்படி?

போன வாரம் நெல்பாவின் ஹோஸ்டலிலே சிநேகிதிகள் சந்தித்தபோது அவ்வாறு தீர்மானித்திருந்தார்கள். குஞ்சம்மா அங்கே மதியத்துக்கு மேல் வரவிருந்தாள். இரண்டு பேருமாகச் சேர்ந்து போய் பயிற்சியில் சேர்வதாகத் திட்டம். ஆயிரத்துக்கு மேலே கையிலில்லை.

எழுநூற்றைம்பது ரூபாயை பயிற்சிக்கு முதல் தவணைக்காகக் கொடுத்துவிட்டால்... அந்த மாதத்தைச் சமாளிப்பது... கோவைக்குப் போவதற்காக ஒதுக்கி வைக்கிற பணத்துக்கு எங்கே போவது? முக்கியம் அம்மாவுக்கு பணம் அனுப்புவது...?

தேவையின் திரஸ்கரத்திலேயே பலமுறையும் நிலைமையை அவள் சமாளித்தாள். அவள் நடத்தியது ஒரு பொருள் வகை யுத்தம். ஆனால் அந்த முறை...! அந்தத் தேவைகளை திரஸ்கரித்து விட முடியாது.

வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியற் துறைகளோடு நெருங்கிய தொடர்புடையது கம்ப்யூட்டர் உலகம். அதுவே தனியொரு அறிவியற் துறையாகவும் வளர்ந்து கொண்டிருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டு நடுப் பகுதியில் வெடித்த தொழிற் புரட்சியின் உச்சம்தான் இருபதாம் நூற்றாண்டின் இந்த இறுதிக் கந்தாயத்தில் தொழில் நுட்பத்தின் அபரிமித வளர்ச்சி. இருபத்தோராம் நூற்றாண்டுப் பிரபஞ்சம் அதுவரை கண்டு கேட்டு அறியாத அறிவியலின் வெளியாக இருக்கும்.

எவரும்போல் அதை அவர்களும் தெரிந்திருந்தார்கள் மேலெழுந்த வாரியாக. ஆனால் ஆழமாய் உணரவைத்தது லூனா மிஸ்தான். கல்வியை சகலருக்குமானதாக்கி ஆரம்ப காலத்தில் மிகப்பெரும் அக்கறை காட்டியது முதலாளித்துவம்தான். அதுபோல இப்போது தொழில் நுட்ப அறிவையும் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளக்கூடியதாய் மகத்தான திட்டங்களை அது அறிமுகப்படுத்துகிறது. எழுத வாசிக்க தெரிந்த எவரும் இன்று கம்ப்யூட்டர் பயிற்சி பெற்றுக் கொள்ள முடியும். பத்து அல்லது பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் தட்டச்சும் சுருக்கெழுத்தும் வேலை வாய்ப்புக்கான அவசியங்களாய் இருந்தன. எழுது வினைஞர்களின் தேவை மிக அதிகமாய்த் தேவைப் பட்டிருந்த காலம் அது. தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சியின் அவசியத்தை சுலபமாக நாம் புரியலாம். அதுபோல கம்ப்யூட்டர் இயக்குதிறன் இன்று ஆகியிருக்கிறது. அச்சுலகம், பத்திரிகையுலகம், வர்த்தகம், விளம்பரம், சினிமா, தொலைக்காட்சி போன்ற சகல உலகங்களும் இந்த வலைக்குள் விரைவாக வந்து கொண்டிருக்கின்றன. கம்ப்யூட்டர் பயிற்சி மிகக் குறைந்த செலவீனத்தில் பெறக் கூடியதாய் ஆகியிருப்பதன் காரணம், அதில் பயிற்சி பெற்ற நிறையப் பேரைத் தேவைப்படுகிறது என்பது தான். சர்வதேச வர்த்தக வலயம் அதை அவசியப்படுத்துகிறது என்றாள் அவள்.

நீங்கள் சொல்கிறபடி பார்த்தால்... முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் தேவைகளுக்காக கம்ப்யூட்டர் இயக்கு திறன் மிக்க தொழிலாளிகளை அதிகமாக உற்பத்தி செய்ய முயல்கிறது. இதில் நாங்களும் போட்டி போட்டுக் கொண்டு நமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும்; இல்லையா மிஸ்? என்று இடைமறித்தாள் ஜெயஸ்ரீ. ஜெயஸ்ரீயால்தான் அப்படி கேந்தியும் குத்தலும் உள்ளதாக பேச முடியும்.

அதற்கு லூனா மிஸ் சொன்னாள்: அப்படியில்லை ஜெயஸ்ரீ. கம்ப்யூட்டர்க் காலமாகிவிட்டது இது. புறவயமாகவேனும் சகல அறிவுத்

துறையும் இன்று இதனோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. அதை நாம் காணத் தவறிவிடக்கூடாது. செய்ய வேண்டியது என்னவென்றால், வெறும் கம்ப்யூட்டர் ட்ரைவர்களாக இருந்துவிட உத்தேசிக்காமல், தொழில் நுட்ப ரீதியாகவே ஆழமாக இதில் முன்னேறுவதுதான். இந்தத் துறையில் ஆண்களோடு நம்மால் போட்டியிட முடியும். சொல்லப் போனால் அறிவுத் துறையில் மட்டும்தான் நாம் சரிசமமான போட்டிக் களத்தை அமைக்கலாம்.

அப்போது ரஞ்சியும் அவளது அறைத் தோழியான பெண் ஒருத்தியும் நெல்பாவின் அறைக்கு வந்து சேர்ந்தனர். ரஞ்சியை உரையாடலில் கலக்க வைத்தாள் லூனா மிஸ்.

நீ என்ன சொல்கிறாய் ரஞ்சி? பெண்களுக்கான யுத்த தளம் அறிவார்த்த உலகம்தானே?

நிச்சயமாக. அறிவார்த்த உலகம் என்பது தளம் மட்டுமில்லை. அதுவே ஆயுதமும். இவைகளைக் கொண்டுதான் நாம் யுத்தத்தைத் தொடங்க வேண்டும். இனி வரப்போகும் புதிய நூற்றாண்டு தகவல் தொழில் நுட்பத் துறையில் மகத்தான வளர்ச்சி பெற்றதாய் இருக்கும். அதன் ஆட்சித் திறனை பெண்கள் வளர்த்துக் கொள்வது மிக்க அவசியமாகச் செய்ய வேண்டிய காரியம். பட்டுச்சேலை தேர்வு செய்வதற்கான திறமையில் ஒரு பெண் புளகாங்கிதமடைந்த காலம் இனி வரக்கூடாது. கணிப்பொறி யுகத்தில் மகத்தான சைபர் யுத்தங்கள் நடக்கும். அதில் பெண்ணினம் தலைமைத்துவம் வகிக்கிறது விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள் மூலமும் சாத்தியம்.

அதென்ன சைபர் யுத்தம்? என்று கேட்டாள் நெல்பா.

கம்ப்யூட்டர்களால் கட்டுப்படுத்தப்படும் சற்றலைட்டுக்களை செயலிழக்க வைக்க ரகசியமாகச் செய்யப்படும் முயற்சியை உதாரணமாகச் சொல்லலாம். இன்ரநெற்றுடன் தொடர்புடைய ஒரு கம்ப்யூட்டரை தொடர் - பிங் செய்து செயலிழக்கச் செய்வதும் இன்னொரு நல்ல உதாரணம். இந்த முறை மூலம் நிறுவனங்களை மட்டுமல்ல, வல்லரசுகள், பெரிய பெரிய வலிமை வாய்ந்த ஐ.நா., நேட்டோ போன்ற கூட்டமைப்புகளைக் கூட ஸ்தம்பித நிலைக்குக் கொண்டு வரலாம். பெரிய பெரிய ராணுவ ரகசியங்களைத் திருடுவதும் இதன்மூலம் சாத்தியமே... என்று விளக்கம் கொடுத்தாள் ரஞ்சி.

இந்த யுத்தம் - அதாவது நீ சொன்னபடியான சைபர் யுத்தம் - ஆணுலகத்துடனான யுத்தமாக இருக்குமென எப்படி நாம் கொள்வது? என்று தன் சந்தேகத்தை ஆனந்தியும் தெரிவித்தாள்.

குஞ்சம்மா பக்கபலமாய் நின்று வாதித்தாள். ஆனந்தியக்கா சொல்வது மிகவும் சரியானது. அறிவுலகத்தில் ஒரு யுத்தம் ஆணுலகத்துடனான யுத்தமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அறிவு என்பது

ஆயிரமாயிரமாண்டுகளான காலவெளியில் இச்சமூகம் அடைந்திருப்பது. வேண்டுமானால்... அதை ஆணுலகம் கையகப்படுத்தி அதிகாரம் செய்துகொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல முடியும்.

றஞ்சி சொன்னாள்: குஞ்சம்மா சொல்வது சரிதான். அது ஆணினத்தினது அல்ல, மனித இனத்தினது அறிவுலகம் தான். அதை ஆண்களே ஆட்சி செய்கிறார்கள். ஆனால் அறிவுலகத்து மேலாண்மைக்கான யுத்தம் அறிவுத் தளத்திலேயே நிகழும் என்பதும் முக்கியமானது. கணினி யுகத்தில் தளமே ஆயுதமாகியும் விடுகிறது. அதனால் யுத்தம் ஆணுலகத்துடனானதாகவே இருக்கும். அந்த வெற்றியின் பின்னர் அந்த மேலாதிக்கத்தைத் தக்க வைப்பதற்காக ஒரு தொடர் யுத்த சன்னத்தம் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

மேலே ஆனந்தியோ குஞ்சம்மாவோ பேசவில்லை. அந்த விவாதத்தைத் தொடர்வதற்கான தகவல் களம் அவர்களுக்கில்லை. ஆனாலும் றஞ்சி சொன்ன பல கருத்துக்களை அவர்கள் சுலபமாகப் புரிந்துகொண்டனர்.

ரஞ்சி, லண்டன் பணம் எப்ப? என்று கேட்டாள் லூனா மிஸ்.

சீக்கிரத்தில்.

என்ன படிப்பாய்?

கம்ப்யூட்டர்தான்.

கேட்ட ஆனந்திக்கும் ஆர்வம் பிறந்தது. கம்ப்யூட்டர் பயிற்சி பெற அவள் தீர்மானித்தாள். அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

அன்னலட்சுமி, பத்மாவதி போன்ற நெருங்கிய தோழிகளெல்லாம் தன்னைவிட்டு மெல்ல மெல்ல விலகுவதான ஒரு பிரமை அவளில் விழுந்துவிட்டிருந்தது. பொன்னம்மாள் ஆசிரியையும் ஆயாவும் வெவ்வேறு வகையில் அவளது தளத்தை ஆட்டங்காணச் செய்துவிட்டிருந்தனர். அவள் தன்னின் பலத்தை நிறுவிய பின் ஏற்படும் ஒவ்வொரு பலஹீனமும் முன்னைவிட அதிக தீவிரத்தோடு வெளிப்பட்டதாகப் பட்டது. அற்புதா பற்றிய கனவால் அவள் கலங்கியது வெகுநாளல்லவெனினும், நினைவுகள் அவ்வப்போது வீச்சுப்பெற்றெழுந்து கொண்டுதான் இருந்தன. அந்தக் கனவே மறுபடி வந்துவிடுமோ வென்ற ஒரு பயத்தாலும் அவள் சூழ்ந்திருந்தாள். நாவல் வாசிப்பில், பெண்ணியச் சிந்தனைகளில், பின் நவீனத்துவத்தில், கவிதைப் படைப்பில் மனம் பதியாமல் எல்லாவற்றையும் நினைத்து நினைத்து பொங்கி வழிந்து கொண்டிருந்தாள் ஆனந்தி. மனத்தை இரு துண்டுகளாக உடைத்து அவளுள்ளேயே சிந்தனைகளை அலைமோத விட்டிருந்தது காலம். இப்போது அவை ஒன்றோடொன்று மோத ஆரம்பித்திருந்தன. இனி அவை சிதறும். அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் ஒரு உபாயமாகத்தான் கம்ப்யூட்டர் பயிற்சி பெற அவள் தீர்மானித்தது.

அது சாத்தியமாகாது போகுமானால் அவளது தப்புகை கடினமாகும். நினைத்ததை நிறைவேற்ற முடியாது போவது போல் அவள் குழம்புவது வேறெதுவும் இல்லை. பார்க்கப்போனால் அந்தத் தவிப்பும், குழப்பமும், சலிப்பும் எல்லாம் அவளோடு பின்னமற எப்போதும் பிணைந்தே இருந்து வந்ததாய்ப்பட்டது. தந்தை இறந்து ஒரு வருஷம் வரையிலும்கூட அவளது வாழ்க்கை கடினங்களைச் சந்திக்காமலே இருந்து வந்தது. எதிர்கால இருள் பற்றிய மிரட்சி அடையத் தேவையில்லாத அளவுக்கு ஒரு வல்லபம் வெகு சமீபத்திலிருந்து ரட்சித்துக் கொண்டிருந்தது. பின்னால்... எல்லாம் சடுதியில் மாறத் துவங்கிவிட்டன. அன்றுவரையிலும் அந்தக் பற்றாக்குறையோடேயே வாழ்க்கை அவளுக்குக் கழிந்து கொண்டிருக்கிறது.

எத்தனை முக்கியமான விஷயங்கள் அவளுக்குத் தவறிப் போயிருக்கின்றன!

அவள் எண்ணிப் பார்த்தாள்.

உலக பெண்கள் மகாநாடு பீஜிங்கில் நடந்தபோது பார்வையாளராகச் செல்லக்கூடிய வாய்ப்பு ஒன்று கிடைத்தது. பணவசதி மட்டும் இருந்திருந்தால் அக் குழுநிலைப் பயணத்தை அவளால் மேற்கொண்டிருக்க முடியும்.

உறவினர் ஒருவர் மூலமாய் நல்ல சம்பந்தமொன்று குதிர்ந்து வந்தது. அவர்கள் கேட்ட சீதனத்தை அம்மாவால் ஒழுங்கு செய்ய முடியவில்லை. அவர்கள் சென்னையிலே வீடு ஒன்றும் நகை நட்டும் சிறிது ரொக்கமும்தான் கேட்டார்கள். அந்த நிலத்தையும் வீட்டையும் விற்றிருந்தால் அவை யெல்லாவற்றையும் செய்திருக்க முடியும். ஆனால் அம்மாவோ... வீட்டை விற்று கலியாணத்தை நடத்திவிட்டு நான் போய் நடுத்தெருவிலே நிற்க முடியுமா என்று நேருக்கு நேரேயே கேட்டாள். அவளும் மகளோடேயே இருந்து கொள்ளலாமே என சிலர் சமாதானப்படுத்தினார்கள். அது கேட்டு ரோஷம் கொண்ட மாப்பிள்ளை வீட்டார் வேறு ஏற்பாடு செய்துவிட்டார்கள். டெல்லி வாழ்க்கையும் ஆளுமைகளை விருத்தி செய்யக்கூடிய வசதிகளும் சுகபோகங்களும் ஓரிரு வாரக் கனவாய் நின்று மறைந்தன.

இப்படி எத்தனையோ.

நினைக்க அடுக்கடுக்காய் விரியும்.

பட்டதெல்லாம் அவள்தான். தாயார் உத்தரிப்படைய வேயில்லை. வறுமையை, வசதியீனத்தை அவள் சகித்துக் கொண்டாள். அவளுக்கு சாந்தி அதில் இருந்தது. தன் காதல், அதன் இழப்பு, வாழ்வின் தனிமை, விரதங்களென்று அவளது போக்கும் நினைப்பும் எல்லாம் வேறு வகையானது. இவளதோ... ஏக்கங்களோடு மட்டுமேயானது. பெரிதினும் பெரிது கேட்டு நின்றாள். அவளது அமைதி குலைந்துபோக அதுவே போதுமான காரணம்.

அம்மாவே இவளின் அந்தளவு உத்தரிப்புக்களுக்கும் காரணஸ்தி போல் ஒரு வெக்கைப் படர்வு ஆனந்தியின் மனத்துள் இருந்துகொண்டே

இருக்கிறதா? அதுதான் கோபமாய் வெறுப்பாய் திரஸ்கரிப்பாய் அவளில் வெளிப்பாடடைகின்றதோ?

அந்த நேரம்... மேலே வந்து சேர்ந்தாள் நம்பியார் மனைவி.

ஆயா வந்து அவளது வரவு சொல்ல ஆனந்தி எழுந்து வெளியே சென்றாள்.

'என்னம்மா, என்ன ஆச்சு? பழம்தானே...?'

'ம்... பழம்தான். ஆனால் ஒன்றுதான் கிடைத்தது. இந்தா... எண்ணிப் பார்த்துக்க.'

ஆனந்தி பணத்தை எண்ணிப் பார்த்தாள்.

'சரிதானே? தொளாயிரம் இருக்கா?'

'இருக்கு.'

'சரி. நான் வர்றேன். சொன்னதுகளை மறந்திடாத.'

நம்பியார் மனைவி போனதும் பணத்தைக் கொண்டு போய் மேசை லாச்சியில் வைத்துவிட்டு ஆனந்தி திரும்பினாள். கம்ப்யூட்டர் பயிற்சி பற்றிய கனவு... தகர்வில் இருந்தது.

# 14

கோவை செல்வதற்கு ஒரு வாரம் முன்னம் அது நிகழ்ந்தது.

அங்கு வேலை செய்யும் எவரையாவது ராதாகிருஷ்ணன் அம்மாதிரித் திட்டி ஆனந்தி அறியாள். அன்றைக்கு அவளையே திட்டிவிட்டார். அத்தனைபேருக்கும் முன்னாலேயே. அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. அத்தனையும் பாழ்... எல்லாமே நஷ்டம்... என்று திட்டினாரே தவிர விபரம் கூடச் சொல்லவில்லை.

அவள் தெளிய வெகுநேரமாயிற்று. அப்போதும் சிதறியே அவளிருந்தது நன்கு புலனாகியது.

மேலெழுந்தவாரியாக வேலைக் கவனமின்மையினதும் ஒழுங்கீனத்தினதும் கண்டிப்புப்போல் தோன்றினாலும் அதற்குப் பின்னாலிருந்த சீற்றத்தை, சீற்றத்தின் காரணத்தை அவள் அறிவாள். அவளால் அங்கே, அப்போது பதில் சொல்ல முடியாது போனது மெய்தான். ஆனாலும் அவளுள் மூண்டெழுந்த கனலில் அவர் அன்றே எரிந்து போனார்.

அங்கே இனி வேலை செய்வது மன அமைதியைக் கெடுக்கும் என்ற நிச்சயத்துக்கு அவள் வந்தாயிற்று. அன்றைக்கே வேலையை விட்டுவிட அவள் துடித்தாள். ஆனால் அந்த மாதச் சம்பளம் கையில் முழுதாக

வரும்வரை அவளால் அதைச் செய்துவிட முடியாது. மேலும் அடுத்த மாதம் சம்பளம் எடுக்கக்கூடியதாய் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்யாமல் அந்த வேலையை விடுவது புத்திசாலித்தனமில்லையென்று பின்னர் எண்ணித் தவிர்த்தாள் அந்த உத்வேகத்தை. தன் வறுமையை அவளால் புரிந்து கொள்ள முடியும். அது சம்பந்தமாய் வேறொருவர் ஆலோசனை அவளுக்கு அநாவசியம்.

வெள்ளி சனி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களும் கோவையில் கழிய திங்கள் மாலை சென்னை திரும்பியிருந்தாலும் செவ்வாய்க்கிழமை வேலைக்குச் செல்லவில்லை ஆனந்தி. அன்று மாலை வெளியே சென்று கருத்தரங்குக்கு வராத சிநேகிதிகளைச் சந்தித்துவிட்டு வந்தாள். புதன் காலை வேலைக்கு சென்றபோது ராதாகிருஷ்ணனாகவே வந்து அவளோடு பேசினார். அவள் உடைந்திருந்தது தெரிந்தும் நம்பிக்கையை இழக்கவில்லை அவர். அவள் கேட்டு லேசாகச் சிரித்துவிட்டு வேண்டுமென்றே அப்பால் நகர்ந்து போய்விட்டாள். அவர் அதை எதிர்பார்த்ததுபோல சிரித்துக் கொண்டே திரும்பினார்.

பார்த்துக் கொண்டிருந்த ஆனந்திக்கு இரக்கமாகிப் போனது. ஆனாலும் அவரது அசட்டு / முரட்டுத்தனங்களை அவளால் தொடர்ந்தும் தாங்கிக் கொள்ள முடியாது. 'சின்ன வீடு' வைத்திருப்பதை ஏதோ ஒருவித பெருமையாகக் கருதும் ஒரு சமூகத்தில், ஆண் தன்னுடனான பெண்ணின் தொடர்புகளை அந்தத் தளத்துக்கு இழுப்பது தவிர்க்கமுடியாதபடிக்கு நிகழும். அது அங்கேயும் நடந்தது. அது தடைப்படுகிறபோது அவர் மூர்க்கமாய்க் கிளம்புகிறார். அவர் மாறமாட்டார். அவளோ ஆத்மாவில் விழக்கூடிய எந்தத் தளையையும் வெறுக்கிறாள். ஓர் உக்கிரத்தோடு வெறுக்கிறாள். அங்கே அவளுக்குப் பாதிப்பு இருக்கிறதோ?

கோவை செல்கிறவரை ஆத்மா என்கிற கருத்துருவம் அவளது சிந்தனையில் விழுந்திருக்கவில்லை. ஆன்மாவை உயிர் (Soul) என்கிற அர்த்தத்திலின்றி, சுயம் (Self) என்ற ஆளுமையாகக் கொண்டு இப்போது சிந்திக்கிறாள். சிந்தனையின் புதிய பரிமாணங்களை இப்போது அவள் அடைகிறாள் போலத் தெரிந்தது.

ஏப்ரல் பிறந்திருந்தது.

சம்பளத்துக்கு இன்னும் இரண்டு மூன்று தினங்கள் இருந்தன.

அன்று தியானேஸ்வரி என்கிற அவர்களது சிநேகிதி ஒருத்திக்கு திருமணம். மாலை 04:45 - 05:30 மணிக்கிடையில் சுபமுகூர்த்தம். 07:00 மணிவரை வரவேற்புபசாரம்.

ராம்ஜி திருமண வீட்டில் சந்திப்பதாகச் சொல்லியிருந்தான். அவர்கள் நட்பில் ஒரு தொய்வு விழுந்திருந்தது அண்மைக் காலத்தில். கோவை கருத்தரங்குக்கும் செல்லவில்லை. திருமண வீட்டுச் சந்திப்பு விழுந்த

தொய்வை நீக்குமென்று இருவராலும் நம்பப்பட்டது. வேலை விஷயம்பற்றி அவனிடம் கூறவேண்டுமென்று ஆனந்தி ஞாபகப்பட்டுக் கொண்டாள். வசதியான இன்னொரு வேலை தேடிக்கொள்கிற உத்தேசம் இன்னும் இருந்து கொண்டிருந்தது அவளிடத்தில்.

அன்று காலையிலிருந்தே திருமணத்திற்கு வெறுங்கையோடு எப்படிப் போவதென்ற அவதியிலிருந்தாள் ஆனந்தி. முதல் நாள் வரையிலும் எங்கெங்கோ முயற்சி பண்ணினாள். ஒன்றும் சரிவரவில்லை. நெல்பா மதியத்துக்குள் முடிவு தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறாள். அந்த ஒரே நம்பிக்கையின் மீதத்தில்தான் நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள். பதினொரு மணியளவில் நெல்பா போன் செய்து அவள் கேட்ட பணத்துக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளும் படியும் சொன்னாள்.

இரண்டு மணி வரையும் ஓட்டமாகாவே இருந்தது ஆனந்திக்கு. பணத்தை பெற்றுப் போய் பரிசுப் பொருளும் வாங்கியானது.

ஏற்கனவே பேசியிருந்தபடி சரியாக நான்கு மணிக்கு சந்தித்து பத்மாவதியின் மாருதியில் சிநேகிதிகள் புறப்பட்டார்கள். காரில் நெருக்கியடித்துக் கொண்டு ஏழு பெண்கள். மாருதி காரில் அது அதிகம். கொஞ்சம் பருமனான ஜெயஸ்ரீ, தான் பஸ்ஸிலோ / ஓட்டோவிலோ வருவதாகச் சொன்னபோது யாரும் சம்மதிக்க வில்லை. ஜெயஸ்ரீ ஏறிக்கொள்ள கார் புறப்பட்டது. ஆனந்தி செலுத்தினாள்.

ரதக் கனவுகள் கண்டவள் அவள். வளர்ந்த பிறகு அது கார்க் கனவானது. பின்னால் அது அவளது இறந்த கனவுகளில் ஒன்றாகிவிட்டது. ஆனாலும் அது மாதிரியான விசேஷ சமயங்களில் அவள் கார் செலுத்துகிறபோது, அது மீளவதாரம் செய்து தன்னின் இருப்பைக் காட்டும். உரு வந்ததுபோல் எழுந்து நின்று சன்னதம் ஆடும். அப்போது எல்லாமே வெறுத்துவிடும் அவளுக்கு. தன்னோடு படித்து நல்ல நிலையிலிருக்கிற சிநேகிதிகளிலும், கார் பங்களா கணவனுக்கு நல்ல உத்தியோகமென்று இருக்கிற தெரிந்த பெண்கள் மீதும் ஒருவகையான காழ்ப்பு பிறக்கும். அது, தனக்கும் அம்மாதிரியான வாழ்வு கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தின் மறுபக்கமென்பதை அவள் அறிவாள். ஆனாலும் அதை அவளால் தடுக்கமுடிவதில்லை.

சின்ன வயதிலும் பல ஏக்கங்கள் இருந்தன அவளிடத்தில்.

தெருமுனை வீட்டு ரீட்டா அழகழகான சட்டைகள் வைத்திருந்தாள். ஆனந்தியின் வகுப்பில் படித்தவள். ஞாயிறுகளிலும் விசேஷ தினங்களிலும் அவள் அணியும் சட்டைகளைப் பார்த்து அந்த வயதுக் குழந்தைகளெல்லாமே பேராசைப்பட்டிருக்கின்றன. எத்தனை நாள் அவள் மனத்துக்குள்ளாகவே சாம்பிச் சாம்பி தன் பிஞ்சு இதயம் கசங்கியிருப்பாள்! அப்போது தாயாரிலும் அவளுக்குக் கோபம் வரும். என்றைக்காவது ஒரு நல்ல சட்டை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நினைத்திருக்கிறாளா?

முயற்சியாவது செய்திருக்கிறாளா? பழைய சட்டைகளும் பட்டுப் பாவாடையும் கிழிந்துபோன பிறகும் பழைய துணிக்காரனிடத்தில் பாத்திரத்துக்கு மாற்றாகப் போடாது பாதுகாத்ததில் தான் எத்தனை ஆதங்கம் இருந்திருக்கும்! அம்மா மீது தான் பட்ட கோபம் நியாயமான தென்றே அவள் இப்போதும் நம்புகிறாள்.

உண்மையில் அவள் கோபத்தில் நியாயமிருக்கிறதா?

இவ்வகைக் கேள்விகளுக்கான பதில்கள் தரக்கூடிய நிகழ்வுகளின் பதிவுகள் ஞாபகங்களாய் வராதபடி மனத்தின் ஆழத்துள் அவை காலத்தினால் புதைக்கப்பட்டிருக்கின்றன. அது வெளிவரும் தருணத்தை அறுதியிடுவது கடினம். இதுமாதிரியான கணங்களில் காலம் கொடுமையானதாகப்படும். ஒருவர் மனத்தில் அநாதியானதுபோல் உறைந்திருக்கும் காழ்ப்பு வெறுப்பு கோபம் போன்ற உணர்வுகள் காரண காரியங்கள் அறியப்பட்டு விலக்கப்பட முடியாது போவது துரதிர்ஷ்டம்.

நாலரை மணியளவில் அவர்கள் திருமண மண்டபத்தை அடைந்தார்கள். நிறைந்த ஜனங்கள். ஐந்தரை மணிக்குள் தாலி கட்டு முடிந்தது. குளிர்பானம் / கோப்பியோடு திரும்பவிருந்தவர்களை தியானேஸ்வரி விடவில்லை. சாப்பிட்டே செல்லவேண்டுமென்று வற்புறுத்தினாள். இடிபட்டுப் போய் சாப்பிட்டுவிட்டு ஓட அவர்களுக்கு மனதில்லாதிருந்தது. இரண்டாவது பந்திக்கு காத்திருந்தனர்.

ராம்ஜி வந்தான். ஆனந்திக்கருகே அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான். கலகலப்பாக உரையாடினான் என்றுதான் சொல்லவேண்டும்.

சாப்பாடு முடிந்து வந்தபோது ஏழு மணி.

'ஆனந்தி!'

குரல் வந்த திசையில் ஆனந்தி திரும்பினாள்.

பாண்டிச்சேரி மாமா! சிவசங்கரனின் சித்தப்பா. நெய்வேலி வீட்டுக்கு அடிக்கடி வந்து போயிருக்கிறார். இங்கிதமான மனிதர். அவளுக்கும் அவர்மீது நிறைந்த மரியாதையுண்டு. பிள்ளைகளுக்கு அவர் வந்தால் கொண்டாட்டம்.

அவள் நிறையத் தடவைகள் போய்வந்த ஒரே உறவினர் வீடு அவரதுதான். மேகலாவின் நட்புக்குக் காரணமானவர்.

எதார்த்தமான வாழ்க்கைக்கு அவர் உதாரணம். அது அவளுக்குப் பிடிப்பதில்லையென்றாலும், மரியாதை அது காரணமாய்க் குறைந்ததில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கிறார்களெனிலும் அவளுக்கு அவரோடு பேசப் பிடிக்கவில்லை. பேச விஷயமில்லை. அடுத்து, பேசிக்கொண்டு நிற்க நேரமிருக்கவில்லை.

கிட்ட நெருங்கினாள்.

அவர் ஓரமாக ஒதுங்கினார்.

சம்பிரதாயமான சுக விசாரிப்புக்கள் முடிய வேலை பற்றி, போய் வருகிற சிரமங்கள் பற்றி, சென்னையில் வாடகைகள் முன் பணங்கள் பெருமளவு உயர்ந்திருப்பது பற்றிக் கேட்டார். அது ஏதோவொன்றினது பூர்வாங்கமென்பது ஆனந்திக்கு விளங்கியது. ஆனால் வேறொரு நினைப்பு வந்து அவளை அதிரவைத்தது. நெய்வேலி யூடாகவே அவள் தனியாயிருக்கிற, வேலை செய்கிற விஷயங்கள் பாண்டிச்சேரி சென்றிக்க முடியும். அப்படியானால்... அவளின் அந்தரங்கமுமா? அவளது வாய் அடைத்து வந்தது. சுருக்கமான பதில்கள் ம்... ங்ஆ... என்ற முனகல்களாகிக் கொண்டிருந்தன.

அவள் கலங்கி அழிந்து வருவது அவருக்குத் தெரிந்தது. அப்படியே திரும்பிக்கொண்டு அவரை அதிலே ஸ்தம்பித்து நிற்க வைத்துவிட்டு அவள் விறுவிறுவெனப் போய்விடக் கூடுமோ? நொருங்கி வருவது அவ்வளவு துல்லியமாயும் பூரணமாயும் தென்பட்டது. அவள் போய்விடுவதன் முன்னம் தான் சொல்ல நினைத்ததைச் சொல்லிவிட அவர் விரும்பினார். 'நான்... என்னால் எதுவும் முடியுமென்று... விதிக்கெதிராக நிமிர்ந்து நின்றவர்கள் இன்றைக்கு இருந்த இடம் தெரியாது அம்மா. அந்த கர்வம் கொஞ்ச காலத்துக்கு வெற்றி மாதிரித் தென்படும். ஆனால் உண்மையில் அது வெற்றியில்லை. வெற்றியில்லையென்று புரிகிற நேரத்தில் வாழ்க்கை பெரும்பாலும் அழிந்து போயிருக்கும். அம்மா... அப்பா... சகோதரர்கள்... கணவன்... மனைவி... பிள்ளைகள்... மாமன்... மாமி... என்று சுற்றம் தழுவி வாழ்வதுதான் சுகம். மனிதன் மரிப்பான். வாழ்க்கை மரிப்பதில்லை. மனிதனின் இருப்பை ஞாபகங்களாய் நிர்மாணிப்பவை உறவுகள்தான். மனிதனின் தொடர்ச்சியும் அது. மரணம் கடந்தும் வாழ்வது இப்படித்தான். இதைப் புரிந்துகொண்டு உன் பிடிவாதத்தை நீ கைவிட வேண்டும் அம்மா. உனக்குத் தெரியுமோ, ஆதர்ஷ்யா பெரிய மனுஷி ஆனது? எவ்வளவு சந்தோஷங்களை நீ இழந்திருக்கிறாய் பார்த்தாயா?'

மெய்தான் போலத் தெரிந்தது.

ஆனால் ஏற்கனவே எரிச்சல்ப் பட்டிருந்ததால் அவளுக்கு அவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கிற பொறுமை இருக்கவில்லை.

அவர் குடும்பத்தோடு ஒன்றிணையத்தான் சொல்கிறார். அப்படியானால் அவளின் அந்தரங்கம் அவருக்குத் தெரியாது; நெய்வேலியிலும் யாரும் தெரிந்து கொள்ளவில்லையென்ற நினைப்பு இழந்த சொல்லை அவளிடத்தில் திரும்பிவரச் செய்தது.

அவள் பேச்சை வளர்த்த விரும்பவில்லை. 'மாமா... உடன்பிறந்தே கொல்லும் வினையென்பார்கள். கொண்டு வந்தால் தந்தை... சீர்கொண்டு சென்றால் சகோதரி... என்று சில வாக்கியங்களும் நம் புழக்கத்தில் உண்டு. இவையெல்லாம் நீங்கள் சொன்ன குடும்ப வட்டத்துள் உள்ள உறவுகளின் தன்மையைத்தான் தெரிவிக்கின்றன. ஆனாலும் இவற்றையெல்லாம் உறவுகளின் பொதுப்பண்பு என எடுத்து நான் வாதாட வரவில்லை. புறநடையாகவே இருக்கட்டும். ஆனால் நல்ல உறவுகள்போல் நல்ல நட்புகளும் உண்டு. அதிலும் எனக்குக் கிடைத்த நட்புகள் தாயையும்

புருஷனையும் விடவே நல்லவை. மேலானவை. குடும்ப கட்டுமானத்தைப் பேணிக்கொண்டு மரணம் தாண்டி வாழ நீங்கள் உங்கள் சுயத்தின் எதனையும் இழப்பீர்கள். மனித உன்னதங்களையும் சுயங்களையும் இழக்காமல் வாழ்ந்து சாவது எனக்குப் பிடிக்கும். இதிலே சிலவேளை கஷ்ரம் வரலாம். நல்ல செய்திகள் காதிலே விழாதும் போய்விடுகின்றன. ஆனாலும் மனித கவுரவம் முக்கியமானது. இல்லையா மாமா? நீங்கள் என் கோணத்தைப் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன். சரி மாமா, நான் வரப்போகிறேன். சிநேகிதிகள் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மங்களா எப்படி இருக்கிறாள்?'

அவர் மேலே பேச முடியாதவராய் தலையை மட்டும் அசைத்தார்.

அவளது பேச்சின் சூட்டை அந்தக் கடைசி விசாரிப்பு தணித்திருக்குமா? அவள் நின்று பார்க்கவில்லை. சிநேகிதிகளுடன் போய்ச் சேர்ந்தாள்.

எல்லோரும் பேசிச் சிரித்தபடி காரை அடைந்தனர்.

அப்போதும் ஆனந்திதான் ட்ரைவர்.

இருள் கவிந்திருந்தது. செறிவாய்.

போக்குவரத்து இறுக்கத்தில் லேசாய்த் தளர்வு.

சாலிக்கிராமத்திலிருந்து ஆர்க்காடு சாலை வழியே வந்து நூறடிச் சாலையில் திரும்பியாகிவிட்டது. ஜெயஸ்ரீயை அண்ணா நகரில் இறக்கி விட்டு, புரசைவாக்கத்தில் நெல்பாவை விட்டுவிட்டு, கார் திரும்பிவந்து பச்சையப்பன் கல்லூரியடியில் திரும்பி சூளைமேடு சந்தியை அடைய வேண்டும். அங்கே பெரும்பாலும் எல்லாரும் இறங்கிவிடுவார்கள். வேகமாய்ச் சென்றால் எல்லாரையும் இறக்கிவிட்டு ஏழரை மணிக்கு பத்மாவதியை அனுப்பிவிடலாம். நூறடிச் சாலை நெருக்கடி குறைந்திருந்தது. ஆனாலும் தண்ணீர்லொறி, பஸ், சாமான் ஏற்றிய கனரக வாகனங்களென்று உறுமியபடி பறந்து கொண்டிருந்தன. ஆனந்தியும் வேக அமுக்கியை அழுத்தினாள்.

பாண்டிச்சேரி மாமாவை அவள் கோபித்திருக்க வேண்டியதில்லை. அவரால் அப்படித்தான் பேசியிருக்க முடியும். அவள் அப்போது வருந்தினாலும், எல்லோரும் அப்படித்தானே சிந்தித்து விடுகிறார்கள் என்று நினைக்க இயல்பான வெடுவெடுப்பு வந்து சேர்ந்தது.

கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

திடீரென ஒரு வளைவில்...

'ஆனந்தீ...!

பக்கத்தில் அமர்ந்திருந்த பத்மாவதி அலறினாள்.

ஆனாலும்... ஆனந்தி தாமதித்துவிட்டாள்.

ஒரு கணம்தான்.

மறுகணம்... கார் கிரீச்சிட்டது; தொடர்ந்து ஒரு பெரும் முழக்கம்; அடுத்து கார் ஏற்றுண்டு... கலகலத்து உருண்டது பள்ளத்தில்.

# பகுதி இரண்டு

# 15

மிக்க ஆபத்தினை அறிவித்துக் கொண்டு எழுந்த ஆரவாரங்களெல்லாம் மெல்ல மெல்ல அடங்கிவிட்டிருந்தன. அம்புலன்ஸின் சைரன், ஸ்ரெட்ஸர்களை ட்ரொலிகளில் வைத்து தள்ளிக் கொண்டோடும்போது கிளர்ந்த ரப்பர்ச் சில்லுகளின் கச்ச.. கச்ச... உருள்வு, டாக்டர்களும் நர்ஸ்களும் நடக்கையில் எழும்பிய தும்... தும்... சம்பாத்தொலி, திறந்து மூடப்பெற்ற கதவுகளின் படீர் ஓசைகள் என்று வியாபகமாகியிருந்த சப்த வலயம் தேய்வு பெற்று வெகுநேரமில்லை. அங்கே விழுந்திருந்த அமைதி, ஆரவாரங்கள் அகன்றதின் அடையாளமாய் மட்டும் தென்படவில்லை. ஒரு பெரும் சோகத்தின் கவிவாயும், ஆபத்தான நிலைமைகளை அறிவித்துக் கொண்டிருந்த காலத்தின் வெகு சமீபத்திய மர்ம பிரசன்னமாயும்கூட தோற்றம் காட்டிற்று. காற்றிலும் ஒரு பயம் எழுதி நின்றிருந்தது.

ரோஸா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவின் அத்தீவிர கண்காணிப்புப் பகுதியிலே அறையொன்றில் கிடத்தப்பெற்றிருந்தாள் ஆனந்தி. அறையின் எதிர்ப்புறத்தே அரைச்சுவர் எழுப்பிய கூடத்துக் கட்டில்களில் அன்னலட்சுமி, குஞ்சம்மா, ஜெயஸ்ரீ ஆகியோர். கீழேயுள்ள பொது வார்ட்டில் பத்மாவதியும், ரஞ்சியும். ஆனந்தியின் அறைக்குப் பக்கத்து அறையில் சவக்காலை எடுத்துச் செல்லத் தயாராய் ஒரு பிரேதம்.

ஆனந்தியும்,அங்கே கொண்டுவரப்பட்ட போது நினைவு தவறித்தான் இருந்தாள். தலையிலிருந்து யாரோ போட்ட கட்டுக்கூடாகவும் ரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. சிகிச்சை அளிக்கத் தொடங்கி இவ்வளவு நேரமாகியும்கூட நினைவு திரும்பவில்லை அவளுக்கு. ரத்தக் கசிவும் நிற்கவில்லை. ரத்தக் கறையின் விசாலிப்பு அதைத் தெரிவித்துக் கொண்டிருந்தது.

இதயத் துடிப்பின் வீறின்மையை ஒரு நவீன பொறியின் வரைபட ஒளிப் புள்ளியொன்று காட்டிக் கொண்டிருந்தது.

சுவாசச் சீரின்மை வெளிப்படத் தெரிந்தது.

அறையில் ஒரு தாதி நின்றிருந்தாள்.

புட்டியிலிருந்து ரத்தம் துளிதுளியாய் ஆனந்தியின் கைநரம்புள் இறங்குவதை ரப்பர்க் கண்ணாடிக் குழாய் வழியே அவ்வப்போது

நிர்விகற்பமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். ரத்தவேற்றம் நின்றுவிட்டால் வார்ட்டுக்குப் பொறுப்பான டாக்டருக்கு உடனடியாக அறிவிக்கவேண்டியது; அல்லாமல் ரத்தப்புட்டி காலியாகுமானால் செய்யவேண்டியது பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்த செலான் புட்டிக்கு தொடுப்பை மாற்றிவிடுவது மட்டும்தான். அதற்குமேலே நோயாளியின் நிலைமையில் கொஞ்சம் நம்பிக்கைப்பட வாய்ப்பிருக்கும். அப்போது இதயத் துடிப்பு, ரத்த அழுத்தம், உடற்சூடு ஆகியவற்றில் கவனப்பட்டால் போதும். அதுவரை அந்த அக்கறையின்மை தவிர்க்க முடியாதது. அது ஒன்றுமட்டுமில்லை. நூற்றுக் கணக்கானவர்களை விபத்துப்பட்டு அந்த வார்ட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பாதிக்கும் பாதியளவு மரணத்திலேயே முடிந்திருக்கிறது. நிர்விகற்பம் தவிர்க்கவியலாததுதான். அதுவும் முன்பின் அறிமுகமோ சம்பந்தமோ படாதவர்களிடத்தில் அது க்ண்டிப்பாய் நடக்கும். மேலும்... அது அவளின் தருணமில்லை. டாக்டரினது கூட இல்லை. இன்னொரு மகாசக்தியினது.

ஆனந்தியின் உடலை கட்டிலிலே வளர்த்திவிட்டிருந்தார்கள். புருவம்வரை தலையிலே கட்டு போடப்பட்டிருந்தது. கன்னங்களை மூடிக்கொண்டு தாடையைச் சுற்றியும் வந்திருந்தது அது. வேறு சில இடங்களிலும் கட்டுக்கள் இருந்தன. அவை பெரிய காயங்களாகத் தெரியவில்லை.

இரவு வளர்ந்துகொண்டிருந்தது. நிசப்தம் கனத்துக் கொண்டிருந்தது. இன்னும் எவ்வளவு நேரமோ? என்று ஒரு சலிப்பு பிறக்கிறது நர்ஸிடத்தில். தன் நிச்சயிப்பு இன்னும் நிறைவேறாது கணங்களாய் நீண்டு நள்ளிரவும் தாண்டியிருந்ததில் எரிச்சல் அடைந்திருந்தவள் அவள். ஆழ் துயில் பொழுது அது. படுத்தால் புரட்டிப் போட்டாலும் விழிப்பு வரச் சம்மதிக்காது. அதனால் உட்காரவும் பயந்து அறைக்குள்ளே சிறிது நடக்கவும் நின்றுகொண்டிருக்கவும் செய்து கொண்டிருந்தாள்.

ஒரு பொழுதில் ஆனந்திக்கு லேசாக பிரக்ஞை வந்தது. கண்களைத் திறக்க முயன்றாள். இமைகளைச் சேர்த்து ஒட்டியது போல் இருந்தது. திறக்க முடியவில்லை. முக அதைப்பும் வீக்கமும் போடப்பட்டிருந்த கட்டும் அதை இயலாததாக்கியிருக்கும். மட்டுமில்லை. அதனுள் சுரந்து கொண்டிருந்த விண்ணென்ற வலியும் அதற்குத் தடையாக இருந்திருக்கலாம். தனக்கு என்ன நடந்தது, தான் எங்கிருக்கிறாள் என்று தெளிய முடியாத பாதி ஸ்மரணையாகக்கூட அது இருக்கலாம். எனினும் தன்னையறியாத ஒரு உத்வேகத்தில் ஒரு முயற்சி வெடிக்க, இமைக் கீறுகளுக்கூடாய் பிரபஞ்சம் தோற்றம் காட்டுகிறது. வெளியில் இருட்டின் விரிவு. ஏன் வெளிச்சமேயற்றுப் போனது அவளின் பிரபஞ்சம்? அது எதனதும் குறியீடா? அவளது வாழ்க்கை நாளதுவரையில் இருளினுள்ளே கழிந்திருப்பதின் அடையாளமோ?

அப்படியானால் பரிச்சயமற்ற உணர்வு ஏன் தோன்றுகிறது? பயம் ஏன் கிளரவேண்டும்? இன்னும்... இது இருளேதானா?

சிறிது நேரத்தில் இருள் புகாராய் நிறமாற்ற உருமாற்றங்கள் பெறத் துவங்குகிறது. அந்த விநோதத்தில் ஆழ்ந்து ரசிக்க முடியாதபடிக்கு துண்ணென்று ஒரு திடுக்காட்டம். அவளுக்கு இருள்போல் புகாரும் அச்சம் தரும். அதை அவள் விரும்பியிருக்கவில்லை. சின்ன வயதிலே அதனுடன் கழித்த பொழுதுகள் அதிகம். ஒரு புள்ளியிலிருந்து அந்தத் தொடர்பு, விருப்பம் யாவும் பொசுங்கிப் போயின. அவள் அது ஏனென்று நினைத்து எப்போதும் அலட்டியதில்லை. ஒருவகை மூச்சிரைப்பின் அறிகுறிகள் தோன்றி புகாரின் ஒவ்வாமை தெரியவர, வெறுப்பின் மூலமே தெரிந்துவிட்டதாக அந்த அவாவுகை அடங்கி விட்டது. எப்போதாவது இருந்துவிட்டு ஒரு கனவாக அல்லது அறிதுயில் நினைவாக அந்தப் புகார் வரும். ஆனாலும் பெரிதாக விரும்பப்படாததும் நினைக்கப்படாததுமான காட்சியாகவே அது இருந்து வந்திருக்கிறது.

திடீரென அந்தப் புகார் அவளை வலித்திழுத்து தன்னுள் அமிழ்த்த முயன்றதுபோலிருந்தது. அவளும் ஆழ்ந்து போக பிரக்ஞைபூர்வமாக விரும்பினாள். ஏதோ ஒரு விருப்பம். எல்லாவற்றுக்கும் முடிவாக அங்கேயொன்று இருக்கிறபோல் விருப்பம்.

அதற்குள் ஸ்மரணை தவறப் பார்த்தது. ஸ்மரணையிழப்பின் விளிம்பு நிலையில் அவளுக்கு அப்புகாருக்குள் சில அசைவுகள் தெரிந்தன. மனித அசைவுகள். அது வெறும் நினைப்பா... கனவா... நிகழ்வா என்றறிய முடியாத ஒரு மன மம்மர் அப்போது அவளில் கவிந்து கொண்டிருந்தது.

பாழ் விரிந்தது.

அது நிறையிருள் இல்லை.

பிரக்ஞையிழப்பில்லை.

கனவில்லை.

பாழ்...!

எதுவுமே அற்றது பாழ்.

அவளுள் நிர்கதியொன்று கிளர்கிறது. ஒரு பேரபாயத்தின் புரிதலில் பேரச்சம் பிறக்கிறது.

மாமா...! என்று அலறுகிறாள்.

மாமா? யாரது?

புகாரும், புகாருள்ளான அசைவுகளும், பாசுர ஒலிப்புகளும்... மிகச் சடுதியில் அவள் சின்னதாகப் போய்விட்ட உணர்வு. அவளுக்கு அப்போது அச்சம் அற்றிருக்கிறது. அவள் புலக் கூர்மை பெறுகிறாள்.

வெண்புகாருக்குள்ளிருந்து ஓருருவம் அவளை அப்படியே அள்ளியெடுத்து அணைக்கும் ஆதுரத்தோடு கைநீட்டி வருகிறது. அந்த அழகுத் திருமேனிக்கும், வாட்டசாட்டமான உருவத்துக்கும் கருகருவென்ற தாடி கேசம் நெஞ்சுமுடிக்கும் உரியவர் யார்? அவர் தான் மாமாவா?

மாமா...! என்கிறாள்

ஆநந்தி...! ஆநந்தீ...!

அப்படி ஒரு அழுத்தம் அழைப்பில். எப்போதும் அப்படித்தான். ஆனந்தம் அப்படியே குரல் பார்வை முகவிரிவெங்கும் கொழிக்கும்.

அவள் அவரிடம் போய்விடுவதற்கான தன் தவிப்பைப் புலப்படுத்தி கால்களை உதைத்தும், கைகளைப் பரத்தி அவரை நோக்கித் தூக்கியபடியும் ஒரு ஏக்கப் பரதவிப்பில்.

அவர் கிட்டக் கிட்டவாய் வருகிறார். அவள் மட்டத்துக்குக் குனிந்து, ஏன் ஆநந்தி அழுகிறாய்? என்கிறார்.

அம்மா அடிச்சுட்டாள் மாமா.

பெரியவங்கள அப்பிடிச் சொல்லக் கூடாதும்மா.

அவள் அடிச்சுட்டாளே என்னிய.

ஆநந்தி...! அவர் அன்போடு அதட்டுகிறார்.

அம்மா அடிச்சுட்டாங்க.

அப்படித்தான் சொல்லணும். ம். ஏன் அடிச்சாங்க?

பாலைக் கொட்டியிட்டேன் மாமா.

அப்போ... அடிப்பாங்கதானே?

சொம்புள்ள பால் இருக்குன்னு எனக்குத் தெரியாதே!

மகாலட்சுமி கையில் குச்சியோடு கோபாவேசமாக வருகிறாள். சொல்லச் சொல்லக் கேளாமத் துள்ளி பாலைக் கொட்டியிட்டு... இங்கு வந்து என்னடீ கதை அளக்கிறே?

பாய்ந்து அவளைத் தூக்கியபடி திரும்பி தன் மார்பில் மறைத்துக்கொண்டு அம்மாவின் விளார்களிலிருந்து மாமா பாதுகாப்பு கொடுத்துவிடுகிறார். அவள் தூர நின்றே எட்டி அடித்துவிட முயல்கிறாள். அவளின் உன்னுதல்களிலும் பாய்ச்சல்களிலும் ஆனந்திக்குக் குதூகலம் பிறக்கிறது. அவரது இடுப்பைக் கால்களால் இடுக்கிக்கொண்டு தோளுக்கு மேலாய் முகத்தை நீட்டி சிரித்து நெளித்து அழகு காட்டுகிறாள் தாயாரைப் பார்த்து.

பளார்!

தாண்டியிராத இடைவெளியைக் கடந்து... பட்டிராத தேகத்திலே பட்டு... விரித்த இடது கையினால்...

வீரிடுகிறாள் ஆனந்திக்குட்டி.

மாமா பதறிப்போகிறார்: என்னங்க இது? குழந்தைதானே! அதைப் போய்...!

மகாலட்சுமி இன்னும் கோபம் அடங்காமலே விடுவிடுவென உள்ளே நடக்கிறாள்.

அப்பா வந்தவுடன சொல்லி அம்மாவுக்கு நல்லா அடி வாங்கிக் கொடுக்கணும். நீ அழாத கண்ணு.

அவர் அவளை முகத்தோடு சேர்த்தணைத்து முதுகை நீவி அழுகையைத் தாக்காட்டுகிறார்.

மாமாவின் முழுச் சவர முகத்தில் மெதுவாய் நீட்டி நின்ற முளைகள் அவளை உறுத்துகின்றன. பரந்த மார்பின் நிறைந்த இளமுடி மொறமொறப்பாய், இன்னும் அதனுள் ஆழ்ந்து ஆழ்ந்து போகக் கூடியதான ஆறுதலைச் செய்கிறது. அது ஒரு சுகம். அன்பினதும் அடைக்கலத்தினதும் அடையாளங்களாய் அவை அவளளவில் இருந்தன.

மாமா மறைகிறார்.

புகார் மறைகிறது.

இருள் நிறைகிறது.

அவள் பிரக்ஞையிழக்கிறாள்.

## 16

வீதியில் ஆள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. ஆனாலும் ஒன்பது மணிக்கு மேலே ஆகியிருக்க முடியாது. அக்னி நட்சத்திரம் தொடங்க இரண்டு மாதங்களளவில் இருந்ததாயினும் வெப்ப வியாப்தி காற்றெங்கும் ஏறி நின்று மேனியைச் சுட்டது. இரவுச் சாப்பாட்டை அப்போதுதான் முடித்திருந்தாள் மகேஸ்வரி. மரக் கிளைகள் சலசலத்தன. வெளியே வந்து நிற்கவேண்டும்போல இருந்தது. வெளிவாசலுக்கு இடப்புறமாய் சற்றுத் தள்ளி குறுக்கே கிடந்த நெடுஞ்சாலையைப் பார்த்தபடி வந்து நின்றாள். அது அவள் வழக்கமில்லை. ஏதோ ஒரு அசௌகரியம் அவளை அந்த மாதிரியெல்லாம் செய்யப்பண்ணிக் கொண்டிருந்தது. எதிரே கிர்... கிர்... என வாகனங்கள் தோன்றிய வேகத்தில் மறைந்துகொண்டிருந்தன. நெடுஞ்சாலையிலிருந்து கிளை பிரிந்த பாதையில் பாலக் கட்டுமானப் பணி

நடந்துகொண்டிருந்ததால் அந்த நெடுஞ்சாலையில் கூட வாகனப் போக்குவரத்து குறைவாகவே இருந்தது. நெடுஞ்சாலைக்கு மறுபக்கத்தில் இருந்த பிள்ளையார் கோவிலினுள் தீபம் தெரிந்தது. கர்ப்பகிருகங்கள் கரிய நிறத்தன. சொரூபமும் கருங் கல்லினாலானது. தீபம், இன்னும் ஒன்பது மணியாகவில்லை என்பதன் அடையாளம். ஒன்பது மணிக்கு மேல் கோயிலை அய்யர் திறந்து வைத்திருப்பதில்லை. மனதுக்குள் புகுந்திருந்த சங்கடம் பிள்ளையாரை நோக்கித் தொழவைத்தது அவளை. நீண்டநேரமாய் தீபக் கொழுந்தை உற்றுப் பார்த்தபடியிருந்தாள்.

ஒரு சில மாதங்களின் முன்னால் ஏற்பட்ட ஒரு ஏக்கப் பாதிப்பிலிருந்து இன்னும் அவள் முற்றாய் மீளவில்லைப் போலத் தெரிந்தது. அவளது கண்களினுள்ளேயே சோகமொன்று வசதியாக ஒழிந்திருந்து அவ்வப்போது தன்னை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது. சோகம் மனிதர்களை எவ்வாறு அரித்துவிடுகிறது! தனிமை எப்படி அதைத் தூண்டி விட்டு விடுகிறது!.

மகாலட்சுமி வீட்டுக்குத் திரும்பினாள். வெளிக் குமிழ் விளக்கை அணைத்துவிட்டு வாசல் கதவைச் சாத்தி தாழிடுகிற நேரம், பின்னால் கேற் திறந்த சத்தம் கேட்டது. இந்த நேரத்தில் யாராகவிருக்கும்?... என்று நினைத்துக்கொண்டு மறுபடி விளக்கைப் போட்டுவிட்டு வெளியே வந்தாள்.

ராகவன் வந்துகொண்டிருந்தான். பின்னால் யாரோ ஒருத்தர். யாரோ அல்ல... அவரை அவளுக்குத் தெரியும். ஆனந்தி அங்கே தங்கியிருந்து வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்த காலத்தில் அவளை ஏற்றிச் செல்லவோ விட்டுப் போகவோ அவர் அங்கே வந்திருக்கிறார். அவருடைய பெயர்கூட... ராதாகிருஷ்ணன் சார்.

ஒருவகையில் அந்தக் குடும்பத்தில் விழுந்த இடிக்கு அவரும் ஒரு காரணம்.

அவளது புருவங்கள், முகத் தசைகள் சுருங்கின. அந்த மனிதர் ஏன் ராகவனோடு வரவேண்டும்? இன்னும்... இங்கே எதற்காக வரவேண்டும்? ஆனால் ராகவனின் பதட்டமும், அவனது முகத்தில் பதிந்து கிடந்த சோகமும் இறுக்கமும் அவளைத் திடுக்கிட வைத்தன. அவனே அபூர்வமாகத்தான் வருவான். வருகிறவனின் முகமும் அந்த மாதிரி விறைத்துக் கிடந்தால்...? அவள் விரைந்து ராகவனை எதிர்கொண்டாள். 'என்ன ராகவா? என்ன, இத்தனை அவசரமாய்...: அதுவும் இந்த நேரத்தில்...?'

ராகவன் வந்த காரணத்தைச் சொல்ல முடியாமல் தடுமாறி நின்றிருந்தான்.

மகாலட்சுமியின் கலக்கம் அதிகரித்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டு தன் நிதானத்தை தனக்கே காட்ட வேண்டிப்போல, 'உட்காருங்க' என்றாள்.

அவர்கள் அமரவில்லை; அசையக்கூடவில்லை.

அவள் உள்மனம் உளைந்தது; அடிவயிற்றில் கலக்கம் கிளம்பிற்று. 'ராகவா... இப்படியே பேசாமல் நின்றால்...? என்னவென்று சொல்லேன்!'

களைப்படைந்தவன் போல் வெளித் திண்ணையில் பொத்தென அமர்ந்தான் ராகவன்.

'ராகவா!' அவள் பொறுதி கலைந்தாள்.

எங்கேயோ இருக்கிற யாருக்காகவோ போன்ற குரலில் அவன் தொடங்கினான்: 'சாயந்தரமாய்... லட்சுமிக்கு... ஆக்ஸிடெண்ட் ஆச்சு.'

'ஆக்ஸிடென்டா? சிவசிவா!'

'சீரியஸா ஒண்ணுமில்லை. கையில் மட்டும்தான் காயம். ப்ராக்ஸர் ஏதாவது இருக்கலாமாம். நாளை விபரம் தெரியும்.'

ராதாகிருஷ்ணன் ராகவன் பக்கத்தில் வந்து நின்றார்.

'எப்படி ஆச்சு?'

'சாலிக்கிராமத்தில் சிநேகிதி யாருக்கோ கல்யாணமாம். எல்லோருமாய் காரில் போயிருக்கிறாங்க...'

'காரில் போகும்போதா ஆக்ஸிடென்ட் ஆச்சு? அய்யய்யோ! ஏனப்பா... ஆனந்தியும் கூடப் போயிருந்தாளா?'

ராகவன் ஆமென்று தலையசைத்தான்.

'ஆனந்திக்கு ஒன்றுமில்லையே ராகவா?'

'பயப்படும்படியாக எதுவுமில்லை. ஆனாலும்... நான் அங்கிருந்து புறப்படும் வரையிலும் கூட நினைவு திரும்பவில்லை.'

அது பயப்படும்படியான நிலைமையில்லையா? மகாலட்சுமி பதைக்கத் துவங்கினாள். 'எந்த ஹாஸ்பிட்டல்?'

'ரோஸா மருத்துவமனையென்று... வடபழனி பஸ் நிலையப் பக்கமாய் இருக்கிறது.'

'இப்ப போனால் பார்க்க முடியுமல்லவா?'

'இப்ப எதுக்கம்மா? நேரமும் ஒன்பது மணி ஆகிவிட்டது. தேவையான எல்லாவற்றுக்கும் ஏற்பாடு பண்ணிவிட்டுத்தான் வந்திருக்கிறோம். நீங்கள் காலையில் போய்ப் பார்த்துக் கொள்ளலாம்' என்றார் அதுவரை பேசாது நின்றிருந்த ராதாகிருஷ்ணன்.

அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள் ஒரு வெறும் பார்வை. அவர் சொன்னது அவளுக்கு மிக்க இதமாக இருந்தது. அவர் குரல் ஆனந்தியின் ஆபத்தின்மையின் உத்தரவாதமாய்த் தோன்றியது.

'வேறு யாருக்காவது மோசமாய்...?'

'யாரோ ரமணியாம். மருத்துவமனை கொண்டு செல்கிறபோது இறந்துவிட்டது.' ராகவன் சொன்னான்.

நிலைமையை மறுபடி இறுக்கமாக்கிவிட்டது கூடச் சென்றிருந்த ஒரு பெண்ணின் மரணச்செய்தி. அதற்குமேல் அதிகநேரம் நிற்கவில்லை ராகவனும் ராதாகிருஷ்ணனும்.

அவர்களிருவரும் சென்றபின்னால் உள்ளே வந்து கதவைத் தாழ் போட்டுக் கொண்டு மகாலட்சுமி வெளிவிளக்கை அணைத்தாள். அதிகாலையில் எழும்ப வேண்டுமென்று உடனடியாகப் பாய்விரித்து படுத்தும் கொண்டாள். தூக்கம்தான் பிடிக்கவில்லை. பார்வைக்கெதிரில் தடித்த அந்தச் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த பெண்டுலம் மணிக்கூடு டக்... டக்... என்று அடித்து பழையதுகளையெல்லாம் நினைவுமீட்கச் செய்தது. ஆனந்தி சின்னஞ் சிறிசாய் இருக்கும்போதுதான் அந்த மணிக்கூடு வாங்கியது. வெளிச்சத்தில் விரும்பியும் இருட்டில் வெறுத்துமாய் அவளின் இருவகை உணர்வு நிலைகளையும் அப்போது அது தாங்கியிருந்திருக்கிறது. அதன் தொங்கும் நாக்கு அங்குமிங்கும் ஆடுவதைப் பார்த்துக் கொண்டேதான் ஆனந்தி தூங்குவாள். பின்னால் அதைப் பார்த்துக் கொண்டானால்தான் அவளுக்குத் தூக்கம் வருமென்கிற நிலை ஆகியது. அவள் தூங்கும் வரை மின்விளக்கும் எரிந்து கொண்டிருக்க வேண்டும். கொஞ்சக் காலமாய் அதன் உள்ளார்ந்த காரணம் தாய்க்குச் சரி, தந்தைக்குச் சரி புரியாமலே இருந்தது. பின்னால் அவள் பேச்சில் அவர்கள் ஊகித்தார்கள். விளக்கை அணைத்ததும் ரேடியம் பூசப்பட்டிருந்த அதன் முள்ளுகளும் எண்களும் பூனைக் கண் நிறத்தில் சுடரத் தொடங்கிவிடும். அது அவளுக்கு யாரோ சொன்ன பேயின் கண்களாய் உருவகமாகத் தொடங்கிவிடும். அம்மா லைட்டைப் போடும்மா!... என்று முரண்டு பிடித்து விளக்கைப் போடுவித்த பிறகுதான் அவளுக்குத் தூங்க வரும். மணிக்கூட்டை மாற்றி கொழுவினால் என்னவென்று கூட யோசித்தார்கள். அதுவும் முடியவில்லை. அதைப் பார்த்துக் கொண்டானால்தான் அவளுக்கு தூக்கமும் வரும். அதனால் அறைக்குள்ளிருந்து கூடத்துச் சுவர் மணிக்கூட்டைப் பார்க்க வசதியாய் கதவும் எந்நேரமும் திறந்திருக்க வேண்டியிருந்தது. அந்தரங்கமேயில்லாது போனது அவர்களுக்கு. எல்லாவற்றையும் பொறுத்தார்கள்.

ஆனந்தி மருத்துவ மனையில் எப்படியிருக்கிறாளோ என்று நினைக்க கண்ணீராய்க் கொட்டியது அவளுக்கு. ஆனந்திக்காக இன்னும் தன்னால் அப்படி இரக்கப்பட்டுக் கொள்ள முடிகிறதேயென்று மகாலட்சுமிக்கே ஆச்சரியமாக இருந்தது. மூன்று நான்கு மாதங்களுக்கு முன் பாண்டிபஜார்க் கடை வீதியில் அவள் நடந்துகொண்ட முறைக்குப் பின்னால் நினைப்பு, உருக்கம் எதுவுமே வேண்டாம் என்றுதான் இருந்தாள். ஆனால் குஞ்சம்மாவைப் பார்த்துப் பேசியபின்னால் குறையுயிராயிருந்த

அவ்வுணர்வுகள் திரும்ப துளிர்த்துவிட்டன. ஒரு நம்பிக்கைப் பொறி முழு உயிர்ப்பைத் தந்துவிட்டது. விபத்து என்று அறிந்த பிறகு அவள் மெழுகாய் உருகிப்போனாள். பெற்ற மனதென்று தனியாக அவளால் எதையும் காரணம் கற்பிக்க முடியவில்லை. அவளால் இயல்பாகவே அப்படித்தான் ஆத்திரமடைய, இறுக்கமடைய, இரங்க முடிந்திருந்தது.

வெகுநேரம் கழித்தே தூங்கியும் நேரத்தோடு எழும்பி விட்டாள். அவள் மருத்துவமனை வாசலை அடைந்தபோது மணி எட்டுக்கு உள்ளேதான்.

அதன் பிரமாண்டம், உள் தூய்மை, அழகு, அது கட்டளையிட்டுக் கொண்டிருந்த அமைதியாவும் அவளைப் பிரமிக்கவும் சிறிதளவு அச்சமடையவும் வைத்தன. மிக உயரமான அதன் தடித்த மதில்கள் எவ்வளவு இறுக்கமாக வெளியுலகின் ஆராவாரத்தையும் மாசினையும் தடுத்து நிற்கின்றனவென்பதை உள்ளே செல்லச் செல்லப் புரிந்தாள்.

ராகவனிடம் எல்லாம் விபரமாகக் கேட்டு வந்திருந்தும் மருத்துவமனைக்குள் நுழைந்த அளவில் திசை, வலம் - இடம் எல்லாம் குழம்பிப்போயின அவளுக்கு. குழப்பத்தைக் குறைக்க ஓரமாயிருந்த கன்ரீனில் போய் தண்ணீர் எடுத்துக் குடித்தாள். கொஞ்சம் நிதானமடைய வரவேற்புப் பகுதியில் விசாரித்துக்கொண்டு அவசர சிகிச்சைப் பக்கமாய் நடந்து அதற்கப்பாலும் தள்ளியிருந்த ஒரு மாடிக் கட்டிடத்தில் இரண்டாவது தளத்திலுள்ள தீவிர கண்காணிப்புப் பகுதியை அடைந்தாள்.

அது சிறிதாக இருந்தது. வார்ட்டில், ராகவன் சொல்லியிருந்தபடி மூன்று கட்டில்கள் இருந்தன. இரண்டு கட்டில்களில் குஞ்சம்மாவும் ஜெயஸ்ரீயும் படுத்திருந்தனர். குஞ்சம்மாவின் கட்டிலோரமாய், அவளது சித்தப்பா போலும், ஒருவர் உட்கார்ந்திருந்தார். வெறுமையாகவிருந்தது அன்னலட்சுமியின் கட்டிலாக இருக்கலாம். ஆள் தற்காலிகமாகத்தான் இல்லையென்பதை அடையாளங்கள் தெரிவித்தன.

குஞ்சம்மாவை அணுகி நாலு வார்த்தை ஆறுதலாகப் பேச நினைத்தாள். ஆனால் எதிர்ப்புறத்து அறை திறந்து மூடுகையில் நீளப்பாட்டில் கிடந்த கட்டிலும், அதில் நீட்டி நிமிர்த்திக் கிடந்திருந்த உருவமும் தெரிய ஆனந்தியை முதலில் பார்க்கிற தவிப்பில் விறுவிறுவென அறைக்கு நடந்து விட்டாள்.

உள்ளே நின்றிருந்த நர்ஸின் பார்வை பெரும் புதினத்தில்போல் விரிந்தது. அத்தனை உருவ ஒற்றுமையில் அவள் இரண்டு பேர்களைச் சந்தித்ததில்லை. அவள் யாரென்று நர்ஸ் கேட்கவில்லை. ஒன்றில் தாயாக அல்லது மூத்த சகோதரியாக இருக்கலாமென்று நிச்சயப்பட்டுக் கொண்டாள். கால்களில் செருப்பில்லாததில் திருப்திப்பட்டுக்கொண்டு பேசாமலிருந்தாள்.

மகாலட்சுமி கட்டிலை நெருங்கினாள். பேச்சு மூச்சற்ற ஆனந்தியின் நினைவிழந்த கோலம் அவளை என்னவோ செய்தது. பொறிகள் யாவும்

கலங்கிப் போயினாள். கண்கள் நீர் வடித்தன. சிறிதுநேரத்தில் சுதாரித்துக் கொண்டு பையிலே கொண்டு வந்திருந்த பிளாஸ்கை எடுத்து தலைமாட்டோரம் இருந்த மேசையில் வைத்தாள். பின் நர்ஸை அணுகி, 'இப்ப எப்படி இருக்கிறது? இரவு கண் முழித்தாளா? இப்போது தூங்குகிறாளா, மயக்கமாய்க் கிடக்கிறாளா?' என்று விசாரித்தாள்.

'இங்கே கொண்டு வந்ததற்கு பிரக்ஞை மீளவில்லை' என்றாள் நர்ஸ்.

அவளது விரட்டுகிற பார்வை மேற்கொண்டும் கேள்வி எதனையும் கேட்க இடம் வைக்கவில்லை. நர்ஸின் பதில் மட்டுமில்லை, அந்த அறையின் நிசப்தம், தூய்மை, கருவிகள் எல்லாமே கூட ஒருவகை அச்சத்தையும் இனம்புரியாத ஆபத்தையுமே அறிவித்துக் கொண்டிருந்தன.

மகாலட்சுமி அன்னலட்சுமியிடம் ஓடினாள்.

அன்னலட்சுமி அப்போது கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

'அன்னலட்சுமி...!'

அவளால் அடக்க முடியவில்லை. கண்ணீராய்க் கொட்டினாள். வார்த்தைகளற்ற அத்துக்க வெடிப்பு அனைவரையுமே அதிரவைத்தது.

அன்னலட்சுமி தேற்றினாள். பின்னர் காலையில் டாக்டர் வந்திருந்தபோது விசாரித்துத் தெரிந்துகொண்ட விபரத்தைக் கூறினாள்: 'பத்து மணியளவில் ஸ்கேன் பண்ணப்போறாங்களாம். அதற்குப் பிறகுதான் தீர்மானமாய் ஏதாவது சொல்லுவார்களென்று நினைக்கிறேன். ஆபரேஷன் அவசியமாக இருக்குமென்றுதான் தோன்றுகிறது.'

'எங்கே... தலையிலேயா?'

'ஆமாம். மூளை பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று டாக்டர் அபிப்பிராயப்படுகிறார்.'

'அப்ப... ஆனந்தியின் நிலைமை... கடுமைதானா?'

'அப்படித்தானம்மா தெரிகிறது. ஆனாலும் நாம நல்லதையே நினைப்போமே! முக்கியமான நியூரோ சர்ஜன்ட் டெல்லியில் ஒரு சர்வதேச நரம்பியல் நிபுணர்களின் மாநாட்டில் கலந்து கொள்ளப் போயிருக்கிறாராம். இன்றோ நாளையோ அவர் திரும்பி வரக்கூடுமென்று எதிர்பார்க்கிறார்கள். அவரே ஆபரேஷன் செய்ய நேர்ந்தால் அதிர்ஷ்டம்தானாம்.'

'இல்லையென்றால்... கஷ்டம்தானா?'

'உயிருக்கு இப்போதுகூட பெரிய ஆபத்தில்லை. உடம்பு செயலிழக்கிற, நினைவிழக்கிற ஆபத்திலிருந்து தப்பிக்க அந்த டாக்டரே இந்த ஆபரேஷனைச் செய்தால்தான் நல்லது. அதற்காக... வேறு டாக்டர்களென்றால் மோசமான நிலைமை ஏற்படுமென்று எண்ண வேண்டியதில்லை மாமி.'

நம்பகத்தின் மூலமாகவே எப்போதும் அவளுக்கு நன்மைகளின் அடைதல் இருந்து வந்திருக்கிறது. அதனாலும் நம்பினாள். வேறு வழி இல்லாததாலும் நம்பினாள்.

சிறிதுநேரம் மௌனமாய் நின்றிருந்த மகாலட்சுமி, 'அன்னலட்சுமி... நீ என்ன நினைக்கிறாய்? நெய்வேலிக்கு விஷயம் சொல்லியனுப்ப வேண்டுமா?'

'சொல்லத்தானே வேண்டும்! பின்னால்... அறிவிக்கவில்லையே என்று யாரும் குறைசொல்லக் கூடாதல்லவா?'

'மெய்தான். ஆனால்... வருவார்களா?'

'வருவார்கள் மாமி. இப்ப பாருங்கள்... ஆக்ஸிடெண்ட் என்று தெரிஞ்சதும் நீங்கள் ஓடிவரவில்லையா?'

'அப்புறம் ஆனந்தி என்ன சொல்லுவாளோ?'

'ஆனந்தி சொல்வதற்கு இதில் என்ன இருக்கிறது? அவர்கள் இவளுடைய பிள்ளைகளல்லவா? அவர் இவள் புருஷனல்லவா? யாரும் ஒன்றும் சொல்லமுடியாது.'

அதற்குமேல்... சொல்ல வேண்டுமென்றே மகாலட்சுமிக்கும் பட்டது. அவர்கள் வருவார்களென்று நிச்சயப்பட முடியாவிட்டாலும் அவ்வாறு செய்யவேண்டியதின் அவசியத்தை ஒப்புக்கொண்டாள்.

அந்த நேரம் ராகவனும் ராதாகிருஷ்ணனும் அங்கு வந்து சேர்ந்தனர். ராதாகிருஷ்ணன் வந்த வேகம் குறைந்து முதல் நாள் இரவில் போல் மெல்ல பின்னால் ஒதுங்கிக் கொண்டார், மகாலட்சுமியை அங்கே கண்டதும். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது என்று கோபமாக எண்ணினாலும் குற்றம் செய்துவிட்டு எத்தனை பேர் குறுகுறுக்காமலே இருந்துவிடுகிறார்கள் என்றெண்ணி அடங்கினாள் அவள்.

அன்னலட்சுமி அன்று மாலையோ / மறுநாளிலோ வீட்டுக்குத் திரும்பி விடலாம் என டாக்டர் தெரிவித்துள்ளதைச் சொன்னான் ராகவன்.

குஞ்சம்மாவின் நிலைமை கொஞ்சம் கடுமையாகவே இருந்தது. காலிலும் இடுப்பிலும் காயம்பட்டிருந்தாள் அவள். ஆனாலும் ஆபத்து என்று சொல்கிற அளவு காயம் இல்லை.

ராகவனிடம் தான் அவசரமாக நெய்வேலி போய்வர வேண்டியிருப்பதைக் கூறினாள் மகாலட்சுமி. அதனால் அவனும், முடிந்தால் குஞ்சம்மாவின் சித்தப்பாவும்தான் அடிக்கடி வந்து விசாரித்து ஆனந்திக்குத் துணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். பின் ஆனந்தியின் அறைக்குச் சென்று கோப்பி பிளாஸ்க்கை எடுத்து வந்து குஞ்சம்மாவிடம் கொடுத்து அவளது உடல்நிலையை விசாரித்தாள். ஆனந்தி இன்னும் மயக்கமாயே இருப்பதைக் கூறி கண் விழித்தால் அவளுக்கும் கோப்பி

கொடுக்கச் சொல்லிவிட்டு தான் நெய்வேலி போய் வரவிருப்பதைத் தெரிவித்தாள். குஞ்சம்மாவும் அதைச் சரியான முடிவென்றாள்.

அப்போது ராகவன் மகாலட்சுமியை அழைத்தான். ஓரமாகச் சென்று நின்றவனை அணுகினாள் அவள். அவன் மெதுவான குரலில் கேட்டான்: 'ஏனம்மா... ஆபரேஷனையும் இங்கேயே செய்விக்கிற எண்ணமா?'

'ஏன்... இது நல்ல மருத்துவமனைதானே?'

'மருத்துவமனை நல்லதுதான். ஆனால்... மிகவும் அதிகமாக பணம் தேவைப்படுமே! அதுவும் இதுமாதிரி தலையில் ஆபரேஷனென்றால்... எங்களைப் போன்றவர்களால் தாங்கிக் கொள்ள முடியாமலிருக்கும். அதற்காகச் சொன்னேன்.'

ஆமாம். ரொம்ப பணம் தேவைப்படும்தான். அவள் இந்தக் கோணத்தில் யோசிக்கவேயில்லை. இதுவரை நடந்த சிகிச்சைக்கே நிறைய பணம் தேவைப் படப் போகிறது. இந்த நிலையில்... ஆபரேஷனென்றும் போனால்...?

'இந்த நிலைமையில் வேறு ஆஸ்பத்திரிக்கு மாற்றுவதும் முடியாதல்லவா?' என்றாள் ஒரு யோசனையில்.

'மெய்தான். அதையும் யோசிக்கணும்.'

சிவசங்கரன் விஷயத்தை அறிந்ததும் வந்து பார்க்கச் சம்மதித்தால் பிறகு பணம் பற்றித் தீர்மானிக்கிற பொறுப்பு அவர்மீதாகிவிடும். மகாலட்சுமி தன் எதிர்பார்ப்பை ராகவனிடம் சொன்னாள்.

அதுதான் சரியானது என்றான் அவனும். 'முடிந்தவரை அவரை வரச்செய்யப் பாருங்கள்.'

ஜெயபூரீயாகவே வந்து பேச்சில் பங்கெடுத்துக் கொண்டாள். 'இந்த நேரத்தில் நீங்கள் கூடவிருக்கிறது நல்லதில்லையாம்மா? அவங்களுக்கு டெலிகிராம் குடுத்தாப் போதாதா?' என்றாள்.

தந்தி எதுக்கு? அவர்களுக்கு தொலைபேசி மூலமே செய்தி அனுப்பலாம். ஆனாலும் தகவல் நேரிலே தவிர வேறு எந்த ஊடகம் மூலம் சென்றாலும் தக்க விளைவினை ஏற்படுத்தாது என்பது அவளுக்குத் தெரியும். அவர் இளகக்கூடிய மனிதர்தான். இளக முடியாதபடிக்கு இவள்தான் அவரைக் கல்லாக்கி வைத்திருப்பாள். இல்லாவிட்டால்... அடுத்தடுத்த நாளே வந்து கூட்டிக்கொண்டு போயிருப்பார். மகாலட்சுமி நேரில் சென்றால் தவிர்க்க முடியாததாலேயே வரச் சம்மதிக்கவும் கூடும். அந்த விநாடி வரை கடமை காரணமாகவே அவர்களிடத்தில் விபத்து பற்றி அவசியம் தெரிவிக்க வேண்டுமென்று நினைத்திருந்தாள். இப்போது இன்னொரு காரணத்துக்காகவும் தெரிவிக்க வேண்டிய அவசியமிருக்கிறது. அவர் வருவது ஆனந்திக்கு உயர்ந்தபட்ச வைத்திய வசதியை அளிப்பதற்காகவேனும் நிகழ்ந்தாக வேண்டும்.

ஆனந்தியை அறை வாசலில் நின்று சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு திரும்பி பஸ்ஸெடுக்க விரைந்து நடந்தாள்.

# 17

இரவில் அவ்வப்போது ஸ்மரணைகள் மீண்டு வந்திருந்தன. தான் தவிர்த்து, தன்னின் வலி தவிர்த்து வேறு எதுவுமே உணராதிருந்தாள் ஆனந்தி. சூழல் இடம் பொழுது என்று எதுவும் தெரிந்திருக்கவில்லை. காலையில் விடிவிடியென்று விடிகிற நேரத்தின் ஒரு குளிர்ப் பரவலில் அவளுக்கு நினைவு மறுபடி வந்தது. தானும் தன் வலியும் தவிர வேறு ஏதோவும் புரிவது போலிருந்தது அப்போது. ஆனால் ஒரு பலஹீனம் பலவந்தமாய் இழுத்து அவளை நினைவு தவறிய குட்டையில் விழுத்தப் பார்த்துக் கொண்டிருந்தது. அவள் முயன்றாள் அதிலிருந்து விடுபட. அதன் வலிப்பு அதிகமாயிருந்தது. அதனுள் ஆழ்வதற்குள் சூழலையாவது அறிந்துவிடுகிற உத்வேகத்தில் கண்களைத் திறக்க முயன்றாள். பிரிந்த இமைகள் ஒரு வலியுணர்தலோடு பின்வாங்கி திரும்பவும் மூடிக்கொண்டன.

இமை வெடித்து மூடிய கணப்பொழுதில் தோற்றமாகிய மேலிலும் பக்கங்களிலுமான வெண்மையில் பொறி குருடுபட்டது போலாயிற்று. ஒருவித திகில் மனத்தில் வந்து புடைத்து நின்றது. அந்த வெண்மையும், பளீரென்ற வெண்மையாயிருந்தது. நினைவு தவறி சூன்யத்துள் ஆழுகையில் ஒரு சுகம் இருந்தாலும், திரும்புகையில்லாத ஆழுகையாக அது ஆகிவிடுமோவென்ற ஒரு எண்ணமிருந்து அந்த நினைவிழப்பை உக்கிரமாய் வெறுத்துக் கொண்டிருந்தது. அதனால் பிரக்ஞையடைதல் ஒரு ஜனனமாக இருந்தது அவளுக்கு. மெல்லிய நினைவுக் கீறலாயினும் அதைப்பற்றிக் கொண்டு முழுப் பிரக்ஞைக்கு மீண்டுவிடுகிற எத்தனம் இருந்தது. மழுங்கிக் கிடந்த புலன்களைஅவள் மெல்ல மெல்லவாய்த் தீட்ட முயன்றாள்.

இவ்வாறான நிலைமையில்தான் மீண்டுமொரு ஸ்மரணை ஆனந்தியிடத்தில் தோன்றியிருந்தது. அந்த ஸ்மரணையில் மேலும் தெளிவிருந்தது.

மேலே விர்ர்ரிட்டது மெல்லவாய் மின்விசிறி. வெளியே சரசரவென்று சருகுகளின் உதிர்வு. மரக் கிளைகளின் சலசலப்பு. வேம்பு மா மரங்களிலிருக்கக் கூடிய குருவிகளின் கிளுகிளுப்பு. யாவும் தலைமாட்டுப்புற ஜன்னலினூடு உள்ளே பாய்ந்து வந்து கொண்டிருந்தன. ஆனாலும் அவற்றால் கூட தானே மட்டுமாய் உணர்ந்த பிரபஞ்சத் தனிமை அவளிடத்தில் அற்றுப் போகவில்லை.

ஒருவேளை... அதுதான் மரண உலகா? மரணமடைந்தவர்கள் அடைவதற்கான புத் என்ற நரகமோ ஒருவேளை?

அவளது அச்சம் சட்டென எகிறியது.

அலற வேண்டும் போல இருந்தது. அடக்கிக் கொண்டாள். அங்கே அது தடுக்கப்பட்ட செயலாக இருக்கக்கூடும். ஆனாலும் இருத்தலின் உணர்வு முற்றாக அழிந்திருக்கவில்லை.

பொய்யும் மெய்யுமான புரிநிலைக் கணங்கள் அவை. அவற்றில் நிஜமும் கற்பிதமுமான உலகம் விரிந்தது. அவள் விசு மாமாவின் லோகத்தில் இருந்தாள். அப்படியொரு தோற்றம். தோற்றங்கள் கற்பிதம் செய்யப்படக் கூடியன. அதனால் பொய். கானல் ஆகிய தோற்றமும் பொய்யேயாகும். அவஸ்தைக் கணங்கள்போல் நம்பிக்கைகளும் விருப்புகளும் மெய்.

மனம் சிந்தனைகள் செறிந்து குழம்பத் துவங்க கண்களின் ஓரத்தில், கண்களில், நெற்றிப் பொட்டில், கபாலத்துள், உச்சியில்... வலி விண்விண்ணென்றது.

இப்போது இன்னும் சில நிலவரங்கள் தெளிவாயின.

சூழ அமுத்தமான அமைதி விழுந்திருந்தது. அதைக் கிழிக்க தூரத்திலும் தூரமாய் எழுந்து கொண்டிருந்தன சில உலோக மர ரப்பர்ச் சத்தங்கள். இன்னும்... ஆடிநின்ற காற்றில் தொற்று நீக்கி மருந்தின் நெடில் மிதந்திருந்தது. இப்போது அனுமானம் நிச்சயமாயிற்று.

மேலே நினைக்கப் பாரமேறிற்று. என்ன நடந்ததென்பதே அவளுக்குத் தெரியாமலிருந்தது. சில காட்சிகள், உரையாடல்கள்,குரல்கள் தவிர அனைத்தும் பாழாய்க் கிடந்தது. நினைக்க பயமேறியது. அதற்கு தான் இன்னும் பொறுத்திருக்க வேண்டுமென்பதை அவள் உணர்ந்தாள். அவள் பொறுத்திருப்பாள். அவளுக்கு அவசரமில்லை.

பிரக்ஞையின் முதல் பொறியில் சற்றுத் தள்ளி கறுத்த நர்ஸ் ஒருத்தி தூய வெண்ணுடையில் மேசையில் அமர்ந்திருந்தது விழிக்கடையில் லேசாய்த் தெரிந்தது. அவளையே பார்த்துக் கொண்டிருப்பதாய்ப் பட்டது. அந்தளவு லேசாய்ப் பட்ட காட்சியிலும் அவள் முகத்தின் கடுமை துல்லியமாய்த் தெரிந்தது. ஏன் அந்தக் கடுமை! அவள் செத்துப் போகவில்லையென்றா அல்லது இன்னும் பிரக்ஞையடைந்து எழும்பவில்லையென்றா?

இதற்கு முன்பு விழிப்பு நேர்ந்த ஒரு பொழுதிலும் ஒரு நர்ஸை அதேயிடத்தில் கண்டிருந்தது அப்போது ஞாபகமாயிற்று. அது சில நாட்கள் முந்தியா, சில மணி நேரங்கள் முந்தியாவென்று அவளுக்கு யூகமில்லை. அவள் நல்ல சிவப்பாக இருந்தாள். நடுத்தர வயதும் கடந்தவளாய் இருந்தாள். அவளது முகம் இவளதுபோல் கடுமையாக இருக்கவில்லையாக ஞாபகம். அவள் தன் முகத்தில் ஜீவகளை கொண்டிருந்தாள். இவள்...? முகம் யந்திர மனிதியினது போல் இருந்தது. அலட்சியம் பொறுப்பின்மை முகத்தில், பார்வையில், அசைவில் கொடிகட்டியிருந்தது.

அவளுக்குச் சில விபரங்கள் வேண்டியிருந்தன.

என்ன நடந்தது அவளுக்கு? எப்போது நடந்தது? எப்படி அங்கே வந்தாள்? யார் கொண்டு வந்தார்கள்? அவளால் எழும்ப முடியவில்லையே. ஏன்? எழும்பினால் நடக்க முடியுமா? அவளுக்குக் கால்கள் இருக்கின்றனவா? ஒருவேளை மரத்துப் போய்க் கிடக்கின்றனவா? அந்த தொடுகையுணர்ச்சியின்மை கைகளிலும் இருக்கின்றதே! இப்படியே மெல்ல மெல்ல முழு உடலும் மரத்துப் போய் விடுமோ? உறுப்புகளில் இன்னும் இதயமும் சுவாசமும் மட்டும்தான் செயற்பாட்டில் இருக்கின்றனவா? அது அவள் உயிர்ப்புக்கும் மரணத்துக்கும் இடையேயான எல்லையில் வந்து விட்டாள் என்பதைத்தானே அர்தமாக்குகிறது? எல்லாமே தெரியவேண்டும்.

ஆனால் யாரிடம் கேட்க?

நர்ஸைத்தான் கேட்க வேண்டும்.

அதற்கு கண்ணை விழிக்க வேண்டும். அசைவுகளை ஏற்படுத்த வேண்டும். இரண்டுமே முடியாதுபோல் இருந்தது. அவதிதான் மிச்சமாயிற்று. பிரக்ஞையாய் எழுவதைவிட அதையிழந்து இருளில் ஆழ்தல்தான் சுகமாய் இருக்கும் போல் தெரிந்தது.

அடுத்த கணம் அவள் அந்தகாரத்துள் ஆழ்ந்து கொண்டிருந்தாள்.

தலைக்குள் வலி திடீரெனச் சுழித்தெழுந்தது. க்ரீச்... என்ற பேரிரைச்சல் அதைத் தொடர்ந்து. மண்டை பிளப்பது போல் அதிர்ச்சி. புதியவோர் உணர்வு ஜனித்துக் கிளம்புகிறது. கீழ் மேலாய்... மேல் கீழாய்... உருண்டு... புரண்டு... பேரண்டக் குலுக்கலில் போல் எதிலோ மோதி... அவள் எல்லாம் அழிகிறாள்.

'விசு மாமா...!'

யாரது விசுமாமா? அவர்தான் மாமாவா? ஆம். இப்போது அவர் ஆகிருதி தெரிகிறது. முகமும் தெரிகிறது. நீண்டதொரு ஆழ்ச்சியிலிருந்து அவர் நிலம் கிழித்த விதையாய் காலப் படைகள் கிழித்து எழுகிறார்.

ஆகா... மாமாவேதான். விசுமாமா அவளுக்குப் பிடித்த மனிதர். நம்பிக்கைக்குரிய பிடிப்பு. அவர் அவள் ஆதாரம்; அபயம்.

விசுவலிங்கம் மூன்றாவது வீட்டுப் பங்கஜத்தின் அண்ணன். ஆறடிக்கு வளர்ந்த சரீர மலை. ஆனாலும் உடம்பில் எந்த இடத்திலும் தசை வழியாது. திரண்டு திரண்டு இருக்கும். சந்தன மேனி. முகத்தில் எப்போதும் சிரிப்பு. அது விதூஷகச் சிரிப்பல்ல; ரட்சக சிரிப்பு. தன் கவனத்தைக் குவித்துக் குவித்து உள்வரை ஊடுருவுவதை மறைப்பதற்கான ஒரு போர்வைதான் அது. சரீர ஞான பலங்களினால் வரும் ஒருவித கர்வமும் கவனயீனமும் எப்போதும் அந்தக் கண்களில் துள்ளிக் கொண்டிருக்கும். அது கவனயீனம் கூட அல்ல; ஒரு இளக்காரம் - ஒரு அசட்டை.

தந்தை இறக்கும்போது ஆனந்திக்கு ஆறு வயது. அப்போதே அவரை அவளுக்கு நன்றாகப் பிடிக்கும். தந்தையின் மடியளவு அவரது மடியும் பழக்கம். தந்தையினது போல் அவர் தோளும் பரிச்சயம். கோவில் திருவிழாக்களுக்கு, உபந்நியாசங்களுக்கு, மாலை உலாவுதல்களுக்குப் போகையில் அவர் தோளில்தான் வசதி கண்டிருக்கிறாள் அவள். டுடுடுடு... என்று புல்லட் மோட்டார் சைக்கிள் பறக்க அவர் பின்னால் ராஜகுமாரிக் கணக்கில் அவள் உலா சென்றிருக்கிறாள்; பரதநாட்டிய வகுப்பு, சங்கீத வகுப்புகளுக்கும் போயிருக்கிறாள். தந்தையின் இழப்பைக்கூட அவள் அதனால்தான் பெரிதாய் உணராதிருந்ததே.

தந்தையின் இழப்பை அவள் உணராதிருந்தாளென்று அம்மா அப்போதெல்லாம் திட்டியிருக்கிறாள். அது அப்படித்தானென்று அவளுக்குமே பின்னால் உணர்கையானதுதான். ஆனால் ஏன் அப்படியென்று அவளால் என்றும் புரிந்து கொள்ள முடிந்ததேயில்லை.

அந்தளவுக்கு விசு மாமா நெருங்கி வந்திருந்தார். அப்படியானவர்தான்... திடீரென ஒருநாள் மாயமாகிப் போனார். ஏன் மறைந்தார்? எங்கே போனார்? பின்பு என்னவானார்? அவளுக்குத் தெரியாது. அந்தளவு நெருக்கத்திலான உறவையும் அவள் சுளுவில் மறந்துபோனாள். இப்படியும் சொல்லலாம். அந்தப் பிரிவில் குவியவேண்டிய கவனம், வேறொன்றில் குவிந்துபோயிற்று. அது இதமாக இருக்கவில்லையென்று மட்டுமே அவள் புரிகிறாள். அதுபற்றி மேல் விபரம்... பூஜ்யமாகவே அப்போதும் கிடக்கிறது.

தூரத்திலிருந்து மிக மெதுவாய் யாரோவினது ஒப்பாரி கேட்டது.

ஒரு மரணத்தின் அடையாளம்.

அவளுக்கு அது தனதோவென்று திகில் எகிறுகிறது.

மறுகணம் அதைத் தணிப்பதுபோல் அறைக்குள் பரிச்சயமான குரலொன்றின் ஒலிப்பு.

'கொஞ்சம் பிடிவாதமிருக்கிறது. கொஞ்சம் முரட்டுத்தனமும் இருக்கிறது. ஆனாலும் நல்லவள். எப்படியோ வாழந்திருக்க வேண்டியவள். இன்று இப்படி ஆகியிருக்கிறாள்.'

'சொந்தக்காரரென்று யாரும் வந்து பார்க்வில்லைப் போல இருக்கிறதே.'

'எவரையும் வேண்டுமென்று நடந்தவளில்லை இவள்.'

'பாவம். அதன் கொடூரங்களை படுக்கையில் விழுகிற போதுதான் புரியும்படி ஆகிவிடுகிறது ஒருவருக்கு.'

இரண்டு பேர் காலடிகளும் நகர்ந்தன. அதிலொன்று மேசையை நோக்கி.

இருள்... இருள்... இருளிருளாய் விரிகிறது. ஆனந்தி ஓடிக் கொண்டேயிருக்கிறாள். அவள் தேடும் அடைக்கலத்தினது இருப்பின் அடையாளம் கரைந்து போயிருக்கிறது அதில்.

நினைப்பொன்று வெடித்துக் கிளம்பி சுழிக்கிறது மனத்துள்.

அது ஒரு மார்கழி மாதம். நோன்பு தொடங்கியிருந்தது. திருவெம்பா ஓதத் தொடங்கியிருந்தார்கள். திருப்பாவையும் தான். அந்தக் குளிர் மாதத்தில் காற்றில் ஒரு ஜல் சலங்கையொலி மிதந்திருந்தது. பாசுரமொன்றின் மெல்லிய கீறுகள். அது அவளுக்குப் பிடித்தமான ஆண்டாள் திருப்பாவைப் பாசுரம்தான்.

அவள் எழுந்து வந்த எந்த அதிகாலையும் அந்தளவு அழகாயும் இனிமையாயும் இருந்ததில்லைப்போல் ஒரு நிறைவு. ஆனால் அதற்கெதிரான ஒரு காட்சிதான் பின் முற்றத்தில் அந்த இரண்டு மனிதர்களால் உருவாகியிருந்தது.

நெஞ்சுள் கோழை கரித்து இருமப் பார்த்தது. ஏனோ அடக்கிக்கொண்டு தன் பிரத்தியட்சத்தை மறைத்துக் கொள்கிறாள் அவள்.

துளசி மாடத்தோடு மகாலட்சுமி. அவளை முழுவதுமாய் அவளது பார்வையிலிருந்து மறைத்திருந்தது விசுமாமாவின் பின்புறம்.

எவ்வளவு நேரம்தான் நின்றிருப்பார்கள் அந்த விறைத்த ஸ்திதியில்.

அவள் அவர்கள் முன்தன்னை வெளியாக்குகிறாள். அவர்கள் தான் கவனித்ததாயில்லை. விசுமாமா!... என்ற அவளது குரல் அவர் காதில் விழுந்ததாயில்லை. முகம் வெம்பிப் போயிருக்கிறார். எதிரே தலை குனிந்தவளாய் கண்களில் சிவப்பு படர்ந்தும், அழுதுவிடுவாளைப்போல் வெதும்பிக் கொண்டும் தாயார் நின்றிருக்கிறாள். அதிகாலையிலேயே எழும்பித் தோய்ந்திருப்பாள் போலும். அவள் பரட்டைக் கூந்தல் விரிந்து ஈரத்தில் இன்னும் நீண்டதாக தோற்றம் காட்டிக்கொண்டிருக்கிறது. திரட்சிப்பட்ட நுதிகளிலிருந்து நீர்த் துளிகள் சிந்துகின்றன. பக்கப்பாட்டில் நின்று பார்த்து திகைப்பேறி நிற்கிறாள் சின்ன ஆனந்தி. அவர்கள் பிரச்னையின் சின்ன இழையும் அவளுக்குப் புரிபடவில்லை.

வெகுநேரத்தின் பின் மௌனம் வெடித்து, ஏன்?... என்கிறார் விசு மாமா அழுவாரைப் போல் உடைந்த குரலில்.

இதுவரை காலத்திலும் அவர் மட்டும்தான் என்னை அப்படி அழைத்தார். அப்படி அழைக்க விரும்புவது, அவராகவும் ஆகிவிடுவதற்கான மூலவிருப்பத்தைக் கொண்டிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. நான் எங்கள் மீதான உங்கள் அக்கறையை அவர்மீதான ஆழ்ந்த நட்பின் விளைச்சலென்றுதான் இத்தனை காலம் நினைத்திருந்தேன். இல்லாவிட்டால்

உங்களை இவ்வளவு தூரம் நெருங்க விட்டிருக்கமாட்டேன். மாஹீ... என்று அழைக்கிற உரிமை இனி எவருக்குமே தான் இல்லை.

கூறிவிட்டு மகாலட்சுமி அடக்கமுடியாமல் அழுகிறாள்.

ஆனந்தி இன்னும் கூடத்தான் குழம்பலில். இதற்காகவா அழுவார்கள்? மாஹி என்று விசுமாமா மட்டுமில்லை, வேறு எவர் அழைத்தாலும் தான் என்ன? ஏன் அம்மா மறுக்கிறாள்?... என்று கிளம்புகின்றன கேள்விச் சரங்கள்.

அவர்கள் கதைத்தும் வெகு அபூர்வமாகவே ஆனந்தி பார்த்திருக்கிறாள். தந்தை இருந்தபோதும் அப்படித்தான். ஆனாலும் அவர்கள் பேசியது விந்தையாகப் படவில்லை. ஏதோ ஒருவகையில் அதை அவள் பிரியப்பட்டிருந்தாள் போலக்கூடத் தெரிந்தது. அந்த அழுகையை அவள் எப்படிப் புரிந்து கொள்வது?

விசுமாமா சுதாரித்துக் கொண்டு அவள் அழுகை அடங்க சொல்கிறார்: ஜீவரத்தினத்தை எனக்கு அய்ஞ்சாறு வருஷமாகத் தெரியும். அத்தனை காலத்திலும் உங்கள் இரண்டு பேரோடும் பழகினதைவிட ஆநந்தியோடுதான் நான் அதிகமாய்ப் பழகியிருக்கிறேன். ஆநந்திக்காகவேதான் இங்கே எனது வரவு ஆரம்பித்தது என்று கூடச் சொல்லலாம். ஜீவரத்தினத்தின் கடைசிக் காரியங்களை முடிக்கிறவரைக்கும், முடித்து சிலகாலம் வரைக்கும்கூட, என் மனத்திலே இந்த மாதிரியான ஒரு எண்ணம் தலைகாட்டினதில்லை. பின்னரும் இதை வேண்டாமென்றுதான் ஒதுக்கியொதுக்கி வந்தேன். ஆநந்திக்காகவே மனம்மாறினேன். அது ஞானக் குழந்தை. தன் பிற்காலத்தில் பெரிய பெரிய அற்புதங்களைச் சாதிக்கக்கூடிய ஆற்றல் அதனுள் இருக்கிறது. அதைச் க்ஷீணிக்க விட்டுவிடக் கூடாது. அவளை நன்றாக வளர்த்தெடுக்க வேண்டுமென்று நெஞ்சுக்குள் ஒரு தாகம். அதை யாரோவாக இருந்து என்னால் எவ்வளவு தூரம், எவ்வளவு காலம் செய்வது சாத்தியமாயிருக்கும் என்று நான் யோசித்ததே எனது இந்தத் தீர்மானத்துக்கான முதன்மைக் காரணம். மாஹீ... என்பது எனக்கு ஆசாபாசங்களின் அழைப்பில்லை. புறஉலகின் விரசமான பார்வைகளையும் பேச்சுக்களையும் அடக்குவதற்கான மந்திரம். அதுகூட மறுக்கக்கூடிய உணர்வா?... அவர் குரல் தழுதழுக்கிறது.

அவள் பதில் சொல்லத் தாமதிக்கவில்லை. ஏற்கனவே பதில் அவளிடத்தில் இருந்திருக்கிறது. ஆனந்தியை வளர்த்து ஆளாக்க என்னால் முடியும். அவர் இல்லாமல் போய்விட்டாலும் அவர் விட்டுப்போன நல்ல மனித ரென்ற பெயர் இருக்கிறது. அவர் தேடி வைத்துவிட்டுப் போன சொத்தென்று பெரிதாக எதுவும் இல்லைதான். ஆனாலும் வாழ்ந்து விடுவதற்கான ஆதாரத்தை இருக்கிற சின்ன உடைமைகளிலிருந்தே பெற்றுக்கொண்டு அதற்குத் தக்கமாதிரி வாழ்ந்துவிட்டுப் போகிறோம்... என்கிறாள்.

அவளை முன்னிலைப்படுத்திய ஒரு பிரேரணையில் அம்மாவின் பதில் சாதகமில்லாமல் வருமென்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

என்றுமே அவள் தன்னை பிரதானப்படுத்திக் கவனித்திருக்கவில்லைப் போன்ற ஒரு ஆராமை நெஞ்சு முழுக்க ஊர்கிறது. அவரின் விருப்பத்தை மறுத்தது அவள் மீதான வெறுப்பாக. விசுமாமா வாடினாற் கூட அவளால் பொறுக்க முடியாது.

அவளை யார் கவனித்தார்கள்?

அவர் தொடர்கிறார்: காலம் எவ்வளவோ மாறியிருக்கிறது. மகாத்மாகூட இதை ஆதரித்திருக்கிறார் என்பதை நீ தெரியாதிருக்க முடியாது. ஆனந்திக்காகவே என்றாலும் எனக்கேயான ஆசையும்கூட இதில் உண்டு. நீ பதில் சொல்ல அவசரப்பட வேண்டியதில்லை. நான் இன்று கல்கத்தா போவதாக இருக்கிறேன். திரும்பி வர இரண்டு வாரங்களாகும். அப்போது சொன்னால் போதும்.

மார்கழி எவர் மனத்தை விட்டு வைக்கிறது? வெளியே மனங்களிலெல்லாம் மகிழ்ச்சி. ஆனால் இரண்டு உள்ளங்கள் மட்டுமே உள்ளே சோகங்களாய்ப் பொங்கி வடிந்து கொண்டிருந்தன. அதில் மகாலட்சுமியினுடையது மட்டும் கோபமும் கலந்ததாய்.

விசுமாமா அந்த ஆழ்ச்சியிலிருந்து மிதக்கிறார். ஆனந்தி எதிரே நிற்கிறாள். மெல்ல அணைத்து, தலையை வருடி, முதுகில் லேசாய்த் தட்டிக் கொடுத்துவிட்டு விறுவிறுவென வெளியே நடக்கிறார். மகாலட்சுமி அறைக்குள் திரும்பி மறைய, விம்மி வெடிக்கும் மனத்தோடு வாசலில் வந்து நின்று மாமா சென்ற திசையில் பார்த்தபடி நிற்கிறாள் ஆனந்தி.

தூரத்தே காலடிச் சத்தங்கள்.

மெவாய் நெருங்கி வந்து... கட்டிலைச் சூழ நின்றுவிட்டு... ஏதேதோ குசுகுசுத்துவிட்டு விலகின.

மேலே அவளால் கிரகிக்க முடியவில்லை.

அதுவரை அவள் கண்டது கேட்டது எல்லாம் கனவா? அல்லது தன்னிச்சையாய்ப் புரண்ட மூளை நரம்புகளின் ஞாபக மீட்சியா? அல்லது அவற்றின் கற்பனை வெடிப்பா? எதுவாயிருப்பினும் அந்தத் தொடர் நிகழ்வு மனத்திரையில் குழம்பிப்போனது. இரண்டு வாரங்களின் பின் விசு மாமா திரும்பி வந்தாரா? அந்த இடைக்காலத்தில் குடும்ப நிலைமை, மகளின் எதிர்காலம் யாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து தக்கவொரு பதிலை மகாலட்சுமி தயாராய் வைத்திருந்தாளா?

அம்மாவின் கோலம் அமானுஷ்யமில்லை. ஆனாலும் அற்புதம். சதைப் பிடிப்புக் குறைந்த தேகம். அந்த உயரம் அந்த ஒல்லியை இன்னும் கொஞ்சம ஒல்லியாகவும், அந்த ஒல்லி அந்த உயரத்தை இன்னும் கூடுதலான உயரமாகவும் காட்டிக்கொண்டிருந்தது. மொத்தத்தில் அழகு என்று சொல்ல பெரிய அம்சங்களேதும் அந்த உடம்பில் இல்லை. ஆனால் நடையின் ஒயிலில், விழிகளின் புரள்வில், முலைகளின் வீறில், சிரிப்பின் விகாசத்தில்,

எப்போதும் ஈரலித்துக் கிடக்கும் இளஞ்சிவப்புப் பாரித்த சின்ன இதழ்களின் நெளிப்பிலும் சுழிப்பிலும்... பெரிய வசீகரங்கள் இருந்தன. எவர் மனத்தையும் குத்தி நிமிர்த்தி வீசியெறிந்துவிடும் அந்தத் திமிர்த்த கவர்ச்சி தானேயொரு சைன்ய பலத்துடன் முன்னணியில் நின்று கொண்டிருந்தது. அவள் ரதியில்லை; ரதீகர தேவி. அவளுக்கே விசு மாமாதான் நல்ல அடைக்கலமாய் இருந்தார் அப்பாவின் மறைவின் பின்.

விசு மாமா நல்லவர். வசதியுள்ளவர். கலா நாட்டமுள்ளவர். பெரும் சங்கீதப் பிரியர். மார்கழியில் அண்ணன் சபாக்களில் தொலைந்துபோய் விடுவான் என்று பங்கஜம் சொல்வதுண்டு. அவருக்கு பரதமும் பிடிக்கும். மகாலட்சுமி இவற்றையெல்லாம் யோசித்திருப்பாளா?

# 18

நெய்வேலி பஸ் நிலையத்தில் மகாலட்சுமி இறங்கியபோது இரவு மணி ஏழு. நேரத்தைத் தெரிந்ததும் அதுவரை அடங்கிக் கிடந்த அவதிமறுபடி சதிர்போட ஆரம்பித்தது. அங்கிருந்து கோர்ப்பரேஷன் பஸ் எடுக்க வேண்டும் அவள். பஸ்ஸுக்கு காத்து நிற்கையில் நினைத்து வந்ததேதும் நடக்காது போன்ற ஆற்றாமையொன்று கவிந்து வந்தது. கூட சில கேள்விகள். சிவசங்கரனும் பிள்ளைகளும் வீட்டிலே இருப்பார்களா? அந்த நேரத்திலே பள்ளியிலே விடுதலை நாட்கள் வருவதற்கான ஒரு ஊடு இருந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு பாண்டிச்சேரி போயிருந்தால் என்ன செய்வது? அவரது சொந்த ஊரான சிவகங்கைக்கும் போயிருக்கக்கூடும். இன்னும்... அதே வீட்டில்தான் இருப்பார்களென்பதும் என்ன நிச்சயம்? இடையே ஐந்து வருஷங்கள். எவ்வளவோ மாற்றங்கள் சம்பவித்திருக்க முடியும்.

ஜி.எச்.இல் இறங்கி சிவசங்கரன் வீடு நோக்கி நடந்தாள்.

இரட்டை வழிப் பாதையின் நடுவே கம்பத்திலிருந்து சிறகு விரித்து இரண்டு பக்கங்களிலும் விசிறிய இரட்டை மஞ்சள் விளக்குகளின் வெளிச்சம் குளிர்ந்த நிலாக் கதிர்ப் பிரகாசமாய் தந்தை பெரியார் சாலையெங்கும் பரவியிருந்தது. இடம் பெரிதாக அந்நியத் தன்மையைக் காட்டவில்லை. வீதிகள் மட்டும் நேர்த்தி கூடியிருந்தன. மற்றும்படி அதே விசாலமான கான்கள்; சடைத்த மரங்கள்; பெட்டி பெட்டியான வீடுகள். அங்கொன்றும் இங்கொன்றுமாய் மனித நடமாட்டங்கள்.

தூரத்தில் வரும்போது பக்க ஜன்னலூடு வீட்டில் வெளிச்சம் தெரிந்தது. அப்போதும் அது அவர்கள் வீடுதானா என்று சந்தேகப்பட முடியும்.

வாசல் கதவின் ஒரு சிறகு விரியத் திறந்திருந்தது.

வாசலில் அசைவு தெரிய நிமிர்ந்த ஆதர்ஷ்யா சில விநாடிகளிலேயே அடையாளம் கண்டுகொண்டு, 'பாட்டீ...!' எனக் கூவினாள்.

மகாலட்சுமி அதிசயித்தாள். அது பெரிய காலவெளி. ஏறக்குறைய ஐந்தாண்டுகள் பார்வையிலும் அவள் பட்டிருக்கவில்லை. இருந்தும் எப்படி அந்த அடையாளங் காணல் அத்தனை கதியில் சாத்தியமானது? இவள் அந்தக் காலவெளியில் மாறாமலே இருக்கிறாளோ? இல்லை. மகாலட்சுமியின் பிரதியே தாயாராக இருக்கிறவகையில் காலத்தின் சிதைவைக் கடந்தும் அடையாளங் காணல் அவர்களால் கூடும்தான்.

ஆனால் மகாலட்சுமிதான் தடுமாறிவிட்டாள். கடந்த ஓரிரண்டு ஆண்டுகள் ஆதர்ஷ்யாவை வெகுவாக வளர்த்தியிருந்தன. அற்புதா அளவுக்கு, அற்புதாவை விடவுமே, வளர்ந்திருந்தாள். அற்புதா தாயாரைப் போல. ஆதர்ஷ்யாவுக்கு தந்தையின் வாகு. நிறமும் குறைச்சல். முதல் பார்வையில் அற்புதாவோவென்றே எண்ணினாள் மகாலட்சுமி. பின் அற்புதாவே உள்ளேயிருந்து ஆதர்ஷ்யாவின் கூவல் கேட்டு வெளியே வந்தபோது குழப்பம் தீர்ந்தாள்.

அற்புதா கண்டதும் மலர்ந்தாள். கால இடைவெளி அவளளவிலும் புரிந்துகொள்வதில் தாமதிப்பைச் செய்யவில்லை. 'வாங்க பாட்டி!'

மகாலட்சுமி உள்ளே வந்து சோபாவில் அமர்ந்தாள்.

வெளியே உணர்வு கெழுமிய தடல்புடல்களில் சமையலறையிலிருந்து சிவசங்கரன் சண்டிக்கட்டோடு வந்தார். திடுக்கிட்டாற்போல அப்படியே வாசலில் நின்றுவிட்டார். அவர் எதிர்பார்த்திருக்க முடியாதுதான். இத்தனை வருஷங்களின் பின்...? மடித்துக் கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்துவிட்டார். 'வாங்க...!' என்றார்.

அவள் திரும்பி அவரைக் கண்டு எழுந்தாள்.

'உட்காருங்க.'

அவள் அமர அவரும் எதிரே அமர்ந்தார்.

தாயாரின் பிரிவில் நேர்ந்த வெறுமையினால் போலும் பாட்டிக்குப் பக்கத்தில் போய் அமர்ந்து, அவளோடு சாய்ந்து, மடியில் விழுந்து புளகமடையும் தவனம் ஆதர்ஷ்யாவிடத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. ஆனாலும் அவள் நகரவில்லை. தந்தையை அடிக்கடி பார்த்து பாட்டியின் வரவு அவரில் ஏற்படுத்தும் உணர்ச்சிப் பாதிப்புகளை, அவற்றின் மாற்றங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவைகளை வைத்துத்தான் பாட்டியோடு எவ்வாறு பழகுவது என்பதை அவள் தீர்மானிக்க வேண்டியிருந்தது.

தாயாருக்கும் தந்தைக்குமுள்ள மனத் தெறிப்பு அவளுக்குத் தெரியும். அதை சராசரிக் குடும்பங்களில் உள்ள பிரச்னை போன்றதாகவே அவளால்

கொள்ள முடிந்திருந்தது. தாய் கோபித்துக் கொண்டு ஓடிவிட்டது அவளுக்குத் துக்கம். அவள் தாய்மீது மிகுந்த பிரியம் வைத்திருந்தவள். அவளுக்கு தந்தைமீது அதனாலேயே கோபமடைய நிறைய இடமிருந்தது. இருந்தும் தான் கோபித்ததில்லை. அவரது அபிப்பிராயத்தையோ இஷ்டத்தையோ அவளால் புறக்கணித்துவிட முடியாது. அவர் தந்தையாக மட்டுமன்றி தாயாகவும் இருப்பவர். தாயார் இல்லாத சிரமத்தை அவர்கள் அடைந்துவிடக் கூடாதென்று மிகநுட்பமாக உணர்ந்து அவர்களது தேவைகளை நிறைவேற்றுபவர் அவர். அப்போது அவர் சமையல் செய்து கொண்டிருந்தது அவர்களுக்கு வகை ருசியாக ஏதாவது செய்து கொடுக்க வேண்டுமேயென்ற கரிசனத்தில்தான். இரண்டு வகையான கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தது மட்டுமில்லை, தாய் தந்தைப் பாசத்தையும் அவர் கொட்டிக் கொண்டிருந்தார்.

சிவசங்கரனிடத்திலும் மகாலட்சுமியின் வருகை பழைய நினைவுகளைத் திமிறியெழச் செய்திருக்கும். என்றாலும் அதை மீறியும் அவரால் சில விவரங்களைக் கவனிக்க முடிந்திருந்தது. மகாலட்சுமி வெறுங்கையோடு வந்திருக்கிறாள். பிள்ளைகளுக்கு எதுவும் வாங்கி வரவில்லை என ஒன்றும், கையிலேதும் சாமான் கொண்டு வரவில்லையென ஒன்றுமாய் அது இரண்டு அர்த்தங்களைக் கொண்டது. அவள் இப்போது கையில் வைத்திருந்த பை பயணத்தில் கொண்டு போவதற்கானதல்ல; காய்கறி வாங்குவதற்கானது. மாற்றுச் சேலை, முகம் துடைக்க துண்டுதானுமோ கொண்டுவரவில்லை. ஒரு அவசரத்தில் வெளிக்கிட்டு ஓடிவந்ததுபோல் வந்திருக்கிறாள். என்ன அவசரம்?

வழக்கமாயே அவர் அவளோடு பேசுவது குறைவு. அன்னை வயதாகிறவர்களுக்கு முன்னால் அடக்கம் அவருக்கு இயல்பில் வந்துவிடும்.

ஆதர்ஷ்யாவையும் அற்புதாவையும் சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த அர்கீஷையும் மாறிமாறிப் பார்த்தபடி கையில் ஒரு சஞ்சிகையை எடுத்துப் பிரித்துக் கொண்டிருந்தாள் மகாலட்சுமி. இதழ்கள் விரிப்பில் சிதறப்படுவதுபோல்தான் அவள் மனமும் அப்போது விசிறப்பட்டுக் கொண்டிருந்தது. பிள்ளைகளையே பார்த்தாலும் சிவசங்கரன் மீதும் அவள் கவனம் விட்டுப்போகவில்லை. தானேதான் வந்த விஷயத்தைச் சொல்ல ஆரம்பிக்க வேண்டுமென்று அவளுக்குத் தெரிந்தது. ஆனால் எப்படித் துவங்க?

வாசல்வரை எழுந்துபோய் வெளியே பார்த்துவிட்டு, 'பாட்டி நீங்க பேக் எதுவும் கொண்டுவரவில்லை?' என்று கேட்டாள் ஆதர்ஷ்யா.

வந்த காரணத்தைத் தெரியப்படுத்தும் வழியை அது புலப்படுத்திவிட்டது. 'இல்லை ஆதர்ஷ்யா. பாட்டி அவசரமாக வந்ததில் எதையும் எடுத்து வரவில்லை' என்றாள்.

என்ன அவசரம்? என்று அவர் கேட்டார், நிமிர்ந்து பார்த்த பார்வையால்.

'ஆனந்தி ஹாஸ்பிட்டல்ல.'

'ஏன்!' அவர் கேட்டார்.

'ஆக்ஸிடென்ட்.'

அதற்குமேல் எவரும் தத்தம் சுயஇறுக்கத்தில் இல்லை. சமையலறைக்குப் போய்க்கொண்டிருந்த அற்புதா அப்படியே வாசலோடு நின்றாள். புத்தகத்திலிருந்து நிமிர்த்தி மூக்குக் கண்ணாடிக்கு மேலாக பார்வையை பாட்டியின் முகத்தில் நிலைகுத்தினான் அர்கீஷ். ஓடிவந்து பாட்டிக்கருகில் அமர்ந்து அவளது கையை ஆதாரத்துக்குப்போல் பற்றிக் கொண்டாள் ஆதர்ஷ்யா.

'எப்ப நடந்தது?'

அவள் விபரமாகச் சொன்னாள்.

பிள்ளைகள் தவித்துப் போயின.

ஆதர்ஷ்யா அழுதாள்.

சிவசங்கரன் தன்னிலை குலைந்தே இருந்தார்.

அவள் தொடர்ந்தாள்: 'ஏதோ... சுவாமி கிருபையால் உயிராபத்து நேரவில்லையே தவிர, இப்ப இருக்கிற நிலைமையும் சாதாரணமானதில்லை. நான் கிளம்புகிறவரையிலும் கூட ஆனந்தி மயக்கமாகத்தான் இருந்தாள். இன்று பகலிலே ஸ்கேன் செய்து பார்க்க இருந்தது. அதுக்கு மேல்தான் ஆபரேஷன் செய்வதுபற்றித் தீர்மானிப்பார்களாம்.'

'இரண்டு நாட்களாக நினைவு திரும்பவில்லையா?'

'ஆமாம். தலையிலே ரொம்பப் பலமாகத்தான் அடி விழுந்திருக்கும் போலத் தெரிகிறது. கட்டுக்கு மேலாகவே ரத்தம் கசிந்துகொண்டிருந்தது. என்னுடைய பயமெல்லாம் அப்படியே கோமா ஸ்டேஜ்ஜுக்கு போயிடக்கூடாதே என்பதுதான். நினைவை முற்றுமாய் இழக்க, காலோ கையோ அல்லது இரண்டுமோ வழங்காமல் போகவும் வாய்ப்பிருக்கிறதாம். பேச்சு மூச்சில்லாம அவ கட்டில்ல கிடக்கிறதப் பாக்க... நெஞ்சு பொறுக்கல. எனக்கு என்ன செய்யிறதுன்னு ஒண்ணுமே தோணல. அதுதான்... உங்ககிட்ட...'

ஆதர்ஷ்யா சத்தம் வைத்தே அழ ஆரம்பித்துவிட்டாள்.

அற்புதாவின் நிலையும் ஏறக்குறைய அதுதான்.

அர்கீஷ் மட்டும் கல்லுப்போல விறைத்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தான். அவனுக்கு அழுகையில்லை; உடைவுதான்.

சிவசங்கரனும் வெளிப்படையாகப் பரதவிக்காவிட்டாலும் உள்ளுக்குள்ளாய்க் கலங்கிப் போனாரென்று தெரிந்தது.

ஆனாலும் அவளால் காத்திருப்பதை மட்டும்தான் அந்த இடத்திலே செய்ய முடியும். மனைவி, தாய் என்ற எந்த பந்தத்தைச் சொல்லியும் ஆனந்திக்கான உதவியை அவள் கேட்டு விட முடியாது. ஆனாலும் பாதாதிகேசம் தசையின் ஒவ்வோர் அணுவிலும் ஓடி இதயத்தோடு தொடர்புறும் ஓர் உணர்வு வலை இன்னும் அவளுக்காக அவர்களிடத்தில் தொழிற்படுவது சாத்தியம். அந்தச் சிதிலமான உறவின் தளத்தில்கூட ஒரு துடிப்பு இன்னும் ஏற்படுவது முடியும்.

அவள் காத்திருந்தாள்.

சிவசங்கரன் எதுவும் பேசாமல் எழுந்து உள்ளே சென்றார். அற்புதா சமையலறைக்குப் போனாள். சிறிதுநேரத்தில் தந்தை பின்னால் ஆதர்ஷ்யா. அர்கீஷ் இன்னும் அந்தப்படியே.

சிவசங்கரனிடம் பதில் இருந்திராது. அவர் அதை யோசிக்க வேண்டும்.

மகாலட்சுமி எதிரே செறிந்துள்ள இருளைப் பார்த்தாள். இரவு சலசலத்தது; அசைந்தது. தொடர்ந்து சிறிய அலையாய்க் காற்று வந்தது. கோடைத் தகிப்பு தொடங்கியிருந்த காலம் அது. அதனால் வெளி மண்டலமெங்கும் ஒரே வெப்ப வியாபகம் கவிந்திருந்தது. அந்தக் காற்றசைவு மேனிக்கு இதம் செய்தது.

சிவசங்கரனின் நல்லிதயத்தில் அவளுக்கு நம்பிக்கையிருந்தது. பிள்ளைகளின் துடிப்பு அதற்கு வலு சேர்த்தது. அவர் எவ்வளவு இறுக்கமாகவிருந்து அவளை, அந்த உறவை நிராகரித்தாலும் அந்தச் சந்தர்ப்பத்தையே உதாசீனம் செய்து விட மாட்டார்.

அற்புதா கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள். மெல்லச் சிரித்தபடி அருகே நின்றாள். மகாலட்சுமி கோப்பியைக் குடிக்கத் துவங்க அறைக்குச் சென்றாள்.

மகாலட்சுமி யோசித்தாள்: ஆனந்தி எதற்காக அப்படி ஆனாள்? அந்த மூர்க்கம், அந்த ரௌத்திரம், அந்த நிர்மூலவெறி அவளிடத்தில் எங்கிருந்து, எப்போதிருந்து வந்தது?

அவள் மனத்தில் மகா பிரளயம்.

சம்பவங்களின் ஞாபகங்கள்.

ஞாபகங்களின் வதை.

அயல் வீடுகள் தெரியாமலேதான் மகாலட்சுமி அவளை வளர்த்தாள். பள்ளி வீடு கோவில் தவிர்ந்தவிடங்கள் முற்றாக அவளுக்கு மறுக்கப் பட்டிருந்தன. படிப்பு தவிர்ந்த வேறு விஷயங்களில் நாட்டம் சென்று விடாதபடிக்கு மிகவும் அவதானமாகத்தான் இருந்தாள் மகாலட்சுமி. இருந்தும் அவள் அறியாதபடிக்கு ஒரு நூலிழையில் எல்லாம் பிழைத்துப் போயிருக்கின்றன.

எங்கே?

மகாலட்சுமிக்குத் தெரியவில்லை.

கூடுதலான கண்டிப்பால் எல்லாவற்றிலும் ஒரு வெறுப்பு மெல்ல மெல்ல வளர்ந்து இன்று அந்த மாதிரியான நிலைமைக்கு அவளை ஆளாக்கியிருக்கக்கூடுமோ? இன்னும்... இளமையின் அந்த வசதிக் குறைவுகள் கூட அந்த நிலைமையினை ஏற்படுத்தியிருப்பது சாத்தியம். ஆனால் உண்மையான காரணம் என்ன?

அப்போதுகூட நினைத்தபோது வியப்பாயிருந்தது மகாலட்சுமிக்கு. பத்து வயதுக்கு மேலே அவளிடத்தில் பூடகம் விழுந்துவிட்டது. வீட்டில் ஊமைத்தனமும் தோழிகளோடு வாயாடித்தனமும் அவள் மனநிலையை நன்கு வெளிக்காட்டியிருக்க முடியும். ஆனால் கவனிக்க முடியாதபடிக்கு மகாலட்சுமிதான் சுயசோகமொன்றுள் மூழ்கிப்போயிருந்து விட்டாள். ஆனந்தி அந்த பூடகத்துள்ளும் வெறுப்பு வலயத்துள்ளும் இருந்து கொண்டும் தன் கெட்டிக்காரத்தனங்களைக் காத்துக் கொண்டாள். தான் சிதைந்து தன் கெட்டிக்காரத்தனங்களைச் சிதையாமல் காத்தல் ஒருவருக்கு அபூர்வம்.

இயல்பிலேயே பொறுப்புணர்வு அவளிடம் இருந்தது. சின்ன வயது முதற்கொண்டு சிக்கனத்துக்கு அவள் பேசப்பட்டு வந்தாள். அது மகாலட்சுமிக்கு ஒருவகையில் சந்தோஷமாக இருந்த அதேவேளையில் பயமாகவும் ஆனது. அந்தச் சிக்கனம் ஒரு கட்டத்தில் எதையும் தனது தனதென்றும், எல்லாம் தனக்கே வேண்டுமென்றும் கொள்ளும் அவாவாக மிக நுட்பமாக மாற்றமடைந்தது. அந்த அம்சத்திலிருந்து இல்லாததுக்குத் தவிக்கும் வேட்கை ஜனித்திருக்கிறது. அதை வெகுதாமதமாக அப்போதுதான் மகாலட்சுமியால் புரியமுடிகிறது. யோசிக்கிறபோது எவரோடெல்லாமோ சிரித்துப் பேசும் ஆனந்தி, அவள் முகம் நோக்கியதும் கொதிக்கத் தொடங்கி விட்டிருந்ததை மகாலட்சுமி அப்போது ஞாபகமானாள். ஆனால் எவ்வளவு சிந்தித்தும் ஆனந்தியின் கொதிப்பினதும் வெறுப்பினதும் காரணத்தை அவளால் புரியமுடியாமலே இருந்தது. ஆனாலும் அவள் அந்தத் தேடலை வேட்கையோடு தொடர்ந்து கொண்டிருந்தாள்.

அறையினுள் சென்ற சிவசங்கரன் நேரே மேசையை நோக்கி நடந்தார். நாற்காலியை நேராய் இழுத்துப் போட்டுக் கொண்டு முன்னால் அமர்ந்து எதிரேயிருந்த ஜன்னலினூடு பார்வையை எறிந்தார். அது இருளில் புதையுண்ண, மனத்தில் இறந்தகாலத்தின் நிகழ்வுகள் மனத்தில் விரிவு பெற்றன. அந்தக் கடைசி நாள்... அவர் வெறுக்கவும் சோர்ந்து போய்த்தான் அந்தமாதிரிக் கேட்டார்: அப்படியானால் நீ இங்கு எதற்கு?

கல்யாணமாகி சில நாட்களிலேயே அவளின் அசாதாரணத் தன்மைகளை அவர் விளங்கிக்கொண்டார். தான் தக்க இணையில்லையோ வென்றுகூட அவர் மனம் குறுகுறுப்படைந்துவிட்டது. அவளது பூரண விருப்பத்தில்தான் அந்தத் திருமணம் நடந்ததாவென்றும் ஐயம் பிறந்தது.

இருந்தாலும் ஒரு வருஷத்தில் அற்புதா பிறந்தாள். பின்னாலே பேதங்கள் இன்னும் துல்லியப்பட்டன. அவள் அடங்குதல் அறியாதவளாக வளர்ந்தாள். ஏதோ ஒரு விஷயத்தில் தான் மோசம் போய் விட்டதாகக் கருதுபவளாய்த் தென்பட்டாள். இங்கிதங்கள் மறைந்துவிட அவள் மகா தனிமை வலயத்துள் வீழ்வது தவிர்க்க முடியாதபடி நிகழ்கிறது. அப்போதும் கீழிறங்கியும், அவளுக்காக இரங்கியும் வந்தது அவர்தான், அவள் தாய்வீடு ஓடும்போதெல்லாம் பின்னாலே ஓடிப்போய் சமாதானப்படுத்தி அழைத்து வந்தார். அந்தமுறை கொஞ்சம் ஆழமாக வடுப்பட்டது போல் போவதற்கு இரண்டு நாட்கள் தாமதமாகி விட்டார். அப்போதுதான் அந்தக் கடிதம் வந்தது. அன்று மாலை வேலையிலிருந்து வீடு திரும்பியவர் அவளது பதிவுத் தபால் கடிதத்தை உடைக்காமலே வெகுநேரமாய்க் கையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். உடைத்துப் படிக்க அவர் அச்சப்பட்டார். அவளின் முதல் கடிதம் அது அத்தனை வருஷகாலத்தில். அது அந்த உறவைச் சுக்கு நூறாக உடைத்தெறிகிற வரிகளைத்தான் தாங்கி வந்திருக்கின்றதென்று அவள் குணமறிந்தவருக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை. அதே மேசையில்தான் அன்றும் அந்தக் கடிதத்தை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். பின் பிரிப்பதேயில்லையென்று தீர்மானித்து விட்டாற்போல மேசை லாச்சியை இழுத்து அடியிலே போட்டுப் பூட்டினார். ஐந்தாண்டுகள் ஆகிவிட்ட இன்றும் அந்தக் கடிதம் அங்கேதான் கிடக்கிறது. உடைக்கப்படாமல். வாசிக்கப்படாமல். பல நாட்களாய் தான் அவ்வாறு செய்ததின் காரணத்தை யோசித்து யோசித்துக் குழம்பியிருக்கிறார் அவர். அவளை அது வெறுக்கப் பண்ணிவிடுமென்று பயந்தாரா? அல்லது தன்னைச் சிறுத்துச் சிறுத்து க்ஷீணிக்க வைத்து விடுமென்று அஞ்சினாரா? இரண்டுமே காரணங்களென்பதுதான் பின்னால் அவருக்கு உறுதியானது. இப்போது அப்படியானதொரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருப்பது தெரிந்ததும் மனிதர் துடிக்கத்தான் செய்தார். அது ஆசைகளைக் கிளறிக்கொண்டு கிளம்பியதல்லவெனினும் துடிப்பிருந்தது நிஜம். நிச்சயமாக அவர் அவளைப் போய்ப் பார்க்கத்தான் போகிறார். குழந்தைகளோடு மறுநாள் காலை அவர் புறப்படுகிறதுதான் எண்ணம். ஆனாலும் அந்த விஷயத்தை அவர் ஐயமறத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அவரது முடிவில் ஏதாவது எதிர்பார்ப்பு இருக்கிறதா? அவள் கடிதத்தின்மூலம் அந்த உறவை அறுத்தவள். கடிதத்தைப் பூட்டி வைத்துவிட்டு அப்படியெல்லாம் இல்லையென்று ஆரவாரப்பட அவரொன்றும் விஷயமறியாதவரல்ல. அதனால்தான் அந்த உணர்வுக்கான எல்லையை அவர் போட நினைத்தது.

கட்டிலில் ஆதர்ஷ்யாவுக்கருகில் அமர்ந்து அப்பாவையே பார்த்துக் கொண்டிருந்தாள் அற்புதா. அந்த உடைக்கப்படாத கடிதத்தைப்பற்றியே அவர் அப்போது யோசித்துக் கொண்டிருக்கிறாரென்பது அவளுக்குத் தெரிந்தது. அவர் அதுபற்றி நினைப்பதை முற்றாகக் கைவிட வேண்டுமென்பதே அவளது விருப்பம். வாழ்க்கையென்பது

மயில்மாணிக்கம் கொடிபோல் எதிலெதிலென்று இல்லாமல் அகப்பட்ட எதிலுமேதான் தன் கொளுக்கி முள்ளை இறுக்கமாகப் பதித்துப் பதித்து மேலே மேலேயென்று படர்ந்து கொண்டிருந்தது. முள்ளில் படர்ந்து அது காயமும் படலாம். அதுவே இன்னொன்றைக் காயமும் படுத்தலாம். மனித வாழ்க்கை அப்படித்தான் இருக்கிறது. முக்கியமானது வாழ்ந்துவிடுவதுதான். அதை அவள் புரிந்திருக்கிறாள். பல்கலைக் கழகத்துத் தோழிகள் அந்த சில மாதங்களில் வாழ்க்கையின் ஒரவஞ்சனைகள் கொடூரங்கள் என்றும், அதன் மகோன்னதங்கள் அற்புதங்கள் என்றும் ஒரு மகாதரிசனத்தையே அவளுக்கு அனுபவமாக்கியிருந்தனர். அவள் வித்தியாசமாகச் சிந்திக்கத் தெரிந்திருந்தாள். அவளது படிப்புக்கும் கல்லூரி வாழ்க்கைக்கும் அப்புறமாய்த்தான் வீட்டுப் பிரச்னைகள் பற்றி அவள் கவனம் கொள்வது. அவள் தலையிடாதொதுங்க காரணமாயிருந்தது அதுதான். எனினும் அதுவே நேர்நேர் சந்தித்தபோது... அவளால் ஒதுங்க முடியவில்லை. அதற்காக தந்தையையே அவளால் வற்புறுத்திவிட முடியாது. அவர்மீது கவனத்தைக் குவியவிட்டு கணங்களைக் கழித்துக் கொண்டிருந்தது அதனால்தான்.

நேரம் பத்து மணிக்கு மேலாகியிருந்தது. நள்ளிரவுக்கு மேலே ஒரு மணியளவில் சென்னைக்கு அங்கிருந்து ஒரு பஸ் புறப்படுகிறது. அதிலே சென்றால் அதிகாலையில் சென்னையை அடைந்துவிடலாம். தகவல் சொல்ல மட்டுமே அவள் அங்கே வரவில்லை. மருத்துவமனைச் செலவின் அச்சுறுத்தல் இன்னொரு காரணமாய் இருந்தது. ஆனால் அறைக்குள்ளே சென்ற சிவசங்கரன் அரை மணிக்கு மேலாகியும்கூட வெளியே வரவில்லை. அவர் மறுப்பான பதிலை இதுவரையில் சொல்லவில்லைத்தான். அந்த ஒழிவும் ஒருவகை மறுப்புத்தானே. அதில் முழுக்கவே நியாயமில்லை யென்று எப்படிச் சொல்ல முடியும்? இனி அவள் தாமதிப்பது வீண். அவள் அற்புதாவை அழைத்தாள்.

அற்புதா வர, 'நாளைக் காலையிலாவது நான் மருத்துவமனையில் நின்றாக வேண்டும். இந்த பன்னிரண்டு மணி நேரத்திலேயே அங்கே என்ன நடந்திருக்குமோவென்று எண்ணி என் இதயம் கிடந்து துடிக்கிறது. சொல்ல வேண்டிய கடமைக்கு வந்து சொல்லிவிட்டேன். இனி நான் போகலாம். ஒரு மணிக்கு சென்னை போகிற பஸ் எடுக்கலாமென்றிருக்கிறேன். அப்பா எங்கே? கூப்பிடு. சொல்லிவிட்டு நான் புறப்படவேண்டும்' என்றாள்.

மகாலட்சுமி சொல்லிக்கொண்டிருக்கையில் சிவசங்கரன் வந்தார். அற்புதாவுக்கு அவள் சொன்னது கேட்டிருக்கவேண்டும். 'இப்பவே போகவேண்டுமா? காலையில் போனாலென்ன?' என்றார்.

'ஆனந்தியோடு கூட யாருமே இல்லை. அவளைக் கவனிக்கக்கூடிய சிநேகிதிகளுமே காயப்பட்டிருக்கிறார்கள். இன்று காலையில் ஸ்கேன் எடுப்பதாக இருந்தது...'

சிவசங்கரன் சற்று தயங்கிய மாதிரி இருந்தது. பின் நிதானித்துக் கொண்டு சொன்னார்: 'இரவு ஒரு பொழுது தானே... காலையில் எங்களோடு பஸ் எடுங்களேன். மதியத்துக்குப் போய்விடலாம்.'

மகாலட்சுமிக்கு துடித்திருந்த மனது அடங்கியது. 'சரி, காலையிலேயே போகலாம்.'

அவள் குரல் தழுதழுத்ததையும், கண்கள் கலங்கி வந்ததையும் சிவசங்கரன் தெளிவாகவே கண்டார். அவரது முடிவை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள்தான். பிள்ளைகளே எதிர்பார்க்கவில்லையே.

# 19

ஸ்கேன் செய்து முடித்து மறுபடி தீவிர கண்காணிப்புப் பகுதிக்கு ஆனந்தியைக் கொண்டு வந்தபோது ஐந்து மணிக்கு மேலே. அப்போதும் அவளுக்கு நினைவில்லாமலே இருந்தது.

நினைவில்லாமல் இருந்ததென்பது பொதுப்படையான விபரிப்புத் தான். ஆனால் அவளுக்கு நகர்த்தும் அதிர்வு தெரிந்தது. பேச்சுக்கள் எழுந்த போது தெளிவற்றதாயினும் சப்த உணர்வு கிடைத்தது. வாகன இரைச்சல் கேட்டது. மனத்துக்குள் விதவிதமான காட்சிகள், துண்டுதுண்டான நிகழ்வுகள், அற்புத கற்பிதங்கள் எழுந்துகொண்டிருந்தன. அவள் எதையும் புரிந்து, தெளிந்து, தீர்மானங்களுக்கு வருவது பிரக்ஞையின் பின்னானது. அப்போது உணர்கை மட்டும்தான்.

அவள் உணர்ந்தாளா? ஆன்மா உணர்ந்ததா? இரண்டுக்குமிடையில் மிக மெலிதான பிரிகோடு இருந்தது. அவள் உணர்தலாவது பிரக்ஞையில் தன் பொறிகளின் ஊடாக அறிவுத் தெளிவு கொள்ளுவது. ஆன்மா உணர்தலென்பது பொறி கடந்து உள்ளே பீரிடும் ஓர் அனுபவம்.

அவளுக்கு அதுபற்றிய அச்சொட்டான முடிவில்லை. தேவையுமில்லை.

சின்ன வயதிலே அவளுக்கு ஊஞ்சலாடுவது மெத்தப் பிடிக்கும். அன்னலட்சுமி வீட்டுக்குப் பின்புறமிருந்த மாமரத்தின் ஒரு கிளை ஆனந்தி வீட்டு முற்றத்தின் ஒரு பக்கத்தில் நீண்டிருந்தது. அதிலே அப்பா அவளுக்கோர் ஊஞ்சல் கட்டிக் கொடுத்திருந்தார்.

உயர்ந்து... பதிந்துபோய் மறுபுறத்தில் உயர்ந்து... என ஊஞ்சலாடுகையில் அப்பா அல்லது அம்மா அல்லது விசுமாமா கூட நின்றிருப்பார்கள். ஆனந்தி பயமே அற்றவளாய் வெகு உற்சாகமாக உந்தி உந்தி ஆடுவாள். உந்துகை எப்போதும் இறங்கிவந்து பின்புறமாய் ஏறுதிசை முகத்திலேயே இருக்கும். ஒரு தருணத்தில் உந்துதலுக்கு காலை நிலத்தில்

பதிக்க முடியாத அளவுக்கே ஊஞ்சல் விசைபெற்று ஆடிக்கொண்டிருக்கும். அந்தப் பொழுதில் முன்னோக்கி கால்களை நீட்டி அதற்களவாய் உடலைச் சற்றே பின்வளைத்து உன்னுகை மூலம் இயங்க முடியும். கயிறு கட்டப்பட்டிருந்த கிளைக்குச் சமாந்தரமாக கால்களை உயர்த்துவதே ஆட்டத்தின் எல்லையாகக்கொண்டு ஆனந்தி ஆடிக்கொண்டிருப்பாள். அப்போது அவளின் பாதுகாப்புப்பற்றிக் கூடநின்றிருந்தவர்கள்தான் கவலைப்பட்டார்கள்; அஞ்சினார்கள்.

அந்த மாதிரி ஒரு ஊசலாட்டத்தில்தான் மருத்துவமனையிலும் அவளது நிலைமை இருந்தது. பிரக்ஞையிழப்பும் இடைநிலைப் பிரக்ஞையடைவும் மாறிமாறி ஏற்பட்டுக் கொண்டிருந்தன. காட்சிகள் இருவேளைகளிலும் உண்டாயின மாதிரித்தான் தெரிந்தது. ஒன்று புலனுணர்வால்; மற்றது ஆன்ம உணர்வால்.

வார்ட்டுக்குத் திரும்பியாயிற்று.

சிறிது நேரத்தில் அரவங்கள் அகன்று மௌனவெளியாய்ச் சூழல்.

அது ஒரு நிசப்த கிரகமாயிருந்தது.

நிசப்தம்தான் அவள் வாழ்வின் பெரும்பகுதியினையும் ஆக்கிரமித்திருந்ததுபோல் தெரிகிறது. சின்ன வயதிலும் அப்படித்தான். அதனுள் ஆழ்வது விரும்பியா, வேறு வழியின்றியாவென்று அவளுக்கு என்றும் தெளிவிருந்ததில்லை. ஆனாலும் அவளின் பல கனவுகளின் களம் அதுவாகவே இருந்திருக்கிறது.

நினைவின் ஒரு இம்மிப் புரள்வு.

காட்சியொன்று கலகலத்து விரிகிறது.

இல்லை, பக்கத்தில் நின்று யாரோ யாருக்கோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அவைதான் காட்சியாய்ப் பரிணமிக்கின்றன.

அன்னா...! அன்னா...! வென்று அழைத்துக் கொண்டோடுகிறாள் ஆனந்தி.

அப்போது அவள் ஆங்கிலப் பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிறாள். அன்னலட்சுமியும் அவள் வகுப்புத்தான். அன்னலட்சுமியின் தாத்தாவுக்கு அவளை யாராவது லட்சுமியென்று கூப்பிட்டாலுமே கோபம் வரும். யார் சரி, அன்னலட்சுமியென்றுதான் வாய் நிறையக் கூப்பிடவேண்டும். அவளது தாய் தந்தையருமே அப்படித்தான் அழைத்தார்கள். ஆனந்திக்கு மட்டும்தான் அவரால் தடை போட முடியாதிருந்தது. அவளும் பள்ளியில் அவ்வாறுதான் அழைத்தாள். வீட்டிலும் சில பொழுதுகளில் அன்னலட்சுமிதான். செல்லமான, தவனமான

ஒரு பொழுது வரும். அப்போதுதான் அன்னாவென்று அவளும் அழைப்பது. உண்மை என்னவெனில் அச்செல்லமான தவனமான பொழுது எப்போதுமே வந்தது.

அன்று பள்ளியில்லாத ஒரு நாள். அன்னாவும் ஆனந்தியும் மாமரத்தின் கீழேயிருந்து விளையாடத் தொடங்குகிறார்கள்.

திடீரென ஞாபகம் வந்ததுபோல் அன்னா கேட்கிறாள்: ஏன் ஆனந்தி, நீ ஸ்கூல் மாறி போனப்புறம்கூட என்கூடத்தானே சேர்ந்து விளையாடுவே?

ஆனந்தி திகைக்கிறாள். பள்ளி மாறிப் போறதாவது. வகுப்பில் மட்டுமில்லை, பள்ளியிலேயே அவள்தான் முதல் மாணவி. ஓட்டம் தவிர்ந்த விளையாட்டிலும் மற்றெல்லாவற்றிலும் கூட முதலிடம் எடுக்கிறாள். பொன்னம்மாள் ரீச்சருட்பட பிரின்ஸிபாலும் மற்றவர்களும் அவளை எவரையும்விட விரும்புகிறார்கள்; பாராட்டுகிறார்கள். அவள் ஏன் பள்ளி மாறவேண்டும்? யார் சொன்ன கதை அது?

ஆனந்தி அன்னாவிடம் கேட்கிறாள்.

உன் அம்மாதான் என் அம்மாவுக்குச் சொன்னார்களாம்... என்கிறாள் அன்னா.

பதைத்துப் போகிறாள் ஆனந்தி. எழுந்து வீட்டுக்கு ஓடி அம்மாவிடம் கேட்கிறாள், நான் ஸ்கூல் மாறப் போகிறேனா அம்மா? என்று.

ஆமாம்.

ஏன்?

அங்கே பணம் அதிகம். நீ மாநகரப் பள்ளியிலே படிக்கிறதுதான் நல்லது? ஆங்கிலப் பள்ளியிலே அந்தளவு பணம்கட்ட என்னால் முடியாது. அடுத்த வகுப்பிலிருந்து மாறிக் கொள்ளலாம்.

அப்போது அங்கே வந்து கொண்டிருக்கிற அவள் புருஷனின் தங்கை பார்வதி சொல்கிறாள். அப்படித்தான் அண்ணி செய்யவேண்டும். வயிற்றுக்கே வசதியில்லாமல் இருக்கிறது; இந்த நிலைமையில் பள்ளிக்குக் கொண்டு போய்க் கொட்ட எங்கே போகிறது? ஆங்கிலப் பள்ளியிலே இருப்பதற்கு நிற்பதற்கு எல்லாவற்றுக்கும் பணமாமே!

நான் மாட்டேன்... என்று அழுகிறாள் ஆனந்தி.

மாட்டேனென்றால் பேசாமல் கிடக்க வேண்டியதுதான்... என்கிறாள் பார்வதி.

அப்படியில்லை பார்வதி... என்று குறுக்கிடுகிறாள் மகாலட்சுமி. இஷ்டம் இஷ்டமில்லையெல்லாம் இவ சொல்லக் கூடாது. காட்டுகிற பள்ளியிலே போய்ப் படிக்கிறதுதான் இவ செய்ய வேண்டியது. அடுத்த வருஷத்திலயிருந்து உனக்கு மாநகரப் பள்ளியிலேதான் படிப்பு. மாட்டேன்... முடியாதென்று ஏதாவது சொல், அப்போது பார்த்துக் கொள்கிறேன்.

சொல்லிவிட்டு அம்மா ஒரு பார்வை பார்க்கிறாள். ஆடிப்போகிறாள் ஆனந்தி. தன் விருப்பங்களையும் எண்ணங்களையும் அமுக்க அன்றுதான் அவள் ஆரம்பித்தது. அதுதான் அவள் மௌனத்துள் விழுந்த நாளுமாகும்.

அது தவிர வேறு வழி அவளுக்கு இல்லை.

அந்த வீட்டில் அவள் குரலாய் ஒலித்துக்கொண்டிருந்தது பெரும்பாலும் விசுமாமாதான். அப்பா இருக்கும்போது கூட அப்படித்தான். ஆனால் இனி அந்த நிலைமையில்லை. அவர் பிரிந்துபோய் எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. இருந்தும் அந்தக் கணம்வரை அவள் அவரின் இழப்பை மட்டும்தான் உணர்ந்திருந்தாள். அந்த இழப்பின் பாதிப்பை முதல் முறையாக அவள் உணர்வது இப்போதுதான். இங்குதான் அவளது வாழ்க்கையைத் திசைமாற்றும் புயல் மையங் கொண்டிருந்தது.

அது ஒரு காலை போல் தெரிந்தது. எத்தனை நாட்களுக்குப் பிறகு வந்த காலையோ அல்லது அடுத்த நாள் காலைதானோ? மெல்லக் கண் விழித்தாள் ஆனந்தி. மங்கலாய் காட்சி விரிந்தது.

அறைக்குள் யாருமே இல்லை. நர்ஸ்கூட. ஏன் அந்த அநாதரவு?

பயமும் எரிச்சலும்தான் கிளர்கின்றன.

அவள் கண்களை மூடுகிறாள்.

இருள்... புகார்...

அவள் ஆழ்ந்து ஆழ்ந்து போகிறாள்.

எங்கும் புகார்.

போகி பொங்கலுக்கு முந்திய நாள் அது.

காலையில் பங்கஜத்தின் வீட்டுக்குப் போகிறாள் பூக்குடலையும் கொக்கித் தடியுமாய். ஓதுவார்த் தாத்தாவுக்காக பூப்பறிக்கத்தான். செம்பரத்தைக் காடு இருக்கிறது அங்கே. வேலிதோறும் பூக்கள். பூப்பறித்துக்கொண்டு திரும்புகிறபோது பங்கஜத்திடம் கேட்கிறாள் ஆனந்தி: விசுமாமா எப்போ வருவார் கல்கத்தாவிலேருந்து?

இன்றைக்கு என்ன நாள்?... என்று ஞாபகப்படுத்திக்கொண்டு, ஓ... வியாழனா? அப்போ விசுமாமா நாளைக்குக் காலையிலே வருகிறான், என்கிறாள் பங்கஜம்.

இரவு கூடத்தில் தாயாருக்குப் பக்கத்தில் படுத்திருக்கிறாள் ஆனந்தி. அம்மா சீரான சுவாசத்தோடு தூங்கியபடியிருக்கிறாள். மறுநாள் விசுமாமா வரப்போவது ஆனந்திக்கு மட்டும்தான் நல்ல செய்தியா? அவளுக்கு இல்லையா? அவள் அவருக்கு நல்ல பதில் சொல்லாமல் விட்டுவிடுவாளோ? ஆனந்தியால் சில விஷயங்களைத் தெளிவாகக் காண முடிந்திருந்தது. கடந்த சில தினங்களாக அம்மாவின் வாயிலே சிக்கனம் சிக்கனம் என்ற வார்த்தை

அடிக்கடி வருகிறது. வரக்கூடிய கஷ்ரங்களுக்கு முன்கூட்டியே தயாராவதென்பதின் அர்த்தம், மாஹி என்றழைக்க அவள் விசுமாமாவை அனுமதிக்காமலிருக்கப் போகிறாள் என்பதுதானென்று அந்த வயதிலும் அவளுக்குப் புரிகிறது. சரிந்து படுத்திருந்த அவளது அம்மா தூக்கப் புரள்வில் நிமிர்கிறாள். அவள் மனத்தில் எந்தச் சலனமும் இல்லை. முகம் தெளிவாய்க் கிடக்கிறது. சொல்ல வேண்டிய பதிலை அவள் ஏற்கனவே தீர்மானித்து விட்டாளா? அதுவும் அவரைத் திரஸ்கரிக்கும் முடிவுதானா? தன்னை, தன் எதிர்காலத்தை அவள் யோசிக்கவில்லையா?

எப்போதோ எப்படியோ தூங்கி, அதிகாலைக் குளிர் அசைவிலும், வெடிகளின் படபடப்பிலும், கிளர்ந்த களேபரத்திலும் விழிக்கிறாள் ஆனந்தி.

வெளியே விடிந்து கொண்டிருக்கிறது.

அப்போதெல்லாம் அதிகாலையிலெழுந்து படிக்கத் துவங்குவது சிரமமில்லை. அவ்வாறு எழாதிருப்பதும், படிக்காதிருப்பதும்தான் சிரமம். அப்படியொரு சூழல் அது.

ஆனந்தி திண்ணையில் வந்து அமர்கிறாள்.

வெளியே ஒரே கோலாகலம்.

பட்டாசுகள் படபடக்கின்றன.

புகை படலம் படலமாய்ப் பெருகி அடர்ந்திருக்கிறது.

இரவு கொளுத்திய பழையதுகளில் இன்னும் நெருப்பிருந்து மேலும் மேலும் புகையைக் கக்கச் செய்கின்றது.

மழை வரப்போவதுபோல் எங்கும் ஒரே புகார் மயம்.

சூரியோதயம் அன்றைக்கு கண்ணுக்குத் தெரியாமலே நிகழப் போகிறது.

டாக்சி ஒன்று பங்கஜம் வீட்டெதிரில் போய் நின்று திரும்பிச் செல்கிறது. ஆமாம், விசுமாமா வந்துவிட்டார். கண்டிப்பாக இன்னும் சிறிதுநேரத்தில் அங்கே வருவார். அவள் மனது பறந்தடிக்கிறது. உறைந்து கிடந்த மகிழ்ச்சியும் துன்பமுமான இரு உணர்வுகள் காரணம். அம்மா என்ன பதில் சொல்லுவாள் விசுமாமாவுக்கு? என்று மனம் ஒரு நிலையில் நில்லாமல் பதைக்கிறது.

சிறிதுநேரத்தில் மாமா வருகிறார். அழுவாரைப் போல் உட்கார்ந்திருக்கும் அவளை நெருங்குகிறார். மாமா அதிகமாக வீட்டிலே சட்டை அணிவதில்லை. வெளியில் போவதானாலும் சால்வைதான். தோள்களை மார்பை மூடிச் சுற்றிக்கொள்வார். வேட்டியும் சால்வையும் பளீரென்று இருக்கும். வெற்று மேனியில் சந்தன பன்னீர் வாசம். மாமா, முக்கியமான பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற அப்போது கூட சிரித்துக்

கொண்டுதான் இருக்கிறார். அவளுக்கு அதைப் பார்க்க அழுகை வரப் பார்க்கிறது. அவர் கல்கத்தா ரஸகுல்லா பார்சலை அவளிடம் கொடுத்துவிட்டு எட்டி அவளது தலையை ஒரு முழு நிமிட நேரம் தடவியபடி நிற்கிறார். கலங்கிய கண்களோடு நிமிர்ந்து பார்க்கிறாள் ஆனந்தி. அதற்குள் அவர் உள்ளே நடந்து கொண்டிருக்கிறார்.

கோயில்களில் பூஜை மணிக் கிணுகிணுப்புகள் கிளர்கின்றன.

சிவவிஷ்ணு கோவில் அவள் வீட்டிலிருந்து வெகு தூரமில்லை. ரயில்பாதையைக் கடந்து குறுக்காகப் போனால் கொஞ்சத் தூரம்தான். விசேஷ தினங்களிலும் வெள்ளிகளிலும் காலையோ மாலையோ சிவதரிசனம் தவறாது அவளுக்கு. ஆடற்பெருமானின் அந்த அற்புத அழகு அவளுக்குப் பிடிக்கும். சிவனை மனத்தில் நிறுத்தி சேவிக்கிறாள் ஆனந்தி. சுவாமி... நான் படிக்க வேண்டும் நல்ல பள்ளியிலே. பரதமும் சங்கீதமும் பயிலவேண்டும். அதுக்கு எனக்கு மாமா வேண்டும். இந்த மார்கழிதான் முடியாமல் போச்சு. ஆனால் போன மார்கழியில் திருவெம்பாவை ஓத ஓதுவார்த் தாத்தாவோடு அந்தளவு காலையிலும் எழுந்து குளித்து பஜனைக்கு வந்திருந்தேனே. இனியும் வருஷா வருஷம் வருவேன். மாமாவுக்குச் சாதகமான பதிலாய் அம்மாவைச் சொல்லவைத்துவிடு சாமி. விசுமாமா அம்மாவை மாஹி என்று அழைப்பதால் என்ன ஆகிவிடப் போகிறது! அம்மா இதை ஏன் உணர்கிறாளில்லை?

மெல்ல எழுந்து ஒரு ஆவலில் கூடம் செல்கிற ஆனந்தி செவிகளைக் கூர்மைப்படுத்துகிறாள்.

மாஹீ...!

கூப்பிடாதீங்க என்னை அப்படி.

அதற்குமேல் யார் குரலும் கேட்கவில்லை.

ஏதோ பயம் கிளம்ப, திரும்பி விரைவாக திண்ணைக்கு வந்துவிடுகிறாள்.

தூரத்தில் எங்கோ நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாசுர மொன்று ஒலிக்கிறது. அன்றைக்கென்று அத்தனை தெளிவாக. பட்டாபியின் குரலாய் இருக்க வேண்டும். சன்னமாய், அதேவேளை பலமாக இழைகிறது பாடல்.

*வானிடை வாழுமவ் வானவர்க்கு*
*மறையவர் வேள்வியில் வைத்த அவி*
*கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து*
*கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப*
*ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கென்று*
*உன்னித்து எழுந்தஎன் தடநகில்கள்*
*மானிடவர்க் கென்று பேச்சுப்படின்*
*வாழகில்லேன் கண்டாய் மன்மதனே.*

கணங்களாய்க் காலம் கரைந்து கொண்டிருக்கிறது.

மாமா வெளியே வருகிறார். ஆனந்தி பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல் நேராய் விறுவிறுவென நடக்கிறார்.

சிறிதுநேரத்தில் வெளியே வந்த அம்மாவின் முகம் சிந்தனை தோய்ந்து கிடக்கிறது. அது கவலை அல்ல. யோசனைகளோடு வாழ்ந்தால் ஒருவாறு வாழ்ந்துவிடலாம் என்ற நம்பிக்கை கண்களில் சுடர்கிறது.

மாமாபோல் அவளுக்கும்தான் ஆனந்தி அங்கே நிற்பதான பிரக்ஞை இல்லை. சூரியனை எதிர்பார்த்ததுபோல் கீழ் மூலையில் பார்வை குவிந்திருக்கிறது.

மாமாவுக்கு அம்மா என்ன பதில் சொல்லியிருப்பாளென்று அக்கணமே புரிந்து கொள்கிறாள் ஆனந்தி . மாமா இனி அங்கே வரமாட்டார். அவரின் உதவி இனி இல்லை; அவரின் பாதுகாப்பு அரவணைப்பு எல்லாமேதான்.

அவள் கண்களில் நீரூறுகின்றது.

வெளியே சந்தடிகள். யாரோ யாரிடம் ஏதோ சொல்லிக்கொண்டு போகிறார்கள்.

ஆனந்தியிடத்தில் காட்சி மறைந்து இருள் உலகம் திறக்கிறது. அவள் அதனுள் உள்ளே உள்ளேயாய் அமிழ்ந்தாள்.

## 20

ஆனந்திக்கு அடித்துப் போட்டதுபோல் அசதியாகவிருந்தது உடம்பு. போன தடவை கண்விழித்தபோது அப்படி இருக்கவில்லை. அது அதே நாளின் வேறொரு பொழுதா, அடுத்த நாளா, அடுத்ததுக்கும் அடுத்த நாளா? அவளுக்குத் தெரியாது. ஆனால் அந்த இடைவெளியில் விழுந்த பலஹீனம் பயங்கரமாயிருந்தது. கண்ணை மூடிக்கொண்டு அப்படியே கிடக்கவேண்டும் போலிருந்தது. ஆனாலும் மனம் திறக்கும்படி உந்த சிரமப்பட்டுத் திறந்தாள். இனிமையான வெளியொன்று கண் முன் வெளித்தது. அவள் அதுவரை பார்த்திராதது அது. அது வெளீரென்றிருந்தது. மட்டுமில்லை. மாசற்றும் லேசான சீதளம் விரவியும் இருந்தது. சந்தேகமில்லாமல் அது வேறு அறைதான். குரல்கள் நம்பிக்கையின் அடையாளமாய் மெல்லிய சிரிப்போடு பிறந்து கொண்டிருந்தன. ஜன்னலூடு குருவிகள் இசைந்தமை கேட்டது. நகர மத்தியில் அப்படி ஒரு பொதும்பர். அவளுக்கென்று அப்பிரபுஞ்சம் புதிதாய்ச் சமைந்திருக்கிறது.

இருந்தும் அவற்றை ஆழமாக அனுபவிக்க முடியாத அளவுக்கு தன்னுள் அந்தப் பலஹீனம் சுழித்தெழுவதை உணர்ந்தாள் ஆனந்தி.

தலையில் அப்போது கட்டு இருந்தது. புதிய கட்டு என்பது அதன் அழுத்தத்தில் தெரிந்தது. சுள்... சுள்ளென்று முன்பிருந்ததுபோன்ற வலி இல்லாதிருப்பினும் வேறு வகையான நோவு இருந்தது.

தாகமெடுத்தது. பசிவேறு கிள்ளியது. ஆனாலும் தாகத்தைத்தான் தாங்க முடியாமலிருந்தது. அதைக்கூடத் தாங்கினாலும், அந்த அநாதரவை எப்படித் தாங்குவது?

மரண பயம் அப்போது இருக்கவில்லை. அபாய கட்டத்தை தான் கடந்துவிட்டமை அவளுக்கே நன்கு தெரிந்தது. அவளுக்கேற்பட்ட மனவருத்தமெல்லாம் அவளை அனுதாபத்தோடு விசாரிக்க, அன்போடு வேண்டியது செய்ய யாருமில்லாமல் போனதே என்பதுதான். வீட்டுப் படுக்கையில் ஒருநாள் இரண்டு நாள் படுக்க வேண்டி நேர்ந்தாற்கூட ஆனந்தவல்லிக்கு அவள் அம்மா இருபத்திநான்கு மணி நேரமும் தலைமாட்டிலே வந்து அமர்ந்துவிடுவாள். அப்போது அவள் சாதாரண நோயாளிகூட இல்லையா? மனிதர்களுக்கு அப்படி நேரக்கூடாது. அது எங்கோ ஒரு புள்ளியில் வாழ்முறையின் பிழையைக் குறிப்பதாகும்.

அவள் அப்போது மிகத் தெளிவாக இருந்தாளென்று சொல்லலாம். இடுக்கி இடுக்கிப் பார்க்கும் கண்களில் கண்ணாடி போட்டுப் பார்த்ததுபோல அது இருந்தது. அத்தனை தெளிவு. விபத்துக்கு முன்பிருந்ததை விடவும் தெளிவு.

நடந்ததை விபத்தென்று தெரிய அவளுக்கு வெகுநேரமாகவில்லை. ஆனந்தீ!... என்கிற பத்மாவதியின் அலறல் அப்போதுகூட செவிகளில் கணீரிடுகின்றது. சடுதியான க்ரீச்... பிரேக், உலோகப் பலகைகளின் அசுர மோதல் எல்லாம் கேட்டன. பாண்டி மாமாவைப் பார்த்தது, காரசாரமாய் அவரோடு கதைத்தது... தன் ஆத்திரத்தை அவள் வாகனத்தின் விசையில் காட்டியிருக்கக் கூடாது. அவளைவிட்டு ஆறு உயிர்களின் தலைவிதி அந்தப் பொழுதில் தன் கைவசமென்பதை அவள் உணர்ந்திருக்க வேண்டும். யாருக்காவது பெரிய காயம், கை கால் ஊனமென்று ஏற்பட்டிருந்தால் அதுவேறு அவள் தலையில் பழியாக விழப் போகிறது. அதுபற்றி அறிய மனம் துடித்தது. யாரைக் கேட்டுத் தெரிய?

அவளுக்கு தலையிலேதான் பெரிய காயம். ஒருவேளை சத்திர சிகிச்சையும் நடந்திருக்கலாம். எத்தனை நாளாயிற்று விபத்து நடந்து? சத்திர சிகிச்சை நடந்து எத்தனை நாள்? சிநேகிதிகளுக்கு என்ன ஆயிற்று? அதிர்ஷ்டவசமாய் சிறுசிறு காயங்களோடு தப்பி விட்டனரோ? தான் ஒரு அநாதையாய் அங்கே கிடப்பது யாருக்கும் நினைவு வராமல் போனது ஏன்? அவர்கள்தான் வேண்டாம், வேறு யாரையேனுமாவது கூட நிற்க அனுப்பியிருக்கலாமே! மனிதர்களுக்கு இதுமாதிரியான சமயத்தில் தவிர வேறு எப்போது சகாயம் தேவை? எப்போதும் சகாயம்... சகாயம்... தேவசகாயமேயென்று சொல்லிக் கொண்டிருக்கும் மாதாவுக்குத்

தெரிவித்தால், அல்லது ஆயாவுக்கேனும் தெரிவித்தால் யாரேனும் ஒருவர் வந்து கூடநின்று விட்டுப் போகிறார்கள். கல்யாண வீட்டிலே, எனக்குக் கிடைத்திருக்கிற நட்புகள் என் உறவுகளைவிடவும் மேலானவை!... என்று பாண்டி மாமாவுக்குக் கூறியிருந்தாளே, அந்த முடிவுதான் அப்போதும் அவளிடத் திலிருந்ததென்று துணிந்து சொல்ல முடியாது. அன்னா உடன் இல்லை. குஞ்சம்மா இல்லை. ராம்ஜி இல்லை. ராதாகிருஷ்ணன் இல்லை. யாருமில்லை. நர்ஸ்கூட. உறவுகளை விடவும் நட்பு மேலென்பது எந்தவகையில் நிரூபணமாகிறது?

விழிகளின் கடையில் அவள் ஈரமுணர்ந்தாள்.

நர்ஸ் உள்ளே வருவது தெரிந்தது. அப்போதுதான் வந்திருப்பாள் போலும். முன்பு பார்த்திருந்த அந்த சிவந்த நர்ஸ். முகமெல்லாம் முறுவல் பூத்திருந்தது. அது ஔடதமும் ஆகும். நோயாளியில் நம்பிக்கையை விதைக்கிறது சின்ன விஷயமில்லை.

'என்ன வேண்டும்?' நர்ஸ் கேட்டாள்.

'தண்ணீர்.'

தம்ளரிலே பிளாஸ்க்கிலிருந்து சிறிது வெந்நீர் எடுத்து பருகக் கொடுத்தாள். 'நிறைய குடிக்கக் கூடாது. உனக்கு ஆபரேஷன் செய்திருக்கிறது.'

'என் சிநேகிதிகள்...?'

'வீட்டுக்குப் போய்விட்டார்கள்.'

'எல்லோருமா?'

'ஆமாம்.'

'பின்னர் யாருமே வந்து பார்க்கவில்லையா?'

இல்லையென்று தலையசைத்த நர்ஸ் சொன்னாள்: 'மோசமான விபத்து. அவ்வளவு வேகமாகவா காரை ஓட்டுவாய்? அவர்களின் உடல் பாதித்ததைவிட மனப்பாதிப்பு அதிகம்.'

'அத்தனை மோசமான விபத்தா?'

'பின்னே? ரமணி என்ற பெண்ணுக்கு இங்கே கொண்டுவரும் போதே உயிர் போய்விட்டிருந்தது.'

ரமணி இறந்துவிட்டாளா? அய்யோ!... என்று உள்ளே கூவினாள் ஆனந்தி. அவளது தேகம் நடுங்கியது.

அதைத் கண்டுகொண்ட நர்ஸ் சொன்னாள்: 'உன்னைக் கொண்டுவரும்போது நீ கூட பாதி உயிர் போனவளைப்போலத்தான் இருந்தாய். எனக்கு நீ பிழைத்தெழுவாயென்று நம்பிக்கையே இருக்கவில்லை. ஆனாலும் நீ அதிர்ஷ்டக்காரி. உனக்கு ஆபரேஷன் ஆகிற

சமயத்துக்கு நியூரோ சர்ஜன்ட் வெற்றிவேல் சார் டெல்வியிலிருந்து சென்னை திரும்பிவிட்டிருந்தார். உன் கணவருக்குத் தெரிந்தவரோ? அவரது முயற்சியால்தான் வெற்றிவேல் சாரே உன் ஆபரேஷனைச் செய்ய நேர்ந்தது.'

நகர்ந்த நர்ஸ் திரும்பி ஒரு எட்டு முன்னே வந்து, 'அது சரி, யாரது அன்னா?' என்று கேட்டாள்.

'என் சிநேகிதி.'

'ஓ. அன்னாவென்றும் விசுமாமாவென்றும்... இன்னும் ஏதேதோ வெல்லாம் பிதற்றினாய். அந்த இரண்டு பெயர்களும்தான் மயக்கமாகக் கிடந்தபோது உன் வாயில் அடிக்கடி வந்தன' என்றுவிட்டு வெளியே நடந்தாள்.

சம்பவங்கள் நினைவுகளும் கனவுகளும் கற்பனைகளுமாய் மனத்தில் கெழுமிக் குதித்ததை அப்போது அவள் ஞாபகமானாள். இன்னுமொன்று. கணவரென்று சொன்னாளே! யாரது? ஒரு வேளை ராதாகிருஷ்ணனை அவ்வாறு நினைத்திருப்பாளோ? அப்படியானால் ராதாகிருஷ்ணன் அங்கே வந்திருக்கிறார். பாவம். நல்ல மனிதர்.

மேலே அதிகம் அவள் அதுபற்றி நினைக்கவில்லை. ரமணியின் இழப்புச் சோகம் அவள் சிந்தையைக் கவிந்தெழுந்தது. எவ்வளவு அநித்தியமானது வாழ்க்கை! பெண்ணின் கடைசித் தளை அறுமட்டும் நான் வேறு எதையும் நினைக்க மாட்டேன் ஆனந்தி!... என்று பெண்கள் தின கருத்தரங்கு நடக்கிற வேளையில் ஏதோ ஒரு விஷயம் பற்றிச் சொல்கையில் ரமணி குறிப்பிட்டிருந்தது அப்போது ஞாபகம் வந்தது. அவளுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. செவிப் புலன் குறைந்த ஒரு பாட்டி. இந்தச் சுமைகளை என்ன செய்வது? ஏதோ ஒருவகையில் ஏதோ ஒரு அளவுக்கு அவர்களது பராமரிப்புக் கவலை இவளிலும் சாய்கிறதல்லவா? விபத்து திட்டமிடப்படுவதில்லை. திட்டமிட்டால் அது கொலை. திட்டமிடாத பட்சத்திலும் விபத்துக்குக் காரணமாயிருக்கிறவர் மீது ஒரு தார்மீகப் பொறுப்பு வந்துவிடுகிறது. அப்போது பாரமாய் தன்னில் ஏறும் அப்பொறுப்பை ஆனந்தி உணர்ந்தாள். ஆனாலும் என்ன செய்வதென்ற திட்டமேதும் இருக்கவில்லை.

எட்டு மணிபோல் சிறிது தூங்க முடிந்தது. அரை மணி நேரம் தூங்கியிருப்பாள். மறுபடி கண்விழித்தபோது எதிரே குஞ்சம்மா நின்றுகொண்டிருந்தாள். மிகவும் வாடி, தளர்ந்து போயிருந்தாள்.

'குஞ்சு!'

கட்டிலின் ஓரமாய் அமர்ந்தாள் மெதுவாக. 'எப்படி அக்கா இருக்கிறது உடம்பு? நேற்று முதல்நாள் உங்களுக்கு ஆப்பரேஷனென்று தெரியும். ஆனாலும் வர முடியவில்லை. உடம்புக்கு இயலாமலே இருக்கிறது. இப்போதுகூட ஆட்டோ வைத்துக் கொண்டு சித்தப்பாவோடுதான் வந்தேன். சித்தப்பா வெளியே நிற்கிறார்' என்றுவிட்டு மூச்சிரைத்தாள்.

'என்ன குஞ்சு, இவ்வளவு பலஹீனமாயிருக்கிறாயே!' என்றாள் ஆனந்தி தானும் பலஹீனமாய்.

அதற்கு குஞ்சம்மா எதுவும் சொல்லவில்லை. இரைப்பு நிற்கிறவரை பேசாமலிருந்தாள். பின் மெல்லச் சொன்னாள்: 'வாழ்க்கையை உணருவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு சந்தர்ப்பம் வரும் அக்கா. தாறுமாறாய் ஓடுகிற ஓட்டத்திலிருந்து நிதானம் பெற்று திருந்திக் கொள்ள வேண்டும். இல்லையென்றால்... இன்னொரு சந்தர்ப்பம் வராமலே போகலாம். நான் எல்லாவற்றையும் இப்போது புரிந்துகொண்டேன் அக்கா. மாதா என் கண்களைத் திறந்துவிட்டார்.'

'மாதாவா?'

'ஆமா. கிறித்தவ ஊழியக்காரி.'

அவள் போதனையும் பொன்னம்மாள் ஆசிரியையின் மொழிகள் போலவே. இப்போது ஆனந்தியால் இனங்காண முடிந்தது. சந்திக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்தது நல்லதாய்ப் போனது. தான் தப்பிக்கொண்டதாய் ஆசுவாசப்பட்டாள். ஆனாலும் பொன்னம்மாளின் குரலுள் மாதாவின் அபிப்பிராய சாத்தியம் ஒரு ராகத்தின் அபஸ்வரமாய் மனத்தில் ஒலித்தது. பின்னாலேதான் தெளிய முடிந்தது, அது தன் நலன் சார்ந்த பிரஸ்தாபிப்புகளென்பது.

'உனக்கு எப்படித் தெரியும்?' ஆனந்தி கேட்டாள் தெளிந்தவளாய்.

'ஒருநாள் பஸ்ஸிலே அகஸ்மத்தான சந்திப்பு. அன்றிலிருந்து பழக்கம். அடிக்கடி வீட்டுக்கு வருவார். நேற்று வீட்டுக்கு வந்திருந்தார். அவர்தான் என்னை இந்த முனைபற்றி என்னைச் சிந்திக்க வைத்தது. மனிதருக்கு பிணி, மூப்பு, மரண சங்கடங்கள் வருவது தெரிந்துதான் வாழ்வு செப்பனிடப்பட்டு செப்பனிடப்பட்டு இன்றைய அர்த்தமும் பரிமாணமும் பெற்றிருக் கிறதாய் அவர் சொல்லுகிறார். ஆயிரமாயிரம் தலைமுறையிலே இது நடந்திருக்கிறது. அப்படியிருக்கையில் இந்த நிறுவனத்துக்கு மாற்று என்ன என்று கேட்கிறாரக்கா மாதா. அது முதலில் என்னைக் குழம்பத்தான் வைத்தது. ஆனால் இப்போது நான் தெளிந்துவிட்டேன், அக்கா. சித்தப்பா, அக்கா, அத்தான், குழந்தைகள்... இவர்கள் என் குடும்பம். இன்னுமொன்று, இந்த சித்தப்பா யார் தெரியுமா அக்கா? தந்தையின் தம்பியில்லை. அப்பா ஜெயிலில் இருக்கும்போது அம்மா கூடி வாழ்ந்த இரண்டாவது புருஷன். அசிங்கமான உறவாய் தெரியும் மற்றவர்களுக்கு. ஆனாலும் அது ஒரு குடும்பம். அது முக்கியம்.'

சொல்லிக் கொண்டிருந்தவள் அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு நிலத்திலமர்ந்து மயங்கி சரிந்து வீழ்ந்தாள்.

'யாராவது வாங்களேன். நர்ஸ்...!'

நர்ஸ் அவசரமாய் வந்து இன்னொரு நர்ஸின் உதவியோடு அவளைக் கொண்டு சென்று வெளி வாங்கில் படுக்க வைத்தாள்.

அவளது மயக்கத்தின் காரணம் புரிந்தது ஆனந்திக்கு. தொடர்ந்து அவள் சொன்னதுகளை அதிசயத்தோடு எண்ணினாள். மனிதருக்கு பிணி, மூப்பு, மரண சங்கடங்கள் வருவது தெரிந்துதான் வாழ்வு செப்பனிடப்பட்டு செப்பனிடப்பட்டு இன்றைய அர்த்தமும் பரிமாணமும் பெற்றிருப்பதாக மாதா சொன்னதாக அவள் சொல்லியிருந்தாள். அவளுக்கு லேசாய்ச் சிரிப்பு வந்தது. குஞ்சம்மாவுக்கு வந்த குழப்பம் அவளுக்கில்லை. ஆனாலும் அவள் தன் நிலைமையில் சந்தோஷமோ திருப்தியோ பட்டுவிட முடியாது. அது நாளடைவில் குழப்பமாகக்கூட பரிமளிக்கலாம். ஆனால் அப்போது குழப்பமில்லை. அப்போது இருந்தது யோசிப்புக்கான நிறைய இடைவெளிகள்.

ஓடிவிடுவது, தேசாந்திரியாய் அலைவது, சந்நியாசம் வாங்குவது, கன்னியாஸ்திரி ஆவது, தற்கொலை புரிந்து கொள்வது எல்லாம் சமனமற்ற தப்புகைகள். அப்போது அவள் பலஹீனத்தோடு விளாசி எழுந்த தூக்க வலயத்துள் விழுந்தாள்.

மறுநாள் வைகறையில் அவள் கண் விழித்தபோது பெருமளவு உடலசதியும் தீர்ந்து போயிருந்தது.

தலையைச் சரிக்க வாசலில் கறுத்த நர்ஸ் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. முந்திய கடுமை அப்போதுஇல்லை.

அவளது அழைப்பு கண்களில் தெரிந்து நர்ஸ் கிட்ட வந்தாள்.

ஆனந்தி கேட்டாள்: 'விபத்து நடந்து எத்தனை நாளாகிறது?'

நர்ஸ் கணக்குப் போட்டுச் சொன்னாள்: 'இன்றோடு ஆறாவது நாளாள்.'

ஆறு நாட்களாயிற்றா?'

'ஆமாம்.'

ஆனந்தி திகைத்துப் போனாள். பின் ஒரு சுதாரிப்போடு மேலே கேட்டாள்: 'இத்தனை நாட்களில் ஒருவர் கூடவா என்னைப் பார்க்க வரவில்லை?'

'வந்தார்களே. நிறையப் பேர் வந்தார்கள். நீதான் வந்த போதெல்லாம் ஒன்றில் நினைவிழந்து கிடந்தாய் அல்லது தூங்கிக் கொண்டிருந்தாய்.'

'சரி. நேற்று என்னுடைய சிநேகிதியொருத்தி இங்கே என்னைப் பார்க்க வந்திருந்த சமயத்தில் மயங்கி விழுந்துபோனாள். அவளுக்கு என்ன ஆனது?'

'அவளா? அவள்தான் நேற்று மதியமே போய்விட்டாளே! பலஹீனத்தில் வந்த லேசான மயக்கம்தான்.'

நர்ஸ் போன பிற்பாடு ஆனந்தி யோசித்தாள்: யார் வந்திருப்பார்கள்? ராதாகிருஷ்ணன் வந்திருப்பார். ராம் வந்திருப்பான். ஆயா வந்திருப்பாள்.

குஞ்சுவே வந்திருக்கிறாளெனில் அன்னாவும் வந்திருக்கிறது சாத்தியம். ஆனாலும் இதில் உறவுகளில் எத்தனை பேர்? காலை மதியம் பின்னேரமென்று பக்கத்து அறை நோயாளியைப் பார்க்க எத்தனை பேர் வந்து போகிறார்கள்? அப்பா, அம்மா, அக்கா, தங்கை, தம்பி, மாமன் மைத்துனனென்று நிச்சயமாக அவர்கள் உறவுகள்தான். ஆனால் அவளுக்கு?

அவள் பெருமூச்சு விட்டாள். நாற்பது வருஷங்கள் வாழ்ந்து கழித்த ஒரு பெண்ணின் வாழ்க்கை ஒரு விசாரிப்பில் எதுவுமற்ற வெறுமையாய் மட்டுமே தெரிவது பெரிய சோகம்.

காலம் திரும்பாது. கழிந்த வாழ்க்கையை நிகழ்காலத்தில் சரி, வருங்காலத்தில் சரி வாழ்தல் சாத்தியமா? வாழ்ந்திருக்க வேண்டிய வாழ்க்கையை வாழப்போகிற காலத்தில் வாழ்வது எப்படியும் ஒரு இழப்பில்தான் கணக்காகும். வாழும் அந்த வாழ்க்கை அந்த வகையில் இரண்டாந்தரமானதாகவே இருக்கும். வருங்காலத்தை எதிர்காலம் என்றும் சொல்வார்கள். வாழ்ந்த, வாழுகிற வாழ்க்கையின் எதிரில் நிற்கிற வாழ்க்கை என்றும், அவற்றின் மாற்றாய் நிற்கிற வாழக்கைக் களம் என்றும் இரண்டு அர்த்தம் கொள்ளலாம். அவள் மாற்றாய் மட்டுமே நினைக்கிறாள் போலும்.

ஆனாலும் அந்த திசைமாற்றத்தின் மூலமூலமான காரணம் அவளுக்குத் தெரியவேண்டும். அவள் தேடல் அதுவரை தொடர்ந்து கொண்டிருக்கும்.

திடீரென்று ராம்ஜி முன்னால் வந்து நின்று சிரித்தான். தாடி... கலைந்து பறந்து கொண்டிருந்த கேசம்... கதர் ஜிப்பா... தோளில் தொங்கிய ஜோல்னா பை...

'முந்தாநாள் வந்திருந்தேன். நீ கட்டிலில் இல்லை. நேற்று மதியம்போல் வந்து பார்த்தால் நீ தூங்கிக் கொண்டிருந்தாய். இப்போது எப்படி இருக்கிறாய் ஆனந்தி?' என்று கேட்டான்.

ஆனந்தி பதிலை மெல்லச் சிரித்து வைத்தாள்.

அவன் அவளைப் பார்க்க வராமல் நழுவிக்கொண்டிருந்தவன் என்பதை அவனது தடுமாற்றமான சிரிப்பும் பேச்சும் பார்வையும் அவளுக்குத் தெரிவித்துவிட்டன. அவன் அப்படியானவன்தான். வேறு சிநேகிதர்களைப் பார்க்கப் போகாமல் அவனடித்த வாதங்கள் அதை உறுதிப்படுத்தின. சத்திர சிகிச்சை முடிந்ததை யார் மூலமாகவோ தெரிந்து கொண்ட பின்னரே இங்கு வந்திருக்கிறான் என்று துணிந்தாள் ஆனந்தி.

அவனை அவளால் கோபப்பட முடியாது அதற்காக. அவன் நண்பன் மட்டும்தான். நண்பர்கள் நண்பர்களுக்கு நண்பர்களளவாகவே உதவுவார்கள். ஆனாலும் அவள் சோர்ந்தது அதனாலல்ல. அவளது இழப்புகள் அவள் பெற்றதைவிடவும் அதிகம்.

அதை மீளமீள ஒவ்வொரு சந்தர்ப்பமும் நிரூபித்துக் கொண்டிருந்தது. அது அப்படியொரு சந்தர்ப்பம். அவள் கண்களை மூடினாள். அவன் அப்படியே போய்விடட்டும்.

அவளது அன்பை - நட்பை - முழுக்க முழுக்க தனக்கேயென்று கேட்டுக்கொண்டிருந்தவன் அவன். அவனிடத்தில் ஏன் அப்படி ஒரு போலி? அந்த மாதிரி ஒரு ஆர்ஜித நினைப்பு அவள் தனியனாயிருந்த காரணத்தால்தான் உண்டாயிற்றோ? நினைக்க உட்கனல் கிளம்பிற்று.

மறுபடி அவள் கண் திறந்தபோது அவன் இல்லை.

சொன்னதுபோல் அவன் உண்மையில் வந்துமேயிருக்கலாம். ஆனால் அவளுக்குத்தான் ஏனோ இந்த உலகமே அன்புப் போலிகளால் நிறைந்து போனது மாதிரியும், ஒரு குறி நோக்கிய திட்டமிட்ட நகர்வை இந்த போலிகள் குழப்பிவிடுவது மாதிரியும் தோன்றி எரிச்சலடையச் செய்து கொண்டிருந்தது. அது தனியாக அவன்மீது மட்டுமேயான கோபம் இல்லை. ஒரு போலியாகத் தோன்றி தான் பாதிப்படையக் காரணமாயிருந்த அத்தனை பேர் மீதுமான கோபமும்தான்.

அம்மாகூட ஒரு போலியாகவே இருந்தாள். அதனால் தான் அந்தச் சின்ன வயதிலே தன் நலமெல்லாம் கெட காரணமாயிருந்தாள். விசுமாமாவின் பிரிவு ஒரு பாரிய அடியாகும். எந்த யோசனையுமில்லாமல் அந்த அடியை அவள் மீது விழுத்தியவள் அவள். மிக்க ஒரு உறவில் நெருங்கிக்கொண்டிருந்த விசு மாமாவை புகாருக்குள் கரைத்த பின்னால் வெகுவாய் அவள் அவரை நினைத்து உருகினாள் என்று சொல்ல முடியாது. என்ன நடந்தது என்றுகூட அவள் சிந்தித்ததில்லை. அந்த பிரிவு வேதனை இருக்க வேண்டிய இடத்தை வேறு ஒரு உணர்வு ஆக்ரமித்திருக்கிறது. அதுதான் அம்மா மீதான வெறுப்பு.

ஓ... எங்கேயோ தவறு நடந்திருக்கிறது.

மெல்ல கையை பின்னே நீட்டி தலையணையை இழுத்து சில செ.மீ.க்கள் தலையை உயர்த்தி வைத்திருக்கக் கூடிய மாதிரி அணைப்புச் செய்தாள். அந்தப் புரிதல்கள் அவளுள் இன்னுமின்னுமாய் தெளிவினை நிறைத்துக் கொண்டிருந்தன.

அம்மா காதலோடு வாழ்ந்தவள். அவளது கற்பும் காதலும் உடன் கட்டையேறும் தீவிரம் கொண்டவை. பிள்ளைப் பாசத்தைப் போல அவளுக்கு புருஷ பக்தியும் இருந்திருக்கிறதுதான். அதை யார் தவறென்றும், கைவிட்டிருக்கப்பட வேண்டியதென்றும் சொல்ல முடியும்? அதுகூட ஒரு வன்முறைதானே? தனக்கு ஒரு சுயாதீனம்போல் அவளுக்கொரு சுயாதீனம் உண்டென்பதை ஏன் ஒப்புக்கொள்ள மறுத்தாள்? தன் சுயாதீனத்தின் அடையாளமாய் இவள் கெடலாம்; தன் சுயாதீனத்தின் அடையாளமாய் அவள் கெடாமலிருக்கக் கூடாதா?

இந்தக் கணிதம் அவளுக்கு அப்போது புரியவில்லையே.

அம்மாவை பார்வையில் படுவதையும் விரும்பாமலிருந்தவள் அப்போது பார்க்க விரும்பினாள். அந்தச் சோக உருவம் மனத்திரையில் பிரத்தியட்சமாக, என்னால்தானா அம்மா உனக்கு இத்தனை துன்பமும் சோகமும் எல்லாம் என்று கேட்டு அழவேண்டும் போல் ஒரு உக்கிரம் உள்ளுள் வெடித்தது.

அத்தனை தசாப்த கால வெறுப்பைக் கரைத்து விட்டுப் பார்க்கிற போதுதான் அம்மாவின் தனக்கேயான உத்தரிப்புக்கள், தியாகங்கள் அவளுக்குத் தெரிந்தன.

மேலும் ஒரு நிகழ்வு நினைவுப் புதைசேறு கிழித்து மேலெழுந்தது.

அது ஒரு வெக்கை கால இரவு. மாரி கூட இருக்கிறாள். குஞ்சம்மா பக்கத்தில் திண்ணையிலே படுத்து தூங்கியபடி. அம்மாவும் மாரியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். துக்கம் 'காக்க' வந்தவள் மாரி. அவள் பேச்சு சமாதானமாயிருக்கிறது. அழுகிற அம்மாவின் பேச்சு சஞ்சலத்தை, சோகத்தைக் கொட்டுவதாயிருக்கிறது. அதே வேளை ஒரு பாசச் சுமப்பினையும் உடையதாயிருக்கிறது.

அம்மா சொல்கிறாள்: அவர் இல்லாமல் போய் ஆறு மாதம் தான் ஆகிறது மாரி. ஆனாலும் ஆவி இங்கேதான் சுற்றிக் கொண்டிருக்கிறது. அது என்னை மாஹி... மாஹியென்று கூப்பிடுகிறது மாரி. செவிமடுக்காததுபோல் இருந்தால் கூவியழைக்கிறது மாரி. எல்லாவற்றையும் அடித்து நொருக்கி அழித்துவிடுவதுபோல அட்டகாசம் பண்ணுகிறது மாரி. என்னால் என்ன செய்ய முடியும், நீயே சொல். எனக்குத்தான் கால் விலங்குபோல இது வந்து பிறந்திருக்கிறதே.

அப்படிச் சொல்லாதீங்கம்மா. குழந்தையல்லவா?... என்கிறாள் மாரி.

ஆமாம் மாரி, அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது. இவள் பிறவாதிருந்தால் அவர் கூப்பிடக் கூப்பிடவுமா போகாது இருந்திருப்பேன்? அன்றைக்கே, அந்தச் சோகம் உச்சம் பெற்றிருந்த நாளிலேயே, நான் அவர் சிதையில் பாய்ந்து செத்திருக்கவேண்டும். அப்போது தர்கிக்கத் தோன்றியிராது; வாத முனைப்பு எழுந்திராது.

அப்படிச் சொல்லக்கூடாதம்மா. தெய்வம் தந்த உசிரைப் போக்கடிக்க மனிசருக்கு உரிமையில்லை அம்மா.

அப்போ... மனிசன் செய்த உறவுகளை தெய்வம் எப்படி உடைக்கலாம் மாரி?

வாழ்க்கைங்கிறது அப்பிடித்தானேம்மா இருக்கு. அப்பிடியிருக்கிறது தான் நல்லதுன்னும் படுது.

நீ என்ன சொல்கிறாய்?

பிரிவிலதானம்மா உறவின்ர அருமை தெரியும்.

என்னவோ போ. உன்னுடைய அனுபவத்தை நீ சொல்கிறாய். நான் இன்னும் கொஞ்சக் காலம் வாழ்ந்து விட்டாற்கூட ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் கூட, எனக்கு நெருப்பில் வாழ்வதாகவே இருக்கும்.

ஆனந்திக்காகவாவது வாழனும்தானேம்மா.

... ஆமாம்.

அப்போது தெரிந்தது எப்படியானதொரு வாழ்வை அம்மா வாழ்ந்திருக்கிறாளென்று.

அம்மாவுக்கு தான் விபத்தடைந்த விபரத்தை யாரேனும் அறிவித்திருப்பார்களா? தாய் மீதான தன் வெறுப்பு அன்னாவுக்குத் தெரிந்திருப்பதால் அவள் செய்தி அறிவித்திருக்கமாட்டாள். ஒருவேளை... இதுவே தக்க சமயமென்று சொல்லியனுப்பியிருக்கவும் வாய்ப்புண்டு. ஆனால் அம்மா வருவாளா?

மனத்துக்குள் ஏதோ திரணைபோல் கிடந்து உருண்டதுபோல் ஒரு திணறல்.

அது ஆச்சரியமாக இருந்தது ஆனந்திக்கு. என்ன மாதிரி அவளை வெறுத்திருந்த மனது அது! அவளைப் பார்வைக்கும் இவளுக்குப் பிடித்திருக்கவில்லையே! இன்றும்... அந்த நிறத்தில்... அந்த தளர்வின்மையில்... சளியாத மேனியில்... எத்தகைய கொடூரமான காழ்ப்பு.

மனது வெடிக்கிற நிலை எது? அவளுக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்தது. தலைக்குள் வலியெடுக்கவும் ஆரம்பித்தது. அந்த மூட்டம் விரைவில் கலைந்தாக வேண்டும். அன்னா... அன்னா... கேள் இந்த மனத்தின் நிலைமையை. இத்தனை காலம் கண்ணை மூடிக்கொண்டு இருந்துவிட்டு இப்போது படுகிற பாட்டைப் பாரேன்!... என்று தன் அக உலகுநோக்கி உட்குரல் எழுப்பினாள் ஆனந்தி.

அவளின் ஆறுதலுக்கான உலகமாக என்றும் அதுதான் இருந்திருக்கிறது. அவள் கண்ணீரைக் காலமெல்லாம் அன்னாதான் துடைத்திருக்கிறாள். ஆறுதலுக்கு ஆறுதல், உதவிக்கு உதவியென்று ஓடியோடி வந்தவள் அவள், இவள் அழைக்கும் போதெல்லாம். அவள் இறக்கைகளோடும் கூடிய தேவதையாக இருந்தாள். எப்போது நினைத்தாலும் ஓடிவந்தவள். தேவதைகள் உறங்குவதில்லையோ?

நட்பின் மிக உயர்ந்த அதிகாரம் அவள்மீது இவள் செலுத்தினாள். கோவை செல்வதற்கு முன்னர்கூட ஒருநாள்...

ஒரு மதிய இடைவேளையில் தபால்கந்தோருக்கு போன் எடுக்கிறாள் ஆனந்தி.

அன்னா...?

என்ன?

ஆனந்தி!

ம்.

என்னவென்று சொல்லேன். ஏதேனும் பிரச்சினையா?

இல்லை.

பின்னே?

எனக்கு தொடர்ந்தும் இங்கே வேலைபார்க்க முடியாது. எப்படியாவது எனக்கு வேறு வேலையொன்று பார்த்துக் கொடு.

அப்படி என்ன நடந்தது அங்கே? பிரச்சினை ராதாகிருஷ்ணனோட தானா?

ஆமா.

அப்படி என்ன?... என்று கேட்டு சிரிக்கிறாள் அன்னலட்சுமி. உரிமையின் அத்துமீறலா? என்கிறாள்.

வாய்க்கு வந்தபடி ஏசிவிட்டார். ரொம்ப அவமானமாப் போச்சு.

முதலாளி - தொழிலாளி உறவுக்குள் இப்படியான பிரச்சினைகளெல்லாம் தோன்றும்தான் ஆனந்தி. எங்கேயும் இது சகஜம். அரசாங்க வேலையில்கூட மேலதிகாரிகளோடு சண்டைபிடிக்க நேர்ந்து விடுகிறதே!

நீ ஒன்றும் சமாதானம் சொல்லவேண்டாம். வேலை பார்த்துக் கொடு. அது போதும். உபதேசம் யாருக்கு வேணும்?

சரி... சரி... யார் மூலமாகவாவது வேலைக்கு ஏற்பாடு பண்ணுகிறேன். அதுவரை இந்த வேலையை விட்டு விடாதே, என்ன?

சரி.

மனம் அமைதியாய் இருக்கிறாயா? இல்லை... நேரிலே நாம் சந்திக்க வேண்டுமா? சொல்லு... அப்படியானால் மாலையில் நாம் கடற்கரையிலே சந்திக்கலாம்.

வேண்டாம். நான் அமைதியாகத்தான் இருக்கிறேன். நீ சீக்கிரம் வேலை பார்த்துக் கொடுக்க முயற்சி பண்ணு.

சரி. அப்ப... வைக்கட்டுமா? முடிந்தால் நாளை அல்லது நாளையின்றைக்கு இதே நேரம் போன் எடு.

எந்தக் கஷ்டத்தில் அவள் ஆறுதல் சொல்லவில்லை. அவள் பார்க்க வந்திருந்தாளா? வரவில்லையெனில் முடியாமலிருக்கலாம். பாவம். அவளுக்கு ஏதும் ஆகாதிருக்க வேண்டும்.

அந்த நேரம் யாரோ உள்ளே வருவது தெரிய திரும்பினாள்.

ஆயாதான்.

'வா ஆயா.'

வந்தாள்.

'இன்றைக்குத்தான் வருகிறாயா?'

ஆமென்று தலையசைத்தாள்.

'இன்றோடு ஆறு நாள். செத்தேனா பிழைத்தேனா என்றுகூட நீ பார்க்க வரவில்லை. படுத்த படுக்கையில் ஆறு நாட்களாகக் கிடந்திருக்கிறேன். தண்ணீர் வெந்நீர் தரக்கூட ஒரு மனிதர் இல்லை. நீ சுகமாக வீட்டிலேதான் தங்கியிருப்பாய்.'

ஆயாவின் கண்கள் சட்டெனப் பனித்தன. 'விபத்து நடந்ததே எனக்கு இரண்டாம் நாள்தான் தெரிஞ்சுது. அந்த ரெண்டு நாள்ல நான் தேடாத இடமில்லை. அம்மா வீட்டையும் விசாரித்துப் போய்ப் பார்த்தேன். முதல் நாள் பூட்டிக் கிடந்தது. அடுத்த நாள்தான் அம்மாவைப் பார்த்து விபரம் தெரிந்தேன். அதுவரை நான்பட்ட பாட்டை உனக்கு எப்படித் தெரியும்? தலைச் சுத்து வேற. இருந்தும் நேரா இங்கதான் ஓடிவந்தேன். இப்ப பாக்க முடியாதுன்னு மறிச்சிட்டாங்க. வெளியில உட்கார்ந்திட்டு சாயந்தரமாத்தான் வீட்டுக்குப் போனேன். ரண்டு நாளா படுக்கையாப் போச்சு. இன்னிக் காலைல வந்து கேத்தடியிலயே நின்னுகிட்டிருந்தேன். அப்பதான் ராம்ஜி தம்பி வந்துது உள்ளேருந்து. அதுதான் எப்பிடிப் போகணும்னு சொல்லி உள்ள அனுப்பிச்சுது.

ஆம், அவளைக் கோபிப்பதில் அர்த்தமில்லை. 'ராம்ஜியிடம் என்ன கேட்டாய் ஆயா?'

'ஆனந்தியை எந்த வார்ட்டிலே வைச்சிருக்காங்க? ரெண்டு நாளுக்கு முந்தி வந்தப்ப வார்ட் எதுன்னு தெரியலயேன்னு உள்ள கூட விடலன்னு சொன்னேன்.'

'ம். அதுக்கு அவன் என்ன சொன்னான்?'

'ஏன் பதட்டப்படுறே ஆயா? திடீர் திடீர்னு மயக்கமாயிடுதுதான். ஆனாலும் இப்ப முகம் நல்ல தெளிவா இருக்கு. மரணம் கடந்த நிச்சயம் தெரியுதுன்னான்.'

மரணம் கடந்த நிச்சயம் தெரியுதென்றவன் முகத்தில் தெளிவைக் கண்டிராவிட்டால் என்ன சொல்லியிருப்பான்? திரும்புவது நிச்சயமில்லையென்று சொல்லியிருப்பான். மரணமே அடைந்திருந்தால்... போய்விட்டாள் என்றிருப்பான். அவன் குற்றமில்லை அது. அது அப்படித்தான். சேதுராமர் சொல்வாரே, லோகமே அப்படித்தாண்டி குழந்தாய்! என்று, அது மாறாமலேதான் இருக்கிறது. ஒருவேளை வெளியில் மாறி உள்ளில் மாறாததோ உலகம்? அதற்குத் தக அவள்தான் மாறவேண்டுமாயும் இருக்கலாம்.

வாசல்புறத்தில் மேலும் பல காலடிகள்.

ஆனந்தி திரும்பிப் பார்த்தாள்.

# 21

கண்களை மறைத்து ஏதோ திரையெறிந்ததுபோலிருந்தது. விம்பம் விழித்திரையில் கலங்கலாய்ப்பட்டது. கண்களைக் கசக்கிக்கொண்டு கூர்ந்து பார்த்தாள்.

சந்தேகமேயில்லை. அவளின் பிம்பம்தான். அற்புதா.

பின்னால் யார் யார்?

ஆதர்ஷ்யா. அவள் தோளையொட்டி பக்கத்தில் அர்கீஷ். உடம்பில் ஓர் அதிர்வு... ஒரு விறைப்பு... கற்பூரம் கரைவதுபோல் உயிர் காற்றில் கரைந்தது. பிள்ளைகளைத் தாண்டி மெல்ல முன்னகர்ந்து வந்தார் சிவசங்கரன்.

அவரா? இருக்க முடியுமா? சாத்தியமா?

பிள்ளைகள் வந்தார்கள், சரி. சிவசங்கரன் எப்படி வந்தார்? தன் பௌருஷத்தை எண்ணி அவர் க்ஷீணித்துப் போகும்படியான அப்படியொரு கடிதத்தை எழுதிய பின்னரும் அவர் வருகை எப்படி நிகழ்ந்தது?

மனிதர் அப்போதும் இரக்கம் காட்டிக்கொண்டுதான் நின்றிருந்தார். மட்டுமில்லை. அந்த இரக்கமும் நிஜமாக இருந்தது.

அவளுக்குக் கண்கள் கனத்து வந்தன. துச்சமாய் எண்ணி உதாசீனப்படுத்தி விடப்படுகிற சில மனிதர்கள் உறவு என்பதன் தாத்பர்யத்தை உணர்த்துவது மாதிரி எப்படி ஓடிவந்து பற்றுதலையும் பாசத்தையும் காட்டி விடுகிறார்கள்!

சிவசங்கரன் கிட்ட வந்தார். ‘இப்ப எப்படி இருக்கு?’

அவர் கண்களைப் பார்க்க அவளுக்குத் தயக்கமாக இருந்தது. தடுமாற்றமாய் இருந்தது. அப்படியிருக்கத் தேவையில்லையென்று

திண்ணப்படுகிற வேளையில் அழுதுவிடுவதுபோல் நெஞ்சு முட்டி வந்தது. ஒருவாறு, 'பரவாயில்லை' என்று சொல்லி வைத்தாள்.

'உடம்பைப் பார்த்துக் கொள். நான் கிளம்புகிறேன்.'

ஆனந்தி அப்போதுதான் நிமிர்ந்து பார்த்தாள். ஆனாலும் எதுவும் சொல்லவில்லை. 'வந்தவுடன் கிளம்புறதாச் சொல்லுறீங்களே அய்யா' என்றது பின்னால் நின்றிருந்த ஆயாதான்.

அவர் திரும்பி ஆயாவைப் பார்த்தார். யாரென்று தெரியாமலேதான் இருந்தது. ஆனாலும் அன்புள்ளவர்களை நெருக்கமானவர்களை பாவனை மூலமாகவே புரிந்து கொள்ள முடிகிறது. அவர் சொன்னார்: 'வந்தவுடனே இல்லை. நானும் பிள்ளைகளும் இங்கே வந்து இன்றோடு ஐந்து நாட்கள். பிள்ளைகள் இன்னும் இரண்டு நாட்கள் நின்று வரட்டும். நான் இப்போதே புறப்படுகிறேன். மறுபடி ஞாயிற்றுக்கிழமை வந்து பிள்ளைகளைக் கூட்டிச் செல்வேன்.' பதில் குறித்தது ஆனந்தியைத்தான்.

ஒவ்வொரு வார்த்தையும் அவரின் ஜெயத்தைச் சாற்றினதாய் ஆனந்தி பிரமை கொண்டாள். ஆனாலும் முன்பு போல் சவால்களைக் கிளர்த்த அவளுக்குப் பலமில்லை. உடல் ரீதியாகவும் ஆன்மரீதியாகவும் அவள் நொருங்கிப் போயிருந்தாள். பிள்ளைகளை ஞாயிற்றுக் கிழமை வந்து கூட்டிச் செல்வேன் என அவர் சொன்னபோது, அவர்களுக்குள் முடிவாகவும் முற்றுமுழுதாகவும் விழுந்திருந்த வளையங்கள் அவளது மனக்கண்களில் பட்டன. கண்ணீர் விழப் பார்த்தது. குனிந்தபடியேயிருந்து மெல்ல விரலில் வழித்துச் சுண்டிக் கொண்டாள்.

அதை அவர் கண்டார். அவளது நிலைமையில் அவ்வாறு உள்ளார்த்தம் வைத்துப் பேசியதுகூட பெருங்கொடுமையாய் அவருக்குப் பட்டது. ஆனாலும் கூட்டிச் செல்லுதல் - கூடிச் செல்லுதல் என்று எதுவும் சொடுக்கில் நிகழ்ந்துவிடுகிற காரியமில்லை. அதை அவர் அறியாதவரில்லை. அதனால்தான் ஆசைப்படாமல் இருந்தார்.

அவள் தன் தடுமாற்றத்தை நீக்கிக்கொண்டு, 'எப்படித் தெரிந்தது?' என்று கேட்டாள்.

'அம்மா வந்து சொன்னார்கள்.'

அம்மாவா? அவளால் நம்பமுடியவில்லை.

தாயாரை அவள் எப்படி வெறுத்திருந்தாளென்று வெளி மனிதருக்குத் தெரியாது. அவளுக்குத் தெரியும். அந்தத் தாயே வந்து, நான் உன் உதாசீனம் வெறுப்பு எல்லாவற்றையும் மறந்துவிட்டேன்!... என்றால்கூட அவள் நம்ப மாட்டாள். அத்தனை கொடூரங்களை அவள் தன் தாய் மீது புரிந்திருக்கிறாள். இருந்தும்... விபத்துபற்றிச் சொல்ல போயிருக்கிறாளே!

அப்போது ராகவன், ராதாகிருஷ்ணனோடு உள்ளே வந்தான்.

சிவசங்கரன் கிளம்ப அவசரப்பட்டார். ஆனாலும் அதற்குள் முந்திக்கொண்டு, 'பாக்டரி கணக்கில் பாதி பணம் கட்டியிருக்கிறது' என்று சொல்லி பணம் கட்டிய ரசீதை அவளிடம் கொடுத்து உடல்நிலைபற்றியும் விசாரித்துக்கொண்டு ராதாகிருஷ்ணன் ராகவனோடு விடைபெற்றனர்.

தற்செயலாய் சிவசங்கரன் பக்கம் திரும்பிய ஆனந்தி திடுக்கிட்டாள். ஏன் அவர் முகம் அப்படி வெளிறிக் கிடக்கிறது? அவளுக்கு காரணத்தைப் புரிய சிரமமிருக்கவில்லை. அவர்களின் கம்பீரங்கள் சிதறடிக்கப்படுகிற இடம் அவளுக்குத் தெரியும். ஆனாலும் கடிதத்தில் அவர் உடையாதிருந்தவர். அதை அவள் யோசிக்க வேண்டும். இன்னும் சில விஷயங்களை அவரோடு அவளுக்குப் பேசவேண்டியிருந்தது. குறிப்பாக அந்தக் கடிதம்பற்றி அவள் அவரிடம் கேட்க விரும்பினாள். அதனால் கேட்டாள்: 'ஞாயிற்றுக் கிழமை வருவீர்களா கண்டிப்பாய்?'

'ஏன்?'

'உங்களோடு ஒருக்காப் பேசணும்.'

மௌனம் இழையோட நின்றவர் சிறிதுநேரத்தில், 'வருவேன்' என்றுவிட்டு நடந்தார்.

அந்த 'ஒருக்கா'கூட அவரை குத்தியிருக்கலாம். ஏனெனில் ஒரு முற்றுப்புள்ளியினை தன்னளவில் அவளும் இட்டிருந்தாள் என்பதை அந்த 'ஒருக்கா' தெளிவாக அவருக்குச் சொல்லியிருக்கும்.

ஆதர்ஷயாவின் கண்கள் கலங்கியிருந்தன. அற்புதா வந்த போதிருந்ததைவிட தெளிந்திருந்தாள். ஓர் உடைவுக்குப் போல் உணர்வு திரண்டிருந்தது அர்கீஷின் முகத்தில். அவனை கைநீட்டி வளைத்தணைத்துக் கொண்டாள் ஆனந்தி. அர்கீஷ் குண்டாகியிருந்தான். கண்ணாடி அணிந்திருந்தான்.

எத்தனை வருஷங்கள் அந்தச் சுகம் அனுபவித்து?

இன்னும் ஒரு குறை அங்கே இருந்தது.

அம்மா வரவில்லையே! அவளை நேசிக்க நான் தொடங்குகிறபோது அவள் எட்டியே நின்றதேன்? என் குழந்தைகளை என்னோடு சேர்த்து வைத்தவள். தன் பிள்ளையை தன்னோடு சேர்க்காமல் பின்னின்றது எதற்காக?

அற்புதா கேட்டாள்: 'வீட்டுக்கு எப்போது போகலாமென்று சொன்னார்களாம்மா?'

'இன்னும் ஒரு வாரம் இருக்கவேண்டுமென்றார்கள்.'

'ஒரு வாரத்துக்குப் பிறகு எங்கேயம்மா போவீர்கள்? 'ஆனந்தி திகைத்தாள். ஆனாலும் தெளிவடைய வெகுநேரம் பிடிக்கவில்லை.

'அதற்கென்ன இப்போ? டிஸ்சார்ஜ் ஆகிறபோது அதைப் பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறிச் சமாளித்தாள். தொடர்ந்து, 'அதுவரை நீங்கள் நின்று போனாலென்ன?' என்றாள்.

'கண்டிப்பாக என்னால் முடியாதம்மா. ஏற்கனவே ஒருவாரம் கிளாஸுக்குப் போகவில்லை. அடுத்த வாரத்திலிருந்து போயே ஆகவேண்டும்.'

'எங்கே படிக்கிறாய்?'

'பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில்.'

'பாண்டிச்சேரியிலா?'

'ஆமாம். பாண்டி மாமா வீட்டில் நின்றுதான் படிக்கப் போய் வருகிறேன்.'

'இங்கே யார்கூடத் தங்கி நிற்கிறீர்கள்?'

'அப்பாவின் நண்பர் ஒருவரின் வீட்டிலே. இங்கே பக்கத்தில்தானம்மா. சாலிக்கிராமத்தில்.'

'பாட்டி வீட்டுக்குப் போகவில்லையா?'

'நேற்று முழுக்க அங்குதான் நின்றிருந்தோம்.'

'பாட்டி என்ன சொன்னாள்? இங்கே வருவதுபற்றி ஏதாவது பேசினாளா? என்னைப் பார்க்க வரவே மாட்டாளாமா?'

'ஏன்மா? பாட்டிதான் தினமும் இங்கு வர்றாங்களே!'

'தினமுமா? நேற்று வந்தாளா?'

'வந்தாங்களே! ஆனா ரொம்ப கிட்ட வரமாட்டாங்களாம். எட்ட நின்னு பாத்திட்டு போயிடுவாங்களாம்.'

அவள் காட்டிய வெறுப்பு இன்னும் அம்மாவைப் பின்னே பிடித்துத் தள்ளிக்கொண்டே இருக்கிறது.

'இன்றைக்கு வருவாளா?' ஆனந்தி கேட்டாள்.

'வருவாங்க. கஞ்சி காய்ச்சி எடுத்துக்கொண்டு மதியத்துக்கு வருவாங்க.'

அவள் தளர்ச்சியோடு போல் பேசாமல் கிடக்க, மாலையில் மறுபடி வரலாமென எண்ணிக்கொண்டு அவர்கள் புறப்படத் தயாராகினர்.

'என்ன புறப்படுகிறீர்களா?' என்றாள் ஆனந்தி.

'ஆமாம்மா. நீங்க ரொம்ப களைப்பா இருக்கிற மாதிரித் தோணுது. நர்ஸ்கூட அடிக்கடி வந்து ஒருமாதிரிப் பார்த்துட்டுப் போறாங்க.'

'பின்னேரமா வருவீங்களா?'

'வர்றோம்மா.'

ஆயாவும் அவர்களுடன் புறப்பட்டாள்.

பின்னால் சென்ற அற்புதாவிலேயே பார்வை பதித்திருந்தாள் ஆனந்தி. அவள்கூட திரும்பிப் பார்த்தபடியேதான் போய்க்கொண்டிருந்தாள். ஏன்? ஏதாவது சொல்ல சூழ்நிலை தகவில்லாதிருந்ததால் அப்படிப் போகிறாளோ?

ஆனந்தி வசதியாக அசைந்து படுத்தாள்.

அசதியாக இருந்தது.

நிறையப் பேச்சு, நிறைய உணர்வுச் செறிவு களைப்படையச் செய்திருந்தது.

திடீரென்று வாசல்புறம் காலடியோசை கேட்டது. அற்புதா தான். ஆனந்தி வியப்போடு, 'என்ன அற்புதா?' என்றாள்.

கட்டிலோரத்தில் அமர்ந்து கொண்டு ஒரு நெடுமூச்சு வாங்கினாள். பின், 'குணமான பிறகு எங்கள் வீட்டுக்கு வந்துவிடுங்களேன் அம்மா' என்று கேட்டாள்.

ஆம். அங்கே இரண்டு வீடுகள் இருக்கின்றன. அவர்களுடையது ஒன்று; அவளுடையது ஒன்று. பாசத்தின் ஆர்வத்தில் அற்புதா அவ்வாறு கேட்கலாம். அவளும் அந்த ஆர்வம் காரணமாய்ப் பேசிவிடக்கூடாது. அவள் நிறைய யோசிக்க இருக்கிறது. 'பார்க்கலாம்' என்றாள்.

'இன்னும் அப்பாவோடு கோபமாகவா இருக்கிறீர்கள்?'

'இல்லையே.'

'பின்னே என்ன?'

'நிறைய இருக்கு.'

'என்ன அது?'

சொன்னால் விளங்கிக்கொள்வாளா என்று தயங்கினாள் ஆனந்தி. 'சொல்லுங்கள் அம்மா' என்று அற்புதா மறுபடி வற்புறுத்த, சொன்னாள்: 'குடும்பமென்றால் பிரியாமலே இருப்பதுதான் உத்தமம். தனித்தனியாய் வாழத் துவங்கிய பிறகு சுயாதீனமான வாழ்முறையும் கருத்துக்களும் உருவாகி வலுப்பெற்றுவிடுகின்றன. பிரச்சினைகளை ஒதுக்கி, மறந்து வாழத் தீர்மானித்துக் கொண்டால் கூட உடனடியாகவே இணைந்து வாழ்தல் சாத்தியமில்லாமலே இருக்கும். பல தளங்களில் வாழ்க்கையின் பெறுமானங்களை நான் மீறி நடந்திருக்கிறேன். பிரக்ஞையோடுதான் செய்தேன். ஒரு சுயாதீனமான பெண்ணாய் வாழ எனக்கு இந்த மீறல்கள் அவசியமாயிருந்திருக்கின்றன. ஒருவேளை... ஒருவேளைதான்... அந்த மீறல்கள் ஒரு போதாமையின் விளைவல்ல என்று எப்போதாவது எனக்குத்

தோன்றுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது ஒருவகையான குற்றவுணர்வுக்கு நான் ஆட்படவேண்டி நேரலாம். மீண்டும் குடும்பம் குழம்புவதற்குத் தான் வாய்ப்பு அப்போது ஏற்படும்.'

முடித்த பிறகுதான் ஆழமாய்ச் சொல்லிவிட்டதும், அது ஒருவகையில் தன் ஒப்புமூலம் என்பதும் ஆனந்திக்குத் தெரிந்தது.

அற்புதா மௌனமாய் அமர்ந்திருந்தாள். பின் தாயாரை நிமிர்ந்து கண்களை ஊடறுத்துப் பார்த்தாள். ஆனந்தியின் தேகம் கூசியது. உள்ளே வண்டுபோல் தசை கிழித்துச் சென்று எதையோ தேடுவது போன்ற பார்வை அது. பின் மறுபடி குனிந்து மெத்தையில் நகக்கோடு கிழித்துக் கொண்டு சொன்னாள்: 'ஒருபுறத்தில் நிகழும் அதீதமான மீறல்களாலேயே பெறுமானங்களின் மதிப்பீடுகள் மாறிக்கொண்டு போகின்றனவென்றும் சொல்லமுடியும். நம் சமூகத்தின் நோக்கு இப்போது மாறியிருக்கிறது மெய்யாலுமே. சில வாழ்க்கைகளை திரும்ப அமைத்துக் கொள்ள முடியும். உத்தமமான வாழ்க்கை கிடைக்காதவர்கள் ஒரு மத்திமமான வாழ்க்கையை வாழ்வதில் தவறில்லையம்மா. அது அதமமான வாழ்க்கையின் சோகத்தை நிச்சயமாகத் தடுக்கும். இதைப்பற்றியும் கொஞ்சம் யோசித்து நீங்கள் முடிவெடுக்கிறது நல்லது.'

அவள் எழுந்தாள்.

அவளை ஒரு பதின்மூன்று பதினான்கு வயதுச் சிறுமியாய்க் கொண்டிருந்த பாவனை ஆனந்தியிடத்தில் கரைந்து போயிருந்தது. அவள் வளர்ந்திருந்தாள். அவளது முதிர்ச்சி அவளின் கண்களில் எழுதியிருந்தது. ஒருவர் கண்ணை நேர்நேராய்த் துளைத்த பார்வையாயிருந்தது அவள் பார்வை. தேவையானதுக்கு ஒரு கணம் அதிகமாகத் தங்கி உன்னை நான் புரிந்து கொண்டேன், உன் களவுகளையும் தெரிந்திருக்கிறேன்... என்று அது சொன்னதாய்ப்பட்டது ஆனந்திக்கு.

அற்புதாவின் முதிர்வின் பிரக்ஞை ஒரு அதிர்வாக அவளுள் இறங்கியது. அது அவளது சில மாதங்களுக்கு முந்திய ஒரு சட்டகத்தை பூதாகரமாக மனத்தில் விரிய வைத்தது. வெகு நாட்களின் பின் புதிது போன்ற ஒரு அனுபவத்தை அது அளித்தது. அதிர்வு அதிகரித்து கம்பமாகியது. கூடச் சென்றது யார்? எதிர்பால் விழைச்சு இல்லாதிருக்குமென்று எப்படிச் செல்லமுடியும்? அவள் துடித்ததும், ஓடியோடி அன்னாவிடம் ஆறுதல் கேட்டதும் இதற்காகத்தானே! ஒரு தாயைப் பதைக்க வைக்கும் இறுக்கமான பொழுதுகள் அவை. மனித நடத்தைகளுக்கு கலாசார வரம்புண்டு. மீறல்களில் கலாசாரம் சிதைக்கப்பட்டு விடக்கூடாது. மாற்றியும் திருத்தியுமே அது முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும். குருவி சுதந்திரமுடையது. அது எங்கும் பறந்து, எதிலும் அமரும் தத்துவம் பூண்டது. ஆனால் அது தங்கியிருக்கும் மரத்துக்குக் கீழே நிழலுக்கு ஒதுங்கி நிற்பவர் கலவரப்பட்டு

விலகியோடச் செய்வது அத் தத்துவத்தில் அடங்காது. பூமி அச்சில் சுழல்கிறது. அச்சில் மட்டும் சுழலக்கூடியது. அதுதான் அமைப்பு. எதுவும் ஒரு அமைப்புக்குள் அடங்க வேண்டும். ஆனந்திக்கு ஒரு தலைமுறை தாண்டிய இளஞ்சமூகத்தின் பார்வை, உலகக் கிராமத்தின் வளர்ச்சி கொண்டுள்ள நிகழ்பொழுதில் அவளையே எரித்துவிடக் கூடிய உக்கிரத்துடன் கூட இருக்க முடியும். தன் தாய்மீது தன்னின் சில சுயவிருப்பங்களை ஏற்றிப் பினைவுபட்டதுபோல், தன் தாய்மீது சில சுயவிருப்பங்களை எதிர்பார்க்க அற்புதாவுக்கு உரிமையுண்டு. இவற்றையெல்லாம் அவள் தெரியாமலிருந்தாள் என்றில்லை. நினையாதுதான் இருந்தாள்.

கெட்டதாய் எங்கேயும் இல்லையென்று ஆசிரியை பொன்னம்மாள் சொன்னது ஞாபகமாயிற்று.

மெய் சிலிர்த்தது.

'புறப்படுகிறாயா?'

'ஆமாம்மா. சாயந்திரமா வருகிறேன்.'

கண்ணை மூடினாள் ஆனந்தி. மனத்திரை முழுக்க விரிந்து அம்மா தோன்றினாள். அழகாக இருந்தாள் அவள். தாய்க்கான அழகு. அது கண்களில் மையம் கொண்டிருந்தது. கருணைதானே அதன் பெயர். தாய்மையென்றாலும் சரிதான். உலகம் அதை இழந்துவிடக்கூடாது. அமைப்புச் சிதறிவிடும்.

முப்பது வருஷங்கள் அவளை எரித்துக் கொண்டிருந்திருக்கிறாள் இவள். இவள் தன்னை என்னதான் செய்யக்கூடாது?

சடுதியாய் மனத்தில் ஒரு காட்சியின் வியாப்தி.

யார் அது? அந்த கோவில் மடத்தில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு படுத்திருந்தவாறு 'பங்கி' அடித்தபடி இருக்கிறானே, அந்தத் தாடி வளர்த்த இளம் பரதேசிச் சாமி யார்? ராஜாராமன் தானே? ஆம். உள்ளே எரிந்து கொண்டிருக்கிறான் அவன். வாயிலிருந்து வெளிவருவது கஞ்சாப் புகையோ பீடிப் புகையோ மட்டுமில்லை, உள்ளெரிந்த புகையும்தான். அவன் தன்னையே எரித்தால்தான் உண்டு. இல்லாமல் அவனில் ஒட்டியுள்ள அந்தப் பாவத்தை எந்த க்ஷேத்திரத்தில் போயும் கழுவிவிட முடியாது. அவன் அப்படிப்பட்ட மகாபாவம் பண்ணிண்டவன். அம்பி... அம்பியென்று பிள்ளைக்குச் சமதையாய் அரவணைத்திருந்த மாமியுடனேயே ஒரு க்ஷணப் பித்தம் கவிந்து வந்த தருணத்தில் தகாப்புணர்ச்சி செய்துவிட்டு, அந்த நினைப்பின் அக்னித் தகிப்புத் தாங்காமல் வீடுவிட்டு, ஊர்விட்டு ஓடினவன். அவன் மூலம் மிக்க அசிங்கமானது. தாயின் சரீரத்தையே ஒரு பிஞ்சு வயதில் அவன் ரசனைப் பார்வை பார்த்திருந்தவன். அவன் தன்னை எரித்தல் தகும். அவனிருக்கிற

இடமும் அவனளவில் சிதைதான். அதிலிருந்து கொண்டுதான் அவன் சிரித்தான்; ஞானம் பேசினான்.

அவள் மூலமும் அவளை எரிக்கும் உக்கிரமுடையது.

அவள் பேரம் பேசியவள்.

அவளுக்கு அழுகை வெடித்தது.

தனிமையுள் கிடந்து அழுதாள்; எரிந்தாள்.

வெகுநேரத்தில் பின் வாசலில் அரவமெழ கண் திறந்து பார்த்தாள். கோவிலாய் ஒரு சுருவம்.

அம்மா!

அவளது தயக்கங்களை விலக்க கையசைத்தாள்.

அம்மா கிட்ட வந்தாள்.

இப்போது ஆனந்தியின் மனத்தில் தாயார்பற்றிய பொங்குதல்கள் இல்லை; வன்திரை எறிவுகள் இல்லை; சுழல்கள் இல்லை. மேற்தளம் அமைதி பூத்துக் கிடப்பதுபோல் அடியிலும்.

அவள் மெல்ல, 'அம்மா...!' என்றாள். கையை நீட்டி அம்மாவின் கையைப் பற்றினாள்.

எத்தனை தசாப்தங்களாய் அறியாதிருந்த உணர்வு! இன்னும் எப்போதும் அறியாதிருந்தது போலுமாயும்.

மௌனமாய், இருவரும் அழ வேண்டும்போல் உணர்ந்து கொண்டிருந்தனர்.

கூட்டுறவே நாட்டுயர்வு

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்
கூட்டுறவே நாட்டுயர்வு
புத்தகத்துள்
பொதுநூலகம்

நிலாச் சமுத்திரம்



தேவகாந்தன்

ஒரு ஆண் பெண்ணுரிமை பற்றி பேசலாமா
அந்தப் பதிவுகள் நியாயமானதாக இருக்குமா
என்ற கேள்வியை இந்தப் புதினம்
எதிர்கொள்ளவேண்டி வரும். ஆனால்
ஆற்றொழுக்காகச் செல்லும் கதையில்
முரண்படும் இடங்கள் அங்கங்கே
முளைத்தாலும் பெண்ணுரிமை, குடும்பம்
முதலியவற்றைப் பற்றிய ஒரு அகல்விரிவான
பார்வையை முன்வைக்க முற்படுவதே
இந்த புதினத்தை கவனத்துக்குரியதாக்குகிறது.

இராஜேஸ்வரி புத்தக நிலையம்